www.tamilarangam.net

# உயிர்ப்பு

6

April 1996 | UYIRPPU | சித்திரை 1996

□ முஸ்லீம் தேசம் பற்றிய சிறப்பிதழ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


உங்களுடன் நாம்........................................ 3-19

முஸ்லீம் தேசமும்
எதிர்காலமும்.................................................. 20-102

உங்களிடமிருந்து எங்களுக்கு..................... 102-102

தமிழ் தேசத்தின்
இருப்பை நீக்கம் செய்யும்
சந்திரிகாவின் தீர்வுத் திட்டம்...................... 103-115

www.tamilarangam.net

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# உங்களுடன் நாம்...

யாழ் நகரை கைப்பற்றிய ஸ்ரீலங்கா இராணுவம் தற்போது தெற்கு ஈழத்தில் தான் இழந்தவற்றை ஈடு செய்வதற்காக பெரும் தயாரிப்புக்களில் இறங்கியுள்ளது. யாழ் நகரை கைப்பற்றும் முயற்சியில் ஸ்ரீலங்கா இராணுவம் இறங்கலாமென்பது நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால் 3ம் ஈழப்போரை தமிழீழ விடுதலைக்கான இறுதிப் போரென வருணித்த புலிகள், படையினர் பலாலி முகாமை விட்டு ஓரடி தானும் எடுத்து வைக்க அனுமதிக்க மாட்டோம் எனச் சூளுரைத்திருந்தனர். விமான எதிர்ப்பு ஏவுகணை பிரயோகித்ததன் மூலம் ஸ்ரீலங்கா இராணுவத்தை திகைப்பிலாழ்த்திய புலிகள் இறுதிப் போருக்கான நிதி திரட்டலில் தீவிரமாக இறங்கியிருந்தார்கள். இப்படிப்பட்ட நிலையில் ஸ்ரீலங்கா இராணுவம் யாழ் நகரை ஒரளவு இலகுவில் கைப்பற்றும் என்று தமிழ் தேசம் எதிர்பார்த்திருக்கவில்லை.

தனது தாக்குதலின் போது ஸ்ரீலங்கா இராணுவம் சந்திரிக்காவின் புன்னகைக்கு பின்னால் மறைந்துள்ள சிங்கள அரசின் உண்மைச் சொரூபத்தை மீண்டும் ஒரு தடவை நிருபித்துள்ளது. படை நகர்த்தலுக்கு முன்பாக புலிகளின் பாதுகாப்பு அரண்களை தகர்க்கும் நோக்கில் ஈவிரக்கமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டு செல்லடிகளுக்கும், பாடசாலைகள் மீது நடாத்தப்பட்ட குண்டு வீச்சுக்களுக்கும், படைகள் ஆக்கிரமித்த பிரதேசங்களில் புலிகள் பதுங்கிக் கொள்ள இடங் கொடுக்கக் கூடாது என்ற நோக்கில் பல்லாயிரக்கணக்கான மக்களது இல்லங்களை புல்டோசர் கொண்டு தகர்த்த விதமும், ஐந்து இலட்சம் மக்களை அகதிகளாக்கி விட்டு யாழ் நகரைக் கைப்பற்றியதைக் கொண்டாடும் விதத்தில் நடத்தப்பட்ட சிங்கக் கொடியேற்றும் வைபவமும், இதற்கு தென்னிலங்கையில் சிங்கள தேசம் காட்டிய அக்கறையுடன் கூடிய ஆர்வமும் தமிழ் மக்களை திகைப்பில் ஆழ்த்தியுள்ளன. தனது சுயரூபத்தை வெளியுலகம் கண்டு கொள்ளக் கூடாது என்ற நோக்கிலேயே அரசு செய்தித் தணிக்கையை தீவிரமாக அமுல் செய்தது, பத்திரிக்கையாளர்களை வடக்கே செல்வதற்கும் தடை விதித்தது.

நடந்து முடிந்தவை குறித்து சிங்கள தேசம் பெருமித உணர்வுடன் காணப்படுகின்றது. தமது ஒடுக்குமுறையிலிருந்து விடுவித்துக் கொள்ள முனைந்த தமிழ்த் தேசத்தை மீண்டும் ஒரு முறை அடிமைப்படுத்தி விட்டதாக பேரினவாத சக்திகள் இதனை சித்தரிக்க முயலுகின்றனர். புலிகளை ஒடுக்கியாயிற்றே, இதற்குப் பின் என்ன தீர்வுத் திட்டம் என இவர்கள் வாதிக்க முனைகின்றனர். யுத்தமே முடிந்துவிட்டது போல இவர்கள் கொடுக்க முனையும் படத்தை அவசர அவசரமாக அரசே மறுக்க வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது. தமிழ்த் தேசமோ இதற்கு நேர் எதிரான உணர்வலைகளை கொண்டிருந்தது. புலிகளின் அரசியலுடன் முரண்பட்டுவர்கள் மட்டுமல்ல தேசிய விடுதலையுடன் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள் கூட நடந்து முடிந்த சம்பவங்களால் மிகவும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். முழுத் தமிழ் தேசமும் சிறிலங்கா அரசினால் அவமதிக்கப்பட்டது போன்றதோர் உணர்வு தமிழ் தேசம் முழுவதிலும் காணப்படுகின்றது. இப்படியான மனோநிலையானது சிலரிடத்தில் இது புலிகளுக்கு ஏற்பட்ட மாபெரும் தோல்வி என்ற கருத்தை தோற்றுவித்துள்ளது. இன்னும் சிலரோ புலிகளுக்கு ஏற்பட்ட "தோல்வியை" தமிழ் தேசத்தின் தோல்வி எனக் கருதி கலங்குவதையும் காணமுடிகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு கெரில்லா யுத்தத்தில் வெற்றி தோல்வி என்பவற்றை எவ்வாறு மதிப்பிடுவது என்பதை முதலில் புரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். எந்தவொரு கெரில்லா யுத்தத்திற்கும் போரிடும் இரு தரப்பினரதும் படைப்பல சமபல நிலை (Balance of Forces) ஒன்றுக் கொன்று சமனான கட்டத்தை நோக்கி செல்லும் போது யுத்தமானது மிகவும் தீவிரமடையத் தொடங்குகிறது. இந்த நிலையில் பாரிய அளவிலான தாக்குதல்களும், எதிர்த் தாக்குதல்களும் அடுத்தடுத்து நடைபெறத் தொடங்குகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் பல பிரதேசங்கள், நகரங்கள் போரிடும் தரப்பினரிடையே அடிக்கடி கைமாறுவது சகஜமானதே. வளர்ந்து வரும் ஒரு கெரில்லா இயக்கத்தைப் பொருத்த வரையில் அதன் மிகப் பெரிய வளம் (Resource) அதன் போராளிகளே ஆவர். இதனைப் புரிந்து கொள்ளும் எதிரியும் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களினுள் மிகப் பெரிய ஊடுருவல்களைச் செய்து, தான் விரும்பும் இடத்திலும், விரும்பிய நேரத்திலும் தன்னோடு போர் புரியுமாறு கெரில்லாப் படையை நிர்ப்பந்திப்பதன் மூலம் தனக்கு சாதகமாகவுள்ள ஆயுத பலத்தை பிரயோகித்து கெரில்லாப் படையின் முக்கிய வளமான அதன் போர் வீரர்களை பெருமளவில் கொன்றழிக்க முனைகின்றது. இப்படியான சந்தர்ப்பங்களில் கெரில்லாக்கள், எதிரியின் பொறிக்குள் சிக்காது, எதிரியினால் மேற்கொள்ளப்படும் அவமானப்படுத்தல்களால் உணர்ச்சிவயப்படாது, தனது அரிதான வளங்களை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் தற்காலிகமாக பின்வாங்க நேர்கிறது. இதற்காக அது சில பிரதேசங்களை, நகரங்களை விலையாகக் கொடுக்கவும் நேர்கிறது. ஆனால் அவை வெறுமனே தற்காலிக "தோல்விகள்" மட்டுமே. ஒரு சிறந்த கெரில்லாப் படையானது எதிரியின் பலத்தை பெரியதோர் பிரதேசத்தில் பரவலாக சிதறச் செய்தும், எதிரி சற்றும் எதிர்பாராத நேரத்தில், எதிர் பாராத இடத்தில் திடீரென தாக்கியும், எதிரிக்கு பலத்த இழப்பை ஏற்படுத்தி இந்தத் தற்காலிக "தோல்விகளை" வெற்றிகளாக மாற்றிக் கொள்கிறது.

தனது படைப்பலம் அனைத்தையும் குவித்துக் கொண்டும் மிகவும் நவீனமான ஆயுதங்களைத் தரித்துக் கொண்டும் வந்த ஸ்ரீலங்கா படைகளுடன் எதிரி விரும்பிய இடத்திலும், விரும்பிய நேரத்திலும் ஒரு சாதகமற்ற யுத்தத்தை நடத்தி, அதன் மூலம் எதிரி விரும்பியது போல் தனது அரிதான வளங்களான போராளிகளையும் வெடி பொருட்களையும் வீணடிக்காமல் யாழ் நகரை கைவிட்டு பின்வாங்கியது சரியான இராணுவ தந்திரோபாயமே ஆகும். இதில் பிரச்சனை எங்கு எழுகிறது என்றால், கடந்த காலங்களில் விடுதலை இயக்கங்கள் "யாழ் மையவாத"சித்தாந்தத்திற்கு பலியாகி யாழ்ப்பாணத்தை தமிழ் தேசமாகவும், யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து தேசத்தின் விடுதலையின் குவிமையமாக காட்ட முனைந்ததில் தான். இப்படிப்பட்ட ஒரு கருத்துப் போக்கு தமிழ்த் தேசத்தில் நிலவும் நிலையில் இந்த தற்காலிக பின்வாங்கல் புலிகளின் தோல்வியாக, தேசத்தின் தோல்வியாக புரிந்து கொள்ளப்படுவது சாத்தியமே. இந்த யாழ் மையவாத சிந்தனைக்கு தீனி போடும் விதத்தில் புலிகளும் கூட தமது அக்கறைகளை யாழ்ப்பாணத்தில் குவித்து தமது முக்கிய நிலைகளை அங்கு ஏற்படுத்திக் கொண்டதுடன், யாழ்ப்பாணத்தை பராமரிப்பதை தேசிய விடுதலையாக சித்தரிக்கவும் முயன்றனர். அத்தோடு தாம் பின்வாங்கவே மாட்டோம் என்ற பிரமையை மக்கள் மத்தியில் வலிந்து ஏற்படுத்தி அதன் மூலன் மக்களைத் தொடர்ந்தும் பார்வையாளர்களாக வைத்திருந்தனர். ஆனால் இந்த யுத்தத்தினால் புலிகளால் கட்டமைக்கப்பட்ட இந்த ஐதீகம் தகர்ந்து போனது. ஆனால் இந்த தகர்வானது தமிழ்த் தேசத்தைப் பொறுத்த வரையில் ஒரு தோல்வியாகாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய சந்திரிகா அரசைச் சுற்றி சிங்கள, தமிழ் முற்போக்கு சக்திகள் ஒரு பிம்பத்தை உருவாக்கி வந்திருந்தனர். சந்திரிக்காவின் புன்னகைக்கு பின்னால் மறைந்து கொள்ள முனையும் சிங்கள பேரினவாத அரசியலின் கொடுர முகத்தை வேண்டுமென்றே மறைக்க முயன்றனர். அமைப்பு முறையை (System) புரிந்து கொள்ளல் என்ற மார்க்சிய அக்கறைக்கு மாறாக, தனி நபரிடம் இருப்பதாக தாம் கூறிய நல்லெண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியலை விளக்க இவர்கள் முனைந்தனர். ஆனால் "தமிழ் பேசும் இந்த சிங்கள சோவனிஸ்டுகள்" தமிழ்த் தேசத்தினுள் கட்டமைக்க முனைந்த இந்த இரண்டாவது ஐதீகமும் இந்த யுத்தத்தின் மூலம் தகர்ந்தது. ஆகவே இந்த யுத்தத்தின் மூலம் தமிழ்த்தேசம் முகங் கொடுத்த பல்வேறு துயரங்களையும், இழப்புக்களையும் மீறி இந்த இரண்டு ஐதீகங்களும் தகர்ந்தமையானது நீண்ட கால நோக்கில் தமிழ்த் தேசத்திற்கு அரசியல் ரீதியாக அதிக பயனுள்ளதாகவே அமையும்.

ஒரு வேளை இப்படிப்பட்ட ஒரு யுத்தத்தில் புலிகள் தோல்வி அடைவதாக வைத்துக் கொண்டாலும் அது தமிழ்த் தேசத்தைப் பொறுத்த வரையில் தற்காலிக பின்னடைவேயன்றி முற்று முழுதான முடிவாகி விடாது. ஏனெனில் தமிழ் தேசத்தின் அரசியல் விடுதலை என்ற நியாயமான ஒரு தேவை நிறைவு பெறும் வரை தமிழ்த் தேசமானது தனக்குள் இருந்து அடுத்தடுத்து பல்வேறு வகைப்பட்ட போராட்ட சக்திகளை தோற்றுவித்துக் கொண்டேயிருக்கும். தமிழ்த் தேசத்தின் சரியான அரசியலை புலிகள் பற்றிக் கொள்ளாத வரையில் இன்றில்லாது விட்டாலும் என்றோவொரு நாள் தோல்விகளை புலிகள் முகங்கொடுக்க நேரிடலாம். ஆனால் இவையொரு போதும் தமிழ்த் தேசத்தின் தோல்வியாக மாட்டாது. மாறாக தமிழ்த் தேசத்தின் புரட்சிகர முற்போக்கு சக்திகள் இந்த விதமான தோல்விகளால் துவண்டுவிடாமல் இப்படிப்பட்ட நெருக்கடிகள் எதிர்காலத்தில் தோன்றலாமென்பதனை மனதில் கொண்டு புரட்சிகர மாற்றை அமைக்கும் தமது கடமையில் தீவிரமாக உழைத்தாக வேண்டும்.

இந்தளவிற்கு விரிவான அளவில் நடைபெறும் ஒரு தாக்குதலின் போது அந்தப் பிரதேசங்களில் குடியிருப்பவர்கள் தற்காலிகமாக இடம் பெயர்வது தவிர்க்க முடியாதது தான். படையினர் தாம் முன்னேறுவதற்கு முன்பு நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களும், முன்னேறும் போது நடைபெறும் தீவிரமான மோதலின் போது இடையில் சிக்கிக் கொள்ளும் அபாயம் குறித்தும், கைப்பற்றிய பிரதேசங்களில் படையினரின் கீழ் வாழ நேரிடும் போது முகங் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள், பழி வாங்கும் படுகொலைகள் போன்றவற்றை கருத்திற் கொள்ளும் போது இது தவிர்க்க முடியாதது தான் எனப் புரியும். ஆனால் இந்த இடம் பெயர்வு நடைபெற்ற விதம் தான் விசனத்திற்குரியது. ஸ்ரீலங்கா படைகள் தமது தாக்குதல்களை தொடங்கிய போது படையினரை பலாலியை விட்டு ஓர் அங்குலம் கூட முன்னேற தாம் அனுமதிக்க மாட்டோமென புலிகள் சூளுரைத்தார்கள். ஆனால் படையினர் முன்னேறிய போது தாம் எப்படியும் திருப்பித் தாக்குதல் நடத்தி, தாம் அப் பிரதேசங்களை மீட்டு விடுவதாக மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் முன்னேறும் படையினரை திரும்ப தாக்கும் முயற்சி தோல்வியில் முடிந்த போது கூட தாம் யாழ் நகரை விட்டு விரைவில் பின்வாங்கப் போவது குறித்து குடியிருப்பாளர்களுக்கு உரிய காலத்தில் அறிவிக்கத் தவறினார்கள். பின்பு திடீரென இரண்டு மணித்தியால அவகாசத்தில் அனைவரையும் வெளியேறுமாறு பணித்தார்கள். இந்தப் பணிப்புரைகளையும் மீறி தமது வீடுகளிலேயே தங்க முனைந்தவர்கள் வெளியேறுமாறு பலவந்தப்படுத்தப்பட்டார்கள். யுத்த காலத்தில் மக்கள் வழமையாகத் தங்கும் கோயில்கள் போன்றவையும் பல வந்தமாக மூடப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனால் இந்த மக்கள் வடமாராட்சி, தென்மாராட்சிப் பிரதேசங்களுக்கு இடம் பெயருமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்டமையாலும் உடனடியாகவே வெளியேறு மாறு நிர்ப்பந்திக்கப்பட்டமையாலும் மிகப் பெரும்பாலானோர் தமது உடமைகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்தக் கூட முடியாத நிலையில் உடுத்த உடையுடன் கையில் கிடைத்தவற்றை சுருட்டிக் கொண்டு வெளியேற நேர்ந்தது. இவ்வாறு திறந்து விடப்பட்ட மக்கள் வெள்ளமானது "ருவண்டா" அகதிகளின் வெளியேற்றம் போன்ற ஒரு தோற்றத்தை சர்வதேச அளவில் ஏற்படுத்த புலிகளின் பிரச்சாரத் துறைக்கு வேண்டுமானால் பயன் பட்டிருக்கலாம் ஆனால் சம்பந்தப்பட்ட மக்களது அரசியல் முதிர்ச்சிக்கு இது உதவப் போவதில்லை. மக்களுக்கு முறையான அறிவுறுத்தல்களை உரிய காலத்தில் வழங்கி போதிய கால அவகாசத்தையும், அவர்களது உடனடிப் பாதுகாப்பை அவர்களே தேர்ந்து கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்கியிருந்தால் இந்த தேவையற்ற மனித அவலங்களை பெரிதும் குறைத்திருக்கலாம். இவை எதுவும் நடைபெறாததினால் வெளியேறும் பதட்டத்தில் உறவினர்களை பிரிந்தது ஒரு புறமும் முக்கியமான சொத்துக்களை ஆவணங்களை பத்திரப்படுத்த தவறிய ஏக்கம் மறுபுறமுமாக இடம் பெயர்ந்த மக்கள் படும் துயரம் சொல்லும் தரமன்று. இப்போது தென்மாராட்சி, வடமாராட்சி பகுதி மக்களும் இடம் பெயருமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

முதலில் வடமாராட்சி, தென்மாராட்சி பிரதேசங்களுக்கும் பின்பு கிளிநொச்சி, வன்னி பிரதேசங்களுக்கும் இடம் பெயர்ந்த மக்களது வாழ்க்கை நிலமை என்பது இன்னோர் சோக அத்தியாயம்தான். முறையான தங்குமிடமின்மை, போதிய உணவு, குடிநீர், மலசல கூட வசதியின்மை, இதனால் பரவும்தொற்று நோய்கள், இவற்றை தீர்க்க போதிய மருத்துவ வசதியின்மை, இதனால் ஏற்படும் அநாவசிய மரணங்கலென ஒரு பக்கமாக தொடர்கிறது. தப்பிப் பிழைத்தவர்களுக்கோ அன்றாட வாழ்க்கைப் பாட்டை ஓட்டுவதே பெரும்பாடாகி விடுகிறது. " புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து தமிழ் மக்களை விடுதலை செய்ய" முயன்றவர்களின் முயற்சி கைகூடாததால் இப்போது அதேமக்களை பட்டினி போட்டு தமது நோக்கத்தை நிறைவேற்றப் பார்க்கிறார்கள். இந்த நோக்கில் இடம் பெயர்ந்துள்ள மக்கள் அகதிகளே அல்ல எனசாதிப்பதுடன் இந்த மக்களுக்கான நிவாரணப்பொருட்களை அனுப்பி வைப்பதில் தமது கெடுபிடிகளை அதிகரித் துள்ளார்கள். இந்தப் பகுதிகளுக்கு பெருமளவில் அகதிகள் வந்து சேர்ந்தும், போதிய உணவு விநியோகம் கிடைக்காததினாலும் அகதிகள் மட்டுமன்றி அங்கு சொந்த இருப்பிடங்களில் இருப்பவர்கள் கூட இந்த அவலங்களில் சிக்கிக் கொண்டுள்ளார்கள். பொருட்களின் தட்டுப்பாடானது விலைகளை பன்மடங்கு உயர்த்தியுள்ளது. இந்த நிலைமையில் கொழும்பிலிருந்து வடக்கிற்கு பணத்தை கொண்டு செல்வது கூட தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஒரு புறம் அகதி வாழ்க்கையின் நெருக்கடிகளும் இன்னோர் புறம் இடம் பெயர்ந்த அரசஊழியர்க்களுக்கு ஊதியமின்மை, அன்றாடங்காச்சிகளுக்கு எந்தத் தொழிலின்மை இவற்றுடன் கூடவே இழந்துவிட்ட சொத்துக்களும், பிரிந்து விட்ட உறவினர்கள் பற்றிய கவலை, எதிர்காலத்தை எவ்வாறு முகம் கொள்வதென்ற ஏக்கம் இவை எல்லாமாகச் சேர்ந்து இந்த இடம்பெயர்ந்த மக்களை மோசமான உளவியல் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கியுள்ளது. இதனால் பலர் சித்தப்பிரமை பிடித்தவர்கள் போன்று தாம் என்ன பேசுகிறோம் என்பதை அறியாது புலம்பிக் கொண்டிருக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலமையிலும் உள்ளார்கள்.

இந்த மாதிரியான அவலங்களிலிருந்து தப்பிக் கொள்ள பலரும் பல்வேறு வழிகளில் முயற்சிக்கின்றனர். சிலர் தென்னிலங்கைக்கு நகர்ந்து, வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர்கள் அனுப்பும் பணத்தைக் கொண்டு வாழமுடியும் எனக் கருதுகின்றனர் இன்னும் சிலரோ தமது சொந்த இடங்களில் தங்கியிருந்தால் தாம் அனுபவித்திருக்கக் கூடிய கஸ்டங்கள் எதுவுமே தற்போதைய அவலங்களை விட மோசமாக இருக்காது எனக் கருதி அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தமது சொந்த இடங்களுக்கு திரும்ப விழைகின்றனர். இப்படியான நோக்கங்களுடன் புலிகளிடம் அனுமதி கோர முனைபவர்கள் புலிகளால் துரோகிகள் என நாமகரணம் சூட்டப்பட்டு அவமதிக்கப்படுகின்றனர். ஆனால் இப்படிப்பட்ட நிர்க்கதியான நிலையிலும் தேசத்துரோகம் என்ற பட்டத்தை சுமக்க விரும்பாத பலர் மிகவும் மனம் நொந்தவர்களாகவும் மனதிற்குள் பொருமிக்கொண்டும் அடங்கியிருக்கின்றனர்.

மக்களின் இடம்பெயர்வுக்கு காரணமானவர்கள் என்ற வகையில் புலிகள் மக்களின் அவலங்களுக்கு தாம் பொறுப்பெடுத்து சில புனர்வாழ்வுநடவடிக்கைகளில் ஓரளவு ஈடுபட்டு வருகின்றார்கள் என்பது உண்மை தான். வரலாற்றில் முதல் தடைவையாக புலிகள் இவ்வாறு மக்களின் நலன்களுக்கு தாமே பொறுப்பெடுத்து செயற்பட முனைகிறார்கள். இது வரவேற்கத்தக்கதுதான். என்ற போதிலும் இடம்பெயர்ந்த பல இலட்சக்கணக்கான மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது இது மிகச் சொற்பமும் மிகக்காலம் கடந்ததும். (Too Little and Too Late) ஆகும். ஏனெனில் இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்களை பராமரிப்பது என்பது புலிகளின் வளங்களின் சக்திக்கு அப்பாற் பட்டதாகும். அத்துடன் விடுதலைப் போராட்டத்தை தீவிரமாக முன்னெடுக்கும் ஒரு அமைப்பு தனது அரிதான வளங்களை புனர்வாழ்வு நடவடிக்கைகளில் எவ்வளவு தூரம் செலவிடலாம் என்பது கூட வரையறைக்குட்பட்டது தான். அத்தோடு தேசமக்களினது சுயமான பொருளாதாரத்தை கட்டுவது போன்ற செயற்பாடுகள் மிகவும் நீண்ட காலமாக கவனமாகத் திட்டமிடப்பட்டு செயற்பட வேண்டியவையே ஒழிய, இடம்பெயர்ந்த பெரும்தொகையான மக்களை வைத்துக்கொண்டு பரீட்சித்துப் பார்க்கும் விடையமல்லவே. இத்தகைய மாற்றுப் பொருளாதாரத்தை கடந்த காலங்களில் புலிகள்தான் வடிவமைத்திருக்க வேண்டுமென்பதுமில்லை. புலிகளின் அரசியலுடன் உடன்படாத, ஆனால் தேச பக்திமிக்க பல நல்ல சக்திகள்இந்த மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க முடியும். அவர்களை ஓரளவு சுதந்திரமாக செயற்பட விட்டிருந்தாலே இப்போது அந்த அமைப்புக்கள் மக்கள் துயர் துடைப்பதில் மிகவும் காத்திரமான பங்களித்திருக்க முடியும். இந்த விடையத்தில் கொழும்பிலிருந்து கப்பலில் உணவை அனுப்பக் கோரும் பினாமி ஊர்வலங்களை ஏற்பாடு செய்வதற்கு மேல் உருப்படியான நடவடிக்கைகளை புலிகள் மேற்கொள்ளவில்லையென்றே கூறவேண்டும்.

புலிகள் மக்களை ஏன் பலவந்தமாக இடம்பெயர்த்தார்கள் என்பதை சற்று நெருங்கிப் பார்ப்போம். இதற்கு புலிகள் கூறும் "பாதுகாப்புக் காரணங்களுக்கு" மேலாக இன்னும் சில பிரச்சனைகள் இருக்கின்றன.

1) அரசு தனது இராணுவ நடவடிக்கைகளுக்கு கூறும் காரணம் தமிழ் மக்களை புலிகளின் பிடியிலிருந்து விடுவிப்பதாகும். ஆனால் படையினர் கைப்பற்ற நேர்ந்தது





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் எவருமே இல்லாத பிரதேசங்களைத் தான் என்பது அரசின் முகத்தில் கரிபூசியது போலாகிறது. இதுதான் விளைவு என்றால் அரசு தனது இராணுவ நடவடிக்கைகளை சர்வதேச அளவில் நியாயப்படுத்த முடியாமல் போவதுடன் மேற்கொண்டு மேலும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் இராணுவத்திற்கு அக்கறை குறைந்து போகலாம். இது இராணுவ ரீதியில் புலிகளுக்கு ஒரு தந்திரோபாய வெற்றியே. ஆனால் இந்த தந்திரோபாய வெற்றிக்காக இப்படி இலட்சக்கணக்கான மக்களை நகர்த்துவது எவ்வளவு தூரம் சரியானது என்ற ஒரு தார்மீகக் கேள்வி இங்கு எழவே செய்கின்றது.

2) புலிகள் மக்களை அணிதிரட்டுவதற்கு எப்போதும் எதிரியையே நம்பியிருக்கின்றார்கள். மிக நீண்ட காலமாக தமிழீழ விடுதலைப்போராட்டம் தொடர்ந்து வந்த போதிலும் மக்கள் முறையாக அரசியல் மயப்படுத்தப்படாமலே இருந்து வருகிறார்கள். இதனால் எதிரி தற்காலிகமாக தனது அணுகுமுறைகளை மாற்றிக் கொண்டு சில சலுகைகளை அறிவித்தவுடன் மக்கள் போராட்டத்தை தொடர்வதன் அவசியம் குறித்த கேள்விகளை எழுப்பத் தொடங்கும் நிலமை உருவாகிறது. இதனால் எதிரியினால் கைப்பற்றப்படும் பிரதேசங்களில் வாழ நேரிடும் மக்கள் குறுகிய காலத்திற்காவது எதிரியின் செல்வாக்கிற்குட்பட்டு போராட்டத்தின் தேவை குறித்த கேள்விகளை எழுப்பக் கூடும் என்ற அச்சம் புலிகளிடம் எழுகிறது.

புலிகளால் தெரிவிக்கப்படும் "மக்களின் பாதுகாப்புக் காரணங்கள்" என்பதற்கு மேலாக மேற்கூறிய இரண்டு அரசியல் இராணுவக் காரணங்கள் புலிகளிடத்தில் அதிகம் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பதை புரிய முடிகிறது. ஏனெனில் கடந்த காலங்களில் பல தடவை மக்களின் பாதுகாப்பை விலையாகக் கொடுத்து தாக்குதல்களை மேற்கொண்டு, அதற்கு எதிரான எதிரியின் நடவடிக்கைகளைப் பயன்படுத்தியே மக்களைத் தன்பால் திரட்டிக் கொண்டவர்கள் புலிகள். இந்தக் காரணங்களுக்காக புலிகள் எவ்வளவு காலம்தான் இப்படியாக "பூனை குட்டியைக்காவுவதுபோல்" மக்களை தொடர்ந்து கொண்டு செல்ல முடியும் என்பது கேள்விக்குரியதே. இப்படியாக மக்களை நம்பாது அவர்களைத் தொடர்ந்தும் பலவந்தமாக வழி நடத்துவதற்கு பதிலாக மக்களை, அவர்களது ஆற்றல்களை அவர்களது போராட்ட சக்தியை நம்பி, அவர்களை முறைப்படி அரசியல் மயப்படுத்தி, நிறுவனமயப்படுத்தி, தாமாகவே போராடுவதற்கு வழிநடத்துவதன் மூலம் தான் இந்தப் பிரச்சனையை நீண்ட கால கண்ணோட்டத்தில் ஆரோக்கியமாக தீர்த்து வைக்கலாம். இப்படியாக மக்களை சொந்தமாக தமது விடுதலைக்காக போராடும் நிலையை ஏற்படுத்தி விட்டால் அதற்கு மேல் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் சில பிரதேசங்கள் கைமாறுவது என்பது எதிரிக்கு பெருந் தலையிடிகளை ஏற்படுத்தி கொடுப்பதாகவே அமைந்து விடும். பலஸ்தீன விடுதலை இயக்கங்களின் ஆயுதப் போராட்டங்களை விட இஸ்ரேலிய அரசை உலுக்கி எடுத்தது. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்கள் நடத்திய கிளர்ச்சிகள் (Intifadah) தானென்பதை மனதில் கொள்ள வேண்டும். எனவே மக்களை சரியாக வழிநடத்தும் நிலை ஏற்படுமாயின் ஒரு புறம் மக்கள் கிளர்ச்சிகளும் மறுபுறம் போராளிகளின் தீவிரமான தாக்குதலுமென எதிரி இரண்டு பக்கங்களாலும் ஒரே நேரத்தில் இரண்டு முஸ்டிகளினால் தாக்கப்படும் நிலைமை உருவாகியிருக்கும். இது தமிழ்த் தேசவிடுதலையை மிகவும் தீவிரப்படுத்தியிருக்கும்.

மக்களை அரசியல் மயப்படுத்தி அவர்களது போராட்டங்களுக்கு வழிகாட்டாத விடுதலைப் போராட்டம், அது எவ்வளவு தான் தீவிரமாக இருப்பினும் கூட, ஒரு வகையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறைபாடுடையது தான். தேச விடுதலை என்பதை மிகவும் விரிவான அர்த்தத்தில் புரிந்து கொள்வோமானால், தேச மக்கள் விழிப்புணர்வு பெற்று நேரடியான செயலில் இறங்காத வரை தேசத்தை புரட்சிகரமாக மாற்றியமைப்பது என்பது ஒருபோதும் சாத்தியப்படாது. தேசத்தின் பொருளாதாரத்தை புனரமைப்பதும், பழைய சிந்தனை நடைமுறைகளை குழி தோண்டிப் புதைத்து புரட்சிகர வழியில் தேசம் நடைபோடுவதும் மக்கள் எவ்வளவு தூரம் இந்தப் போராட்டத்தில் செயலூக்கமாக பங்கு கொள்கிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது. இதற்கு மாறாக தேசமானது வெறுமனே பார்வையாளர்களாக செயல்பூர்வமற்ற ஆதரவாளர்களாக வைத்திருக்கப்படும் வரையில் இந்த வகை நெருக்கடிக்கு புலிகளும் தேசமும் திரும்பத் திரும்ப முகங் கொடுக்கவே நேரிடும்.

இடம் பெயர்ந்த மக்களின் வசதிகளுக்காக கிளிநொச்சியை ஒரு பெரும் நகரமாக மாற்ற புலிகள் முயல்கிறார்கள். இந்த நகரமும் கூட அடுத்ததோர் இராணுவ நடவடிக்கையில் பாதுகாக்கப்படும் என்பதற்கு எந்தவோரு உத்தரவாதமும் கிடையாது. தேசியப் பிரச்சனை என்பது காணி, நிலம் பற்றிய (Real Estate) பிரச்சனை இல்லை. மாறாக இது ஓர் அரசியல் பிரச்சனை என்கிறார் லெனின். எனவே இப்போது உடனடியாக மக்களுக்கு தேவைப்படுவது, அடுத்த தாக்குதலில் கைமாறமாட்டாது என்ற உத்தரவாதம் எதுவுமற்ற இன்னோர் நகரமும் பிரதேசமும், மற்றும் அவை தொடர்பான மாயைகளும் அல்ல. மாறாக மக்களை அரசியல் மயப்படுத்தி தமது சுதந்திரத்திற்காக தாமே போராடுவதற்கான பலம் தான். இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியான நிலையிற் கூட இந்தப் படிப்பினையை பெறாது விட்டால் இதற்கான பெரிய விலையை எதிர்காலத்தில் புலிகள் மாத்திரமல்ல தமிழ்த் தேசமும் செலுத்த வேண்டியிருக்கும்.

இன்றைய யுத்தத்தின் விளைவாக புலிகளும், அவர்களது முக்கிய வளங்கள் கேந்திர முக்கியத்துவமுடைய நிலைகள் என்பவை யாழ் குடா நாட்டிற்கு வெளியில் வந்திருப்பது ஒரு நல்ல விடயம் தான். இது வெறுமனே அடுத்த தடவை யாழ் குடாநாடு புலிகளின் கைக்குள் வரும் வரைக்குமான ஒரு தற்காலிக நிகழ்வாக அல்லாமல், தேசத்தினதும் புலிகளினதும் வளங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குவிந்திருந்ததன் விளைவுகளை புரிந்து கொண்டும், தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுப்பதில் தேசமானது தனது சொந்த வளங்களை நம்பியிருக்க வேண்டியதன் அவசியத்தை புரிந்து கொள்வதாக, மொத்தத்தில் "யாழ்மையவாத" சிந்தனையில் இருந்து முறித்துக் கொள்வதாக இருந்தால் அது எமது தேசத்திற்கு நீண்ட காலத்தில் மிகவும் ஆரோக்கியமான விளைவுகளை வழங்கக் கூடியதாகும்.

கடந்த காலத்தில் மக்களை முறையாக அரசியல் மயப்படுத்தாதன் விளைவாக மக்கள் இப்போது புலிகள் முகங்கொடுக்கும் "தோல்விகளை" காணும் போது, புலிகளது உண்மையான பலம் இதுதான், என்றால் புலிகள் அவசரப்பட்டு 3ம் ஈழப் போரை தொடக்கிவிட்டார்களோ என்ற சந்தேகங்களை எழுப்பத் தொடங்குகிறார்கள். உண்மையில் தமிழ் மக்களை ஒரு தனியான தேசமாக ஏற்றுக் கொண்டு அவர்களை சமத்துவமாக நடத்துவதற்கான அரசியல், அதிகார ஒழுங்கமைப்புகள் பற்றி அக்கறைப்படாத எந்தவோர் "சமாதான முயற்சிகளும்" தோல்வியுறுவது தவிர்க்க முடியாதது தான். ஆதலால் புலிகளோ, அரசோ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கூட இப்படிப்பட்டதோர் அரசியல் அடிப்படையை கொண்டிராத சமாதான முயற்சிகள் தோல்வியுறுவதும், மீண்டும் யுத்தம் வெடிப்பதும் தவிர்க்க முடியாதது தான். ஆனால் இந்த ஒவ்வொரு "சமாதான முயற்சிகளையும்" மக்களின் அரசியல் முதிர்ச்சியை அதிகரிக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விதத்தில் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது தான் இங்குள்ள பிரச்சனை ஆகும். ஒரு பக்கத்தில் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாமே என உரிமை பாராட்டுவதும் மறு புறத்தில் அந்த மக்களது அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் பிரச்சனைகளில் மிகவும் தன்னிச்சையாக முடிவுகளை மேற்கொள்வதும், அந்த முடிவுகள் தொடர்பான அரசியல் காரணங்களைக் கூட மக்களின் முன் முறையாக வைக்கத் தவறுவதும் படிப்படியாக மக்களை ஒட்டுமொத்தமான போராட்டத்திலும் நம்பிக்கை இழக்கத் தான் செய்யும். இந்த நிலையில் மக்களின் அரசியல் விழிப்புணர்வின்மையை திட்டித் தீர்த்துக் கொண்டிராமல் தலைமையானது தமது அரசியல் தவறுகளை இனங்காண வேண்டும். ஆக மொத்தத்தில் புலிகள் அமைப்பு என்பது தமிழ் மக்களை ஏதோவொரு விதத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அமைப்பேயன்றி புலிகளே மக்களாக மாட்டார்கள். மொத்தத்தில் 3ம் ஈழப் போரின் தொடக்கம் பற்றியே தமிழ் மக்களுக்கு முறையான விளக்கம் அளிக்கத் தவறிய நிலையில் இந்தத் தற்காலிக பின்வாங்கல் மக்களது நம்பிக்கைகளை மிகவும் சிதைக்கச் செய்யக் கூடியவை ஆகும்.

இந்த யுத்தத்தை நெருங்கிப் பரிசீலிப்போமானால் ஒரு அர்த்தத்தில் இந்த யுத்தமானது ஒருவித ஆயுதப் போட்டி (Arms Race) சாம்-7-எதிர்-Mechanised Infantry போலவும், போரிடும் தரப்புகளுக்கு தலைமை தாங்குபவர்களது திறமைகள் சம்பந்தப்பட்டது-பிரபாகரன் எதிர் கொப்பேகடுவா அல்லது ஜானக பெரேரா- போலவும் தோற்றமளிப்பதையும் அவதானிக்க முடியும். ஆனால் யதார்த்தத்தில் இந்த யுத்தமானது வெறுமனே ஒரு ஆயுதப் போட்டியோ அல்லது தனிநபர்களது திறமைகளை பலப்பரீட்சை செய்யும் களமோ அல்ல. மாறாக இந்த யுத்தமானது தமிழ்த் தேசத்திற்கும் அதனை ஒடுக்க விழையும் சிங்கள அரசுக்கும் எதிரானது ஆகும். இந்த அர்த்தத்தில் இந்த யுத்தத்தின் வெற்றி தமிழ்த் தேசம் தனது அணியை எவ்வளவு தூரம் பலப்படுத்துகிறது என்பதிலும் எதிரியை தனிமைப்படுத்துவதில் எவ்வளவு தூரம்வெற்றி பெறுகிறது என்பதிலுமே தங்கியுள்ளது. அதாவது இந்த யுத்தத்தின் வெற்றியானது தமிழ்த் தேசம் மேற்கொள்ளும் சரியான அரசியலினாலேயே இறுதியில் நிர்ணயிக்கப்படுகிறது.

புலிகளின் கடந்தகால அரசியலானது தமிழ்த் தேசத்தை வெறுமனே செயலற்ற ஆதரவாளர்களாக மாற்றி விட்டிருப்பதுடன் பல தமிழ்ப் புரட்சிகர சக்திகளை செயற்பட முடியாமல் தடுத்தும் உள்ளது. தமிழ் தேசத்தின் நட்பு சக்திகளான முஸ்லீம் மக்கள்,மற்றும் சிங்கள முற்போக்கு சக்திகளை சிங்கள அரசை நோக்கி தள்ளிவிட்டுள்ளது. மாறாக ஸ்ரீலங்கா அரசுக்கும் சிங்கள தேசத்திற்கும் இடையில் இருக்கக் கூடிய முரண்பாடுகளையும் கடந்து; சிங்கள தேசம் ஸ்ரீலங்கா அரசுடன் நெருங்கி வர புலிகளது இனப்படுகொலைகள் உதவியுள்ளன. புலிகளது இனப்படுகொலைகள் , மனித உரிமை மீறல், எதேச்சாதிகார போக்குகள் என்பவை தமிழ்த்தேச அரசியலை சர்வதேச அளவில் பலவீனப்படுத்தியுள்ளது. அரசியலை வேறுவிதத்தில் தொடர்வதே யுத்தமாகும். இதனால் அரசியலை விலையாகக் கொடுத்துபெறப்படும் இராணுவ வெற்றிகள் குறுகிய ஆயுளையே கொண்டவையாகும்.

இந்த யுத்தத்தின் போது அவதானிக்கப்பட்ட இன்னுமொரு முக்கியமான விடயம், தமிழ்த் தேசத்தில் சுயாதீனமாக செயற்படக் கூடிய பிரஜைகள் குழுக்கள் கூட இல்லாமையின் விளைவுகள் ஆகும்.புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பிரதேசத்தினுள் ஏனைய விடுதலை இயக்கங்களை மட்டுமன்றி சாதாரண பிரஜைகள் குழுக்கள் போன்ற அமைப்புக்களைக் கூட சுதந்திரமாக செயற்பட அனுமதிப்பதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கு செயற்படும் தன்னார்வக் குழுக்கள்,தொண்டர் அமைப்புக்கள் கூட ஏதோவொரு விதத்தில் புலிகளின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் செயற்பட்டு வருகின்றன. இதனால் தமிழ் தேசத்திற்கு அவலங்கள் நேரும் போதெல்லாம், அதனை வெளிப்படுத்த போரிடும் இரண்டு தரப்பினர் தவிர்ந்த ஏனைய சுயாதீன அமைப்புக்கள் எதுவும் இல்லாமல் போவதாகும். அண்மைய போர் நடவடிக்கையின் போது படையினர் மக்கள் மீது நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களையும்,அரசு தமிழ் மக்களை கூட்டாக தண்டிக்க எடுத்த முயற்சிகளையும் சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்த வடக்கிலிருந்த பல்வேறு தனிநபர்களும் சில அமைப்புகளும் முற்பட்டன. ஆனால் வடக்கில் எந்தவொரு சுயாதீன அமைப்புக்களும் செயற்பட முடியாத நிலைமையை பயன்படுத்திக் கொண்ட ஸ்ரீலங்கா அரசு இப்படிப்பட்ட சக்திகளது முயற்சிகளை புலிகளின் பிரச்சார தந்திரம் என சர்வதேச அரங்கில் இலகுவாக தட்டிக்கழித்து விடுவது சாத்தியமாயிருந்தது. இந்த விதத்தில் புலிகளது எதேச்சாதிகார போக்கு தமிழ் மக்களது அவல நிலையை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தக் கூட பெரும் தடையாக அமைந்துவிட்டது.

புலிகள் சிறந்த அனுபவவாதிகள் ஆவர். இவர்கள் முன்னரே அரசியல் திட்டத்தை, தமது மூலோபாயத்தை வகுத்து செயற்படாது விட்டாலும் கூட நடைமுறை அனுபவங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்றுப் படிப்படியாக தமது போராட்ட வழி முறைகளில் முன்னேறி செல்கின்றனர். ஆனால் இந்த அனுபவவாதமானது அதற்கேயுரிய பின்னடைவுகளையும் கொண்டிருக்கிறது. ஒரு புறம் இவர்கள் ஸ்ரீலங்கா இராணுவம் யாழ் நகரை தாக்கிக் கைப்பற்றும் நோக்கத்தை கைவிட செய்யவல்லதும், இலங்கையின் பொருளாதாரத்தை பல ஆண்டுகளுக்கு எழும்ப முடியாதவாறு முடக்கிப் போடக் கூடியதும், இலங்கையில் பெரியளவிலான அரசியல் குழப்பங்களுக்கு வழிவகுக்க வல்லதுமான இலக்குகளை தேர்ந்தெடுத்து தாக்க முனைகிறார்கள் ஆனால் இந்த தாக்குதல்கள் முழு வெற்றிகரமாக அமையவில்லை. தலை நகரில் இவ்வளவு பெரிய இலக்கை குறி வைப்பதும் தாக்கி அதனை முற்றாக அழித்தொழிப்பதிலும் உள்ள சிரமம் புரிந்து கொள்ளக் கூடியது தான். ஆனால், அதே வேளை சில தனிநபர் அழித்தொழிப்புக்காக தமது சக்திகளை செலவிடுவதும், அதன் மூலம் எதிரியை உசார் அடையச் செய்வதும் புலிகளின் இராணுவ தந்திரோபாயங்கள் பற்றி கேள்விகளை எழுப்புகின்றன.தனிநபர் அழித்தொழிப்புக்கள் என்பது போராட்டத்தின் ஒரு கட்டத்தில் புலிகளின் பிரதான வழிமுறையாக இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் இன்று முழு இலங்கைப் பொருளாதார,அரசியல், இராணுவ முதுகெழும்பை முறிக்கவல்ல இலக்குகளை நோக்கி நகரும் போது அதனை சரிவர செய்து முடிக்காமல் இப்படியான அழித்தொழிப்பிற்கு ஆற்றல்களை செலவிடுவது என்பது கேள்விக்குரியதாக அமைந்துவிடுகிறது அல்லவா? இந்த தாக்குதல்களால் நிலை குலைந்து போயிருந்த அரசு நிதானத்திற்கு திரும்பும் முன்னே கிழக்கில் சிங்கள கிராம மக்களை கொலை செய்ததன் மூலம் அரசுக்கு மிகவும் சாதகமான பிரச்சார சாதனங்களை புலிகள் வழங்கி இருக்கிறார்கள். பொஸ்னிய நிகழ்வுகளுக்குப் பின்பு இனப்படுகொலை, இனச் சுத்திகரிப்பு போன்றவை சர்வதேச அரங்கில் மிகவும் Sensitive ஆன விடயங்களாக மாறியுள்ளன. இப்படிப்பட்ட விடயங்களை அதுவும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஐ.நா.வில் உரையாற்றும் போது செய்வதென்பது ஸ்ரீலங்கா அரசின் பிரச்சாரத்திற்கு தாமே உதவி செய்வதாக அமைந்துவிடுகிறது அல்லவா? ஒரு புறம் தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு நடத்துகின்ற இன ஒழிப்பு நடவடிக்கைகள் செய்தித் தணிக்கையாலும் பத்திரிக்கையாளர்களை வடக்கே செல்ல அனுமதிக்காமையாலும் சர்வதேச அரங்கில் மறைக்கப்படுகின்றன. மறுபுறம் சிங்கள மக்கள் மீது நடாத்தும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனப்படுகொலைகளை ஸ்ரீலங்கா அரசு சர்வதேச அளவில் விரிவாக பிரச்சாரம் செய்ய முடிகின்றது. இதன் மூலம் ஸ்ரீலங்கா அரசானது தமிழ் மக்கள் மீது ஒரு மிகவும் கோரமான யுத்தத்தை கட்டவிழ்த்துக் கொண்டே, அதே நேரம் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட சிங்கள கிராமவாசிகள் பற்றிய தொலைக்காட்சிப் படங்களை உலகளாவிய ரீதியில் தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்து தலை கீழான ஒரு படத்தை சர்வதேச அளவில் ஏற்படுத்துவது சாத்தியப்படுகிறது. உண்மையில் இவை புலிகள் சர்வதேச அரங்கில் ஸ்ரீலங்கா அரசு தொடர்பாக ஏற்படுத்த விழையும் படத்தின் நேரெதிரான படத்தை தோற்றுவித்து விடுகின்றன. இந்தவிதமான முரண்பாடுகளை எவ்வாறு புரிந்து கொள்வது?

புலிகள் தமது நடவடிக்கையின் அனுபவங்கள் ஊடாக அதிகம் முன்னேறி வருகிறார்கள் என்பது உண்மை தான். ஆனால் இந்த முன்னேற்றமானது கோட்பாட்டு மட்டத்தில் அல்லாமல் வெறுமனே அனுபவவாத மட்டத்திலேயே நடைபெறுகிறது. எந்தவொரு நடவடிக்கையும் முரணற்ற தன்மையை பேணுவதற்கு அது கோட்பாட்டினால் வழிகாட்டப்படுவது அவசியமானதாகும். மாறாக, அனுபவர்தமானது ஒருகையால் பெற்றதை மறுகையால் தட்டிவிடும் செயலைத்தான் செய்யும். புலிகளுக்கு மாற்றாக ஒன்றை அமைக்க விழையும் புரட்சிகர சக்திகள் இப்படிப்பினைகளையும் மனங்கொள்வது அவசியமானதாகும்.

அடுத்து, கட்டுரைகள் பற்றிய விடயத்தை எடுத்துக்கொள்ளும் முன்பாக, தேசியவாதம் தொடர்பான சில கோட்பாட்டுப் பிரச்சனைகளை மேலெழுந்தவாரியாக வேனும் தொட்டுச் செல்வது அவசியமெனக் கருதுகின்றோம்.

**தே**சியவாதத்தின் தோற்றத்தை பல்வேறு கோட்பாட்டாளர்களும், பலதரப்பட்ட விதத்தில் பொருளாதாரத்துடன்,குறிப்பாக முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் இணைத்து விளக்க முற்பட்டுள்ளனர். முதலாளிகள் , சந்தையிலேயே தேசியவாதத்தைக் கற்றுக் கொள்வதாக குறிப்பிட்டதன் மூலம் தேசியவாதத்தை முதலாளித்துவத்தின் **பொதுவான சந்தை** அதாவது வினியோகம் பற்றிய பிரச்சனையுடன் தொடர்புபடுத்தி ஸ்டாலின் விளக்க முயன்றார். இதற்கு மாறாக, **கெல்னர்** கைத்தொழில் துறையின் உற்பத்தி நிலைமைகளை அதற்கு முந்திய விவசாய உற்பத்தியின் நிலைமைகளுடன் ஒப்பிடுவதன் மூலம், அதாவது முதலாளித்துவத்தின் **உற்பத்தி நிலைமைகள்** பற்றிய பிரச்சனைகளுடன், தொடர்புபடுத்துவதன் மூலம் விளக்குகின்றார். **பெனடிக்ட் அன்டர்சன்,** பொதுவில் முதலாளித்துவ சமூதாயம் உருவாக்கிய பொதுவான சமூக சூழலுடன்- பத்திரிக்கை, அச்சுயந்திரத்தின் தோற்றம் என்பவற்றுடன்- தொடர்புபடுத்தி தேசியவாதத்தை விளக்குகின்றார். **பௌலன்ஸாசோ,** முதலாளித்துவ சமுதாயத்தில் காலம், இடம் பற்றிய சிந்தனையில் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பிட்டு, பிரதேசம், வரலாறு,கலாச்சாரம் பற்றிய பிரக்ஞைகளின் தோற்றத்தை ஆராய்ந்து அதன் மூலமாக தேசியவாதத்தை விளக்க முனைகிறார். **டொம் நெய்ரின்** அவர்களோ முதலாளித்துவத்தின் கீழ் நடைபெறும் சமத்துவமற்ற வளர்ச்சியை (Uneven Developments) விளக்கி, அகக் கொலனித்துவம் (Internal Colonialism) என்ற கருத்தாக்கத்துடன் தொடர்புபடுத்தி மூன்றாம் உலக நாடுகளில் தோன்றிய தேசியவாதத்தை மட்டுமன்றி, வளர்ந்த முதலாளித்துவ நாடுகளினுள் தலையெடுக்கும் தேசிய வாதங்களை-ஸ்கொட், வேல்ஸ், தேசியவாதங்களை- விளக்கினார்.

ஏகாதிபத்திய காலகட்டத்தில் உருவாகியுள்ள உலகப் பொருளாதாரக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டமைப்பை காரணமாகக் காட்டி, இனிமேல் தேசிய வாதம் மறைந்து போகும் என கொச்சைப் பொருளாதாரவாதிகள் வாதிக்க முனைகின்றனர். இதற்கு மாறாக, வேறு சில மார்க்சியவாதிகளோ, உலகப் பொருளாதார கட்டமைப்பில் காணப்படும் அதிகார படிநிலை வரிசையை சுட்டிக்காட்டி, வளர்ந்துவிட்ட மைய நாடுகள் விளிம்பு நிலை நாடுகளை இக் கட்டமைப்பினுள் சுரண்டுவதையும், தமது சுரண்டல் நலன்களை காப்பதற்கு இவை "தேசிய நலன்கள்" (National Interests) என்ற பெயரில் தமது தேசியவாதங்களை உயர்த்திப் பிடிக்க முனைவதையும் காட்டுகின்றார்கள். உலகப் பொருளாதாரம் என்ற சுரண்டல் வலைப் பின்னலினுள் சிக்கிக் கொண்டுள்ள விளிம்பு நிலை நாடுகள், இக் கட்டமைப்பில் இருந்து விடுவித்துக் கொள்வதன் மூலமே தமது விமோசனத்தைக் காண முடியும் என்பதை விளக்குகிறார்கள். இப்படியாக உலகக் கட்டமைப்பில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முனையும் விளிம்பு நிலை நாடுகளை ஒடுக்க மைய-நாடுகள் தமது தேசிய வாதங்களை உயர்த்திப் பிடிக்கும் போது; விளிம்பு நிலை நாடுகளும் தத்தமது தேசியவாதத்தை உயர்த்திப் பிடிப்பதன் மூலமே தமது விமோசனத்தை அடைய முடிகிறது. இதனால் சோசலிசமும், தேசியவாதமும் விளிம்பு நிலை நாடுகளில் ஒன்றுடன் ஒன்று பிண்ணிப் பிணைந்துள்ளன.போல்சுவிக் புரட்சிக்கு பின்னான ஒவ்வொரு புரட்சியும் ஏதோ ஒரு விதத்தில் தேசியவாதத்துடன் பிணைந்திருந்தது என்பது தற்செயலானதல்ல. இதனைக் கருத்தில் கொண்டு தான் ரெஜிஸ் டெப்ரே, "இலத்தீன் அமெரிக்காவில் இன்று சோசலிசம் அதன் அர்த்தத்தைப் பெற வேண்டுமானால் இது தேசியவாதத்துடன் இரண்டறக் கலந்திருக்க வேண்டும். அதே சமயம் சோசலிசம் இல்லாத தேசியவாதம் வெறும் ஏமாற்றும் சூழ்ச்சியுமே ஆகும்"என்கிறார்.

இப்படியாக பல்வேறு கோட்பாட்டாளர்களும் தேசியவாதத்தின் தோற்றத்தை ஏதோவொரு விதத்தில் முதலாளித்துவத்துடன் இணைத்து விளக்க முனைவதைக் காண்கிறோம். இவற்றுள் சில மிக ஆழமான பார்வைகளை வழங்கக் கூடியதாக உள்ளன. ஆனால் இவ் விளக்கங்களில் உள்ள முக்கிய குறைபாடு யாதெனில் இவை யாவும் ஏதோஒரு வகையில் தேசியவாதம் பற்றிய தமது கருத்தாக்கங்களை முதலாளித்துவம் என்ற பொருளாதார அமைப்புடன் இணைத்தே விளக்க முனைகின்றன. இதனால் இவை ஒருவித "பொருளாதாரவாத" சாயலையும் கொண்டுள்ளன. ஆனால் இந்த விதமான பொருளாதார சாயலைக் கொண்ட விளக்கங்களால், முதலாளித்துவம் உலகில் தோன்றுவதற்கு மிகவும் முந்திய காலங்களில் கொரிய, வியட்நாமிய மக்கள் அந்நிய ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக காட்டிய மிகவும் தீவிரம்; தேசிய உணர்ச்சிகளை விளக்கமுடியாமல் உள்ளது. அத்துடன் இன்று உலகில் பல்வேறு பகுதிகளிலும் தீவிரம், பெற்றுள்ள தேசியவாத எழுச்சிகளை வெறுமனே பொருளாதாரக் காரணிகளால் மாத்திரம், அதாவது, பொருளாதார தேவைகளின் துணை விளைவுகளாகக் கருதி, விளக்கிவிட முடியாதுள்ளது. இப்படியாக, தேசியவாதம் பற்றிய பிரச்சனையில் கோட்பாட்டு நெருக்கடி தோன்றியுள்ளது வெறுமனே மார்க்சியத்திற்கு மட்டுமே உரிய பிரச்சனை அல்ல. மாறாக, ஏனைய சமூகவியலாளர்களும் இதே விதமான நெருக்கடிகளை முகங் கொடுக்கவே செய்கின்றனர். அந்த விதத்தில் தேசியவாதம் தொடர்பான கோட்பாட்டுப் பிரச்சனைகள் என்பது அறிவுத் துறையில் ஒரு சர்வவியாபகமான பிரச்சனையாகவும் உள்ளது.

நாம் தேசிய வாதத்தை தனியான ஒரு கட்டமைப்பு என்கிறோம். இப்படியாக, தேசியவாதத்தை நாம் பொருளாதாரத்திலிருந்து வேறுபட்ட கட்டமைப்பாக கருதினால்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசம் என்பது வர்க்கம் என்பதிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும் சரியாக குறித்துக் கொள்வது முக்கியமானதல்லவா? வர்க்கம், தேசம் என்பவற்றிக்கிடையிலான மிகவும் அடிப்படையான வேறுபாடு, **வர்க்கம் என்பது புறநிலை சார்ந்தது, தேசம் என்பது அகநிலை சார்ந்தது** என்பதாகும். அதாவது உற்பத்தி உறவில் ஒருவர் வகிக்கும் இடத்தைப் பொறுத்து, அதனை அவர் பிரக்ஞைபூர்வமாக உணர்ந்தாலும் உணராவிட்டாலும் கூட, அவர் குறிப்பிட்ட வர்க்கத்தைச் சேர்ந்தவராகின்றார். மாறாக தேசம் என்பது அகநிலை சார்ந்ததாகும். தேசத்திற்கான வரையறைகளை ஸ்டாலின் கூறிய பொதுவான மொழி, பிரதேசம், பொருளாதாரம், பாரம்பரியம், கலாச்சாரம், என்பவற்றுடன் கூடவே, பொதுவான வரலாற்று விதி, மதம், இனம் (Race) போன்ற பல்வேறு காரணிகள் தேசத்தை நிர்ணயிக்கின்றன. ஆயினும் இக் காரணிகள் அனைத்தும் இருந்தாலும் கூட, குறிப்பிட்ட ஒரு மக்கட் பிரிவினர் தேசமாக ஆகிவிடமாட்டார்கள். மாறாக எப்போது இவர்கள் இக் காரணிகளில் ஏதாவது ஒன்றை அடிப்படையாகக் கொண்டு தமது அரசியலை முன்னெடுக்கத் தொடங்குகிறார்களோ அதாவது எப்போது தேசிய பிரக்ஞையை பெறுகின்றார்களோ அப்போது தான் அவர்கள் தேசமாக உருப்பெறுகிறார்கள். இந்த விதத்தில் தேசியம் என்பது வரலாற்றில் "தற்செயலானதாகும்" அதாவது, ஒரு குறிப்பிட்ட மக்கட் பிரிவினர் எந்தெந்த அடையாளப்படுத்தல்களின் அடிப்படையில், எப்போது தம்மை ஒரு தனியான தேசமாக இனங்காண்பார்கள் என்பதை யாரும் முன் கூட்டியே வரையறுத்துவிட முடியாது என்பதை மனதிற் கொள்வது அவசியமாகும். **பெனடிக் அன்டர்சன்** கூறுவது போல தேசம் என்பது **'கற்பிதம் செய்யப்படும்'** ஒன்று தான்.

எனவே வர்க்கம், தேசம் ஆகியவற்றிக்கிடையிலான இந்த அடிப்படையான வேறுபாட்டை கவனமாக குறித்துக் கொள்ள வேண்டும். கடந்தகால மார்க்சிய வாதிகள் தேசம் என்பதை புறக்காரணிகள் மூலம் நிர்ணயிக்க முயன்றதே, மார்க்சியத்தில் தேசியவாதம் தொடர்பாக நிலவும் நெருக்கடிகளுக்கு காரணமாயின. எனவே, எந்தவொரு மக்கட் பிரிவினரையும் அவர்கள் ஒரு தேசமாக அமைகிறார்களா இல்லையா என்பதை எந்தவிதமான புறநிலை காரணிகளையும் கொண்டு நிர்ணயிக்க முனையாமல், அம்மக்கட் பிரிவினரின் அக நிலை அம்சங்களை அடிப்படையாகக் கொண்டே நிர்ணயிக்க வேண்டும். அதாவது அம்மக்கட் பிரிவினர் தம்மை எவ்வாறு இனங் காண்கிறார்கள், எந்த அடையாளப்படுத்தலின் அடிப்படையில் தமது அரசியலை முன்னெடுக்கிறார்கள் என்பவை இங்கு முக்கியமான அளவுகோள்களாகும்.

தேசியவாதம் பற்றி பேசும் ஸ்டாலின், ஒடுக்கும் தேசத்தின் தேசியவாதத்திற்கும் ஒடுக்கப்படும் தேசத்தின் தேசியவாதத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைக் கவனிக்கத் தவறியது இப்போது பெரிதும் விமர்சனத்திற்குள்ளாகும் இன்னோர் விடயமாகும். குறிப்பாக எமது முன்னேறிய பிரிவினரிடத்தில் காணப்படும் பல்வேறு குழப்பங்களுக்கும், இவ் வேறுபாடுகளை கவனத்தில் கொள்ளாமை முக்கிய காரணமாகும். தனக்கென தனியான அரசைக் கொண்டுள்ள ஒரு தேசம் முன்னெடுக்கும் தேசியவாதம் ஏனைய தேசங்களை ஒடுக்கும் நோக்கம் கொண்டது எனவும், ஒடுக்கப்படும் தேசத்தைப் பொறுத்தவரையில் அவை தேசியவாதத்தைக் கைவிடுவது தற்கொலைக்கு ஒப்பானது எனவும் "யூஜின் காமென்கா" என்பவர் குறிப்பிடுகின்றார். இக் கருத்தானது, சிங்கள பேரினவாதத்தையும் தமிழ், முஸ்லீம் மலையக தேசியவாதங்களையும் சமப்படுத்த முனைபவர்கள் முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டிய ஓர் உண்மையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசியவாதம் தொடர்பாக நாம் முகங் கொடுக்கும் இன்னுமொரு முக்கிய பிரச்சனை, தேசியவாதம் முற்போக்கானதா அல்லது பிற்போக்கானதா? என்ற பிரச்சனையாகும். தமிழ் தேசியவாதத்தின் நியாயபூர்வத் தன்மையை புரிந்து கொள்ளும் சிலர் தேசியவாதம் என்பதே முற்போக்கானது எனவும், பிற்போக்கான வடிவத்தை எடுப்பின் அது தேசியவாதமே அல்ல எனவும் சாதிக்க முனைகின்றனர். மரபுவழி சிந்தனையாளர்களும், தமிழ் தேசியவாதத்தில் காணப்படும் சில பிற்போக்கான அம்சங்களில் அதிருப்தி கொண்ட சிலரும் தேசியவாதம் என்பதே பிற்போக்கானது எனவும் தமிழீழ போராட்டத்தில் தோன்றியுள்ள நெருக்கடிகளுக்கு காரணமே அது தேசியவாதமாக இருப்பது தான் எனவும் சாதிக்க முனைகின்றனர். உண்மையில் தேசியவாதத்தின் முற்போக்கு அல்லது பிற்போக்கு பற்றிய பிரச்சனை இந்த இரு சாராரும் குறிப்பிடுவது போல அவ்வளவு இலகுவானதல்ல.

மரபார்ந்த மார்க்சியத்தில் பொதுவில் சித்தாந்தம் பற்றிய புரிதல் போதியளவு எட்டப்படவில்லை என்பதை விமர்சிக்கும் அமைப்பியலாளர்கள் சிலர், சித்தாந்தம் என்பதை விரிவாக ஆராய முனைந்துள்ளனர். அவர்களது கருத்துப்படி, வெகுஜன சித்தாந்தங்கள் (Popular Ideologies) என்பவை பொதுவில் நடுநிலையானவையாகும். இவை வேறு எந்த சித்தாந்தத்துடன் இணைந்து (Articulate பண்ணப்பட்டு) உள்ளனவோ அதனைப் பொறுத்து இந்த வெகுஜன சித்தாந்தங்களும் முற்போக்கு அல்லது பிற்போக்கு பாத்திரங்களை ஆற்றுகின்றன. மதம்,தேசியவாதம் என்பன வெகுஜன சித்தாந்தங்களுக்கு சிறந்த உதாரணங்களாகும். கிறிஸ்தவ மதமானது புரட்சியாளர்களிடம் விடுதலை இறையியலாகவும் (Liberation Theology) பிற்போக்காளர்களிடத்தில் பழமை வாதத்திற்கு முண்டு கொடுப்பதாகவும் அமைந்திருப்பது இதற்கு ஓர் சிறந்த உதாரணமாகும். இவ்வாறே தேசியவாதம் கூட அதனுடன் இணைந்துள்ள ஏனைய சித்தாந்தங்களைப் பொறுத்தே பிற்போக்கு அல்லது முற்போக்கு பாத்திரங்களை ஆற்றுகின்றது. எனவே தேசியவாதம் தன்னளவில் முற்போக்கானதோ அல்லது பிற்போக்கானதோ அல்ல. மாறாக அதனை முன்னெடுத்துச் செல்லும் சமூக சக்திகளின் தன்மையைப் பொறுத்தே அந்த தேசியவாதத்தின் பண்பும் நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்டதொரு தேசியவாதமானது பிற்போக்கு பாத்திரம் ஆற்றுகின்றது என்பதற்காக புரட்சியாளர்கள் அந்த தேசிய இயக்கங்களையே ஓட்டுமொத்தமாக நிராகரித்துவிடாமல், குறிப்பிட்ட தேசியவாதத்துடன் இணைந்துள்ள பிற்போக்கு சித்தாந்தங்களை அகற்றி (De-Articulate பண்ணி) அதனை புரட்சிகர சித்தாந்தங்களினால் இடம் பெயர்ப்பதன் (Re-Articulate பண்ணுவதால்) மூலம் தேசிய இயக்கங்களை முற்போக்கானதாக மாற்றியமைக்க வேண்டும். இந்த விதத்தில் பொதுவில் சித்தாந்தம் பற்றி கற்றலும், தமிழ் தேசத்திலுள்ள சமூக சக்திகள் பற்றிய அக்கறையும் இன்னும் தீவிரமாக ஆழப்படுத்தப்பட வேண்டியவையாகவும் உள்ளது.

தமிழ் தேசத்தில் மேலாண்மை செலுத்தி வரும் சைவ-வேளாள சித்தாந்தத்தின் பிற்போக்கான தன்மை காரணமாக தமிழ் தேசியவாதம் பல குறைபாடுகளை கொண்டதாக உள்ளது. குறிப்பாக சைவ-வேளாள சித்தாந்தம் முஸ்லீம் மக்கள் பற்றிக் கட்டமைத்துள்ள தப்பெண்ணங்கள் மிகவும் கவனத்திற்குரியவை, தமிழ் முன்னேறிய பிரிவினர் என்ன தான் முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டிருந்தாலும் கூட, அவர்கள் தம்முள் ஊறிக் கிடக்கும் சைவ-வேளாள சித்தாந்தக் கூறுகளை சரியாக இனங்கண்டு, அவற்றுடன் கணக்குத் தீர்த்துக் கொள்ளாத வரையில் முஸ்லீம் மக்கள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்பான பிரச்சனைகளில் ஆரோக்கியமான நிலைப்பாடுகளை இவர்கள் மேற்கொள்வது என்பது மிகக் கடினமான விடயமேயாகும். முஸ்லீம் மக்கள் தொடர்பாக முன்னேறிய பிரிவினரிடத்தில் அன்றாடம் வெளிப்படும் சில கருத்துக்கள் இந்த வகையில் கவனமாக பரிசீலிக்கப்பட வேண்டியவையாகும்.

கடந்த காலத்தில் தமிழர் விடுதலை அமைப்புக்கள் முஸ்லீம் மக்களை ஒரு தனித்துவமான சமூகமாக ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளன. இன்று வரை பல அமைப்புக்கள் தீவிர முஸ்லீம் விரோத அமைப்புகளாகவே செயற்பட்டு வருகின்றன. இவற்றுள் விதிவிலக்காக செயற்படுவதாக கருதப்படும் சிலர் கூட முஸ்லீம் மக்களை "வளர்ந்து வரும் தேசமாக" வரையறுக்க முனைவதைக் காணலாம். இந்த "வளர்ந்து வரும் தேசம்" என்ற கருத்தாக்கமானது வினோதமானதாகும். எந்த அளவு கோல்களை இவர்கள் கையாண்டு இந்த வளர்ச்சியை அளக்கின்றார்கள். எந்த நிபந்தனைகளை முஸ்லீம் மக்கள் நிறைவு செய்தால் வளர்ந்து விட்ட தேசமாவார்கள் என்பதை இவர்கள் கூறுவதில்லை. உண்மையில் இந்தக் கருத்தாக்கமானது, இவர்கள் தமது பழைய சிந்தனை முறைகளில் இருந்து இன்னமும் முறித்துக் கொள்ளாமல் இருப்பதைத்தான் காட்டுகிறது. இப்படிப்பட்ட நிலைப்பாடுகள், இவர்கள் முஸ்லீம் மக்களை தனித்துவமான ஒரு சமூகமாக அங்கீகரிக்க மறுத்த கடந்த கால நிலைப்பாடுகளின் ஒரு தொடர்ச்சியாகவே கருதப்பட வேண்டும். அத்துடன் ஒரு தேசத்தை புறநிலை அம்சங்களால் கறாராக வரையறுத்துவிட முனையும் மரபார்ந்த குறைபாடும் இங்கு வெளிப்படுவதைக் காண முடிகிறது.

வடக்கிலிருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டு ஐந்தாவது வருடம் பூர்த்தியாகும் தருணத்தில் முஸ்லீம் மக்கள் பற்றிய கட்டுரை வெளிவருகின்றது. முஸ்லீம் மக்களது வாழிடம், சனச்செறிவு, சமூக,பொருளாதார, அரசியல் போன்ற பல அம்சங்களை பரிசீலித்து முஸ்லீம் மக்கள் பற்றிய எமது நிலைப்பாட்டை இங்கு நாம் முன் வைக்கின்றோம். முஸ்லீம் மக்கள் தொடர்பான பல தப்பெண்ணங்கள் தமிழ் முன்னேறிய பிரிவினர் மத்தியிலும் தொடர்ந்து நிலவும் பட்சத்தில் இக் கட்டுரை தொடர்பான ஒரு ஆரோக்கியமான கருத்தாடலை அக்கறை உள்ளவர்களிடம் இருந்து நாம் எதிர்பார்க்கின்றோம்.

முஸ்லீம் மக்களை வடக்கை விட்டு, இரண்டு மணி நேர அவகாசத்தில் உடுத்த உடைகளுடன் வெளியேற்றிய புலிகள் தமது இந்த செயலுக்கான ஒரு நியாயமான அரசியல் காரணத்தைக் கூட இதுவரையில் முன்வைக்கவில்லை. தமிழ் மக்களிடையே நிலவிவரும் முஸ்லீம் மக்கள் பற்றிய தப்பெண்ணங்களுக்கு புலிகள் தொடர்ந்தும் எண்ணெய் வார்த்து வருகின்றார்கள். சில பகிரங்க பேட்டிகளில், முஸ்லீம் மக்களை வெளியேற்றியது தவறு தான் என புலிகளின் தலைமை ஏற்றுக் கொண்டாலும் கூட, அவர்கள் திரும்பி வருவதற்கு சிங்கள அரச படைகள் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் பிரதேசங்களில் இருந்து வெளியேற வேண்டும் என நிபந்தனை விதிப்பது, மேற்படி ஒப்புக் கொள்ளலை கேலிக்குள்ளாக்குகின்றது. எனவே, இந்த வெளியேற்றம் என்பது முஸ்லீம்கள் சிலரிடம் குவிந்திருந்த செல்வத்தை அபகரிக்க புலிகள் செய்த மோசடி என சம்பந்தப்பட்ட மக்கள் நினைப்பதிலும் தவறு காண முடியாது.

தமிழ் சமூகத்தினுள் உள்ள அக முரண்பாடுகளுக்கு தீர்வு காணும் ஆற்றல் இல்லாத புலிகள், முஸ்லீம் மக்களை தமிழ் தேசத்தின் எதிரிகளாகக் காட்டுவதன் மூலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும் கீழும் என இரண்டு "எதிரிகளை" முகங்கொடுக்கச் செய்து தமிழ் தேசத்தின் கவனத்தை திசை திருப்ப புலிகள் முனைகிறார்களா என்றும் கேள்வி எழுப்புவது தவிர்க்க முடியாததாகிறது. "இன்னோர் தேசத்தை ஒடுக்கும் ஒரு தேசம் தனது அடிமைத் தளைகளை தானே உருவாக்கிக் கொள்கிறது" என்ற மார்க்சின் புகழ் பெற்ற வாசகம் வெறுமனே சிங்கள தேசத்திற்கு மட்டுமல்ல தமிழ் தேசத்திற்கும் பொருந்தி வரக் கூடியதே. தமிழ் தேசத்தின் விளிம்பு நிலை மக்களது விடுதலையானது தமிழ் தேசத்தில் மேலாண்மை செலுத்தும் சைவ-வேளாள சித்தாந்தம் முறியடிக்கப்படுவதிலேயே தங்கியுள்ளது. முஸ்லீம் மக்கள் தொடர்பாக தமிழ் தேசம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு முற்போக்கான அடியும் சைவ - வேளாள மேலாதிக்க சித்தாந்தத்தின் மீது விழும் சம்மட்டி அடிகளேயாகும்.

வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லீம்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் போராட்டம் முகங் கொடுக்கும் பிரச்சனையானது ஓர் அரசியல் பிரச்சனையாகும். குறிப்பிட்ட ஒரே தாயகத்துள் வாழ நேரும் இரண்டு சமூகங்கள் எவ்வாறு சமத்துவமாக சேர்ந்து வாழ்வது என்பது பற்றிய பிரச்சனையாகும். இந்த அரசியல் பிரச்சனையை அரசியல் ரீதியில் அணுகித் தீர்க்காமல், அவர்களை ஒட்டு மொத்தமாக வெளியேற்றுவதன் மூலம் தீர்க்க முனைந்த புலிகளின் நடவடிக்கையானது சர்வதேச சமூகத்திலேயே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயபூர்வ தன்மையை கேள்விக்குள்ளாக்கி விட்டுள்ளது. இந்த சம்பவங்களின் போது தமிழ் தேசமும், அதன் முற்போக்கு சக்திகளும் சாதித்த மௌனம் தான் இன்னும் வஞ்சகத்தனமானது.

முஸ்லீம் மக்களை ஒரு தனியான தேசமாக ஏற்றுக் கொள்ளும் நாம், வடக்கு கிழக்கு அவர்களதும் தாயகமே எனவும், அதில் வாழும் பூரண உரிமை அவர்களுக்கு உண்டு என்பதையும் வலியுறுத்துகின்றோம். முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்ட போது மௌனம் சாதித்தவர்கள் என்ற வகையில் முற்போக்கு சக்திகளும் கூட இந்த தவறுகளுக்கு தார்மீக பொறுப்பெடுத்தாக வேண்டும். முஸ்லீம் மக்கள் தமது சொந்த பிரதேசங்களுக்கு திரும்பவும், தமது இழப்புகளுக்கு நஷ்ட ஈடு பெறவும் உரித்துடையவர்கள். இந்த ஆய்வில் நாம் முஸ்லீம்களை தெற்கு - வடகிழக்கு எனப் பிரித்து ஆய்வு செய்துள்ளோம். முஸ்லீம் தேசத்துள் நிலவும் அரசியல் போக்குகளை இனங்காண இப்படிப்பட்ட ஆய்வு முறை தேவையானதே என்ற போதிலும் இந்த பிரிவுகள் என்றென்றும் நிரந்தரமானவை என்றும் நாம் கருதவில்லை. காலப் போக்கில் தெற்கு முஸ்லீம்கள் (வட ) கிழக்கு முஸ்லீம்களுடன் தம்மை இனங்காண விரும்பினால் அதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு எனவும் நாம் கருதுகின்றோம்."தேசம் என்பது காணி, பூமி (Real Estate) பிரச்சனை அல்ல" என்கிறார் லெனின். மக்கள் கூட்டங் கூடும் சுதந்திரம் என்பது பல்வேறு பிரதேசங்களில் வாழும் மக்கள் தம்மை ஒன்றாக இனங்காணும் உரிமையையும் உள்ளடக்கியதே என்கிறார் லெனின். சுயநிர்ணயம் என்பதை குறிப்பிட்ட மக்கட் பிரிவினர் தம்மை இனங்காண்பது தொடர்பான பிரச்சனையை உள்ளடக்கியதாகவும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஆதலால் இப்படிப்பட்ட இயக்கப் போக்குகள் எதிர்காலத்தில் உருவாகவும் கூடும் என்பதையும், அப்போதும் கூட முஸ்லீம் மக்கள் தமது தாயகத்தைக் கோருவதும், அங்கு தமது அரசியல் அதிகாரங்களை நிறுவிக் கொள்ளவும் உரிமையுடையவர்கள் என்பதும் இங்கு வலியுறுத்தப்பட வேண்டியவை ஆகும்.

கடந்த காலத்தில் முஸ்லீம் சமூகத்தை முறையாக வழிநடாத்தத் தவறிய முஸ்லீம் அரசியல் தலைமையானது வெளியேற்றப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கென



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருப்படியாக எதனையும் செய்யாமல் இப் பிரச்சனையை வைத்தே தமது அரசியலை ஓட்டிவிட முனைவது இழிவானதாகும். அதிலும், தற்போது யாழ்ப்பாணத்தை விட்டு தமிழர்கள் வெளியேற நேர்ந்துள்ளதை சுட்டிக் காட்டி தமது செயலின்மைக்கு சப்புக் கட்டிக் கொள்ள முனைவது மிகவும் கொச்சைத்தனமானதாகும். உடனடியாக இல்லாவிட்டாலும் காலப் போக்கிலாவது முஸ்லீம் தேசம் தனது சொந்த தேசிய தலைமைகளை உருவாக்கிக் கொள்ளும் என்பதை ஏற்றுக் கொள்ளும் நாம் இதற்கு மேல் தமிழ்-முஸ்லீம் தரப்புகளிடையே நடைபெறும் எந்தவொரு அரசியல் செயற்பாடும், தனித்துவமான இரண்டு தேசங்களுக்கிடையே சமத்துவமான அடிப்படையில் அரசியல் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வது தொடர்பாகவே இருக்க முடியும் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

அடுத்து தீர்வுத் திட்டம் பற்றிய கட்டுரையை எடுத்துக் கொள்வோம். இக் கட்டுரையானது தீர்வு முன்மொழிவுகள் வெளியிடப்பட்ட போது அதனை விமர்சிக்கும் நோக்கில் எழுதப்பட்டதாகும். இக் கட்டுரை அச்சுக்கு போன பின்பு இத் தீர்வு யோசனைகள் சட்ட வடிவில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் முன் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் எதிர்க்கட்சி வசம் இருந்த இரண்டு மாகாணசபைகள் கலைக்கப்பட்டுள்ளன.

கட்டுரையில் நாம் எதிர்வு கூறியது போலவே சந்திரிகா அரசு பேரினவாத சக்திகளின் நெருக்குதல்களுக்குப் பணிந்து பிராந்திய சபைகளுக்கு வழங்கப்பட விருந்த அற்ப சொற்ப அதிகாரங்களையும் பறித்துள்ளது. இனவாத பிடியில் சிக்கிக் கொண்டுள்ள சிங்கள தேசம் தனக்குக் கிடைக்கக் கூடிய அதிகாரப் பரவலாக்கலைக் கூட தமிழ் தேச விரோத உணர்வு காரணமாக இழந்துள்ளது.

மேற்படி சட்ட வரைவானது பாராளுமன்ற தெரிவுக் குழுவில் முன் வைக்கப்படும் சர்ந்தப்பத்தில் நடைபெற்ற இரு மாகாண சபைகளின் கலைப்பானது குறிப்பான கவனத்தை வேண்டி நிற்பதாகும். மேற்படி சட்டமூலமானது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியான யூ.என்.பி. இன் ஒத்துழைப்பு அரசிற்கு மிகவும் அத்தியாவசியமாகும். இப்படிப்பட்ட நிலையில் இதே மாகாணசபை விடயத்தில் யூ.என். பி. யுடன் மோசமாக முரண்பட நேர்ந்ததானது அரசின் கபடத்தனத்தையே காட்டுகிறது. இப்படியாக மாகாணசபை விவகாரங்களில் பலிவாங்கப்பட்ட யூ.என்.பி. ஆனது மீண்டும் மாகாணசபையுடன் தொடர்புடைய சட்டமூலங்களில் அரசிற்கு ஒரு போதும் ஒத்துழைப்பு நல்காது. யூ.என்.பி. ஒத்துழைப்பு நல்காததைக் காரணம் காட்டியே இச்சட்ட மூலங்களை நிறைவேற்றும் பொறுப்பிலிருந்து அரசு நழுவிக் கொள்ள முடியும். ஒரு விதத்தில் கடந்த கால யூ.என். பி.அரசானது சந்திரிக்கா அரசை விட நேரடியாகவே செயற்பட்டது. தமிழ் மக்களுக்கு எந்த உரிமையும் வழங்குவதில்லை என்பதில் அது வெளிப்படையாகவே உறுதியாக இருந்தது. ஆனால் சந்திரிக்கா அரசானது ஒரு புறம் முற்போக்கான சுலோகங்களை முன் வைத்துக் கொண்டே, திரைமறைவில் அம் முயற்சிகளை குலைப்பதற்கான வேலைகளையும் செய்யும் ஒரு கபடதாரியாகவே உள்ளது.

SLFP கட்சி அரசாங்கம் அமைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், பிழைப்புவாதிகளாக மாறிவிட்ட இடதுசாரிக் கட்சிகளும், சொந்தமாக புரட்சிகர மாற்றங்கள் எதிலும் பங்குகொள்ள வக்கற்ற உதிரி "புத்திஜீவிகளும்" இந்த அரசாங்கத்தை ஆதரிக்க ஏதேனும் சாக்குப் போக்குகளை கண்டு பிடித்துக் கொள்வர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்டாரநாயக்காவின் காலத்தில் பண்டாரநாயக்க யுகம், தேசிய சோசலிசம், தேசிய முதலாளித்துவம் போன்ற பல்வேறு நியாயங்களைக் கூறிக் கொண்டு அதனை ஆதரித்தனர். பின்னர் சிறிமா காலத்தில் மோசமான பேரினவாத "ஜனநாயக சோசலிசக் குடியரசின்" அரசியலமைப்புச் சட்டத்தை வரைந்தவரும் ஓர் இடதுசாரிதான். அந்த காலத்தில் இந்த அரசாங்கத்தின் குடையின் கீழ் புரட்சிகர மாற்றங்களை வழி நடாத்திவிடலாம் என கனவு கண்டது ஒரு கூட்டம். இவர்களில் சிலர் இன்று தமது தவறுகளை திரும்பிப் பார்க்கும் நிலையில் மீண்டும் இடதுசாரிகளும், சில வரலாற்று குருடர்களும் சந்திரிக்கா அரசை ஆதரிக்கத் தலைப்பட்டுள்ளனர். இதே சக்திகள் தான், 17 வருட யூ.என்.பி.கொடுங்கோன்மை ஆட்சிக்கு முடிவு கட்டவும், ஜனநாயகத்தை மீட்டெடுக்கவும், யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களின் பிரச்சனைக்கு நியாயமான அரசியல் தீர்வினை காணவும் சந்திரிகாவின் தலைமைக்கு ஒரு வாய்ப்பை அளிக்க வேண்டும் என வாதிட்டவர்களாகும். இதற்காக தீவிரமாக உழைத்தவர்களாகும். உண்மையில் சந்திரிகாவிற்கு இவர்களால் அளிக்கப்பட்ட இந்த வாய்ப்பானது, தமிழ் தேசத்தைப் பொறுத்த வரையில் அதனை ஒட்டு மொத்தமாக நசுக்கி இனஒழிப்பில் ஈடுபடுவதற்கு தேவையான படைக்கலங்களையும் வெடிப் பொருட்களையும் யுத்த விமானங்களையும் சிங்கள அரசு வாங்கிக் குவிக்கும் நிலைக்கே வழி திறந்து கொடுத்துள்ளது. கடந்த யூ.என்.பி அரசானது சர்வதேச அளவில் மிக மோசமாக அம்பலப்பட்டிருந்தது, தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. உலக சந்தையில் விரும்பியபடி ஆயுதங்களை கொள்வனவு செய்ய முடியாத நிலைக்கு ஆளாகியிருந்தது. இப்படிப்பட்ட நிலையில் மேற்படி சக்திகள் சந்திரிகாவிற்கு ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொடுத்ததன் மூலம், மீண்டும் சிங்கள அரசு தமிழ் தேசத்தின் மீது முழு அளவில் யுத்தத்தை கட்டவிழ்த்து விடத் தேவையான ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் வாய்ப்பை பெற்றுக் கொடுத்த கைங்கரியத்தையே ஆற்றியுள்ளனர். இதில் மிகவும் வேடிக்கையானது என்னவென்றால், இப்படிப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவர்கள் எந்தவொரு திட்டவட்டமான அரசியலின் அடிப்படையிலும் அல்லாமல் தனிநபரின் நல்லெண்ணங்களை அடிப்படையாகக் கொண்டே தமது ஆதரவை வழங்கினர். இவர்கள் தம்மை மார்க்சியவாதிகள் எனவும் அழைத்துக் கொள்வது தான் வேடிக்கையிலும் வேடிக்கையாகும். இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவர்கள் தேர்ந்து கொண்ட தனிநபர்கள், நடப்பிலுள்ள ஆதிக்க முறைமையின் (system) விசுவாசமான ஊழியர்களாக செயற்பட்டதே நடந்து முடிந்த உண்மையாகும்.

இப்போது சந்திரிகாவை சூழ்ந்து இலங்கையிலும், சர்வதேச அளவிலும் சிங்கள, தமிழ் உதிரிப் "புத்திஜீவிகள்" ஒரு பலமான சக்தியாக உருவெடுத்துள்ளனர். தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டமானது தற்காலிகமாக முகங் கொடுக்கும் நெருக்கடிகளைப் பயன்படுத்தி, தமிழ் மக்களது தேசிய அபிலாஷைகளுக்கு துரோகம் இழைத்துக் கொண்டு சிங்கள பேரினவாத சக்திகளை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களது துரோக முயற்சிகள் ஓரளவு தாக்கமுள்ளவையாக அமைவது கவனத்தில் கொள்ளத்தக்கது. "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்" என்ற வகையில் இவர்கள் சந்திரிகாவின் "சமையலறை அமைச்சரவையில்" (Kitchen Cabinet) அங்கம் வகித்துக் கொண்டு உப்புச்சப்பில்லாத தீர்வு யோசனைகளை அரசுக்கு வழங்கிக் கொண்டே , பகிரங்கமாக மனிதவுரிமையாளர்களாகவும், சமாதான பிரியர்களாகவும், ஏன் தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதிகளாகவும் வேடம் போடுவது தான் வேடிக்கையானது. இவர்களது துரோக அரசியல் நீண்ட காலம் நீடிக்கப் போவதில்லை. இப்படிப்பட்ட சக்திகளை தமிழ் முன்னேறிய பிரிவினர் கவனமாக குறித்துக் கொண்டு முறியடிக்க வேண்டியது இன்றைய அவசரத்தேவையாகும்.

**ஆசிரியர் குழு**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*விக்ரர்*

# முஸ்லீம் தேசமும் எதிர்காலமும்

## முன்னுரை :

ஸ்ரீலங்கா இனவாத அரசு தமிழ் தேசத்தின் இருப்பை சிதைத்து அழித்துவிட பல்வேறு வழிகளிலும் முயற்சிக்கின்றது. தமிழ் தேசத்தை நிராயுதபாணியாக்கி தனது ஆயுதபலம் கொண்டு நசுக்கி விட கடுமையாக பிரயத்தனப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக இன்றைய சந்திரிகா அரசும் தீர்வுத் திட்டப் போர்வையில் யுத்தத்தை தீவிரப்படுத்தி தமிழ் தேசத்தின் மீது தனது மோலாண்மையை நிறுவும் முயற்சியில் இறங்கியுள்ளது. எனவே சிங்கள அரசின் ஒடுக்கு முறையிலிருந்து தமிழ் தேசம் தன்னை விடுவித்து அது தனக்கென சொந்த அரசை அமைத்துக் கொள்வதே வரலாற்று தேவை என்பது மேலும் துல்லியமாக்கப்பட்டுள்ளது.

எனினும் தமிழ் தேசம் தனது விடுதலையை எளிதாகவும், விரைவாயும் பெற்றுவிட முடியும் என கற்பனை செய்ய முடியாது. தமிழீழம் இதோ கிடைத்துவிடும் என்று மிதவாத/தீவிரவாத தமிழ் தலைமைகள் கடந்தகாலங்களில் பல தடவை நம்பிக்கை தெரிவித்திருந்தும் கூட, 15 வருடங்களுக்கும் மேலாக ஆயுத போராட்டம் தொடர்வதே யதார்த்தமாயுள்ளது. விடுதலைப் போராட்டம் மேலும் கணிசமான காலம் நீடிக்கும் என்பதை, தமிழ் தேசம் இன்று எதிர் கொள்கின்ற பல்வேறு பிரச்சனைகளின் தீவிர பரிமாணங்கள் உணர்த்துகின்றன.

ஒரு போராட்டம் இறுதி வெற்றியடைய முன்பு, தனது பாதையில் பல்வேறு பிரச்சனை களையும், நெருக்கடிகளையும் எதிர் கொள் கின்றது; போராட்டத்தில் பங்கு கொண்ட சக்திகள்; புதிதாக இணைகின்ற சக்திகள், போராட்டத்திலிருந்து ஒதுங்கிச் செல்லும் பிரிவினர், இவர்களிற்கிடையிலான உறவுகள், இவற்றின் விளைவாக மேலெழுகின்ற புதிய பிரச்சனைகள், மாறும் புறநிலைமை, அதற்கு ஏற்ப போராட்ட வழிமுறைகளில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள், என வேறுபட்ட பல அக, புற நெருக்கடிகளை ஒரு போராட்டம் சந்திக்கிறது. இவற்றை கண்டு கொள்ளாமல் ஒதுங்குவதோ, அல்லது இவற்றிற்கான தீர்வுகளை எதிர்கால த்திற்கு என ஒத்திப்போடுவதோ போராட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்திவிடாது. மாறாக பலவீனப்படுத்தவே செய்யும். இத்தகைய நெருக்கடிகளை புறநிலையாக எதிர்கொள்வதும், இவற்றிற்கான தீர்வுகளைக் கண்டு கொள்வதுமே, போராட்டம் புதிய வலிமையுடனும், புதிய பரிமாணத்திலும் பாய்ச்சல் அடைவதைச் சாத்தியமாக்கும்.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் இதுவரை பல நெருக்கடிகளை எதிர் கொண்டு வந்துள்ளது. சாதிய ஏற்றத்தாழ்வுகள், பிரதேச வேறுபாடுகள், வெகுசனப்படுத்தலின்மை, அராஜகம், பெண்களின் நிலை . . . என்பவற்றுடன் இப்போது முஸ்லீம் மக்களின் விடயமும் தீர்க்கமான விடயமாக முன்தள்ளப்பட்டுள்ளது.

வடக்கு,கிழக்கில் முஸ்லீம் மக்கள் பல நூற்றாண்டுகளாக தமிழ் மக்களுடன் அருகருகே, அவர்களுடன் சமூக, பொருளாதார, கலாச்சார ரீதியில் நெருக்கமாக உறவு கொண்டு வாழ்ந்து வந்திருந்தும், அவர்கள் தமிழ் மக்களின் அரசியலுடன் இணைவதைத் தவிர்த்து வந்திருப்பதை, ஒரு வெறுப்பிற்குரிய புதிராகவே தமிழ் தலைவர்களும்,பெரும்பாலான தமிழ் மக்களும் கருதி வந்துள்ளனர். ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூற்றாண்டிற்கு முன்பே, முஸ்லீம்கள் தனியான இனமல்ல (Ethnic Group) என்றும், அவர்களும் தமிழர்களே என்றும் தமிழ் தலைவர்கள் வாதித்திருந்த போதிலும், . . பிற்காலங்களில் பல்வேறு தமிழ் தலைமைகளும் முஸ்லீம் மக்களை "இஸ்லாமிய தமிழர்கள்" , "தமிழ் பேசும் மக்கள்", "ஈழவர்கள்"என்றெல்லாம் அடையாளப்படுத்திய போதிலும் முஸ்லீம் மக்களின் அரசியல் போக்கு தமிழ்மக்களின் அரசியல் பாதையிலிருந்தும் வேறுபட்டுச் சென்று விட்டதே யதார்த்தமாகும்.

இந்த எதார்த்தத்தை தமிழ் தலைமைகள் சரியாக புரிந்து கொள்ளாதது மட்டுமல்ல , இதனை அவர்கள் அணுகிய முறையானது, ஒரு வரலாற்று அவமானத்தைச் சுமக்க வேண்டிய நிலைக்கு தமிழ் தேசத்தை இட்டுச் சென்றுள்ளது. தமிழ் மக்களின் அரசியலில் இருந்து வட - கிழக்கு முஸ்லீம்கள் வேறுபட்டு நிற்பதற்கான அடிப்படைக் காரணங்களை புரிந்து கொள்ள முயற்சிக்காமல், தமிழ் தலைமைகள்- குறிப்பாக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த தலைமைகள் - வட - கிழக்கு முஸ்லீம்கள் மீது மேற்கொண்டு வந்திருக்கின்ற வன் முறை நடவடிக்கைகள், தமிழ் தேசத்தின் போராட்டத்தின் நியாயப்பாட்டின் மீதே கேள்வியை எழுப்பியிருக்கின்றன. முஸ்லீம்களை முற்றாகவே வடக்கிலிருந்து வெளியேற்றியிருக்கும் கொடூரமும், கிழக்கு முஸ்லீம்களின் சமூக இருப்பை அச்சுறுத்தியிருப்பதும், வரலாற்றில் இடம் பெற்றுள்ள பிற இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு (Ethnic Cleansing) எந்த விதத்திலும் குறைந்ததல்ல என்பதையே காட்டுகிறது.

**தமிழ் தேசமானது ஒரே தாயகத்துள் வாழும் இன்னோர் தனித்துவமான சமூகமாகிய முஸ்லீம் மக்களை உதாசீனப்படுத்தி விட்டு தனது விடுதலையை அடைந்து விட முடியாது. ஏனெனில் முஸ்லீம் மக்கள் தொடர்பான பிரச்சனை என்பது தமிழ் தேசம் தனது விடுதலைக்கான பாதையில் முகங்கொடுத்து தீர்வு கண்டாக வேண்டிய ஓர் அரசியல் பிரச்சனையாகும்.**

தமிழ் தேசமான்து ஒரே தாயகத்துள் வாழும் இன்னோர் தனித்துவமான சமூகமாகிய முஸ்லீம் மக்களை உதாசீனப்படுத்திவிட்டு தனது விடுதலையை அடைந்து விடமுடியாது. ஏனெனில் முஸ்லீம்மக்கள் தொடர்பான பிரச்சனை என்பது தமிழ் தேசம் தனது விடுதலைக்கான பாதையில் முகங்கொடுத்து தீர்வு கண்டாக வேண்டிய ஓர் அரசியல் பிரச்சனையாகும். ஆதலால் இதனை எதிர்காலத்திற்குரிய பிரச்சனையாக ஒத்தி வைப்பதும் சாத்தியப்படமாட்டாது. இது தமிழ் தேசத்தின் ஜனநாயகபண்புடன் நெருக்கமாக தொடர்புற்றிருக்கின்றது. ஒரே தாயகத்துள் வாழும் இன்னொரு சமூகத்துடன் தமிழ் தேசம் எவ்வாறான உறவைப் பேண விரும்புகின்றது என்பதை உலகிற்கு வெளிப்படுத்துகின்ற விடயமாகும். கடந்த கால தவறுகளை "மன்னிப்போம் மறப்போம்" என பிரச்சனையை அப்படியே ஒட்டுமொத்தமாக கிடப்பில் போடுவதோ அல்லது அவ்வப்போது நடைமுறையில் எழும் பிரச்சனைகளுக்கு உள்ளூர்மட்டத்தில் அணுகி தீர்வு கண்டு செல்வதோ இதற்கான தீர்வாக மாட்டாது. பதிலாக வட-கிழக்கு முஸ்லீம்கள் தொடர்பான விடயங்களை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டு, அவற்றை முறையாக மதிப்பிட்டு, அதனடிப்படையில் அவர்களுடன் தமிழ் தேசம் ஏற்படுத்தக் கூடிய உறவுகள் மீள் வரையறை செய்யப்பட வேண்டும்.

முதலில்,வட கிழக்கு முஸ்லீம்கள் தொடர்பாக எழுந்திருக்கின்ற பிரச்சனைகள்அரசியல் பரிமாணம் கொண்டவை என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். இதுவரை காலமும் தமிழ் தலைமைகள், வட - கிழக்கு முஸ்லீம்கள் தொடர்பான விடயங்களை அரசியல்ரீதியாக அணுகுவதற்கு தயாராக இருக்கவில்லை. இப்போக்கின் நேரடி விளைவாகவே விடுதலைப் புலிகள் வடக்கு முஸ்லீம்களை ஆயுதமுனையில் வெளியேற்றிய நிகழ்வும் அமைந்திருக்கிறது. இதற்கு மேல் தமிழ் தேசத்திற்கும் வட கிழக்கு முஸ்லீம்களுக்கும் இடையிலான உறவுகள் அரசியல் ரீதியாக தெளிவாக வரையறுக்கப்படுவதே இப்பிரச்சினைகளுக்கான தீர்வாக அமையும்.

இதனை நோக்கமாக கொண்ட முயற்சியின் விளைவு தான் இக்கட்டுரை. இந்த ஆய்வு இயன்றவரை முழுமையாக அமைய வேண்டும் என்பதற்காக, முழு இலங்கை முஸ்லீம்கள் என்ற அடிப்படையில் தொடங்கி , அவர்களின் பூர்வீகம், குடிசனப்பரப்பல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதாரம் . . . என ஊடறுத்து வடகிழக்கு முஸ்லீம்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தி, அவர்களின் அரசியல் போக்குகள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வடகிழக்கு முஸ்லீம்களின் சமூகத்தன்மைகளில் ஏற்பட்டு வந்திருக்கின்ற மாற்றங்களையும் அவற்றுடன் இணைந்ததாக அவர்களின் அரசியல் போக்குகளில் ஏற்பட்ட மாற்றங்களையும், இறுதியில், அவர்கள் தமக்கென தனியான அரசியல் இயக்கத்தையும், அரசியல் கட்சியையும் உருவாக்கியிருப்பதோடு, தமக்கென தனியான அரசியல் அதிகார அலகைக் கோருகின்ற நிலையை அடைந்திருப்பதையும் இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது. இவற்றின் ஊடாக வட - கிழக்கு முஸ்லீம்கள் ஒரு தனியான தேசமாக உருவாக்கியிருக்கின்றார்கள் என்ற உண்மையும் கட்டுரையில் வெளிப்படுத்தப் படுகின்றது. இத்தகைய பின்னணியில், இக்கட்டுரை வட - கிழக்கு முஸ்லீம்களின் தேச உருவாக்கத்தை வெளிப்படுத்துவதாயும், இதனடிப்படையில், வட - கிழக்கில் தமிழ் முஸ்லீம் மக்களிடையே இனிமேல், ஏற்படவிருக்கும் உறவுகள் சமத்துவமுள்ள இரு தேசங்களுக் கிடையிலான உறவுகளாகவே அமையவேண்டும் என்ற முடிவை முன் வைப்பதாகவும் அமைகிறது.

## பூர்வீகமும தனித்துவமும்

அறிவியல் துறையில் பூர்வீகமானது ஒரு சமூகத்தின் வரலாற்று இருப்புடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட சூழலில், ஒரு சமூகம் எத்தனை கால இருப்பைக் கொண்டுள்ளது, அச் சூழலுடன் குறிப்பிட்ட சமூகம் எத்தகைய இடையீட்டுத் தொடர்புகளை பேணிவருகின்றது போன்றவற்றை மதிப்பிடுகின்ற வரலாற்று அளவு கோலாக பூர்வீகம் விளங்குகிறது. பொதுவான நிலைமையில் ஒரு சமூகம் தனது பூர்வீகம் குறித்து பெருமிதம் கொண்டிருக்கும். சில சந்தர்ப்பங்களில் தனது பூர்வீகத்தை மறந்த நிலையிலும் கூட ஒரு சமூகம் வாழக்கூடும்.

என்றாலும், இந்த வரலாற்று அம்சத்தோடு எழுச்சியுடன் கூடிய அரசியல் அம்சத்தையும் பூர்வீகம் தன்னளவில் கொண்டிருக்கிறது. பூர்வீகத்தை ஆதாரமாகக் கொண்டு கிளர்ந் தெழுந்த பல்வேறு அரசியல் இயக்கங்களை வரலாறு வெளிப்படுத்தியுள்ளது.

தனது வாழ்வுச் சூழலில் தனக்குரிய வளங்களையும் வாய்ப்புக்களையும் அனுப விப்பதற்கான உரிமை, தனது சுயத்தை பேணுவதற்கான உரிமை, ஒரு சமூகத்திற்கு மறுக்கப்படுகின்ற போது அச் சமூகம் அங்கு தனக்குள்ள உரிமைகளையும், பாத்திய தைகளையும் நிலைநாட்டுவதற்காக தனது பூர்வீகத்தை ஆதாரமாகக் கொள்கின்றது. தான் ஒரு தனியான சமூகம் என்றும் ஏனைய சமூகங்களைப் போன்று தமக்கும் சமத்துவமான உரிமைகள் உண்டு என்றும் நிலை நாட்டுவதற்காக வரலாற்றில் இருந்து தனக்குரிய அடையாளங்களை அச்சமூகம் கண்டெடுக்கிறது. இத்தகைய பூர்வீக அடையாளங்கள் விஞ்ஞான கண்ணோட்டத்தில் பகுத்தறிவுக்கு பொருந் தாததவையாகக் கூட இருக்கலாம். எனினும் குறித்த சமூகம் தனது தனித்துவத்தையும் உரிமைகளையும் நிலைநாட்டுகின்ற போரா ட்டத்தில் தன்னை இறுக்கமாக ஒன்றி ணைக்கவும் அதற்கான ஆன்மீக வலிமையை பெற்றுக்கொள்ளவும் உதவுகின்ற ஒரு சாதனமாக பூர்வீகத்தை உயர்த்திப் பிடிக்கின்றது. இதன் பின்னர் பூர்வீகமானது அச்சமூகத்தின் கடந்த கால இருப்பை குறிக்கின்ற வரலாற்று அளவுகோல் என்பதிலிருந்து அதன் எதிர்கால இருப்புடன் பிணைந்து விடுகின்ற ஓர் அரசியல் காரணிஎன்ற நிலைக்கு மாறுகின்றது .

இலங்கையிலுள்ள முஸ்லீம்கள் தமது பூர்வீகம் பற்றிய உணர்வு பூர்வமான தேடலை ஒரு நூற்றாண்டிற்கு முன்பே தொடங்கிவிட்டனர். முஸ்லீம்கள் மீது சிங்கள மற்றும் தமிழ் தலைமைகள் கொண்டிருந்த விரோதமும் மேலாதிக்க மனோபாவமும் இத்தகைய தேடலுக்கு காரணமாகின. 19 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்விரு சமூகத்தலைமைகளும் இலங்கை முஸ்லீம்களின் தனித்துவத்தையும் உரிமைகளையும் மறுக்கின்ற போக்கை எடுத்தனர். ஒரு புறம், தென்னிலங்கை முஸ்லீம்களில் ஒரு பிரிவினர் வர்த்தகத்தில் பெற்றிருந்த செல்வாக்கின் காரணமாக, அவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீது சிங்கள வர்த்தகர்களும் சிங்கள இனவாதிகளும் இவர்களின் அரசியல் பிரதிநிதிகளும் விரோதம் கொண்டிருந்தனர். இவர்கள் தென்னிலங்கை முஸ்லீம் பிரிவினரின் வர்த்தக மேலாண்மையை அகற்றி அங்கு தமது மேலாண்மையை ஏற்படுத்த முயன்றனர். இதன் நிமித்தம் இலங்கை முஸ்லீம்களின் பூர்வீகத்தை கொச்சைப் படுத்தினர். முஸ்லீம்களுக்கு இந்நாட்டில் உரிமையில்லை என நிரூபிப்பதற்காக அவர்களை "கள்ளத்தோணிகள் என்றும்" "மரக்கல மினிசுன்" ( மரக்கலத்தில் வந்தோர்) என்றும் கேவலப்படுத்தி வந்தனர். மறு புறம், 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தமிழ் மக்களினதும் முஸ்லீம் மக்களினதும் சார்பில் சட்டசபை பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டு, அரசியல் அதிகாரங்களை அனுபவித்த தமிழ்த் தலைமை இந்த அதிகாரங்களை தொடர்ந்தும் தமது பிடிக்குள் வைத்திருக்கும் நோக்குடன் இலங்கை முஸ்லீம்களின் தனித்துவத்தை மறுத்து அவர்களும் தமிழர்களே என வகைப்படுத்த முயன்றனர். சிங்கள, தமிழ் தலைமைகளின் இத்தகைய முயற்சிகளுக்கு எதிராக அன்றைய முஸ்லீம் தலைவர்கள் உறுதியாக செயற்பட்டனர்.

இவர்கள் தமது சந்ததியை மதிப்பிடுவதில் ஆண்வழித் தொடர்பிற்கு முதன்மையளித்து தாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இலங்கையில் குடியேறிய செல்வமும், வீரமும் மிக்க அரேபியர்களின் ஆண்வழித்தோற்றல்கள் எனவும், தாம் இந்நாட்டிற்கு ஆக்கிரமிப்பாளர்களாக வரவில்லை எனவும், மாறாக இன் நாட்டின் வளர்ச்சிக்கு பொருளாதாரம், மருத்துவம், கலாச்சாரம். . . என பல் வேறு துறைகளிலும் பங்களிப்புச் செய்தவர்களெனவும், இந் நாட்டின் சிறப்புகளை பிறநாடுகளுக்கும் பரப்பியவர்கள் எனவும், பல வாறாக தமது முக்கியத்துவத்தை வெளிப்படுத்தினர். தென்னிந்திய மற்றும் ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்கட்கு எதிராக தாம் தனித்தும், சிங்கள மன்னர்களுடன் தோள் கொடுத்தும் போராடியவர்கள் என்ற தமது வீரவரலாற்றை எடுத்துக் கூறினார்கள்.

இவ்வாறு, தமது பூர்வீகத்தை ஆதாரபிடியாகக் கொண்டு, உரிமைகளை மறுக்க முனைந்த சிங்கள, தமிழ் தலைமைகளுக்கு எதிராக தமது தனித்துவமான பூர்வீகத்தையும், மாண்பையும் அன்றைய முஸ்லீம் தலைமை உயர்த்திப்பிடித்தது. இதன் மூலமாக இந் நாட்டில் சிங்கள தமிழ் சமூகங்களைப் போலவே தமக்கும் சகல உரிமைகளும் உண்டு என முஸ்லீம் தலைமை விடாப்பிடியாக வாதிட்டது. இத்தகைய விவாதங்களினுடாக தமது தனித்துவத்தை உறுதியாக நிலைநாட்டிய இலங்கை முஸ்லீம்கள் பின்னர் தம்மை அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் தனியான சமூகமென அடையாளப்படுத்துவதில் வெற்றிகண்டனர்.

வரலாற்று ஆதாரங்களின்படி; கி.பி 8ம் நூற்றாண்டு அளவில் இலங்கையில் முஸ்லீம்களின் குடியேற்றம் இடம்பெற்றதாக அறிய முடிகிறது. இதற்கு மிக நீண்ட காலங்களுக்கு முன்னரே, அதாவது அரேபியாவில் இஸ்லாம் மதம் தோன்றுவதற்கு முன்பே அரேபியர் இலங்கையுடன் நெருக்கமான வர்த்தகத் தொடர்புகளை கொண்டிருந்த போதிலும், அவர்களில் எவரும் இலங்கையில் குடியேறி வாழ்ந்ததாக வரலாற்றுச் சான்றுகள் இல்லை. கி.பி 8ம் நூற்றாண்டில் இருந்து படிப் படியே இலங்கையில் முஸ்லீம்கள் குடியேறியுள்ளனர். தொடக்கத்தில் முழு இலங்கையையும் தழுவியதாக கிட்டத்தட்ட எட்டு (8) பிரதான இடங்களில் முஸ்லீம்கள் குடியேறியதாக அறியப்பட்டுள்ளது. அரேபியாவில் அதிகாரப் போட்டியின் காரணமாக வெவ்வேறு குலப்பிரிவினரிடையே ஏற்பட்ட மோதல்களின் விளைவாக ஹாசீம் பிரிவைச் சேர்ந்த சில நூறு அராபிய முஸ்லீம்கள் இலங்கையில் குடியேறியதாக சில வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதே வேளை தென்னிந்தியாவைச் சேர்ந்த முஸ்லீம்களும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கையில் குடியேறியமை வரலாற்று ரீதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள மிகப் பெரும்பாலான முஸ்லீம்கள் ( முற்றிலும் சிங்கள மக்கள் மத்தியில் சிறியளவில் வாழும் முஸ்லீம்களும் கூட) தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டு இருப்பதையும் இலங்கை முஸ்லீம்களின் பல கலாச்சார அம்சங்கள் தென்னிந்திய முஸ்லீம்களினதும், இலங்கைத் தமிழர்களினதும் கலாச்சார கூறுகளுடன் ஒத்த தன்மையை கொண்டிருப்பதையும் கவனத்தில் கொள்ளும் போது இலங்கை முஸ்லீம்களின் பூர்வீகத்தில் தென்னிந்திய வருகை முக்கிய பாத்திரம் வகித்திருப்பதை அறிய முடிகிறது.

இந்த வகையில் இலங்கை முஸ்லீம்களின் பூர்வீகத்தை அராபியப்பாரம்பரியத்துடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கியமாக தென்னிந்திய முஸ்லீகளின் இடம் பெயர்வையும் இணைத்தே விளங்கிக் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் முஸ்லீம்களின் பூர்வீகம் குறித்து எதிர்காலத்தில் எழக்கூடிய எந்த சர்ச்சைகளும் முஸ்லீம்களின் தனித்துவத்தை நிராகரிப்பதாக ஆகிவிடாது. ஏனெனில் அவர்களின் தனித்துவம் என்பது அடையப்பட்டுவிட்ட தொன்றாகும், அரசியல் ரீதியில் நிலைநாட்டப்பட்டுவிட்டதொன்றாகும்.

## குடிசனப் பரம்பலும் சமூகத் தன்மையும்

**1981** ம் ஆண்டு சனத்தொமை கணக்கெடுப்பின்படி இலங்கை முஸ்லீம்களின் சனத்தொகைச் செறிவு என்பன மாவட்ட அடிப்படையில் எவ்வாறு அமைந்திருந்தது என்பதை முதலாவது அட்டவணை காட்டுகின்றது.

### அட்டவணை I

| மாவட்டம் | முஸ்லீம்களின் எண்ணிக்கை | இலங்கையின் மொத்த சனத்தொகையில் முஸ்லீம்களின்வீதம் |
|---|---|---|
| 1. அம்பாறை | 161481 | 41.53 * |
| 2. மட்டகளப்பு | 79317 | 23.97 * |
| 3. திருகோணமலை | 74403 | 28.97 * |
| 4. யாழ்ப்பாணம் | 13757 | 1.66 |
| 5. வன்னி -மன்னார் | 28464 | 26.62 |
| - வவுனியா | 6640 | 6.92 * |
| - முல்லைத்தீவு | 3777 | 4.87 |
| 6. கொழும்பு | 140461 | 8.27 |
| 7. கம்பஹா | 38607 | 2.78 |
| 8. களுத்துறை | 61706 | 7.46 |
| 9. கண்டி | 112052 | 9.95 |
| 10. மாத்தளை | 25836 | 7.23 |
| 11. நுவரெலியா | 14688 | 2.81 |
| 12. புத்தளம் | 47959 | 9.72 |
| 13. குருநாகல் | 61342 | 5.05 |
| 14. காலி | 25896 | 3.18 |
| 15. மாத்தறை | 16457 | 2.55 |
| 16. அம்பாந்தோட்டை | 4732 | 1.12 |
| 17. அநுராதபுரம் | 41833 | 7.12 |
| 18. பொலுனறுவ | 17095 | 6.50 |
| 19. இரத்தினபுரி | 13531 | 1.70 |
| 20. கேகாலை | 34852 | 5.10 |
| 21. பதுளை | 26808 | 4.17 |
| 22 மொனராகலை | 5322 | 1.90 |

இலங்கையின் நிர்வாக அலகுகளாக தற்போது மாகாணங்கள் அமைவதால் மாகாண மட்டத்தில் இலங்கை முஸ்லீம்களின் சனத்தொகை எண்ணிக்கையையும் செறிவையும் கூடவே பொருளாதார அடிப்படைகளையும் தெரிந்து கொள்வது இங்கு பொருத்தமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டவணை II

| மாகாணம் | மொத்த சனத்தொகை | முஸ்லீம்களின் எண்ணிக்கை | மொத்தசனத் தொகையில் முஸ்லீ. வீதம் | பொருளாதார அடித்தளம் |
|---|---|---|---|---|
| 1. கிழக்கு | 976475 | 316164 | 33.00 * | விவசாயம், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, வியாபாரம், நெசவு, குடிசைக்கைத் தொழில், காட்டுத் தொழில் |
| 2. வடக்கு | 1109404 | 50831 | 4.60 | |
| 3. மேற்கு (மேல்) | 3919807 | 238728 | 6.10 | மொத்த, சிறு வியாபாரம், நகர்புறகூலித் தொழில், சிறு தோட்டப்பயிர், இரத்தினக்கல் அகழ்வு சிறு கைத்தொழில் |
| 4. தென் | 1882661 | 46699 | 2.50 | |
| 5. மத்திய | 2009348 | 146937 | 7.30 | |
| 6. வடமேல் | 1704334 | 109791 | 6.40 | |
| 7. வடமத்திய | 831408 | 53729 | 6.50 | |
| 8. ஊவா | 914522 | 31912 | 3.50 | |
| 9.சப்ரகமுவ | 1482031 | 43180 | 3.30 | |

* (1981ம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, இலங்கையிலுள்ள மொத்த முஸ்லீம்களின் எண்ணிக்கை 1056972 ஆகவும் மொத்த சனத் தொகையில் இது 7.12 வீதமாகவும் அமைகிறது.)

அட்டவணை -I இலிருந்து இலங்கை முஸ்லீம்களின் சனத் தொகையை மாவட்ட அடிப்படையில் அறிந்து கொள்ளலாம். கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் வன்னியிலுள்ள மன்னார் மாவட்டத்திலும் முஸ்லீம்கள் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவு கணிசமான செறிவுடன் வாழ்கின்றனர்வட-கிழக்கிற்கு வெளியே கொழும்பு (8.27) களுத்துறை (7.46) கண்டி (9.95) மாத்தளை (7.23) புத்தளம்(9.72) அனுராதபுரம்(7.12) வீதம், ஆகிய மாவட்டங்களில் தமது தேசிய அளவின் வீதாச்சாரமான 7.12 வீதம் என்ற செறிவை விட கூடிய செறிவில் காணப்படுகின்றனர்.

மாகாண அளவில் பரம்பலைக் காட்டும் அட்டவணை II இலிருந்து, இலங்கை முஸ்லீம்கள் கிழக்கு மாகாணத்தில் மட்டுமே குறிப்பிடத்தக்க செறிவில் வாழ்கின்றனர் என்பதை அறிய முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை முஸ்லீம்கள் மாவட்ட, மாகாண ரீதியில் மேற்படி செறிவினை கொண்டிருந்த போதிலும் கூட அவர்களது எதார்த்தமான குடிப்பரம்பல் ஆனது குறிப்பான தன்மைகளைக் கொண்டதாக அமைகிறது. குறிப்பாக வட-கிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லீம்களின் குடிப்பரம்பலில் இத்தகைய தன்மையை தெளிவாகக் காணலாம்.

வட-கிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லீம்கள் (இவர்கள் இக் கட்டுரையில் பொதுவாக "தெற்கு முஸ்லீம்கள்" என்று பொதுவாக அழைக்கப்படுகின்றனர்) ஆங்காங்கே சிறு சிறு எண்ணிக்கையில் சிதறிய நிலையில் வாழ்கின்றார்கள். இதனால் இவர்களிடையே இறுக்கமான சமூகத் தொடர்புகள் ஏற்பட முடிவதில்லை; இவர்களது நலன்களை உண்மையாகவே பிர திபலிக்கின்ற சமூக இயக்கங்களும் அமைப்புகளும் உருவாக முடிவதில்லை. தெற்கில் குறைந்த எண்ணிக்கையில் வாழுகின்ற மாகாணங்களில் மட்டுமன்றி இரண்டு இலட்சத்திற்கும் கூடுதலாக வாழ்கின்ற மேல் மாகாணத்திலும், ஒன்றரை இலட்சம் அளவில் வாழ்கின்ற மத்திய மாகாணத்திலும் கூட இவர்களின் மிக ஐதான குடிசனப் பரம்பல் காரணமாக பல இடங்களில் முஸ்லீம்களுக்கென தனியான கிராம சேவையாளர் பிரிவுகள் கூட அமைக்கப்பட முடியவில்லை. இதனால் ஒரு சமூகத்திற்கு அவசியமான அடிப்படை நிர்வாகத் தேவைகளில் கூட இவர்கள் ஒதுக்கப்பட்டு வருவது நிகழ்ந்து வருகின்றது. வாசிகசாலைகள், பாடசாலைகள், கலாச்சார செயற்பாட்டு வசதிகள், வீதி அபிவிருத்திகள், சுகாதார வசதிகள் போன்ற உள்ளகக் கட்டமைப்புகள் சார்ந்த அபிவிருத்திகளில் இருந்து (Infrastructural Development) இம் முஸ்லீம் மக்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றார்கள். இவற்றின் விளைவாக, பொதுவில் தெற்கு முஸ்லீம்கள் மாகாண, மாவட்ட மட்டத்தில் மாத்திரமன்றி தொகுதி அல்லது உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் கூட நெருக்கமாக பிணைக்கப்படாத சமூகமாகவே வாழ்கின்றனர்.

**ஒரு சமூகத்தின் அரசியல் பலமானது அச் சமூகத்தின் ஆள் எண்ணிக்கையினாலோ சில தனி நபர்கள் கொண்டிருக்கின்ற பொருளாதார பலத்தினாலோ தீர்மானிக்கப்படுவதில்லை. பதிலாக, அந்த சமூகம் எத்துணைசெறிவாக வாழ்கின்றது என்பதிலும், எவ்வளவு இறுக்கமாக தம்மிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கிறார்கள் என்பதிலும், பொதுவான நலன்கள் சார்ந்து எவ்வாறு தமக்கிடையே ஐக்கியத்தையும், அமைப்பு வடிவங்களையும் ஏற்படுத்துகிறார்கள் என்பதிலுமே பெரிதும் தங்கியுள்ளது.**

தெற்கு முஸ்லீம்களின் பொருளாதாரம் பெரும்பாலும் வர்த்தகம் சார்ந்தவையாக இருப்பதால் அது போட்டியை அடிப்படையாகக் கொண்டது. இப் பொருளாதாரம் பெரிதும் நிலம் சாராததாகவும், நேரடி உற்பத்தியுடன் தொடர்புபடாததாயும் இருக்கிறது. பெரிதும் வாங்கி - விற்றல் என்ற இடையீட்டுச் செயற்பாட்டுக்குரியதாகவும், ஒருவரின் வீழ்ச்சியே மற்றவருக்கான உயர்ச்சி என்ற நிலைமையும் இங்கு காணப்படுகிறது.மேலும் இப்பொருளாதார நடவடிக்கைகளில் பரபரப்பும் அவசரமும் தொடர்ச்சியான பங்குபற்றுதலும் அவசியப் படுகின்றன. இவற்றின் காரணமாக சக நபர்களுடன் சமூக உணர்வுடன் கூடிய நெருக்கமான உறவுகளை ஏற்படுத்து வதும் சாத்திய மற்றதாகிறது. மறுபுறம், இப்பொருளா தார தளங்கள் முற்றிலும் சந்தையை இலக்காகக் கொண்டிருப்பதால், தெற்கு முஸ்லீம்கள் தமது அவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏனைய சமூகங்களில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இவ்வாறு தெற்கு முஸ்லீம்களின் பொருளாதாரமானது அவர்களிடையே ஒத்த நலன்கள் சார்ந்த நெருக்கமான உறவுகள் ஏற்பட முடியாமலும், சுயசார்பு மிக்க சமூகமாக நிலைக்க முடியாமலும் அவர்களைத் தடுக்கின்றது.

தெற்கு முஸ்லீம்கள் இவ்வாறு சமூக, பொருளாதார ரீதியில் பொதுவான நலன்களும், சுயசார்பும் கொண்ட சமூகமாக தம்மை உருவாக்க முடியாமலிருப்பதால், அவர்களது அரசியற் செயற்பாடுகள் முற்றிலும் பலவீனமாக இருந்து வந்துள்ளன. ஒரு சமூகத்தின் அரசியல் பலமானது அச் சமூகத்தின் ஆள் எண்ணிக்கையினாலோ சில தனி நபர்கள் கொண்டிருக்கின்ற பொருளாதார பலத்தினாலோ தீர்மானிக்கப்படுவதில்லை. பதிலாக, அந்த சமூகம் எத்துணை செறிவாக வாழ்கின்றது என்பதிலும், எவ்வளவு இறுக்கமாக தம்மிடையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கிறார்கள் என்பதிலும், பொதுவான நலன்கள் சார்ந்து எவ்வாறு தமக்கிடையே ஐக்கியத்தையும், அமைப்பு வடிவங்களையும் ஏற்படுத்துகிறார்கள் என்பதிலுமே பெரிதும் தங்கியுள்ளது. ஆனால் இத்தகைய அம்சங்களில் பலவீனப்பட்டிருக்கின்ற தெற்கு முஸ்லீம்கள் தமக்கென தனியான அரசியல் இயக்கங்களை முன்னெடுக்க முடியாதவர்களாகவுள்ளனர். அத்துடன் தமது செறிவற்ற, சிதறிய பரம்பலின் காரணமாக தாம் வாழ்கின்ற பிரதேசங்களின் பொதுவான அரசியல் செயற்பாடுகளில் கூட வலுவான தாக்கம் ஏற்படுத்த முடியாதவர்களாயும், இதனால் அரசியல் முக்கியத்துவமற்றவர்களாகவுமே இருக்கின்றனர். தெற்கு முஸ்லீம் தலைமையின் வழிகாட்டலில் பிரதான சிங்கள கட்சிகளுக்கு ஆதரவளிப்பதாக மட்டுமே இவர்களது அரசியல் செயற்பாடுகள் எல்லைப்பட்டிருக்கின்றன.

1981 சனத்தொகை கணக்கெடுப்பின்படி, இலங்கை முழுவதிலும் முஸ்லீம்களின் மொத்த எண்ணிக்கை 1055972 ஆகும். இதில் தெற்கு முஸ்லீம்களின் சனத்தொகை வீதம் 60 ஆகும். வட-கிழக்கு முஸ்லீம்களின் சனத்தொகை வீதம் 40 ஆகும். இருந்த போதிலும், தெற்கு முஸ்லீம்கள் தெற்கு மொத்த மக்கள் தொகையில் 5.4 வீதம் மட்டுமே. அதே சமயம் வடகிழக்கு முஸ்லீகள் வடகிழக்கு மொத்த மக்கள் தொகையில் 17.59 வீதமாகும். கிழக்கை மட்டும் எடுத்துக் கொண்டால் முஸ்லீம்கள், கிழக்கு சனத்தொகையில் 32 வீதமாகும். இவ்வாறு எண்ணிக்கையில் அதிகமாக இருக்கின்ற தெற்கு முஸ்லீம்கள் சிதறுண்டவர்களாயும், தமது சமூக, பொருளாதார, அரசியல் தன்மைகளின் அடிப்படையில் ஒரு "தேசிய சிறுபான்மை" என்ற எல்லைக்குள் தமது நலன்களையும் உரிமைகளையும் பேணிப்பாதுகாக்கும் அவசியத்திலும் உள்ளனர்.

(வட) கிழக்கு முஸ்லீம்களின் எதார்த்த நிலையை எடுத்துக்கொண்டால், அது தெற்கு முஸ்லீம்களில் இருந்தும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கின்றது. கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும், வடக்கின் மன்னார் மாவட்டத்திலும் கணிசமான செறிவுடன் வாழ்கின்ற இவர்கள் அங்கு தாம் வாழ்கின்ற பிரதேசங்களில் அரசியல், நிர்வாக அமைப்புக்களை தாமே சுயமாக உருவாக்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். தமக்கென கிராம, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் என்பவற்றையும் அவற்றில் தமது அதிகாரத்தையும் கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாக இத்தகைய நிர்வாக மற்றும் அதிகார அலகுகளில் பரிச்சயம் உள்ளவர்களாயும், இவற்றின் அவசியம் குறித்து உணர்வு பூர்வமான புரிதல் கொண்டவர்களாகவும் உள்ளனர். தமக்குரிய உள்ளக கட்டமைப்புகளின் அபிவிருத்தியில் கரிசனை கொண்டவர்களாயும், அவை குறித்து கேள்வியெழுப்பக் கூடியவர்களாயும் உள்ளனர். குறிப்பாக பிரதேச மட்டத்தில் தமக்கென பல்வேறுபட்ட சுயமான சமூக நிறுவனங்களையும், அமைப்புக்களையும் ஏற்படுத்தி, அவற்றின் மூலமாக காத்திரமான சமூகப் பாதிப்புக்களை நிகழ்த்தக் கூடியவர்களாக உள்ளனர்.

(வட) கிழக்கு முஸ்லீம்களின் பொருளாதாரம் அவர்களிடையே நெருக்கமான உறவுகளை ஏற்படுத்துவதாகவும், அவர்களது சுய சார்பை உறுதிப்படுத்துவதாகவும் அமைந்திருக்கிறது. இவர்கள் ஒரு தனியான இருப்பாக (Seperate Entity) திகழ்வதை சாத்தியமாக்கும் வகையில் ஒரு சுயசார்புப் பொருளாதாரத்தை கொண்டுள்ளனர். மேலும் இப் பொருளாதாரத் தளங்கள் பரஸ்பர ஒத்துழைப்பை அவசியப்படுத்துவதோடு இதனூடாக கூட்டு அக்கறையையும், கூட்டான நலன்களையும் உருவாக்குகின்றன. இவ்வாறு (வட)-கிழக்கு முஸ்லீம்களின் பொருளாதாரம், இயல்பாகவே அவர்களிடையே பொதுவான நலன்களையும் தோற்றுவிக்கின்றது.

(வட) கிழக்கு முஸ்லீம்களின் நெருக்கமான, செறிவான குடிப்பரம்பலும், சமூக நிறுவனங்கள், நிர்வாக இயந்திரங்கள் என்பவை தொடர்பாக அவர்கள் கொண்டிருக்கின்ற அவசியமும், பரிச்சயமும் பொருளாதாரம் ஏற்படுத்திய நெருக்கமான உறவுகளும், பொதுவான நலன்களும் அவர்களின் அரசியல் வாழ்வை பலமிக்கதாக மாற்றுகின்றன. தமக்கிடையே தனியான அரசியல் இயக்கங்களை ஏற்படுத்துவதும், தனியான அரசியல் அபிலாசைகளையும், கோரிக்கைகளையும் முன் வைப்பதும் இவற்றினூடாக பொதுவான நலன்களின் அடிப்படையில் ஒன்று திரள்வதும் இவர்களுக்கு சாத்தியமாகிறது. இறுதியில் தாம் பொதுவான அரசியல் தலைவிதியினால் பிணைக்கப்பட்டிருக்கின்ற சமூகம் என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடையாளத்தைப் பெறுவதும், இவர்களுக்கு சாத்தியமாகிறது. இவ்வாறாக, வட-கிழக்கு முஸ்லீம்கள் இலங்கை முஸ்லீம்களில் எண்ணிக்கை வகையில் தெற்கு முஸ்லீம்களிலும் பார்க்க தொகையில் குறைந்தவர்களாக இருந்த போதிலும், ஒரு தனியான தேசமாக தம்மை உருவாக்குகின்ற வாய்ப்பைப் பெற்றுள்ளனர். தமது அரசியல் வாழ்வை தாமே தீர்மானிக்கின்ற சுய நிர்ணய உரிமையை இவர்கள் கொண்டிருக்கின்றனர்.

இந்த வகையில் தெற்கு முஸ்லீம் களிடையிலும், வட-கிழக்கு முஸ்லீம் களிடையிலும் சமூக, பொருளாதார, அரசியல் நிலமைகளில் காணப்படுகின்ற இத்தகைய வேறுபட்ட தன்மைகள் புறநிலையாகவும், தெளிவாகவும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இவ்விரு முஸ்லீம் தரப்புகளிடையேயும் மதம், மொழி, கலாச்சாரம், மற்றும் பூர்வீகம் போன்றவற்றில் ஒத்த தன்மைகள் காணப்படுகின்ற போதிலும், அவர்களது சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வானது இரு வேறு திசைகளில் அமைந்திருக்கின்ற எதார்த்தம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இத்தகைய வேறுபாடுகளை ஏற்றுக்கொள்வதும் அவற்றின் அடிப்படையில் தத்தமக்குரிய இருப்பை தீர்மானிப்பதும் இலங்கை முஸ்லீம்களுக்கு எவ்விதத்திலும் பாதகமாக அமையப் போவதில்லை. மாறாக, இவற்றின் மூலமே அவர்கள் தமது நலன்களையும், உரிமைகளையும், பூரணமாக பெற்றுக் கொள்வது சாத்தியமாகும். இதுவரை காலமும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால், இலங்கையிலுள்ள இரு முஸ்லீம் பிரிவுகளதும் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வில் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புகள் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பிட்ட பல அம்சங்களிலும் ஒத்த சமூகங்களிடையே இத்தகைய பிரிவினை ஏற்படுவது வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்த போது அரைப்பங்குக்கும் அதிகமான முஸ்லீம்கள் இந்தியாவிலேயே இருந்துள்ளனர். பின்னர், பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ் முஸ்லீம்கள் தம்மை பிரித்துக்கொண்டார்கள். இன்று முஸ்லீம் சனத்தொகை அதிகமுள்ள நாடுகளில் இரண்டாம் இடத்தில் இருக்கும் இந்தியாவிலிருந்து (மொத்த இந்திய முஸ்லீம் சனத்தொகையில் கிட்டத்தட்ட பத்தில் ஒரு பங்கினராக மட்டுமேயுள்ள) காஷ்மீர் முஸ்லீம்கள் தமது பிரிவினைக்காக போராடுகின் றார்கள். இத்தகைய அரசியல் வகை பிரிவினை கள் முஸ்லீம்களுக்கிடையிலான பிரிவினைகள் அல்ல என்பதும், அவை ஒடுக்கும் ஆதிக்க சக்திகளின் பிடியிலிருந்து தம்மை விடுவிப்பதை இலக்காகக் கொண்டவை என்பதும் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையிலும் கூட, சிங்கள,தமிழ் இனவாத ஒடுக்கு முறைகளுக்குள்ளாக்கப் படுகின்ற முஸ்லீம்கள் தமக்கிடையில் எதார்த்தமாக நிலவும் தெற்கு, வட-கிழக்கு என்ற வேறுபாடுகளை அங்கீகரித்து . இதனடிப்படையில் தமக்கெனதனியான அரசியல் இயக்கங்களை முன்னெடுப்பதன் மூலமே இத்தகைய அடக்குமுறையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளமுடியும்.

இத்தகைய பின்புலத்தில் இக்கட்டுரை தெற்கு முஸ்லீம்களையும், வட-கிழக்கு முஸ்லீம்களையும் தனித்தனியாக ஆய்வு செய்கின்றது.

## தெற்கு முஸ்லீம்கள்

இங்கு "தெற்கு முஸ்லீம்கள்" என்று குறிப்பிடப்படுபவர்கள் வட-கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த, இலங்கையின் ஏனைய மாகாணங்களில் வாழ்கின்ற முஸ்லீம்களாகும். இலங்கை முஸ்லீம்களில் கிட்டத்தட்ட அறுபது வீதத்தினராக (60) இருக்கின்ற இவர்கள் தென்னிலங்கை எங்கும், அதாவது புத்தளத் திலிருந்து அம்பாந்தோட்டை வரையும் பொலநறுவையிலிருந்து கொழும்பு வரையும் பரந்து சிறு சிறு எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். இவ்வாறான செறிவற்ற சிதறிய குடிப்பரம்பல் காரணமாக தெற்கு முஸ்லீம்களிடையே வலிமையான பிணைப்புடன் கூடிய சமூக உறவுகள் ஏற்பட முடியாதிருக்கின்றது. மேலும் இவர்களின் பொருளாதாரம் நிலத்திலிருந்து விடுபட்டதாகவும், சந்தையுடன் பிணைக்கப்பட்டதாகவும் இருப்ப தால் பொருளாதார ரீதியான பொதுநலன்களின் அடிப்படையிலும் இவர்களிடையே நெருங்கிய உறவுகள் ஏற்பட முடியாதிருக்கின்றது. இவற்றின் விளைவாக, தமக்கென சுயமான அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறுவனங்களை உருவாக்கக் கூடிய சாத்திய ங்களை தெற்கு முஸ்லீம்கள் இழந்துள்ளார்கள். மேலும், பௌத்த சிங்கள இனவாதம் தம்மீது தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற ஒடுக் குமுறைகளுக்கு எதிராக, ஒன்று திரண்ட உணர் வெழுச்சியை வெளிப்படுத்த முடியாதவர்களாக வும், போராட முடியாதவர்களாகவும் இருக்கின்ற னர். இவ்வாறு இலங்கை முஸ்லீம்களில், எண் ணிக்கையில் பெரும்பான்மையினராக இருக்கின்ற தெற்கு முஸ்லீம்கள் தமது அரசியல் தலை விதியை தமக்குரிய வழியில் தீர்மானிக்க முடியா தவர்களாகவும்,பௌத்த-சிங்கள இனவாதத்தி ற்கு கட்டுப்பட வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர்.

எனினும் ஒரு நூற்றாண்டிற்கு மேலாக, முழுஇலங்கை முஸ்லீம்களின் அரசியல் தலைமையாக,தெற்கு முஸ்லீம் தலைமை (குறிப்பாக கொழும்பு சார்முஸ்லீம் தலைமை ) செயற்பட முடிந்தமை கவனத்திற்குரியது. இதைச் சாதிப்பதில், தெற்கு முஸ்லீம் தலைமையின் பொருளாதார பலம், அவர்கள் கல்வியில் பெற்றிருந்த உயர் நிலை, பிரித்தானிய ஆட்சியாளர்களால் இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்ட முதலாளித்துவ அரசு வடிவம் என்பவற்றோடு, கடந்த காலங்களில் கிழக்கு முஸ்லீம்கள் அரசியல் விழிப்புணர்வற்ற நிலை காணப்பட்டதும் காரணமாகியிருந்தன.

## தெற்கு முஸ்லீம் தலைமையும் அதன் அரசியல் பண்புகளும்

பிரித்தானியர் இலங்கையை ஆதிக் கத்கத்திற்கு உற்படுத்திய பின்னர், அவர்களால் இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட முதலாளித்துவ அரசு முறைக்குள், தெற்கு முஸ்லீம் தலைமை தன்னை படிப்படியே நிலைப்படுத்திக் கொண்டது. இதன் பின்னர், முழுஇலங்கை முஸ்லீம்களினதும் அரசியல் தலைமையாக தன்னை உறுதிப்படுத் திக் கொண்ட தெற்கு முஸ்லீம் தலைமையின் அரசியல் பண்புகளைப் புரிந்து கொள்வதற்கு, போத்துக்கீசர் இலங்கையை கைப்பற்றிய காலம்வரை பின்செல்வது அவசியமாகின்றது.

16ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போத்துக்கீசர் இலங்கையைக் கைப்பற்றி தமது வர்த்தக ஆதிக்கத்தை நிலைநாட்ட முனைந்த போது, இங்கு ஏற்கனவே வர்த்தகத்தில் பலம் பெற்றவர்களாக முஸ்லீம்கள் இருந்தனர். முஸ்லீம்களுக்கும் கத்தோலிக்கருக்குமிடையே நிகழ்ந்த சிலுவைப்போரின் ஆழமான வடுக்கள் இன்னமும் மறையாதிருந்தாலும், வர்த்தக மேலாண்மைக்காக இவர்கள் தரையிலும், கடலிலும் மோதலில் ஈடுபட்டு வந்தாலும் போத்துக்கீசரும் முஸ்லீம்களும் பரம்பரை எதிரிகளாக அப்போது விளங்கினார்கள். 17 கப்பல்களைக் கொண்ட ஒரு கப்பல்படையுடனும், ஒரு இராணுவப்பிரிவுடனும், ஏராளமான பீரங்கி களுடனும் இலங்கையை ஆக்கிரமித்த போத்துக்கீசரை முதன் முதலாக எதிர்த்தவர்கள் தெற்கு முஸ்லீம்கள் தான். அப்போது கோட்டை இராட்ச்சியத்தின் அரசனாக இருந்த 9ம் தர்ம பராக்கிரமபாகு போர்த்துக்கீசருக்கு பணிந்து, அவர்களுடன் ஒப்பந்தம் செய்ய முன்வந்த நிலையில், அங்கிருந்து முஸ்லீம்கள்தான் போத்துக்கீசரை யுத்தகளத்தில் எதிர்த்தார் கள். எனினும் போத்துக்கீசர் தமது படை பலத்தினாலும், நவீன ஆயுதங்களின் துணை யுடனும் முஸ்லீம் மக்களை தோற்கடித்து அவர்கள் வாழ்ந்த நகரையும் எரித்தனர். இதன் பின்னர் தெற்கு முஸ்லீம்கள் சீதாவாக்க இராச்சியத்தின் அரசனான மாயாதுன்னவுடன் இணைந்து போர்த்துக்கீசருக்கு எதிராக போரிட்டனர். எனினும் இப்போரிலும் போத் துக்கீசரே வெற்றி பெற்றனர். இவ்வாறு இலங்கையின் தென்கரையோரப் பிரதேசம் போத்துக்கீசரின் கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னர் தெற்கு முஸ்லீம்களின் சமூக, பொருளாதார கலாச்சார இருப்பு போத்துக்கீசரினால் சீர்கு லைக்கப்பட்டது. தெற்கு முஸ்லீம்களின் வர்த்தகத் தளங்களை போர்த்துக்கீசர் தமது டமையாக்கியதோடு, முஸ்லீம்களின் சமூக, கலாச்சார நடவடிக்கைகளையும், வர்த்தகத் தையும் சிதைப்பதற்காக பல்வேறு சட்டங் களையும், கூடுதல் வரியையும் விதித்தனர், பின்னர் 1626ல் போத்துக்கீசர் தமது ஆட்சிப் பகுதியிலிருந்து முஸ்லீம்களை வெளி யேறும்படி உத்தரவிட்டனர். கிட்டத்தட்ட 4,000 (நாலாயிரம்) முஸ்லீம்கள் தென்கரையோரப் பகுதிகளில் இருந்து கண்டியை நோக்கி இடம்பெயர்ந்தார்கள்.

(தெற்கு முஸ்லீம்களைப் போன்று, வடக்கு மற்றும் கிழக்கு முஸ்லீம்களும் போத்துக்கீசருக்கு எதிராக போரிட்டனர். வடக்கில் காதர்லாலா என்பவரின்தலைமையிலும்,கிழக்கில் குஞ்சிலி மரைக்கார் என்பவரின் தலைமையிலும் இவர்கள் போரில் ஈடுபட்டனர். எனினும் தெற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லீம்களைப் போன்றே இங்கும் அவர்கள் போத்துக்கீசரினால் தோற்கடிக்கப்பட்டனர்.)

போத்துக்கீசருக்குப் பின்னர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒல்லாந்தர் கைப்பற்றினர். இவர்கள் பொருளாதாரச் சுரண்டலில் மிகத் தீவிரமாக ஈடுபட்டதால், இவர்களின் ஆட்சியின் போதும், தெற்கு முஸ்லீம்கள் பொருளாதார ரீதியாக கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இவற்றின் விளைவாக கிட்டத்தட்ட மூன்று நூற்றாண்டுகளாகதெற்கு முஸ்லீம்கள் சமுக, பொருளாதார ரீதியில் பின்தள்ளப்பட் டார்கள்.கிறிஸ்தவ மதத்தினரான இந்த ஐரோப்பியர்களினால்சமூக, பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்ட தெற்கு முஸ்லீம்களிடையே, இவற்றின் எதிர்வினையாக மதநம்பிக்கையும்,மதம்சார்ந்த கலாச்சார அம்சங்களும் மேலும் ஆழமாக ஊடுருவின.

போத்துக்கீசர் வர்த்தக மேலான்மையை அடையும் நோக்கில் பிறநாடுகளைக் கைப்பற்றினர்.கைப்பற்றிய நாடுகளின் தமது சுரண்டலைத் தொடர்வதற்கு வசதியாக தமது "அந்நிய" தன்மையை களைய அங்கு தமது கத்தோலிக்க மதத்தை பரப்புவதிலும் தீவிரம் காட்டினர். இலங்கையின் கரையோரப்பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அங்கு தமது பொருளாதார சுரண்டலுக்குரிய நிலமைகளை ஏற்படுத்திய பின்னர், தமது மதத்தை பரப்பும் நடவடிக்கைகளில் போத்துக்கீசர் தீவிரமாக ஈடுபட்டனர். சலுகைகள் வழங்குதல், நிர்ப்பந்தித்தல் என்பவற்றோடு கல்வியையும் மதமாற்றத்திற்குரிய ஒரு முக்கிய கருவியாக போத்துக்கீசர் மேற்கொண்டனர். பாடசாலைகளில் எழுதுதல் வாசித்தல், என்பவற்றோடு, கத்தோலிக்கமும் கற்பிக்கப்பட்டது. கத்தோலிக்கராக மதம் மாறியவர்களே ஆசிரியர்களாக நியமிக்கப் பட்டார்கள். பாடசாலைகளில் கத்தோலிக்கம் சார்ந்த மத நடவடிக்கைகளும், கலாச்சார அம்சங்களும் மட்டுமே பின்பற்றப்பட்டன. சில பாடசாலைகளிலும், பயிற்சி நிறுவனங்களிலும் கத்தோலிக்கர் மட்டுமே கற்பதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். இங்கு கல்வி கற்று வெளியேறுபவர்களுக்கே வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு போத்துக்கீசர் கல்வியை அடிப்படையில் மத மாற்றத்திற்கான ஒரு கருவியாகவே இங்கு அறிமுகப்படுத்தினர். போத்துக்கீசருக்குப் பின்னர் வந்த ஒல்லாந்தரும் கூட கல்வியை இதே நோக்கத்திற்கே பயன்படுத்தினர்.

இத்தகைய கல்வியை கற்பதில், தெற்கு முஸ்லீம்கள் நாட்டம் செலுத்தாமல் இருந்ததை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். வரலாற்று ரீதியாக முஸ்லீகள் கிறிஸ்தவத்தின் எதிரிகளாக விளங்கியதாலும், தெற்கு முஸ்லீம்களைப் பொறுத்தவரை அவர்கள் போத்துக்கீசரினால் சமூக, பொருளாதார, கலாச்சார ரீதியில் கடுமையாக அடக்கப்பட்டிருந்ததாலும், இயல்பாகவே முஸ்லீகள் தமது மதத்துடன் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருப்பதாலும், கிறிஸ்தவத்திற்கு மதம் மாற அவர்களில் யாரும் தயாராக இருக்கவில்லை. இதனால் கத்தோலிக்க, கிறிஸ்தவ மிஷனறிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் நடத்தப்பட்ட கல்வியைக் கற்பதிலிருந்து, இரண்டரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக தெற்கு முஸ்லீம்கள் ஒதுங்கியிருந்தார்கள். இதன் விளைவாக, போத்துக்கீசருக்கும், ஒல்லாந்தருக்கும், பின்னர் இலங்கையை கைப்பற்றிய பிரித்தானியர் இங்கு அறிமுகப்படுத்திய முதலாளித்துவ முறையிலான நிர்வாக மற்றும் அரசு நிறுவனங்களில், தெற்கு முஸ்லீம்களினால் கணிசமான காலத்திற்கு பங்கு கொள்ள முடியவில்லை.

முதன் முதலாக முழு இலங்கையையும் கைப்பற்றிய அந்நியரான பிரித்தானியர், இலங்கையின் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் அமைப்புக்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தினார்கள் . தமக்கு முந்திய ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களை போன்று, இவர்கள் வர்த்தக துறையில் மட்டும் ஆதிக்கத்தைச் செலுத்தவில்லை, மாறாக இந்நாட்டின் முழு பொருளாதாரத்திலும் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். இலங்கையின் பொருளாதாரத்தை முதலாளித்துவ முறைக்கு மாற்றியமைத்தனர். தமது பொருளாதாரச் சுரண்டலை எவ்வித தடையுமின்றி, முழு அளவில் மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் முதலாளித்துவ முறையிலான நிர்வாக மற்றும் அரசு அமைப்புக்களை இங்கு புகுத்தினர். சுதேச மக்களின் எதிர்ப்புக்களை படிப்படியே அகற்றுவதற்கும், அவர்கள் உணராமலேயே அவர்களைத் தமது அதிகாரத்தின் கீழ் தொடர்ந்து வைத்திருப்பதற்கும் இத்தகைய நிர்வாக அரசு அமைப்புக்களில் கல்வி கற்ற சுதேசிகளையும் பங்கு கொள்ளச் செய்வது அவசியமாக இருந்தது. சிங்கள, தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களிடையில் காணப்பட்ட படித்த உயர் பிரிவுகளைச் சேர்ந்த நபர்கள் பிரித்தானியர் அறிமுகப்படுத்திய நிர்வாக அரசு நிறுவனங்களுக்குள் இணைந்து கொண்டனர். ஆரம்ப காலங்களில், சிவில் சேவையிலும், நிபுணத்துவ துறையிலும், அரசு நிறுவனங்களிலும் இணைந்து கொள்வதற்கு தேவையான கல்வி அறிவை இலங்கை முஸ்லீம்களில் எவருமே பெற்றிராததால், அவர்களில் யாரும் இவற்றில் இணைக்கப்படவில்லை. குறிப்பாக, 1830 களில் முதன்முதலாக இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட சபைக்கு (Llegislative Council) இலங்கை முஸ்லீம்களின் சார்பில் யாருமே நியமிக்கப்படவில்லை.

போத்துக்கீசர், ஒல்லாந்தர் போலன்றி பிரித்தானியர் இலங்கை முஸ்லீம்களுடன் சுமூகமான உறவுகளை ஏற்படுத்தினர். வர்த்தகத்தில் முஸ்லீம்களுக்கிருந்த ஆற்றலையும், அதன் காரணமாக இலங்கையை தமக்குரிய சந்தையாக மாற்றுவதில் முஸ்லீம்கள் வகிக்கக் கூடிய பாத்திரத்தையும் உணர்ந்து கொண்ட பிரித்தானியர் இலங்கை முஸ்லீம்களுடன் சுமூகமான உறவுகளை வளர்க்கத் தொடங்கினர். பிரித்தானியர் மத ரீதியில் அதிக தாராளவாதப் போக்குகள் கொண்டவர்களாக இருந்தார்கள். இவர்கள் கல்வித்துறையில், கிறிஸ்தவ மிஷனரிகள் ஆதிக்கம் செலுத்துவதை படிப்படியே தளர்த்தி வந்தனர். சுதேச மக்கள் தமது மத,கலாச்சார அம்சங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கல்வி கற்பதற்கும், கல்விக்கூடங்களை அமைப்பதற்கும் பிரித்தானியர் அனுமதி வழங்கினர்.

இலங்கை முஸ்லீம்களுக்கும் பிரித்தானியருக்கும் இடையே ஏற்பட்ட நல்லுறவின் விளைவாகவும், கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்களினாலும், ஆங்கிலக் கல்வியைக் கற்பதில் நாட்டம் கொண்ட ஒரு பிரிவினர் தெற்கு முஸ்லீம்களிடையில் உருவாகத் தொடங்கினார்கள். எகிப்திலிருந்து நாடுகடத்தப்பட்ட அராபிபாஷாவும், தெற்கைச் சேர்ந்த சித்திலெப்பை, லாப்புச்சி மரைக்கார்,I.L.M. அஸீஸ் போன்றோரும் ஆங்கிலக் கல்வி கற்கும்படி முஸ்லீம்கள் மத்தியில் தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இவற்றின் விளைவாக, "ஸாஹிராக் கல்லூரி" என்ற பெயரில், முஸ்லீம்களுக்கென தனியான பாடசாலை ஒன்று கொழும்பில் அமைக்கப்பட்டது. இவ்வாறு தெற்கு முஸ்லீம்கள் படிப்படியே ஆங்கிலக் கல்வி கற்பதில் ஆர்வம் கொள்ளத் தொடங்கினார்கள். 19 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தெற்கு முஸ்லீம்களிடையே கல்வி கற்ற முஸ்லீம்கள் ஒரு சிறு எண்ணிக்கையில் உருவாகியிருந்தார்கள். இவர்கள் தான் இலங்கை முஸ்லீம்களின் தனித்துவத்தையும், அதுவரைக்கும் இலங்கை முஸ்லீம்களுக்கு வழங்கப்படாதிருந்த சட்டசபை பிரதிநிதித்துவத்தையும் விடாப்பிடியாக கோரினார்கள்.

1889ம் ஆண்டுவரை சட்டசபை பிரதிநிதித்துவமானது இலங்கைத் தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் என தனித்தனியாக வழங்கப்படவில்லை . மாறாக அவ்விரு சமூகங்களுக்குமென ஒன்றிணைந்த பிரதிநிதித்துவமே வழங்கப்பட்டு வந்தது. இந்த ஒன்றிணைந்த பிரதிநிதித்துவத்திற்கு 1889 வரை தமிழ்த் தலைவர்களே நியமிக்கப்பட்டு வந்தார்கள். எனினும் 1880 களில், தெற்கு முஸ்லீம்களிடையே புதிதாக உருவாகிய படித்த பிரிவினர் "இலங்கை முஸ்லீம்கள்" (அதாவது "இலங்கை சோனகர்") தனித்துவமான சமூகம் என்றும், எனவே தமக்கென தனியான சட்டசபை பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை எழுப்பினார்கள். இதற்கு எதிராக, "இலங்கை முஸ்லீம்கள் தமிழர்களே" என்றும் எனவே அவர்களுக்குத் தனியான சட்டசபை பிரதிநிதித்துவம் வழங்கப்படத் தேவையில்லை என்றும் பொன். இராமநாதன் போன்ற தமிழ் தலைவர்கள் வாதிட்டார்கள். எனினும் இவர்களின் வாதங்களை தொடர்ச்சியாகவும், உறுதியாகவும் எதிர்த்ததினூடாக, தெற்கு முஸ்லீம் தலைமை இலங்கை முஸ்லீம்களுக்கு என தனியான சட்டசபைப் பிரதிநிதித்துவத்தை 1889ல் பெற்றுக் கொண்டது. இவ்வாறு முதன் முதலாக இலங்கை முஸ்லீம்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் அரசியல் ரீதியான பிளவு தோன்றியது.

இலங்கை முஸ்லீம்கள், "இலங்கைச் சோனகர்" என்னும் தனித்துவமான சமூகம் என்று நிரூபிப்பதற்கான போராட்டத்தில், முஸ்லீம்களின் உருவ அமைப்பையும், ஒரு முக்கிய வாதப் பொருளாக தெற்கு முஸ்லீம் தலைமை முன் வைத்தது. இலங்கைத் தமிழர்களின் பொதுவான திராவிட தோற்ற அமைப்பிலிருந்து, தெற்கில் வாழ்ந்த சில முஸ்லீம்களின் உருவ அமைப்பானது வேறுபட்டு, அராபியச் சாயலைக் கொண்டு இருப்பதாக ஆதாரமாகக் காட்டி "இலங்கை சோனகர்கள்" அராபிய ஆண்வழித் தோன்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல்கள் ( Racial Origin) என்று இவர்கள் வாதிட்டனர். தெற்கில் ஆங்காங்கே காணக்கூடியதாக இருந்த இத்தகைய உருவஅமைப்புச் சான்றானது வடக்கு கிழக்கு முஸ்லீம்களைப் பொறுத்தவரை பொருந்தக் கூடியதாக இருக்கவில்லை, வடக்கு கிழக்கு முஸ்லீம்களின் உருவமைப்பு பெரிதும் திராவிடத் தன்மையை கொண்டிருந்தது. மொழி, பிரதேசம், கணிசமான கலாச்சாரக் கூறுகள் என்பவற்றோடு உருவ அமைப்பிலும் கூட வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் தமிழ் மக்களை நெருங்கிக் காணப்பட்டார்கள். இந்நிலையில், அராபிய பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட "இலங்கைச் சோனகர்" என்ற தனித்துவமான வரையறைக்குள், திராவிட உருவமைப்பை வெளிப்படுத்திய வடக்கு, கிழக்கு முஸ்லீம் களையும் உள்ளடக்கினால் தெற்கு முஸ்லீம் தலைமையின் வாதங்கள் வலுவிழந்து விடக் கூடிய சாத்தியம் இருந்தது. இந்நிலையைத் தவிர்ப்பதற்காக, "வடக்கு கிழக்கு முஸ்லீம்களை தமிழ் இனமாகக் கருதலாம்" என தெற்கு முஸ்லீம் தலைமை அப்போது கூறியது. இதன்மூலம், ஒரு முக்கியமான வரலாற்றுத் திருப்பத்தில், தெற்கு முஸ்லீம்தலைமை, வடக்கு கிழக்கு முஸ்லீம்களை முற்றாக ஒதுக்கி விட்டது. இதற்கு பின்வந்த காலங்களில், வட-கிழக்கு முஸ்லீம்களின் விடயத்தில், தெற்கு முஸ்லீம் தலைமைகள் தொடர்ச்சியாக மேற்கொண்ட துரோகத் தனங்களின் ஒரு தொடக்கமாக இந்த நிகழ்வு அமைந்தது.

எனினும், இலங்கை முஸ்லீம்கள் ஒரு தனியான சமூகம் என்பதை நிலைநாட்டியதிலும் இந்த தனித்துவத்தை அன்று அரசியல் ரீதியாக உறுதிப்படுத்தியதிலும் ஆரம்ப கால தெற்கு முஸ்லீம் தலைமை ஆற்றிய பங்கு வரலாற்று முக்கியத்துவமுடையது. அரசியல் ரீதியில், தமிழ் மக்களுக்குள் மறைக்கப்பட்டிருந்த இலங்கை முஸ்லீம்களுக்கு தனியான அரசியல் அந்தஸ்து கிடைப்பதிலும், அதனுடாக இலங்கை முஸ்லீம்க ளுக்கு என ஒரு புதிய அரசியல்பாதை திறக்கப்படு வதற்கும் காரணமாக அமைந்தவர்கள் என்ற ரீதியில் இவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாக இருக்கிறார்கள்.

## தெற்கில் முஸ்லீம்கள் மீதான வன்முறை தாக்குதல்கள்

தெற்கு முஸ்லீம் தலைமை, இலங்கை முஸ்லீம்களுக்குரிய தனியான சட்டசபை பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொண்ட காலப் பகுதியில், தெற்கு முஸ்லீம்கள் வர்த்தகத்துறை யில் மீண்டும் முன்னேற்றமடையத் தொடங்கி னார்கள். அவர்களின் வர்த்தக நடவடிக்கைகள் தெற்கிலுள்ள நகரங்களிலும், கிராமங்களிலும் பரவியிருந்தன. உள்நாட்டு வர்த்தகத்தில் மட்டுமன்றி, வெளிநாட்டு வர்த்தகத்திலும் தெற்கு முஸ்லீம்கள் மீண்டும் செல்வாக்கு பெறத் தொடங்கினார்கள். இதே நேரத்தில் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த முதலாளித்துவ பொருளாதார முறைமையின் விளைவாக சிங்கள சமூகத்தில் புதிதாக வர்த்தக முதலாளித்துவப் பிரிவினர் உருவாகிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் அன்றைய அமைப்பில் வர்த்தக ரீதியாக மேலாண்மை பெறுவதற்கு, வர்த்தகத்தில் நீண்டபாரம் பரியத்தையும், செல்வாக்கையும் கொண்டிருந்த தெற்கு முஸ்லீம் வர்த்தகப் பிரிவினருடன் போட்டியிட வேண்டியிருந்தது. தெற்கு முஸ்லீம் வர்த்தகர்களுடன் ஒப்பிடுகை யில், சிங்கள வர்த்தகர்கள் குறைந்த வர்த்தக அனுபவமும், குறைவான வெளிநாட்டுத் தொடர்புகளுமே கொண்டிருந்ததால். இந்தவர்த்த கப் போட்டியில் சிங்கள வர்த்தகர்களினால் வெற்றி பெறமுடியவில்லை. இத்தகைய வர்த்தக போட்டியின் விளைவாக சிங்கள வர்த்தகர்கள் தெற்கு முஸ்லீம்கள் மீது பகைமை கொள்ளத் தொடங்கினார்கள். எனினும் நாட்டை ஆட்சி செய்கின்ற பிரித்தானியரின் வர்த்தகக் கூட்டாளி யாக இருந்த முஸ்லீம் வர்த்தகர்களுடன் சமூக ரீதியில் மோதுவது, அன்றைய சிங்கள வர்த்தகர் களுக்கு எளிதான காரியமாக இருக்கவில்லை. எனவே இவர்களில் படித்த பிரிவினர்,சித்தாந்த தளத்தில் முஸ்லீம்களுக்கு எதிரான தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தினார்கள். இந்தக காலப்பகுதியில்தான் புறக்கோட்டை சிங்கள வர்த்தகரின் மகனான அநாகாரிக தர்மபால, நாவலாசிரியர் பியதாச சிறிசேனா போன்ற " சிங்கள தேசிய வீரர்கள்" தமது "அந்நியர்" எதிர்ப்புக்கருத்துக்களை "மண்ணின் மைந்தர் கள்" மத்தியில் இனவாதச் சூடேற பரப்பிக் கொண்டிருந்தார்கள். இவர்களின் எழுத்துக்களில் தெற்கு முஸ்லீம் வியாபாரிகள்தான் பிரதான "அந்நியர்களாக" வெளிப்படுத்தப்பட்டனர். "மண்ணின் மைந்தர்களான" சிங்கள மக்களின் அவலங்கள் அனைத்திற்கும் "அந்நியர்களான" தெற்கு முஸ்லீம் வியாபாரிகளே பிரதான காரணம் என இவர்கள் எழுதினார்கள் இவர்களின் எழுத்துக்கள் பௌத்த சிங்கள மக்கள் மத்தியில், முஸ்லீம் விரோத உணர்வுகளை தீவிரமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்படுத்தத் தொடங்கின.

இத்தகைய கொதிப்பான நேரத்தில் தான், முதலாம் உலக யுத்தம் தொடங்கியது. இதனோடு இணைந்ததாக, அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடும்,விலையேற்றமும் எங்கும் பரவின. ஒரு புறம் பெரும்பாலான மக்களிடையே வறுமையும், பற்றாக்குறையும் நிலவின. மறுபுறம் வர்த்தகர்கள், யுத்தகால நெருக்கடிகளைப் பயன்படுத்தி பெருமளவில் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். இத்தகைய யுத்தகால சீரழிவினால் இலங்கை மக்கள் (குறிப்பாக சிங்கள மக்கள்) அமைதியிழக்கத் தொடங்கினார்கள். இத்தகைய அமைதியற்ற, கொந்தளிப்பான சூழ்நிலையை, சிங்கள வர்த்தகர்களும், அவர்களின் படித்த பிரிவினரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டார்கள். "தந்திரமிக்க முஸ்லீம் வியாபாரிகள், அப்பாவி சிங்கள மக்களை ஏமாற்றிச் சுரண்டுவதனால் தான் அவர்களின் வாழ்க்கை மோசமடைந்திருக்கின்றது" என இவர்கள் மீண்டும் மீண்டும் பிரச்சாரம் செய்தார்கள். இறுதியில் 1915ல் முஸ்லீம் வர்த்தகப் பிரிவினர் மீது, சிங்கள வர்த்தகப் பிரிவினர் கொண்டிருந்த முரண்பாடுகளும், பகைமைகளும், சிங்கள இனவாதப் பிரச்சாரங்களுடன் இணைந்து மதப் போர்வையின் கீழ், தெற்கு முஸ்லீம்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களாக மாற்றப்பட்டன. கம்பளையில் தொடங்கிய தாக்குதல்கள், உடனடியாக தெற்கு எங்கும் பரவின. அந்தளவிற்கு முஸ்லீம்கள் குறித்து சிங்கள மக்களிடையே பகைமையுணர்வுகள் வளர்க்கப்பட்டிருந்தன. இந்த தாக்குதல்கள் பெரும்பாலும் முஸ்லீம்களின் வியாபாரத் தளங்களையும், வீடுகளையும் இலக்காகக் கொண்டிருந்தன, இத் தாக்குதல்களின் போது பல முஸ்லீம்கள் கொல்லப்பட்டார்கள்.

1915ல் தெற்கில் பரவலாக இடம் பெற்ற இந்த வன்முறைத் தாக்குதல்களிலிருந்து முஸ்லீம்களைப் பாதுகாப்பதற்காக பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், சிங்கள வன்முறையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் காரணமாக, இவர்களில் சிலர் கொல்லப்பட்டார்கள். பல சிங்களத் தலைவர்கள் சிறையிடப்பட்டனர். இவர்களில் அநாகாரிக தர்மபாலாவின் சகோதரர் எட்மன்ட் ஹேவா விதாரண, பெர்னாண்டோ விஜயசேகர, N.S .பெர்னாண்டோ போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். சிலர் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர். இவ்வாறு தெற்கு முஸ்லீம்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் அடக்கப்பட்டபோது, பொன்.இராமநாதன், சிறையிடப்பட்ட சிங்களத் தலைவர்களின் சார்பாக, இங்கிலாந்து சென்று மகாராணியிடம் வாதாடினார். கலவரத்திற்கான பொறுப்பை அவர் முஸ்லீம்கள் மீது சுமத்தினார்.

பொன். இராமநாதனின் இந்தச் செயல்கள்,பின்வரும் கேள்விகளை எழுப்பக் காரணமாகின்றன. அது வரையிலும் முஸ்லீம்களுக்குரிய அரசியல் பிரதிநிதித்து வத்தை அனுபவித்தும், "முஸ்லீகளும் தமிழர்களே" என்று வாதிட்டு வந்த பொன். இராமநாதன் ஏன் முஸ்லீகளுக்கெதிராகச் செயற்பட்டார்? முஸ்லீம்கள் மீது மேற் கொள்ளப்பட்ட இந்த வன்முறைத் தாக்குதல்கள் பௌத்த-சிங்கள இனவாத உணர்வின் வெளிப்பாடுகள் என்பதை அடையாளம் கண்டு எதிர்காலத்தில் அத்தகைய தாக்குதல்கள் தமிழ் மக்கள் மீதும் மேற்கொள்ளப்படலாம் என்பதைப் புரிந்து கொண்டு, அவற்றிலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்காமல், சிங்களத் தலைவர்களின் சார்பாக அவர் செயற்பட்டதற்குரிய காரணம் என்ன? இக் கேள்விகளுக்கான பதில்களைத் தெரிந்து கொள்வதற்கு, அன்றைய தமிழ்த் தலைமையின் சித்தாந்த மற்றும் அரசியல் பண்புகளை சுருக்கமாக புரிந்து கொள்வது அவசியமாகின்றது.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆறுமுகநாவலரினால் யாழ்பாணத் தமிழ் மக்களிடையே சித்தாந்த இயக்கம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கிறிஸ்தவ மதத்திற்கும், ஆங்கில மொழிக்கும் எதிரானதாகக் காட்டப்பட்ட இந்த இயக்கம், அடிப்படையில் தமிழ் மக்களிடையே நிலவி வந்த சைவ - வேளாள சித்தாந்தத்தை பலப்படுத்துவதாக இருந்தது. இந்த சித்தாந்தத்தை உயர்த்திப் பிடித்தோர் இதன் வரையறைக் உட்பட்டவர்களையே (Subject) மேலோர்களாகவும், தூய்மையான வர்களாகவும் கருதினார்கள். இந்த வரையறைக்குட்படாத வர்களை அவர்கள் "பிறராகவும்" (Others), தாழ்ந்தவர்களாகவும்,"தான்" (Subject) மேலோர்களாகவும், தூய்மையானவர்களாகவும் கருதினார்கள். இந்த வரையறைக்குட்படாதவர்களை அவர்கள் "பிறராகவும்" (Others), தாழ்ந்தவர்களாகவும், தூய்மையற்றவர்களாகவும் ஒதுக்கினார்கள். மேலும் இவர்கள், இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பிறர்" தம்மால் அடக்கிவைக்கப்படக் கூடியவர்கள் என்றும் கருதினார்கள். (இந்த சித்தாந்தமும், இதனால் உருவாகின்ற மதிப்பீடுக ளும் இன்னமும் தமிழ் மக்களிடையே - குறிப்பாக யாழ் தமிழர்களிடையே - வலிமையுடன் நிலவுகின் றன என்பதை மனதில் கொள்வோம். )

அன்றைய தமிழர் அரசியல் தலைமையும் இந்த சித்தாந்தத்தால் கட்டுப்படுத்தப் பட்டதாகவே இருந்தது. இவர்கள் யாழ், சைவ, வேளாள, ஆண்களின் நலன்களை மையப்படுத் திச் செயற்பட்டார்களே தவிர, முழுத் தமிழ் மக்களின் தலைமையாகச் செயற் படவில்லை. இத் தமிழ் தலைவர்கள் தாம் அரசியலில் பிரதிநிதி த்துவப்படுத்திய பிரிவினரின் நலன்களையும், சமூக, பொருளாதார ஆதிக்கத்தையும் பேணுவத ற்காக, தம்மை ஒத்த சிங்கள உயர்சாதியான "கொவி" பிரிவைச் சேர்ந்த சிங்கள அரசியல் தலைமையுடன் நெருக்கமான உறவுகளை பேணி வந்தார்கள். எனவே அன்றைய தமிழ்த் தலைவர்கள் இந்த சிங்கள உயர் பிரிவினரை, சிங்கள சமூகத்தின் அரசியல் பிரதிநிதிகளாக அடையாளம் காணவில்லை. பதிலாக தம்மை யொத்த அதிகாரப் பிரிவினராகவே அவர்களைக் கருதினர். இதன் காரணமாகத்தான், முஸ்லீம்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களை, பௌத்த- சிங்கள இனவாத அடிப்படையிலான தாக்குதல்க ளாக அடையாளம் காணாததோடு, அத்தாக்குத ல்களில் பங்கு கொண்ட பௌத்த சிங்கள தலைவர்களுக்கு ஆதரவாகவும் தமிழ் தலைமை வாதாடியது.

யாழ், சைவ, வேளாள, ஆண் ஆதிக்க சித்தாந்தத்தை சமூக ரீதியிலும், அரசியலிலும் முன்னெடுத்துச் செல்கின்றவர்கள் ஏதாவது ஒரு நிலையில் தாம் "பிறராக" கருதுகின்றவர்களைத் தம்முடன் இணைத்து அடையாளப்படுத்த முயன் றால், அங்கு அந்த "பிறரை" ஆதிக்கம் செய்யும் நோக்கமே அடிப்படையாக இருக்கும். இவ் வகையில் "இலங்கை முஸ்லீம்கள் தமிழர் களே" என இராமநாதன் போன்ற தலைவர்கள் வாதிட்டதானது, அந்த முஸ்லீம்களின் நலன்க ளைப் பேண வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல. மாறாக முஸ்லீம்களை தமது அதிகாரத்தின் கீழ் வைப்பதன் மூலமாக தமக்கும் தாம் பிரதிநிதித்துவப்படுத்திய பிரிவினருக்கும் கிடைக்கக் கூடிய நலன்களை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் அவ்வாறு வாதிட்டார்கள். முஸ்லீம்களின் அரசியல் தலைமையாக செயற்படக் கூடிய சந்தர்ப்பம் இந்தத் தமிழ்த் தலைமையிடமிருந்து பறிக்கப்பட்டவுடன், அவர்கள் முஸ்லீம்களை "பிறராகவும்", விரோதி களாகவும் கருதிச் செயற்பட்டதை, அவர்களின் இத்தகைய சித்தாந்த வழிபாட்டிலும், நலன்க ளிலும் தான் கண்டு கொள்ள முடியும். இவ் வகையில் தமிழ்த்தலைமை முஸ்லீம்களைத் தம்மில் ஒருவராகக் கருதாததாலும் சிங்கள கொவி பிரிவினருடன் இத்தலைமை கொண்டிருந்த கூட்டினாலும் ஏற்பட்ட விளைவு என்றே, 1915 ல் இராமநாதன் போன்றோர் செயற்பட்டதைக் கருத வேண்டும். மனிங் அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் நிலவிய படித்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை என்ற அடிப்படையிலான அரசியல் பிரதிநிதித்து வத்தின் கீழ் தமிழ் தலைமை சற்று வாய்ப்பான நிலையிலேயே இருந்தது. இந்த ஏற்பாட்டின்படி படித்த தமிழர்களின் எண்ணிக்கை வீதமானது அவர்களது மொத்த சனத்தொகை வீதத்திலும் பார்க்க உயர்வாகவே அமைந்தது. அதாவது படித்த தமிழர்களின் வீதம் 40 ஆக இருந்தது. இதனால் படித்த சிங்களவர்களுடன் சேர்ந்து படித்த தமிழர்களின் தலைமையும் தம்மை பெரும்பான்மையினராக கருதிக் கொண்டு ஏனைய சிறுபான்மையினரான மலையக, முஸ்லீம் மக்கள் மீதான ஒடுக்கு முறைகளின் போது சிங்கள அரசியல் தலைமைக்கு சாதகமாகவே செயற்பட்டது.

காலப்போக்கில் அடுத்தடுத்து வரவிருந்த அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் அடிப் படையிலான கோரிக்கைகளாக பிரதேச ரீதியான பிரதிநிதித்துவம், சர்வசன வாக்குரிமை போன்றவை எழுந்து, அதிலும் தமிழருக்கென கொழும்பு மேற்கில் ஒரு தொகுதியை ஒதுக்கிக் கொடுக்க சிங்கள அரசியல் தலைமை மறுத்த போது தான் தமிழ் தலைமைக்கு முதன் முதலில் தாமும் ஒரு "சிறுபான்மையினரே" என்ற உணர்வு ஏற்பட்டது. எனினும் பின் வந்த கணிசமான காலம் வரைக்கும் தமிழ் தலைமைகளிடம் இந்த விழிப்பு போதியளவு வளரவில்லை. மலையக மக்களது வாக்குரிமை பறிப்பில் தமிழ் தலைமையின் ஒரு பகுதி சிங்களத் தலைமையுடன் ஒத்துழைத்தமை இந்த அடிப்படையிலேயே நடைபெற்றது. இந்தளவிற்கு சிங்கள கொவி- தமிழ் வேளாள கூட்டு பலமானதாகவே இருந்துள்ளது. இந்த தவறான பிரக்ஞையானது தமிழ் தலைமையின் தூரதிருஸ்டியை முற்றாகவே மறைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெற்கு முஸ்லீம் அரசியல் தலைமைக்கும் சிங்கள அரசியல் தலைமைக்கும் இடையிலான இணைப்பு

முதலாம் உலக யுத்தத்தின் பின்னர், இன்னும் கூடுதலான முதலாளித்துவ ஜன நாயகத்தை நோக்கி இலங்கை படிப்படியாக முன்னேறியது. இலங்கையில், முதலாளித்துவ அரசு வடிவம் நோக்கிய முன்னேற்றங்களுக்கும் இலங்கை மக்கள் தமக்கிடையே இனத்துவ ரீதியில் (Ethnicity) மேலும் மேலும் பிளவுபடுவதற்கும் இடையே நேரடித் தொடர்பு காணப்பட்டது. தம்மிடம் அரசியல் அதிகாரம் அற்ற நிலையில்,தமது மேலாதிக்கத்தைப் பேணுவதற்கு உத்தரவாதமில்லை என்பதை சிங்கள அரசியல் தலைமை அனுபவ ரீதியாகவே அறிந்திருந்தது. எனவே சிங்களத் தலைவர்கள், அதுவரையில் நடைமுறையில் இருந்த எல்லைப் படுத்தப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவத்திற்குப் பதிலாக (Communal Representation), தாம் பெரும்பான்மையாக அமையக் கூடிய வகையில் பிரதேச ரீதியான பிரதிநிதித்துவ முறையை (Terriotoriol Representation) நடைமுறைப்படுத் தும்படி கோரிக்கை எழுப்பினார்கள். இவ்வாறு சிங்களத் தலைமை, தமது எண்ணிக்கை அளவிலான பெரும்பான்மையினூடாக, முழு நாட்டின் மீதும் அதிகாரத்தைப் பேணுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளினால், தமிழ் தலைமைக்கும், சிங்களத் தலைமைக்கும் இடையிலான உறவுகளில் பிளவுகள் ஏற்படத் தொடங்கின. உயர்சாதிகள் என்ற அடிப்படை யில்,சிங்களத் தலைமையுடன் நெருக்கமான அரசியல் உறவுகளை ஏற்படுத்துவது இனியும் சாத்தியமில்லை என்பதை உணர்ந்து கொண்ட தமிழ்த் தலைமை, அனைத்து தமிழ் மக்களின் தலைமையாக தன்னை உருமாற்றவும், அதனூ டாக தனது ஆதிக்கத்தை தொடர்ந்து பேணிக் கொள்ளவும் ஆரம்பித்தது.

இவ்வாறு இலங்கையின் அரசியல் தளத்தில் துல்லியமாக வெளிப்பட்டுக் கொண்டிருந்த இனத்துவ ரீதியான இயக்கங்களு க்கு நடுவே தெற்கு முஸ்லீம் தலைமை செயலற்று நின்றது. தெற்கு முஸ்லீம்களை இனத்துவ ரீதியில் ஒன்றுபடுத்தி, பிரதேச அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தெற்கு முஸ்லீம்களின் குடிப்பரம்பல் அமைந்திருக்க வில்லை. இதனால் நடைமுறையி லிருந்த இனவாரிப் பிரதிநிதித்துவத்தைத் தொடர்ந்தும் பேணுவதே அவர்களுக்கு சாதகமானதாக இருந்தது. எனவே தெற்கின் முஸ்லீம் தலைவர்கள் பிரதேசவாரிப் பிரதிநிதித்து வத்திற்கு எதிராக தமது கண்டனத்தை வெளிப்படுத்தினார்கள்.

எனினும் இவர்களின் கண்டனங்களினால் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக தெற்கு முஸ்லீம் தலைமைக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வகையில் டொனமூர் அரசியல் யாப்பு 1931ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த அரசியல் யாப்பின்படி, இனரீதியான பிரதிநிதித்து வம் முற்றாக கைவிடப்பட்டு, தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம் (Electorial Representation) நடைமுறைக்கு வந்தது. இதனுடன் கூடவே, சர்வஜன வாக்குரிமையும் அமுலாக்கப்பட்டது. இவற்றின் விளைவாக, தெற்கு முஸ்லீம் தலைமையின் அரசியல் பலம் முற்றாகவே இழக்கப்படக் கூடிய அபாயம் ஏற்பட்டது. அதாவது தெற்கு முஸ்லீம்கள் தமக்கென ஒரு பிரதிநிதி யைக் கூட தெரிவு செய்ய முடியாத அளவுக்கு செறிவற்றும், சிதறிய எண்ணிக்கையிலும் இருந்தார்கள். இதற்கு மாறாக, தெற்கு முஸ்லீம் தலைமைகளினால் இதுவரை காலமும் புறக்கணி க்கப்பட்டிருந்த கிழக்கு முஸ்லீம்கள் தான் தமக்கென பிரதிநிதிகளைத் தெரிவு செய்யக் கூடிய சாத்தியத்தைக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு, தமது அரசியல் பலத்தை முற்றாகவே இழந்துவிடக்ககூடிய நிலையில் இருந்த தெற்கு முஸ்லீம் தலைமை T.B. ஜயாவின் தலைமையில் 1932ல் இங்கிலாந்துக்குச் சென்று, முஸ்லீம்களுக்கான பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு வழிகாணுமாறு கோரியது. எனினும் முஸ்லீம்களுக்கு என புதிய தொகுதிகள் எதுவும் வழங்கப்படாமல், பெரும்பாலும் சிங்கள அங்கத்தவர்களைக் கொண்ட மந்திரிசபையின் சிபாரிசின் மூலமாகத் தெரிவு செய்யப்பட கூடிய இரு நியமன உறப்பினர்கள் மட்டும் மேலதிகமாக முஸ்லீம்களுக்கு வழங்கப்பட்டது. பின்னைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலங்களில், தெற்கு முஸ்லீம் தலைமை, சிங்களத் தலைமையின் முன்னால் பணிந்து நிற்கவேண்டியிருந்த நிலைமைக்கான ஆரம்ப அடித்தளமாக இந்த நியமன அங்கத்துவமுறை அமைந்தது.

தனது சொந்த மக்களால், அதாவது தெற்கு முஸ்லீம்களினால் தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்பை இழந்துவிட்ட தெற்கு முஸ்லீம் தலைவர்கள், தம்மால் இதுவரை காலமும் உதாசீனப்படுத்தப்பட்டிருந்த கிழக்கு முஸ்லீம்களின் வாக்குகளை நாடி கிழக்கில் போட்டியிட்டனர். மாக்கான் மார்க்கார், ராசீக் பரீட் போன்றவர்கள் கிழக்கில் போட்டியிட்ட தெற்கு முஸ்லீம் தலைவர்களில் முக்கியமானவர்கள். எனினும் கிழக்கு மாகாணப் பிரதிநித்துவம், தெற்கு முஸ்லீம் தலைமையை திருப்தி செய்யக் கூடியதாக இருக்கவில்லை. ஏனெனில் அவர்களுக்கு அப்பிரதிநித்துவம் போதாததாக இருந்தது. அல்லது அப்பிரதிநிதித்துவத்திற்கான தேர்தலில் அவர்கள் தோல்விடையும் நிலை ஏற்பட்டது. இவ்வாறு ஒரு கட்டான நிலையில் இருந்த தெற்கு முஸ்லீம் தலைமை, அரசியல் ரீதியில் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைக்கு இறுதியில் வந்து சேர்ந்தது.

ஆட்சி அதிகாரம் பெற்றிருப்பவர்களுடன் ஏற்படுகின்ற நெருங்கிய உறவு அவர்களின் ஆதரவும், பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கு இன்றியமையாதவை என்ற உண்மையை நீண்ட வரலாற்று அனுபவத்தின் மூலமாக தெற்கு முஸ்லீம் தலைமை அறிந்திருந்தது. சிங்கள மன்னர்கள், பிரித்தானியர் ஆகியோருடனான நல்லுறவு தங்கள் முன்னேற்றத்திற்கு எவ்விதம் உதவியிருந்தது என்ற நேர்மறை அனுபவத்தை மட்டுமின்றி, போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோருடனான பகமை எவ்விதம் தங்களது நலன்களைச் சிதைத்திருந்தது. என்ற எதிர்மறை அனுபவத்தையும் அவர்கள் பெற்றிருந்தார்கள். இதுவரை காலமும் பிரித்தானியருடனான நல்லுறவின் கீழ் தம்மைப் பேண முடிந்த வாய்ப்பான சூழல், தற்போது மாற்றத்திற்குட்பட்டு வருவதை அன்றைய தெற்கு முஸ்லீம் தலைமை புரிந்து கொண்டது; இப்போது அதிகாரத்தின் எஜமானர்க ளாகவும், பொருளாதாரத்தை ஒழுங்கைமைத்து நிர்வகிப்பவர்களாகவும் சிங்கள ஆளும் வர்க்கம் மாறிக் கொண்டு வருவதை தெற்கு முஸ்லீம் தலைமை உணர்ந்து கொண்டது. இந்நிலையில், சிங்கள ஆளும் வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்வதை, தனது, அரசியல் வழியாக தெற்கு முஸ்லீம் தலைமை தெரிவு செய்து கொண்டது. இவ்வாறு, சிங்கள அரசியல் தலைமையுடன் நிபந்தனையற்ற இணைவை ஏற்படுத்துவதற்காக தெற்கு முஸ்லீம் தலைமை முன்வந்தது.

மறுபுறத்தில், தெற்கு முஸ்லீம் தலைமையுடன் இணைவை ஏற்படுத்துவது, சிங்கள தலைமைக்கும் சாதகத்தை அளிப்பதாக அமைந்தது. ஏனெனில், சிங்களத் தலைமைக்கும், தமிழ்த் தலைமைக்கும் இடையில் ஏற்பட்ட பிளவானது,தொடர்ச்சியாக விரிவடைந்து கொண்டிருந்தது. இந்நிலையில் இலங்கை முஸ்லீம்கள், தமிழ் மக்களுடன் இணைந்து கொள்வார்களாயின், தாம் பூரண அதிகார மிக்கவர்களாக மாறுவது தடைப்பட்டு அரசியல் அதிகாரம் சமூகங்களுக்கிடையே பகிரப்படக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம் என்பதை சிங்களத் தலைமை உணர்ந்திருந்தது. இந்நிலையில் தெற்கு முஸ்லீம் தலைமையுடன் இணைவை ஏற்படுத்துவதால், தமிழ் முஸ்லீம் இணைவை சாத்தியமற்றதாக்குவதோடு, தெற்கு முஸ்லீம் தலைமையின் ஆதரவோடு, தாம் பூரண அதிகாரத்தைப் பெறுவது சாத்தியமாகும் என்பதையும் சிங்களத் தலைமை உணர்ந்து கொண்டது. இவ்வாறு இறுதியில் சிங்களத் தலைமைக்கும் தெற்கு முஸ்லீம் தலைமைக்கும் இடையே அரசியல் இணைவு ஏற்பட்டது. இதன் பின்னர், தெற்கு முஸ்லீம் தலைமை, சிங்கள அரசியல் தலைமை மீதான தனது விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்காக, மலையக தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள்,மற்றும் இலங்கை முஸ்லீம்கள் ஆகியோரின் தலை விதியை நிர்ணயிக்கக் கூடிய முக்கியமான விவகாரங்கள் அனைத்திலும், அந்த சமூகங்களின் நலன்களுக்கு விரோதமாகச் செயற்படத் தொடங்கியது.

தெற்கு முஸ்லீம் தலைமை, சிங்கள தலைமையுடன் தன்னை இணைத்துக் கொண்ட பின்னர், தமிழர் அரசியல் தலைமையுடனான அதன் முரண்பாடுகளும், பிளவும் மேலும் கூர்மையடைந்தன. தமிழ் அரசியல் அமைப்புக்கள் முன்வைத்த சகல கோரிக்கைகளையும் தெற்கு முஸ்லீம் தலைவர்கள் எதிர்த்தார்கள்.1940 களில் முன் வைக்கப்பட்ட "ஐம்பதுக்கு ஐம்பது" கோரிக்கையையும் (அதாவது அரசியல் பிரதிநிதித்துவமானது 50% சிங்கள சமூகத்திற்கும், 50% தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ் மற்று 'பறங்கிய சமூகங்களுக்கிடையே சம அளவில் பகிரப்பட வேண்டும் என்று இக் கோரிக்கை வலியுறுத்தியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன் மூலம் எந்தவொரு சமூகமும், பிற சமூகங்கள் மீது ஆதிக்கம் செலுத்த முடியாத வகையில் சமநிலை பேணப்பட முடியும்.) 1950 களில் முன் வைத்த சமஷ்டி ஆட்சிக்கான கோரிக்கையையும் தெற்கு முஸ்லீம் தலைமை எதிர்த்தது. அத்துடன் 1948ல் சிங்கள அரசினால் மலையக தமிழ் மக்களின் பிரஜாவுரிமையும், பின்னர் வாக்குரிமையும் பறிக்கப்பட்ட போதும், 1956ல் முன்வைக்கப்பட்ட தனிச் சிங்கள சட்டத்திற்கும் தமது பூரண ஆதரவை அவர்கள் வழங்கினார்கள். மேலும் முஸ்லீம்கள், தமது கல்வி மொழியாக சிங்களத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், தமிழ் மொழி முஸ்லீம்களின் தாய் மொழி அல்ல என்றும் தெற்கு முஸ்லீம் தலைமை பிரச்சாரம் செய்தது. இவற்றுடன் முஸ்லீம் மாணவர்கள் பெரும்பான்மையாக கல்வி கற்கின்ற பாடசாலைகளில் தமிழ் அதிபர்கள் நியமிக்கப்படுவதையும் தெற்கு முஸ்லீம் தலைவர்கள் பலமாக எதிர்த்தார்கள்.

இவ்வாறு, சிங்கள தலைமைக்கு தனது விசுவாசத்தை வெளிப்படுத்திய முஸ்லீம் தலைமை, இதன் விளைவாக, ஒரு தனியான சமூகமாகவும் தெற்கு மற்றும் வட-கிழக்கு என்று பிரிந்து வாழ்கின்ற இலங்கை முஸ்லீம்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. இதற்கு மாறாக, சிங்கள அரசினால், இலங்கை முஸ்லீம்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற இனச் சிதைப்பு நடவடிக்கைகளை தெற்கு முஸ்லீம் தலைமை மௌனமாக அங்கீகரித்து வந்திருக்கிறது. இவ்வாறு சிங்களத் தலைமையின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அதன் மூலம் தமது சொந்த நலன்களை உயர்த்திக் கொள்வதற்காகவும், தமது சமூகத்தின் நலன்களையும், உரிமைகளையும் பலி கொடுக்கின்ற அரசியல் பண்பை தெற்கு முஸ்லீம் தலைமை பெற்றுக் கொண்டது. இதன் பின்னர் தொடர்ச்சியாக உருவாகி வந்த தெற்கு முஸ்லீம் தலைமைகளின் அரசியல் வாழ்வு முழுவதிலும் இந்த சுயநல அரசியல் பண்பே ஆட்சி செலுத்தி வந்திருக்கின்றது.

இலங்கை முஸ்லீம்கள் மீது பௌத்த-சிங்கள இனவாதம் மேற்கொண்டு வந்திருக்கின்ற ஒடுக்கு முறைகள், தமிழ் மக்கள் மீது, பௌத்த சிங்கள இனவாதம் மேற்கொண்டு வந்திருக்கின்ற ஒடுக்கு முறைகளுடன் ஒப்பிடக் கூடிய அளவிற்கு கடுமையாகவும், தீவிரமாகவும் இருக்கின்றன. முஸ்லீம்களின் பாரம்பரிய நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துதல், முஸ்லீம்களின் சனச் செறிவை குறைத்தல் அரசியல் ரீதியில் அவர்களைப் பலவீனப்படுத்தல் அவர்களின் பொருளாதார முயற்சிகளுக்குத் தடைகளை ஏற்படுத்துதல், கல்வி மற்றும் கலாச்சார அம்சங்களின் வளர்ச்சிகளைத் தடுத்தல், முஸ்லீம் பிரதேசங்களை அகக் கட்டமைப்பு (Infra structural) அபிவிருத்தியிலிருந்து ஒதுக்குதல். . . என பல்வேறு வழிகளிலும் பௌத்த - சிங்கள இனவாதம், இலங்கை முஸ்லீம்களை ஒடுக்கி வந்திருக்கிறது

சுதந்திரத்தின் பின்னர் வரண்டவலயக் குடியேற்றத் திட்டத்தின் கீழும், "பசுமைப் புரட்சி" திட்டத்தின் கீழும் முஸ்லீம்களின் பாரம்பரிய எல்லைகளுக்குள் அடங்குகின்ற பல ஆயிரக் கணக்கான ஏக்கர் வளமான நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அந்நிலங்களும், காட்டு வளங்களும் சிங்களவர்களுக்குச் சொந்தமாக மாற்றப்பட்டுள்ளன. குறிப்பாக திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லீம்களுக்குச் சொந்தமாக உள்ள நிலங்களுடன் ஒப்பிடுகையில், பல மடங்கு பரப்பு அதிகமான நிலங்கள் குறைந்த எண்ணிக்கையில் உள்ள குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் சிங்கள மக்கள் செறிந்து வாழ்கின்ற, பிற மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகள் முஸ்லீம்கள் செறிந்து வாழ்கின்ற பகுதிகளுடன் இணைக்கப்ப டுவதன் காரணமாக, முஸ்லீம்களின் செறிவு திட்டமிட்ட ரீதியில் குறைக்கப்பட்டு வந்திருக்கிறது. குறிப்பாக இலங்கையில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஒரேயொரு மாவட்டமான அம்பாறை மாவட்டத்துடன், மொனராகலை மாவட்ட சிங்களப் பிரதேசங்கள் இணைக்கப்பட்டதன் காரணமாக, அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்களின் பெரும்பான்மையானது, கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது. இதே போன்று திருமலை மாவட்டத்தில், முஸ்லீம் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திய இரட்டை அங்கத்தவர் தொகுதியான மூதூர் தனி அங்கத்தவர் தொகுதியாக மாற்றப்பட்டு, அங்கு சிங்கள மக்களுக்கென சேருவில என்னும் புதிய தொகுதியை உருவாக்கி, தமிழ் முஸ்லீம்களுக்குரிய நிலங்களுடன் ஒப்பிடுகையில் மூன்று மடங்குக்கும் அதிகமான நிலம் சிங்களவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. பின்வரும் ஒரு உதாரணத்தின் மூலம், திருகோணமலை மாவட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டத்திலும், பொதுவாக கிழக்கு மாகாணத்திலும் சிங்கள,முஸ்லீம் குடிசன வீதம் எவ்வாறு மாற்றப்பட்டு வந்திருக்கின்றது என்பதை புரிந்து கொள்ளலாம். திருகோணமலை மாவட்டத்தில், 1921ம் ஆண்டு வரை நான்கு வீதமாக (4%) இருந்து வந்த சிங்களவரின் சனச்செறிவு, 1952ல் பதினெட்டு வீதமாகவும் (18%), 1981ல் முப்பத்து நான்கு வீதமாகவும்(34%),உயர்த்தப்பட்டது. அதே நேரத்தில் 1921ல் முப்பத்தேழு வீதமாக (37%) இருந்த முஸ்லீம்களின் செறிவு 1952ல் முப்பத்துநான்கு வீதமாகவும் (34%), 1981ல் இருபத்தெட்டு வீதமாகவும் (28%) குறைக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஒட்டு மொத்தமாக கிழக்கு மாகாண விகிதாசாரத்தை கவனித்தால்,1921 வரை 4.69 வீதமாக இருந்த சிங்களவர்களின் செறிவு, 1981ல் 25.8 வீதமாக உயர்த்தப்பட்டது. ஆனால் முஸ்லீம்களின் செறிவோ, 1921ல் 40.55 வீதமாக இருந்து, 1981ல் 32.2 வீதமாக குறைக்கப்பட்டது.

இதே போன்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் காரணமாக, ஆங்காங்கே சிறு எண்ணிக்கையில் வாழ்ந்த தெற்கு முஸ்லீம்களின் செறிவானது, மேலும் ஐதாக்கப்பட்டது. தென் இலங்கையில் முஸ்லீம்கள் கணிசமான செறிவில் வாழ்ந்த புத்தளம் மாவட்டத்தில் சனத்தொகை வீதம், கிட்டத்தட்ட முப்பது வருட காலத்தில் முற்றாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது. 1946ல் அங்கு 31 வீதமாக இருந்த முஸ்லீம்களின் செறிவு, 1981ல் 9.72 வீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப் பட்ட சிங்களக் குடியேற்றங்களினால், முஸ்லீம் களுக்குச் சொந்தமான வளமான காணிகளும், காட்டுவளங்களும் பறிக்கப்பட்டிருப்பதோடு அவர்களுடைய பொருளாதார முயற்சிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றது., இவற் றோடு இத்தகைய சிங்களக் குடியேற்றங்களினால் முஸ்லீம்கள் அரசியல் ரீதியாகப் பலவீனப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். இலங்கை அரசியல் பாராளு மன்றப் பெரும்பான்மைக்கும், அரசியல் அதிகாரத் தில் மேலாண்மை செலுத்துவதற்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அதே நேரத்தில் ஒரு சமூகத்தின் பாராளுமன்ற பிரதிநிதி த்துவமானது அதன் குடிசன செறிவிலும், பரம்பலி லும் தங்கியிருக்கின்றது. இந்நிலையில் ஒரு சமூகத்தை அரசியல் ரீதியில் பலவீனப்படுத்துவத ற்கு, அதன் குடிசனச் செறிவை குறைப்பதே போது மானது. சிங்கள அரசாங்கங்களின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் பிரதான இலக்கு இது தான். இத்தகைய குடியேற்றங்கள் மூலம் பிற சமூகங்களின் அரசியல் பிரதிநிதித்துவ த்தைக் குறைப்பதோடு, மறு புறத்தில் சிங்கள சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் முடிந்தது. இத்தகைய குடியேற்றங்கள் ஏற்கனவே தெற்கு, (வட) கிழக்கு என பிரிந்திருந்த முஸ்லீம்களை, அரசியல்ரீதியில் மேலும் பலவீனப்படுத்தியது.

1956 ம் ஆண்டுக்குப் பின்னர், சிங்கள மொழி அரசகருமமொழியாகவும், நிர்வாக மொழியாகவும் மாற்றப்பட்டதன் காரணமாக, வட-கிழக்கு முஸ்லீம்களும் அதேபோன்று தெற்கு முஸ்லீம்களும் பாதிக்கப்பட்டிருக்கின் றார்கள். சிங்களம் தெரியாத காரணத்தினால் வட-கிழக்கு முஸ்லீம்களும், சிங்கள நிர்வாகிகளின் இனவாத நடவடிக்கைகளினால் தெற்கு முஸ்லீம்களும் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். முஸ் லீம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களின் போக்குவரத்து, சுகாதாரம், நீர்விநியோகம். . . போன்ற அகக் கட்டமைப்புக்கள் அரசின் அபிவிருத்தி முயற்சிகளிலிருந்து திட்டமிட்ட ரீதியில் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

முஸ்லீம்களது வர்த்தக முயற்ச்சி களையும் சிங்கள அரசு திட்டமிட்டே சிதைத்து வந்துள்ளது. பல்வேறு சந்தர்ப்பங்களில் பல இறக்குமதிகளை அரசு ஏகபோகமாக்குவதும் பின்பு தாராளமயமாக்குதல் என்னும் பெயரில் அவற்றிற்கான அனுமதிகளை சிங்களவர்களு க்கு வழங்கியது. இதன் மூலம் இந்த முயற்சிகள் முஸ்லீம்களிடமிருந்து பறிக்கப்பட்டு சிங்களவர்க ளிடம் ஒப்படைப்பதே நடந்தேறு கிறது. அத்தோடு அரசு இரத்தினக்கல் கூட்டுத் தாபனத்தை நிறுவுவதன் மூலம் இரத்தினக்கல் தொழில் முஸ்லீம்கள் வகித்துவந்த ஆதிக்க நிலை முறியடிக்கப்பட்டது. இப்படி பலவற்றை நாம் குறிப்பிடலாம்.

கல்வியைப் பொறுத்த வரையில் தெற்கு முஸ்லீம்கள், சுதந்திரத்தின் பின்னர் மோசமாகப் பின்தள்ளப்பட்டு வந்திருக்கிறார்கள். தமிழ் மொழி மூலமான கற்பித்தலைக் கொண்டிருந்த தெற்கு முஸ்லீம் பாடசாலைகள், அரசின் கவனிப்பிலிரு ந்து திட்டமிட்ட ரீதியில் ஒதுக்கப்பட்டு வந்திருக்கி ன்றன, போதிய ஆசிரியர்களும், ஏனைய வசதிக ளும் வழங்கப்படாமல் பெரும்பாலான தெற்கு முஸ்லீம் பாடசாலைகள் சீரழிக்கப்பட்டு வந்திருக் கின்றன. சுதந்திரத்திற்கு முன்னரான காலகட்டத் தில், இலங்கை முஸ்லீம்களைப் பொறுத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரையில், கல்வியில் உயர்நிலை வகித்திருந்த தெற்கு முஸ்லீம்களின் கல்வி நிலை, சுதந்திரத்தின் பின்னர் படிப்படியே வீழ்ச்சியடைந்து வந்திருக்கின்றது. சுதந்திரத்திற்கு முன்னர் தெற்கு முஸ்லீம்களின் கல்வி வளர்ச்சியில் காத்திரமான பங்கு வகித்து வந்த "ஸாஹீராக் கல்லூரிகள்" சுதந்திரத்தின் பின்னர் அரச பாடசாலைகளாக்கப்பட்டு, திட்டமிட்ட ரீதியில் அவற்றின் வளர்ச்சி தடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. சில ஸாஹீராக் கல்லூரிகளில் சிங்கள அதிபர்கள் நியமிக்கப்படுகின்ற அளவுக்கு, அரசின் இனவாத நடவடிக்கைகள் தீவிரமடைந்திருக்கின்றன. இவற்றைவிட, தெற்கு முஸ்லீம்களின் இயல்பான சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப, புதிய முஸ்லீம் பாடசாலைகள் அமைக்கப்படுவதை பௌத்த-சிங்கள இனவாதிகள் கடுமையாக எதிர்த்து வந்திருக்கினறார்கள். இவற்றின் விளைவாக தெற்கு முஸ்லீம் மாணவர்களின் கல்வி படிப்படியே வீழ்ச்சியடைந்து வந்திருக்கின்றது.

இவற்றோடு, முஸ்லீம் மாணவர்கள் சிங்கள மொழியில் கல்வி கற்பதும், அவர்களின் சமூக ரீதியான கல்வி வளர்ச்சிக்கு தடையாக இருந்து வருகின்றது. பொதுவாக ஒருவர் தனது தாய்மொழியில் கற்கும் போதுதான் அவரது கல்வி அறிவு சீரான வளர்ச்சியைப் பெறுகின்றது என்பது ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட முழு இலங்கை முஸ்லீம்களும் தமது தாய்மொழியாகத் தமிழைக் கொண்டிருக்கிறார்கள். எனினும் தெற்கு முஸ்லீம் தலைமையின் தவறான வழிகாட்டலினாலும், தெற்கிலுள்ள தமிழ் மொழி மூல முஸ்லீம் பாடசாலைகள் அரசினால் உதாசினப் படுத்தப்பட்டிருப்பதாலும், தெற்கு முஸ்லீம் மாணவர்கள் ஆரம்பத்திலிருந்தோ அல்லது இடைநிலைக் கல்வியிலிருந்தோ சிங்கள மொழியில் கற்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். அந்நிய மொழியின் சுமையினாலும், பாடசாலைச் சூழலின் கலாச்சார வேறுபாடுக ளினாலும், சிங்கள ஆசிரியர்களின் பாகுபாடுகளி னாலும் பெரும்பாலான முஸ்லீம் மாணவர்கள் விரைவிலேயே பாடசாலையை விட்டு வெளியேறும் நிலைக்கு ஆளாகிறார்கள். 1970 களின் இறுதிப்பகுதியில் கிழக்கு முஸ்லீம்களிடையிலும், சிங்கள மொழியில் கல்வி கற்கின்ற போக்கு உருவாக்கப் பட்டது. ஒரு குறைந்த அளவிலான மாணவர்கள் சிங்கள மொழியில் கற்ற போதிலும், அவர்களினால் , இடைநிலைக் கல்வியைக் கூடகடக்க முடியவில்லை.

இலங்கை முஸ்லீம்களின் (குறிப்பாக தெற்கு முஸ்லீம்களின்) கலாச்சார ரீதியான செயற்பாடுகளை, பௌத்த-சிங்கள இனவாதிகள் தொடர்ச்சியாக எதிர்த்து வருகிறார்கள். தெற்கில் புதிய பள்ளிவாசல்கள் அமைக்கப்படுவதையும் (அல்லது அவை திருத்தியமைக்கப்படுவதையும்), தொழுகைக்காக ஒலி பெருக்கியில் அழைப்பதையும் (அதாவது "பாங்கு" ஒலிப்பதையும்) தடைசெய்யும்படி பௌத்த-சிங்கள இனவாதிகள் அரசைக் கோரிவருகிறார்கள். பல சந்தர்ப்பங்களில், அரசு இவர்களின் கோரிக்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்திருக்கின்றது. இவற்றை விட, உணவிற்காக முஸ்லீம்கள் விலங்குகளைக் கொல்வதை, ஒரு கொடூரமான, காட்டுமிராண்டித் தனமான செயலாக பௌத்த-சிங்கள இனவாதிகள் பிரச்சாரப்படுத்தி வந்திருக்கிறார்கள். இவ்வாறு இலங்கை முஸ்லீம்களுக்கு, சாதாரண அடிப்படை உரிமைகளைக் கூட மறுப்பதாகவே பௌத்த- சிங்கள இனவாதம் தன்னை வெளிப்படுத்தி வந்திருக்கின்றது.

இவற்றை விட, பௌத்த-சிங்கள இனவாதம் தெற்கு முஸ்லீம்கள் மீது வன்முறைத் தாக்குதல்களை அடிக்கடி மேற்கொண்டு வந்திருக்கின்றது. சுதந்திரத்திற்கு முன்னர் ஒரு தடவை மட்டும் இடம் பெற்று ஓய்ந்திருந்த முஸ்லீம்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள், சுதந்திரத்தின் பின்னர், பௌத்த-சிங்கள அரசு உருவாக்கப்பட்ட பின்னர், அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. கருத்தியல் ரீதியாக, பௌத்த- சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லீம் விரோத உணர்வு தொடர்ச்சியாகவும் ஆழமாகவும் பரப்பப்பட்டு வந்திருப்பதால், தெற்கு முஸ்லீம்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் எளிதாகவும் தீவிரமாகவும் இடம் பெறுகின்றன. இத்தகைய தாக்குதல்களில் அரச படையினரும் பங்குபற்றி வந்திருக்கிறார்கள் என்பதையும், பல சந்தர்ப்பங்களில் அரச படையினரே தாக்குதல்களை ஆரம்பித்து வைக்கிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளும் போது, பௌத்த - சிங்கள அரசு முஸ்லீம்கள் மீது எத்தகைய விரோதத்தைக் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு சுதந்திரத்தின் பின்னர், இலங்கை முஸ்லீம்களின் சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் உரிமைகளோடு, உயிர் வாழும் உரிமையும்கூட, பௌத்த-சிங்கள இனவாதத்தினால் மறுக்கப்பட்டு வந்திருந்தும், இவற்றை வெகுசனரீதியில் எதிர்க்கவோ அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேச சமூகங்கள் மத்தியில் இவற்றை பகிரங்கப்படுத்தவோ தெற்கு முஸ்லீம் தலைமை ஒரு போதும் முயன்றதில்லை, பதிலாக, பல சந்தர்ப்பங்களில் மௌனமாக இருப்பதும், பௌத்த-சிங்கள இனவாத அரசுடன் முஸ்லீம்கள் முரண்படாத வகையில் சமரசம் செய்து கொள்வதுமே தெற்கு முஸ்லீம் தலைமையின் வழிமுறையாக இருந்து வந்திருக்கின்றது.

1931 டொனமூர் அரசியல் யாப்பைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல் தளத்தில் இனத்துவ ரீதியான பிளவுகள் மேலும் ஆழமாக வெளிப்பட்டன. சிங்கள தமிழ் மக்கள் தமக்கென தனித்தனியான அரசியல் அமைப்புக்களை ஏற்படுத்தி, அவற்றில் ஒன்றிணைந்து கொண்டிருந் தார்கள். ஆனால் இலங்கை முஸ்லீம்களைப் பொறுத்தவரையில், அவர்கள் ஒரு பொதுவான தனித்துவமான அரசியல் அமைப்பின் கீழ் ஒன்றிணைவது சாத்தியமற்றதாக இருந்தது தெற்கு, மற்றும் வட-கிழக்கு என பிரிந்து வாழ்ந்ததோடு, சமூக, பொருளாதாரத் தன்மைக ளில் வேறுபட்டவர்களாகவும்,மேலும் தெற்கில் குறைந்த சனச் செறிவுடன், சிதறுண்டு வாழ்வதாலும் முழு இலங்கை முஸ்லீம்களும் ஒரு பொது அமைப்பில் இணைவது சாத்தியம் அற்றதாகவே இருந்தது. ஏற்கனவே, முழு முஸ்லீம்களையும் இணைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்ட "அகில இலங்கை முஸ்லீம் லீக்" அம்முயற்சியில் தோல்வி கண்டிருந்தது.

சிங்கள மக்களும், தமிழ் மக்களும் தமக்கென தனியான, சுயமான அரசியல் அமைப்புக்களை ஏற்படுத்தி அவற்றில், அணிதிரண்டு கொண்டிருந்த நிலையில், இலங்கை முஸ்லீம்களுக்கென சுயமான, தனித்துவமான அரசியல் அமைப்புக்களை ஏற்படுத்துவதற்காக, தெற்கு முஸ்லீம் தலைமை சமூக நேர்மையுடன் செயற்பட்டிருக்க வேண்டும். இலங்கை முஸ்லீம்களிடையே எதார்த்தமாகக் காணப்படுகின்ற, தெற்கு மற்றும் வடகிழக்கு என்ற வேறு பாடுகளை கவனத்தில் கொண்டு பலமிக்க பிராந்திய மற்றும் பிரதேச ரீதியிலான அரசியல் அமைப்புக்களை ஏற்படுத்தி, அவற்றில் முஸ்லீம் களை இணைப்பதற்காக உழைத்திருக்க வேண்டும். இதன் மூலம், அரசியல் ரீதியிலும் கூட, தாம் தனித்துவமான சமூகம் என்று,இலங்கை முஸ்லீம்கள் தம்மை அடையாளம் காண்ப தற்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் தெற்கு முஸ்லீம் தலைவர்களி டையே காணப்பட்ட சுயநல அரசியல் பண்பு காரணமாக, அவர்கள் தமது சமூகத்திற்கு அவசியமான இத்தகைய சுயமான அரசியல் குறித்து ஒருபோதும் சிந்திக்கவில்லை, மாறாக தமது சொந்த நலன்களை எவ்வாறு பேணிக்கொள்வது என்பதையே அவர்கள் ஒரே இலக்காகக் கொண்டிருந்தார்கள். இந்த இலக்கை அடைவதற்காக, தாம் தேசியக் கட்சி என அழைத்த சிங்களக் கட்சி என்ற பலமிக்க அமைப்பில், தெற்கு முஸ்லீம்களையும் வட-கிழக்கு முஸ்லீம்களையும் ஒன்றிணைப்பதை சிறந்த வழியாக தெற்கு முஸ்லீம் தலைமை கருதியது. சிங்களக் கட்சியில் முழு இலங்கை முஸ்லீம்களையும் ஒன்றிணைப்பதன் மூலமாக, தெற்கு முஸ்லீம் தலைமை இருவழிகளில் நன்மையடையக் கூடியதாக இருந்தது. முதலாவதாக முஸ்லீம்களுக்கு என ஒதுக்கப்பட்ட நியமன அங்கத்துவத்தை தெற்கு முஸ்லீம் தலைமையால் பெற்றுக்கொள்ள முடிந்தது. இரண்டாவதாக, தெற்கில் முஸ்லீம்கள் செறிவாக வாழ்கின்ற கொழும்பு, அக்குறணை போன்ற இடங்களில் முஸ்லீம்களின் வாக்குகளோடு, ஓரளவுக்கு சிங்கள வாக்குகளையும்பெறுவதன் மூலம் இவர்களில் சிலர் தேர்தல்களில் வெற்றி பெறவும் முடிந்தது.

இவ்வாறு தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறையின் காரணமாக தமக்கு ஏற்படவிருந்த அரசியல் ரீதியான இழப்புகளை, சிங்களக் கட்சியில் இணைந்ததன் மூலமாகத் தெற்கு முஸ்லீம் தலைமை நிவர்த்தி செய்து கொண்டது. சிங்களக் கட்சி மூலம் தமக்குக் கிடைத்த இத்தகைய வாய்ப்புகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக, வடக்கு - கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் பிரதிநிதிகளாக, தெரிவு செய்யப்பட்ட வர்கள் சிங்களக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு தெற்கு முஸ்லீம் தலைமை நிர்ப்பந்தித்தது. இப்போது தான் முதன் முதலாக பாரளுமன்ற அரசியலுக்குள் நுழைந்த அன்றைய கிழக்கின் முஸ்லீம் அரசியல் வாதிகளை, செல்வாக்கும், அந்தஸ்தும், அரசியல் பாரம்பரிய மும், கல்வித் தேர்ச்சியுமிக்க தெற்கு முஸ்லீம் தலைவர்கள் கட்டுப்படுத்தி, சிங்களக் கட்சியில் இணையும்படி செய்வது கடினமானதாக இருக்கவி ல்லை. இவ்வாறு சிங்கள, தமிழ் மக்களிடையே, இனத்துவ ரீதியான அரசியல் இயக்கங்கள் வலிமையாக உருவாகிக் கொண்டிருந்த வேளையில், தெற்கு மற்றும் வட-கிழக்கு முஸ்லீம்கள் தமது அரசியல் சுயேட்சை பற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்வூட்டப் படாதவர்களாக , தெற்கு முஸ்லீம் தலைமையின் வழிகாட்டலின் கீழ் சிங்களக் கட்சிகளில் ஒட்ட வைக்கப்பட்டார்கள். இதன் மூலமாகத்தான், தெற்கு முஸ்லீம் தலைமை, முழு இலங்கை முஸ்லீம்களின் தலைமையாக தோற்றம் பெற்று செயற்பட முடிந்தது.

தெற்கு முஸ்லீம்தலைமை, சிங்கள அரசியல் தலைமையுடன் நிபந்தனையற்ற முறையில் இணைவை ஏற்படுத்திய பின்னர், அதன் அரசியல் வாழ்வு முரண்பாடுகள் நிறைந்ததாக மாறிவிட்டது. இந்த முரண்பாடுகள் தெற்கு முஸ்லீம் தலைமையின் சொந்த நலன்களுக்கும், இலங்கை முஸ்லீம் சமூகத்தின் நலன்களுக்கு மிடையே நிலவுகின்ற வேறுபாடுகளின் விளைவாகும். முதலில், தெற்கு முஸ்லீம்களின் நலன்களைக் கவனத்தில் கொள்வோமாயின், இந்த நலன்கள் தெற்கிலுள்ள முஸ்லீம்கள் அனைவருக்கும் பொதுவானதாக அமைந்திருக்க வில்லை. பதிலாக பிரதேச ரீதியில் வேறுபடுகின்ற, தனித்துவமான பிரச்சனைகளுக்கு இவர்கள் முகம் கொடுக்க வேண்டியிருப்பதால், அவர்களது நலன்களும் பிரதேச ரீதியில் வேறுபடுவதாகவும் தனித்துவமானதாகவும் இருக்கின்றன. இவ்வாறு தெற்கு முஸ்லீம்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் பிரதேச ரீதியில் வேறுபட்டும், தனித்துவமானதாகவும் இருக்கின்ற போதிலும், அவை அனைத்தும், அடிப்படையில் பௌத்த-சிங்கள இனவாத ஒடுக்குமுறையின் விளைவுகளாகவே இருக்கின்றன. எனவே இவர்கள் தமது நலன்களைப் பெற்றுக் கொள்வதும் கூட அடிப்படையில் பௌத்த-சிங்கள இனவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் மூலமே சாத்தியப்படக்கூடியதாக இருக்கிறது. பௌத்த,சிங்கள இனவாதத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற பிரச்சினைகளை எதிர்கொண்டு, அவற்றிற்குப் பொருத்தமான தீர்வுகளைக் காணவேண்டுமாயின், முதலில் தெற்கு முஸ்லீம் தலைமையானது, ஒரு கூட்டுத் தலைமையாகவும், தெற்கின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த நபர்களை உள்ளடக்கியதாகவும், அதிக எண்ணிக்கையான நபர்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். இவர்கள் தெற்கின் முஸ்லீம் பிரதேசங்களுக்குள் பலமான அடித்தளங்களைக் கொண்டவர்களாகவும், அங்குள்ள முஸ்லீம்களின் நலன்களுடன், தமது நலன்களையும் இணைத்துக் கொண்டவர்களாகவும், பௌத்த, சிங்கள இனவாதத்திற்கு எதிராக உறுதியாகவும், தொடர்ச்சியாகவும் போராடக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஆனால் எதார்த்தத்தில் தெற்கு முஸ்லீம் தலைமையோ இவற்றுக்கு முற்றிலும் மாறாக இருக்கிறது. இத்தலைமை பெரிதும் கொழும்பை மையப்படுத்தியதாகவும், குறிப்பிட்ட ஒரு சில நபர்களின், குடும்பங்களின் ஆதிக்கத்திற்குட்பட்டதாகவும், கொழும்பு சார்ந்த வர்த்தகம், தொழிற்துறை மற்றும் கலாச்சாரம் என்பவற்றில் தமது நலன்களைக் கொண்டதாகவும் இருக்கின்றது. மேலும் தமது சமூக அரசியல் நலன்கள் தொடர்ந்து பேணப்படுவதற்கும், வளர்ச்சியடைவதற்கும் பௌத்த, சிங்கள அரசின் தயவிலேயே இவர்கள் பெரிதும் தங்கியிருக்கிறார்கள். இவ்வாறு தெற்கு முஸ்லீம்களின் சமூக ரீதியான நலன்களும், தெற்கு முஸ்லீம் தலைமையின் தனிப்பட்ட நலன்களும் முற்றிலும் வேறுபட்டவைகளாக இருக்கின்றன.

மறுபுறத்தில், வட-கிழக்கு முஸ்லீம்களின் நலன்களைக் கவனத்தில் கொள்வோமாயின், அவை, தெற்கு முஸ்லீம் தலைமையின் தனிப்பட்ட நலன்களுடன் எவ்விதத்திலும் பொதுத்தன்மையை கொண்டிருக்கவில்லை. வாழ்கின்ற இடத்தால் மாத்திரமன்றி, தாம் முகம் கொடுக்கின்ற நெருக்கடிகள் தொடர்பாகவும், பொருளாதார ரீதியிலும் தெற்கு முஸ்லீம் தலைமையிடமிருந்து வட- கிழக்கு முஸ்லீம்கள் முற்றாக வேறு பட்டிருப்பதால், அவர்களின் நலன்களும் தெற்கு முஸ்லீம் தலைமையின் நலன்களும் முற்றிலும் வேறுபட்டே இருக்கின்றன.

இவ்வாறு இலங்கை முஸ்லீம்களின் எந்த ஒரு பிரிவினரின் சமூக நலன்களுடனும், தமது நலன்களை இணைத்துக் கொண்டிராத தெற்கு முஸ்லீம் தலைமை, இந்த முஸ்லீம்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதை இலக்காகக் கொண்டு ஒருபோதும் செயற்பட முடியாதிருக்கின்றது. இலங்கையிலுள்ள பிற சமூகங்களின் உரிமைகளை பறித்தெடுப்பதன் மூலமாகவே தனது இருப்பைத் தொடர்ச்சியாக பேணிவருகின்ற பௌத்த, சிங்கள இனவாத அரசுடன் இணைப்பை ஏற்படுத்தியதன் மூலம், தெற்கு முஸ்லீம் தலைமையானது, அடிப்படையிலே தனது சொந்த சமூகத்தின் நலன்களுக்கு முரணானதாகவும், எதிரானதாகவும் மாறிவிட்டது. பௌத்த- சிங்கள இனவாத அரசின் தயவில், தனது நலன்களைப் பேண வேண்டிய அவசியத்தில் இருப்பதால், தமது சமூகத்தின் நலன்களும் உரிமைகளும் பௌத்த-சிங்கள அரசினாலும், இனவாதிகளினாலும் மறுக்கப்படும் போதும் பறிக்கப்படும் போதும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவற்றிற்கு எதிராக தெற்கு முஸ்லீம் தலைமையால் எதுவும்செய்ய முடிவதில்லை. இத்தகைய இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, தெற்கு முஸ்லீம் தலைமை மேற்கொள்ளக் கூடிய எந்தவொரு நடவடிக்கையும், அதன் சொந்த நலன்களுக்கு பெரும் அபாயமாக மாறிவிடக் கூடியது. இதனால் தான் சுதந்திரத்தின் பின்னர், இலங்கை முஸ்லீம்கள் மீது, பௌத்த- சிங்கள இனவாத அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அத்தனை ஒடுக்குமுறைகளுக்கும், அநீதிகளுக்கும் எதிராக தெற்கு முஸ்லீம் தலைமை எத்தகைய வெகுசன நடவடிக்கைகளையும் எடுக்காமலும், அவற்றை தேசிய மற்றும் சர்வதேசிய ரீதியில் பகிரங்கப் படுத்தாமலும் இருந்து வந்திருக்கின்றது.

எனினும், தான் இலங்கை முஸ்லீம்களின் தலைமை என்பதை வெளிப்படுத்திக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் தெற்கு முஸ்லீம் தலைமைக்கு இருக்கின்றது. பௌத்த-சிங்கள அரசு திட்டமிட்ட ரீதியில் இலங்கை முஸ்லீம்கள் மீது மேற்கொண்டு வருகின்ற இன ஒடுக்குமுறைகள் விடயத்தில் மௌனமாக இருக்கின்ற, அல்லது எச்சரிக்கையுடன் வார்த்தைகளை உபயோகிக்கின்ற இவர்கள், ஏனைய நாடுகளிலுள்ள முஸ்லீம்களுக்கு ஏற்படுத்தப்படுகின்ற அநீதிகள் விடயத்தில் மட்டும் உடனடியான எதிர்ப்புக்களை ஆக்ரோசமாகத் தெரிவிப்பார்கள். சில சர்ந்தர்ப்பங்களில் வெகுசன ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவார்கள். இதே போன்று, வட-கிழக்கு முஸ்லீம்கள் மீது, விடுதலை அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அராஜகங்களுக்கு எதிராகவும், இந்திய இராணுவம் வட-கிழக்கில் நிலை கொண்டிருந்த போது, முஸ்லீம்கள் மீது மேற்கொண்ட வன்முறைத் தாக்குதல்களுக்கு எதிராகவும் இவர்கள் உடனடியாக கண்டனங்களை வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். தனது சமூகத்தின் இருப்பை படிப்படியே அகற்றி வருகின்ற பௌத்த-சிங்கள அரசின் திட்டமிட்ட இன ஒடுக்குமுறைகளின் விடயத்தில் மௌனமாக இருக்கின்ற தெற்கு முஸ்லீம் தலைமை, பௌத்த-சிங்கள அரசு அல்லாத ஏனைய பிரிவினரால் முஸ்லீம்களுக்கு ஏற்படுத்தப்படுகின்ற அநீதிகளை எதிர்ப்பது என்பது, முஸ்லீம்கள் மீது அவர்களுக்கு இருக்கின்ற உண்மையான அக்கறையின் காரணமாக அல்ல, மாறாக இலங்கை முஸ்லீம்களுக்கு எதிராக செயற்பட்டு வருகின்ற பௌத்த- சிங்கள அரசுக்குச் சார்பாக இருக்கின்ற, தமது அப்பட்டமான சுயநலத் தோற்றத்தை மறைப்பதற்கான முயற்சிகளாகத்தான் இவை அமைகின்றன.

சுதந்திரத்திற்குப் பின்னர், பிற சமூகங்களை நசுக்கிச் சிதைக்க முயற்சிக்கின்ற பௌத்த-சிங்கள அரசின் இனவாதச் செயற்பாடுகளின் காரணமாக, அந்த சமூகங்களைச் சேர்ந்த சகல பிரிவினரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர்.இவ்வகையில், தெற்கிலுள்ள உயர்வர்த்தகப் பிரிவு முஸ்லீம்களினதும், அவர்களைத் தளமாகக் கொண்ட தெற்கு முஸ்லீம் அரசியல் தலைமையினதும் சமூக பொருளாதார நலன்களும் கூட பாதிப்புக்குள்ளாகியே வந்திருக்கின்றன. ஏனினும் இவற்றை உறுதியாக எதிர்க்கவோ, தமது உரிமைகளுக்காக போராடவோ முடியாதவர்களாகவே இவர்கள் இருக்கின்றனர். அந்தளவிற்கு அவர்களின் நலன்கள் தமக்குள் பொதுத்தன்மை கொண்டிராதவையாகவும், தமது சமூகத்தின் நலன்களிலிருந்து வேறுபட்டவையாகவும் இருக்கின்றன. ஒரு அரசியல் தலைமை, மக்களை போராட்டத்திற்கு அணிதிரட்ட வேண்டுமாயின், அப் போராட்டத்தில் பங்குகொள்ளக் கூடிய வெகுசனங்களினதும், தலைமையினதும் நலன்கள் பெரும்பாலும் ஒத்த தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறின்றி, வெகுஜனங்களினதும், தலைமையினதும் நலன்கள் வேறுபடுமாயின், அப்போது உறுதியான மக்கள் போராட்டம் சாத்தியமற்றதாகின்றது. இந்த இரண்டாவது வகையை சார்ந்ததாகத்தான், இலங்கை முஸ்லீம்களினதும் அவர்களின் தலைமை எனக் கூறிக் கொள்கின்ற தெற்கு முஸ்லீம் தலைமையினதும், உறவு நிலை அமைந்திருக்கின்றது. இதனால் தெற்கின் உயர் முஸ்லீம் வர்த்தகப் பிரிவினரும் தெற்கு முஸ்லீம் தலைமையும் தம்மைச் சிதைத்து, தமது வாய்ப்புக்களைப் பறித்து வருகின்ற அரசுடன் ஏதோ வகையில் சமரசம் செய்து கொள்ளவும், கிடைக்கின்ற வாய்ப்புகளுக்காக முந்திக் கொள்ளவும் முயற்சிக்கின்றனர்.

ஒரு தனித்துவமான சமூகம் என்ற வகையில், இலங்கை முஸ்லீம்களுக்குரிய சுயமான அரசியல் இயக்கம், கிழக்கு முஸ்லீம்களிடையே தான் வேர்கொண்டிருக்கின்றது. எனினும் இத்தகைய அரசியல் இயக்கத்தை தவிர்ப்பதும், அதை எதிர்ப்பதும் தெற்கு முஸ்லீம் தலைமைக்கு அவசியமாக இருக்கின்றது. கிழக்கு முஸ்லீம்களின் சுயமான, எழுச்சிமிக்க அரசியல் இயக்கம், தெற்கு முஸ்லீம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமையின் அரசியல் இருப்பை உறுதியற்றதாக்குகின்றது, அதன் நலன்களுக்குப் பாதகமாக அமைகின்றது. கிழக்கு முஸ்லீம்களின் சுயமான அரசியல் இயக்கம், தன்னை நசுக்கிக் கொண்டிருக்கின்ற பௌத்த, சிங்கள அரசுடனான மோதலை தவிர்க்க முடியாமல் எதிர்கொள்ள நேரும். இத்தகைய மோதலினதும்,அதில் கிழக்கு முஸ்லீம்கள் பெறக்கூடிய வெற்றியினதும் எதிர் விளைவாக, தெற்கு முஸ்லீம் தலைமையின் இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார நலன்கள் பாதிப்புக்குள்ளாகும். எனவேதான், கிழக்கு முஸ்லீம்களின் சுயமான அரசியல் இயக்கத்தை எதிர்ப்பதில், தெற்கு முஸ்லீம் தலைமை உணர்வுபூர்வமாகச் செயற்பட்டு வருகின்றது. இத்தகைய தனது எதிர்ப்பை நியாயப்படுத்துவதற்காக, கிழக்கிற்கு வெளியே அதிக எண்ணிக்கையில் இருக்கின்ற முஸ்லீம்க ளின் நலன்கள்,கிழக்கில் உள்ள குறைந்த எண்ணிக்கையான முஸ்லீம்களின் செயற்பாடுகளினால் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என்ற வாதத்தை தெற்கு முஸ்லீம் தலைமை முன் வைத்து வந்திருக்கிறது.

இலங்கை அரசியலானது மேலும் மேலும் இனத்துவ ரீதியாகப் பிரிகின்ற போக்கைப் பெற்றிருக்கின்ற நிலையில், தனது சமூகம் சார்ந்து சுயமான அரசியல் இயக்கத்தை முன்னெடுக்காதிருக்கின்ற தெற்கு முஸ்லீம் தலைமை, பௌத்த-சிங்கள இனவாத அரசுடன் இணங்கிப் போவதையும் அதற்கு ஆதரவு வழங்குவதையும் தொடர்ந்தும் மேற்கொண்டிருக்கிறது. இதன் விளைவாக, தமது உரிமைகளை வென்று கொள்வதற்காக பௌத்த-சிங்கள இனவாதத்துடன் போராடி வருகின்ற தமிழர் அரசியல் இயக்கத்திலிருந்து, தெற்கு முஸ்லீம் தலைமை தன்னை முற்றாகவே பிளவுபடுத்திக் கொண்டு விட்டது. இந்தப் பிளவை அது இலங்கை முஸ்லீம்கள் மத்தியிலும் திணித்து வந்திருக்கின்றது. தமிழர் அரசியல் இயக்கம் வட-கிழக்கு முஸ்லீம்களின் பாரம்பரிய பிரதேசத்தையும் ஊடுருவிச் செல்வதால், தெற்கு முஸ்லீம் தலைமை இந்தப் பிளவை ஆழப்படுத்துவதில் மிகவும் உணர்வுபூர்வமாகவே செயற்பட்டு வந்திருக்கின்றது. குறிப்பாக 1970களின் பிற்பகுதியில் தமிழீழ விடுதலைக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதிலிருந்து, தெற்கு முஸ்லீம் தலைமை இக்கோரிக்கைக்கு எதிராக முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. "இலங்கை முஸ்லீம்கள் பிரிவினைக்கு எதிரானவர்கள்", "அவர்கள் பயங்கரவாதத்தை எதிர்ப்பவர்கள்" என்பது போன்ற பிரச்சாரங்களுக் கூடாக, தமிழர் அரசியல் இயக்கத்திலிருந்து இலங்கை முஸ்லீம்களை இவர்கள் விலக்கி வருகின்றார்கள். மேலும், தமிழ் மக்களின் பிரச்சனைகளின் தீர்வுக்கு குறைந்தபட்ச அடிப்படையாக அமையக் கூடிய வட - கிழக்கு இணைப்பையும் தெற்கு முஸ்லீம் தலைமை தொடர்ச்சியாக எதிர்த்து வருகிறது. இதன் மூலம், வட - கிழக்கு இணைப்பை, அங்குள்ள முஸ்லீம்கள் விரும்பவில்லை என்று காரணம் காட்டி வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு பௌத்த-சிங்கள இனவாதிகள் செய்து வருகின்ற முயற்சிகளுக்கு, தெற்கு முஸ்லீம் தலைமை நேரடியான உடந்தையாளராக இருந்து வருகின்றது. இதற்கு ஒரு உதாரணமாக, முன் நாள் சபாநாயகர் M.H.முகம்மது, ஏனைய இனவாத சக்திகளுடன் இணைந்து உருவாக்கி, செயலிழந்துவிட்ட "கிழக்கு மாகாண பாதுகாப்பு முன்னணி" என்ற அமைப்பை இங்கு குறிப்பிடலாம்.

தெற்கு முஸ்லீம் தலைமை சாராம்சத்தில், ஒட்டுமொத்த ஜனநாயக அரசியல் சூழலுக்கு எதிரானது. ஜனநாயக அரசியல் நோக்கிய ஒவ்வொரு உண்மையான முன்னேற்றமும், இங்குள்ள பிற சமூகங்களின் உரிமைகளை மீட்டுத் தரக்கூடியது. இதனால் ஒரு உண்மையான அரசியல் சூழலானது, ஒவ்வொரு சமூகமும் தனது நலன்களை உண்மையாக பிரதிபலிக்கக் கூடிய அரசியல் தலைமையை சுயமாக தேர்ந்து கொள்ளக் கூடிய வாய்ப்புகளை வழங்கும். இலங்கையின் ஜனநாயக அரசியல் சூழல் இலங்கை முஸ்லீம்களின் குறிப்பாக கிழக்கு முஸ்லீம்களின் சுயமான அரசியல் வாழ்வை உறுதிப்படுத்தக் கூடியது. இதனால் தவிர்க்க முடியாமல் தெற்கு முஸ்லீம் தலைமையின் அரசியல் இருப்பு ஆபத்துக்குள்ளாகும். எனவே தெற்கு முஸ்லீம் தலைமை விரிவான ஜனநாயக அமைப்புக்களுக்குப் பதிலாக, அதிகாரங்கள் மையத்தில் குவிந்திருக்கக் கூடிய, இறுக்கமான அமைப்பு களுக்கே ஆதரவு வழங்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு, ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட அரசியல் வாழ்வினூடாக, தெற்கு முஸ்லீம் தலைமையானது, ஒரு சமூக விரோத, ஜனநாயக விரோத,மற்றும் சுயநலத்தன்மை மிக்க அரசியல் பண்புகள் கொண்ட தலைமையாக உருவாகி வந்திருக்கின்றது. இதன் பின்னர், இந்தத் தலைமையிடமிருந்து தெற்கு முஸ்லீம்களோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லது வட கிழக்கு முஸ்லீம்களோ தமது நலன்கள் மற்றும் உரிமைகள் சார்ந்த அரசியல் முன்னெடுப்புக்களை எதிர்பார்ப்பதில் எவ்வித அர்த்தமுமில்லை. இந்நிலையில் இந்த அரசியல் தலைமை, முழு இலங்கை முஸ்லீம்களினாலும் நிராகரிக்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. தனது சமூகத்தை தவறான, தற்கொலைப் பாதையில் இட்டுச் சென்றிருக்கின்ற இந்தத் தலைமையின் அரசியல் வழிகாட்டலில் இருந்து விலகி, இலங்கை முஸ்லீம்கள் புதிய அரசியல் பாதைகளை தெரிவு செய்வதற்கான நேரம் வந்துவிட்டது.

தெற்கு முஸ்லீம்களிடையே, இந்தத் தலைமையை நிராகரிக்கின்ற சில பிரிவினர் இருந்து வருகின்றனர். பிற்பட்ட சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த,படித்த தெற்கு முஸ்லீம்க ளில் சிலர், தமது தலைமையின் இத்தகைய போக்குகளுக்கு எதிராக செயற்படுகின்றவர்க ளாக இருக்கின்றார்கள். எனினும் இவர்கள் திட்டவட்டமான முறையில் அரசியல் செயற்பாடு களை முன்னெடுப்பதற்கு பதிலாக, பெரும்பாலும் மத அமைப்புக்கள் சார்ந்தே இயங்குகின்றனர். தெற்கு முஸ்லீம்களை அரசியல் ரீதியில் ஒன்றிணைத்து, பொதுவானதும், வலிமையானது மான அரசியல் இயக்கத்தை ஏற்படுத்துவது சாத்தியமற்றதாக இருப்பதால், அவர்களை மதரீதியில் ஒன்று திரட்டுவதற்கு இந்தப் பிரிவினர் முயற்சிக்கின்றனர். பௌத்த-சிங்கள இனவாதத்தினால் பல்வேறு முனைகளிலும் நேரடியாகப் பாதிக்கப்படுகின்ற இந்தப் பிரிவினர், இவற்றுக்கு எதிரான தமது கண்டனங்களை தீவிர மதக் கருத்துகளினூடாக வெளிப்படுத்துகின்றனர். எதார்த்தத்தில் நிலவுகின்ற சமூக, அரசியல் அமைப்புகளிலிருந்து கிட்டத்தட்ட முற்றாகவே விலகியிருக்கின்ற இவர்கள், மத ரீதியாக ஏற்படக் கூடிய வெற்றியின் மூலமாக தமது சமூகத்தின் அவலங்களைத் தீர்க்க முடியும் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இவர்கள் முஸ்லீம் நாடுகளிடையே உருவாகி வருகின்ற இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்களினால் கிளர்ச்சியூ ட்டப்பட்டிருக்கின்றனர். இவர்களில் சிலர், இலங்கையும் ஒரு இஸ்லாமிய நாடாக மாறிவிட முடியும் என்று நம்புகின்ற அளவிற்கு, சமூக, பொருளாதார,அரசியல் குறித்து அறியா மையில் இருக்கிறார்கள். பல முஸ்லீம் சமூகங்களில் இன்று எழுந்து வருகின்ற இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது, வெறும் மத ரீதியான இயக்கம் அல்ல என்பதையும், அது ஒவ்வொரு நாட்டிலும் நிலவுகின்ற சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார முரண்பாடுகளினால் தோற்றுவிக்கப்படுகின்ற ஒரு அரசியல் இயக்கம் என்பதையும் இவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றனர். மதத்தை அடிப்படையாகக் கொண்ட இவர்களின் முயற்சி கள், தனிநபர் வாழ்வில், கலாச்சார ரீதியான சில பாதிப்புக்களை ஏற்படுத்த முடிகின்றனவே தவிர, சமூக அளவில், அரசியல் ரீதியான பாதிப்புகள் எதையும் ஏற்படுத்த முடியாதிருக்கின்றது. அரசியல், பொருளாதார, கலாச்சார ரீதியாக தமது சமூகம் முகங் கொடுக்கின்ற பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்குரிய உணர்ச்சிகரமான ஆயுதமாக மதத்தை உயர்த்திப் பிடிப்பதற்கு பதிலாக, இவர்கள் தமது சொந்த பலவீனங்களுக்குரிய வடிகாலாகவே மதத்தைப் பயன்படுத்துகின்றனர். இறுதியில் இவர்கள் கற்பனைகளிலும், அற்புத ங்களிலும் நம்பிக்கை வைப்பவர்களாகவும், நடைமுறைச் செயற்பாடுகளில் சோர்வு அடைந் தவர்களாகவும் மாறுகின்றனர்.

தெற்கில் ஒரு தேசிய சிறுபான்மையினர் என்ற நிலையில், தமது இருப்பைப் பேணவேண்டிய அவசியத்தில் இருக்கின்ற தெற்கு முஸ்லீம்களின் நலன்களையும், அபிலாஷைகளையும் பிரதி பலிக்கின்ற தலைமையாக அமையவிருப்பவர்கள் முதலில் அங்கு நிலவுகின்ற எதார்த்த நிலைமைக ளைப் புரிந்துகொள்வது அவசியம். தெற்கு முஸ்லீம்கள், பிரதேச ரீதியான தொடர்ச்சியின்றி, சிறிய எண்ணிக்கையில் சிதறிய நிலையில் வாழ்வதால், பொதுவான அரசியல் அமைப்பில் அவர்களை இணைப்பதற்குப் பதிலாக, வலிமைமி க்க, பிரதேச ரீதியான அரசியல் அமைப்புகளை ஏற்படுத்துவது குறித்து இவர்கள் சிந்திக்க வேண்டும். எனினும் இன்று நடைமுறையில் உள்ள அரசியல் முறைமை யானது, இத்தகைய பிரதேச ரீதியான அரசியல் அமைப்புக்களை முக்கியத்து வமற்றதாக்குகின்றது. ( இருந்தும், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டும், ஓரளவுக்கு செல்வாக்கைப் பெற்றிருக்கின்ற "மலையக மக்கள் முன்னணி" என்ற அமைப்புக்குக் கிடைத்திருக்கினற அரசியல் வெற்றியை தெற்கு முஸ்லீம்கள் ஒரு முன்னுதாரணமாகக் கொள்வது குறித்து சிந்திக்கவேண்டும்.) இந்நிலையில், நடைமுறையி லுள்ள ஜனாதிபதி அல்லது பாராளுமன்ற முறைமைக்குள், அதிகாரங்கள் குவிக்கப்படு வதற்கு பதிலாக, சகல சமூகங்களும் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு ஏற்ற விதத்தில் புதிய அரசு மற்றும் நிர்வாக ஒழுங்கமைப்பை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்படுத்துவதற்காக இவர்கள் செயற்பட வேண்டும். இதைச் சாத்தியமாக்குவதற்கு, சிங்கள மற்றும் பிற சமூகங்களைச் சேர்ந்த ஜனநாயகப்பிரிவினருடன் இணைந்து செயற்படுவதற்கான வழிமுறைகள் குறித்து சிந்திக்க வேண்டும். இவற்றோடு பௌத்த- சிங்கள இனவாதம் குறித்து எச்சரிக்கையாகவும், அதற்கு எதிராக உறுதியாகச் செயற்படக் கூடியவர்களாகவும் இருப்பது அவசியம். அடக்கப் பட்டிருக்கின்ற ஒரு சமூகம் தனது சொந்தப் போராட்டத்தின் மூலமாக மட்டுமே தன் விடுதலையைப் பெற்றுக் கொள்ளமுடியும். உலகெங்கும் நிருபிக்கப் பட்டிருக்கின்ற இந்த உண்மை, தெற்கு முஸ்லீம்களுக்கும் பொருந்தக் கூடியதே.

தெற்கு முஸ்லீம்கள் இன்னமும் ஒரு சுயமான அரசியல் இயக்கத்திற்குள் காலடி வைத்திராத நிலையில் இருக்க, மறுபுறத்தில், கிழக்கு முஸ்லீம்கள் தமக்கென சுயமான அரசியல் இயக்கத்தை உருவாக்கி விட்டார்கள். படிப்படியே வளர்ந்து, பலமுற்று வருகின்ற கிழக்கு முஸ்லீம்களின் சுயமானஅரசியல் இயக்கமானது, தெற்கு முஸ்லீம் தலைமையை நிராகரிக்கின்ற போக்கை ஏற்கனவே எடுத்துவிட்டது. தமது நலன்களுடன் எவ்விதத்திலும் தொடர்பு கொண்டிராத தெற்கு முஸ்லீம் தலைமையின் அரசியல் வழி காட்டலை, கிழக்கு முஸ்லீம்கள் இனிமேல் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

## (வட) கிழக்கு முஸ்லீம்கள்

### சமூகத்தன்மை:-

முதலில், இங்கு (வட) கிழக்கு முஸ்லீம்கள் என்ற தலைப்பின் கீழ் வருகின்ற விடயங்கள் பெரிதும் கிழக்கு முஸ்லீம்களைப் பற்றியே விபரிக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டி யுள்ளது. ஏனெனில் இலங்கை அரசியலில், குறிப்பாக வட- கிழக்கு அரசியலில் அவர்கள் முக்கியத்துவம் பெறுவதால் அவர்களது அரசியல் முன்னெடுப்புக்கள் அதிகக் கவனத்தைப் பெறுவதாக இருக்கின்றன. எனினும் வட - கிழக்கில் வாழ்கின்ற முஸ்லீம்கள் அனைவரும் பெரும்பாலும் ஒரே விதமான சமூக - பொருளாதார அரசியல் நிலைமைகளையே முகம் கொடுப்பதால், இங்கு வாழ்கின்ற முஸ்லீம்கள் ஒரே விதமான பிரச்சினைகளையே சந்திக்க வேண்டியுள்ளது. இவ்வகையில், கிழக்கு முஸ்லீம்கள் பற்றிய விடயங்கள் பெரும்பாலும் வடக்கு முஸ்லீம்களுக்கும் பொருந்தக் கூடியதே.

கிழக்கு முஸ்லீம்களின செறிவான சனத்தொகையும், அடர்த்தியான பரம்பலும், சுய சார்புக்குரிய பொருளாதார முறையும் இணைந்து அவர்களிடையே சுயமான அரசியல் இயக்கத்தையும், தனியான அரசியல் அமைப்புக்களையும் தோற்றுவிக்கக் கூடியனவாக இருந்து வந்திருக்கின்றன. எனினும் 1980களின் நடுப்பகுதி வரை கிழக்கு முஸ்லீம்களினால் இவற்றை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை. பதிலாக, அவர்களது அரசியல் செயற்பாடுகள் தெற்கு முஸ்லீம் தலைமையினாலும் அந்த தலைமை ஆதரவளித்த சிங்களக் கட்சிகளினாலும் தீர்மானிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இத்தகைய நிலமை ஏற்பட்டதைப் புரிந்து கொள்வதற்கு, கிழக்கு முஸ்லீம்களின் சமூக, பொருளாதார, கலாச்சார அம்சங்கள் குறித்து விரிவான பரிசீலனை மேற்கொள்வது அவசியமாகின்றது.

கிழக்கு முஸ்லீம்களிடையே நீண்ட காலமாக நிலவுடமை சார்ந்த உற்பத்தி முறை நிலவியது. 1815இல் பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்கள் முழு இலங்கையையும் கைப்பற்றிய பின்னர் இங்கு முதலாளித்துவ உற்பத்தி உறவுகளைப் புகுத்தி வந்த போதிலும் 1950 களின் பிற்பகுதி வரை,கிழக்கு முஸ்லீம்களிடையே நிலவிய நிலவுடமை சார்ந்த, பின் தங்கிய உற்பத்தி உறவுகளில் குறிப்பிடக் கூடிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. அதே போன்று, பெரிதும் கொழும்பு சார்ந்த நகர்ப் புறங்கள் தழுவியதாக முன்னெடுக்கப்பட்ட ஆரம்பகால, சீர்திருத்தவாத அரசியல் இயக்கங் களும் கூட கிழக்கு முஸ்லீம்களை பாதிக்க வில்லை. 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி யிலிருந்து, தெற்கு முஸ்லீம்களிலும் அவர்களின் அரசியல் தலைமைகளிலும் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தி வந்த சமூக அரசியல் நிகழ்வுகள் எதுவும் கிழக்கு முஸ்லீம்களை பாதிக்கவில்லை. 1880 களில் நடைபெற்ற, தனியான முஸ்லீம் பிரதிநிதித்துவத்திற்கான போராட்டம், 1915 ல் தெற்கு முஸ்லீம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள், 1940 களில் தமிழ் தலைமை முன்வைத்த ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை, சமஷ்டி ஆட்சிக்கான கோரிக்கை, பின்னர் 1950 களில் தீவிரமாக இடம்பெற்ற மொழிப் பிரச்சனை- - - போன்ற எதுவும் கிழக்கு முஸ்லீம்களில் குறிப்பிடக்கூடிய தாக்கங்களை ஏற்படுத்தவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல்லை. அந்தளவிற்கு அவர்களிடையே நிலவுடமை சார்ந்த உறவுகள் வலிமை பெற்றிருந்தனர்.

**கட்சி அரசியலின் அறிமுகம்:-**

எனினும் 1931 ல் சர்வஜன வாக்குரிமை அமுலுக்கு வந்ததன்பின்னர், கிழக்கு முஸ்லீம்கள் மத்தியிலும் முதலாளித்துவ அரசியல் உறவுகள் புகுத்தப்பட்டன. இந்த அரசியல் உறவுகள், கிழக்கு முஸ்லீம்களின் வாழ்க்கை முறையின் இயல்பான வெளிப்பாடாக அமையாததால், அவர்கள் முதலாளித்துவ அரசியல் நோக்கி, உணர்வு பூர்வமாக ஈர்க்கப்படவில்லை. ஆரம்ப காலங்களில் அவர்களுக்குரிய அரசியல் பிரதிநிதித்துவத்தையும் கூட தமிழ் பிரதிநிதிகள் அல்லது தெற்கு முஸ்லீம் அரசியல் வாதிகளே பெற்றுவந்தார்கள். இவ்வகையில் மாக்கான் மாக்கார் நல்லையா போன்றவர்களை இங்கு குறிப்பிடலாம்.

சுதந்திரத்தின் பின்னர் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையும், தெரிவு செய்யப்படக் கூடிய பிரதிநிதிகளின் எண்ணிக்கையின் அதிகரித்ததால், பிரதேச மட்டத்தில் செல்வாக்கு மிக்க நபர்கள் பாராளுமன்ற அரசியலுக்குள் பிரவேசிப்பது இடம்பெறத் தொடங்கியது. இத்தகைய போக்கு கிழக்கு முஸ்லீம்களிடையிலும் ஏற்பட்டது. சமூக பொருளாதார ரீதியில் ஆதிக்க நிலையில் இருந்த முஸ்லீம் நிலவுடமையாளர்களே அரசியலிலும் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள். இவர்களது அரசியல் பிரவேசம் கிழக்கு முஸ்லீம்களை அரசியல் ரீதியில் ஒன்று திரட்ட வேண்டும் என்பதையோ அல்லது கிழக்கு முஸ்லீம்களின் நலன்களைப் பேணவேண்டும் என்பதையோ நோக்கமாகக் கொண்டிருக்க வில்லை. மாறாக, ஒவ்வொரு முஸ்லீம் தொகுதிக்கும் உரிய பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற அவசியத்தினாலும், இத்தகைய பிரதிநிதித்துவத்தின் மூலம் தமது சொந்த நலன்களும், அந்தஸ்தும் மேலும் விரிவடையும் என்பதாலுமே இவர்கள் அரசியலில் ஈடுபட்டார்கள் . ஆரம்ப காலங்களில் பிரதான சிங்களக்கட்சிகள் கிழக்கு மாகாணத்தில் ஊடுருவியிராததாலும், தெற்கு முஸ்லீம் தலைமையால் கிழக்கு முஸ்லீம்கள் மீது செல்வாக்கு செலுத்த முடியாமல் இருந்ததாலும் இவர்கள் பெரும்பாலும் சுயேட்சையாகவே போட்டியிட்டார்கள்.

இவ்வாறு பாராளுமன்ற அரசியலில் பங்குகொண்ட கிழக்கு முஸ்லீம் நிலவுடமையாளர்கள் உடனடியாகவோ அல்லது குறுகிய காலத்திலோ, தெற்கு முஸ்லீம் தலைமையின் வழிகாட்டலில், இரு பிரதான சிங்களக் கட்சிகளில் ( முதலில் U.N.P. பின்னர் S.L.F.P. அல்லது U.N.P.) இணைந்து கொண்டார்கள். தமது சொந்த நலன்களையும் அந்தஸ்தையும் உயர்த்திக் கொள்வதற்காக அரசியலில் பிரவேசித்த கிழக்கு முஸ்லீம் அரசியல் வாதிகள், விரைவிலேயே கட்சி அரசியலினால் தமக்குக் கிடைக்கக் கூடிய நன்மைகளை அறிந்து கொண்டார்கள். பிரதான சிங்களக் கட்சிகள் தேர்தல் காலங்களில் விளங்குகின்ற பொருளாதார மற்றும் பிரச்சார உதவிகளினால் கிழக்கு முஸ்லீம் அரசியல் வாதிகள் வெற்றி பெறக்கூடிய வாய்ப்புகள் அதிகரித்தன. மேலும் இக்கட்சிகள் ஆட்சியமைக்கக் கூடிய சந்தர்ப்பங்களைக் கொண்டிருந்ததால், இவற்றில் இணைந்து கொள்வதன் மூலமாக கிழக்கு முஸ்லீம் அரசியல் வாதிகள் தமது நலன்களை அதிகரித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புகள் அதிகம் ஏற்பட்டன. இதனால் இவர்கள் இந்த சிங்களக் கட்சிகளில் ஆர்வத்துடன் இணைந்து கொண்டார்கள். இவ்வாறு கிழக்கு முஸ்லீம் அரசியல்வாதிகள், சிங்களக் கட்சிகளில் இணைந்ததன் மூலமாகத்தான், தெற்கு முஸ்லீம் தலைமை தன்னை கிழக்கு முஸ்லீம்களின் தலைமையாகவும் மாற்றிக் கொள்ள முடிந்தது . ஒவ்வொரு தேர்தலும் முன்னைய தேர்தலைவிட போட்டி மிக்கதாகவும், வெற்றிக்கான நிச்சய மற்றதாகவும். அதிக செலவுமிக்கதாகவும் மாறிக்கொண்டிருந்ததால் கிழக்கு முஸ்லீம் அரசியல்வாதிகள் தமது தேர்தல் வெற்றிக்காக சிங்களக் கட்சிகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை படிப்படியே அதிகரித்தது. இதனால் தாம் தேர்தலில் போட்டியிடுவதற்கான நியமனத்தை பெறவும், தமது வெற்றியை உறுதிப்படுத்தவும் சிங்களக் கட்சிகளில் ஏற்கனவே, செல்வாக்குடன் இருந்த தெற்கு முஸ்லீம் அரசியல்வாதிகளின் தயவை இவர்கள் நாடினார்கள் இதன் விளைவாக கிழக்கு முஸ்லீம் அரசியல்வாதிகள் தெற்கு முஸ்லீம் தலைமையினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிலை உருவாகியது. இவ்வாறு தெற்கு முஸ்லீம் தலைமை கிழக்கு முஸ்லீம் அரசியல்வாதிகளைக் கட்டுப் படுத்தியதனூடாக, முழு கிழக்கு முஸ்லீம்களையும் கட்டுப்படுத்துவதும், அவர்களின் தலைமையாக மாறுவதும் சாத்திய மாகியது.

கிழக்கு மாகாண முஸ்லீம்களிடையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாளித்துவ வகைப்பட்ட பாராளுமன்ற தேர்தல் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் கூட, அவர்கள் இன்னமும் பின்தங்கிய நிலவுடமைச் சமூக உறவுகளுக்கு கட்டுப்பட்டவர்களாகவே இருந்தார்கள். இதனால் இவர்கள், தேர்தல்களில் போட்டியிட்ட முஸ்லீம் வேட்பாளர்களின் குடும்ப செல்வாக்கையோ அல்லது பிரதேசத்தையோ அடிப்படையாகக் கொண்டே பொதுவாக தமது வாக்குகளை வழங்கி வந்தார்கள். எனினும் கிழக்கு முஸ்லீம் அரசியல் வாதிகள் கட்சி சார்ந்த அரசியலுக்குள் நுழைந்த போது, இவர்கள் இதுவரை காலமும் தாம் ஆதரவு வழங்கிய, தமது அபிமானத்துக்குரிய அரசியல்வாதியைப் பின் பற்றி, அவர் எந்தக் கட்சியில் இணைந்து கொண்டாரோ, அந்தக்கட்சியின் ஆதரவாளர்களாக மாறினார்கள். இவ்வாறு கிழக்கு முஸ்லீம்களிடையே புகுத்தப்பட்ட கட்சி அரசியல் பின்னர் மாற்ற முடியாத அளவுக்கு இறுகி பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றப்பட்டு வந்தது.

கிழக்கு முஸ்லீம்களிடையே கட்சி அரசியல் புகுத்தப்பட்ட காலத்தில், அவர்களுக்கு முன்னே இருபிரதான சிங்களக் கட்சிகளுடன், தமிழ் கட்சிகளும் காணப்பட்டன. தனித்துவமானவையாகவும் ஒன்றுக் கொன்று முரணானவையாகவும், அரசியலில் அனுபவமிக்கவையாகவும் விளங்கிய இவ்விருவகைக் கட்சிகளும் அன்றைய கிழக்கு முஸ்லீம்களைப் பொறுத்த வரை அந்நியமானவையாகவே இருந்தன. இதில் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறைகோரி போராடிக் கொண்டிருந்தது. சிங்களக் கட்சிகள் அந்தக் கோரிக்கைக்கு எதிராக செயற்பட்டுக் கொண்டிருந்தன. இவற்றிக்கிடையே கிழக்கு முஸ்லீம்கள் அரசியல் ரீதியில் விழிப்புணர்வூட்டப்படாதவர்களாக இருந்ததால் சுயாட்சி முறை குறித்தும், அதனால் தமக்கு ஏற்படக் கூடிய தாக்கங்கள் குறித்தும் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் கிழக்கு முஸ்லீம்கள், சிங்கள, தமிழ்கட்சிகளில் எந்த ஒன்றை நோக்கியும் உணர்வுபூர்வமாக ஈர்க்கப்படவில்லை. தமது அபிமானத்துக்குரிய அரசியல்வாதி இவற்றில் எந்தக் கட்சியில் இணைந்து கொண்டாலும், அதற்கு ஆதரவு வழங்கக் கூடியவர்களாகவே இருந்தார்கள். இத்தகைய நிலையில், கிழக்கு முஸ்லீம்களின் கட்சி ஆதரவைத் தீர்மானித்ததில் கிழக்கு முஸ்லீம் அரசியல்வாதிகளின் சொந்த நலன்களே அடிப்படையாக அமைந்தன.

கிழக்கு முஸ்லீம்களிடையே கட்சி அரசியல் புகுத்தப்பட்ட காலப்பகுதியில், தமிழ் மக்கள் தம்மீதான சிங்கள அரசின் இனவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராக (குறிப்பாக மொழி பிரச்சினைக்கூடாக) அரசியல் ரீதியில் ஒன்றிணைந்து கொண்டிருந்தார்கள். பௌத்த சிங்கள அரசை எதிர்த்து, தமது உரிமைகளுக்காகப் போராடுவதுதான் தமிழர் அரசியல் இயக்கத்தின் பொதுவான போக்காக இருந்தது. இத்தகைய சூழலில், தமிழ் கட்சிகளில் இணைவதால் கிழக்கு முஸ்லீம் அரசியல் வாதிகள் தமது சொந்த நலன்களை உயர்த்திக் கொள்வதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கவில்லை. மறுபுறத்தில் தமிழ் மக்களின் அரசியல் இயக்கத்திற்கு ஏதிராக தெற்கு முஸ்லீம் தலைமை தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தது. தமிழ் மக்களின் அரசியல் இயக்கத்தில் முஸ்லீம்களை இணையவிடாமல் தடுக்கும் நோக்கத்தில், பாராளுமன்றத்திலும் வெளியிலும் பல்வேறு நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டார்கள். முஸ்லீம்கள் மத்தியில் தமிழ் மொழியை புறக்கணித்து சிங்கள மொழியையும் அரபு மொழியையும் உயர்த்திப் பிடிக்கின்ற பிரச்சாரத்தில் அவர்கள் தீவிரமாக இறங்கினார்கள். இதே வேளை பௌத்த-சிங்கள அரசும், இனவாத சக்திகளும் தமிழ் மக்களின் மீது வன்முறைத் தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கின. அரசியல் உரிமைகளைக் கோரி சாத்வீகப் போராட்டத்தை முன்னெடுத்த தமிழ் அரசியல் வாதிகள் மீது மட்டுமன்றி, சாதாரண தமிழ் பொதுமக்களின் மீதும் வன்முறைத் தாக்குதல்கள் திட்டமிட்டரீதியில் மேற்கொள்ளப் பட்டன. இவ்வாறான நிலையில், தமிழ் கட்சிகளில் இணைவதால் தமது தொடர்ந்த அரசியல் வாழ்வுக்கும், நலன்களுக்கும் பெரும் பாதிப்புக்கள் ஏற்படும் என்று கிழக்கு முஸ்லீம் அரசியல் வாதிகள் உணர்ந்தார்கள்.

கிழக்கு முஸ்லீம்களைப் பொறுத்தவரை, மொழிப்பிரச்சினை சம்பந்தமாக அவர்களிடையே குறிப்பிடக் கூடிய தாக்கங்கள் எதுவும் அப்போது ஏற்படவில்லை. இதைப் புரிந்து கொள்வதற்கு, அவர்களிடையே அன்று நிலவிய பொருளாயத மற்றும் ஆன்மீக வாழ்க்கை முறைகள் குறித்து பரிசீலிப்பது அவசியம்.

கிழக்கு முஸ்லீம்கள் தொடர்ச்சியாக நிலவுடமை உற்பத்தி உறவுகளுக்குள் கட்டுப் பட்டிருந்ததால், அவர்களது பொருளாதார அடித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தளங்களாக நிலமும் ஏனைய இயற்கை மூலங்களுமே அமைந்திருந்தன. தமது பொருளா தார வாழ்வுக்கு அரச வேலை வாய்ப்புகளை நாடுகின்ற போக்கு அவர்களிடையே சமூக அளவில் ஏற்படவில்லை. அரச வேலை வாய்ப்பு களில் தங்கியிருப்பவர்களும் அதற்காக தமது தாய் மொழி மூலக் கல்வியை வேண்டி நிற்பவர் களும் தமது மொழிக்கு ஏற்படுகின்ற பாதிப்பை தீவிரமாக உணர்கின்றனர். இவர்கள் தமது மொழி க்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை சமூகமயப்படுத் துவதில் உணர்வுபூர்வமாக ஈடுபடுகின்றனர். இத்தகைய பிரிவினரைக் கொண்டிருக்கின்ற சமூகம், தனது மொழியை தன்னுடலின் பிரிக்க முடியாத அங்கமாக உணர்கின்றது. தனது மொழிக்கு ஏற்படுகின்ற அவமானத்தை, தனது சொந்த அவமானமாகக் கருதுகின்றது. ஆனால் அன்றைய கிழக்கு முஸ்லீம்களிடையே இத்த கைய பிரிவினர் உருவாகியிராததால் (அல்லது மிகக் குறைவான நபர்களே இருந்தனர்) தமது தாய் மொழிக்கு ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புகளை கிழக்கு முஸ்லீம்களினால் சமூக அளவில் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

அத்துடன் அன்றைய கிழக்கு முஸ்லீம்கள் மத்தியில் "கல்வி" ஆன்மீகத் தேவையுடன் இணைத்தே புரிந்து கொள்ளப்பட்டது. "சீனா சென்றாயினும் சீர் கல்வி கற்றுக்கொள்"என்ற நபிகள் நாயகத்தின் அறிவுரையில், ஆன்மீகக் கல்வியின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டிருக் கின்றது. அவர்களது ஆன்மீக நடவடிக்கைகள் பெரிதும் மதத்துடன் இறுக்கமாகப் பிணைக் கப்பட்டிருந்ததால், மதத்துடன் இணைந்ததாகவே அவர்களது கல்வியும் அமைந்தது. முஸ்லீம் களின் மத நூலான குர் ஆன் அரபு மொழியில் எழுதப்பட்டிருப்பதாலும், இறைவன் அரபு மொழியி லேயே அதை அருளினான் என்று அவர்கள் நம்பி க்கை கொண்டிருப்பதாலும் தமது வணக்கத்தின் போது அரபு மொழியை ஒவ்வொருவரும் பயன் படுத்த வேண்டியிருப்பதாலும் அவர்கள் அரபு மொழியை புனிதமான மொழியாகக் கருதுகின் றார்கள். அவர்கள் அரபு மொழியைக் கற்பது அவசியமாக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஆண், பெண் வேறுபாடுகளின்றி, மிக இள வயதிலிருந்தே அவர்கள் அரபு மொழியை வாசிக்கக் கற்கிறார் கள். தமிழ் எழுத்துக்களை வாசிக்கத் தெரியாத முஸ்லீம்கள் அரபு எழுத்துக்களை இலேசாக வாசிக்க முடிவதற்கான காரணம் இதுதான். ஏனைய சமூகத்தவரிடையே தமது தாய் மொழியை வாசிக்கக் கூடியவர்களின் விகிதத் துடன் ஒப்பிடும் போது முஸ்லீம்களிடையே அரபு மொழியை வாசிக்கக் கூடியவர்களின் விகிதம் உயர்வாகக் காணப்படுகின்றது.

மேலும் அன்றைய கிழக்கு முஸ்லீம்கள் ஐரோப்பியரின் கல்வி குறித்து எதிர்மறையான மனோபாவத்தைக் கொண்டிருந்தார்கள். இக் கல்வி, மதரீதியில் தமது பரம்பரை எதிரியாக விருந்த கிறிஸ்தவர்களின் கட்டுப்பாட்டிற்குள் இருந்ததோடு அது மத கலாச்சார மாற்றங்கள் ஏற்படுத்துவதையும் இலக்காகக் கொண்டிரு ந்ததால் கிழக்கு முஸ்லீம்கள் அக் கல்வியைக் கற்பதில் ஆர்வம் காட்டியிருக்கவில்லை. சுதந்தி ரத்திற்குப் பின்னர், இக் கல்வியில் சுதேசத் தன்மைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் கூட, கல்வி குறித்து கிழக்கு முஸ்லீம்களிடையே நிலவிய எதிர்மறையான மனோபாவம் உடனடி யாக மாற்றமடையவில்லை. இதனால் தமிழ் மொழியை வாசித்தறியக் கூடியவர்கள், அதாவது அதை தொட்டுணரக் கூடியவர்கள் அன்றைய கிழக்கு முஸ்லீம்கள் மத்தியில் மிக குறைவாகவே இருந்தார்கள்.

இவ்வாறு தமிழ் மொழியானது அன்றைய கிழக்கு முஸ்லீம்களின் பொருளாயத நலன் களுடன் இணைந்திராததாலும், அவர்களின் ஆன்மீக நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்காததாலும்,இம் மொழி அவர்களுக்கு வரிவடிவில் பரிச்சயமற்றிருந்ததாலும் அவர்கள் தமிழ் மொழி மீது தீவிர ஈடுபாடு காட்டவில்லை. எனவே அன்று தமிழ் மொழிக்கு பாதிப்புகள் ஏற்பட்ட போது, கிழக்கு முஸ்லீம்கள் அப்பாதிப்புகள் குறித்து உணர்வுபூர்வமாக தூண்டப்படவில்லை.

இவ்வாறு தமிழ் மக்களின் அரசியல் இயக்கம் தொடர்பாக ஒரு புறத்தில் தெற்கு முஸ்லீம் தலைமையும்,பௌத்த-சிங்கள இனவாத மும் வெளிப்படுத்திய உணர்வுபூர்வமான எதிர்ப்பு களும், மறுபுறத்தில் கிழக்கு முஸ்லீம்களிடையே நிலவிய விழிப்புணர்வில்லாத நிலைமையும் கிழக்கு முஸ்லீம் அரசியல்வாதிகள், தமது அரசியல் நிலைப்பாட்டைத் தீர்மானிப்பதில் கணிசமான தாக்கங்களைச் செலுத்தின. உண்மையில் கிழக்கு முஸ்லீம் அரசியல் வாதிகள் தமது சொந்த மக்கள் மீது அக்கறை கொண் டிருப்பார்களாயின், தெற்கு முஸ்லீம் தலை மையினதும், பௌத்த - சிங்கள இனவாதத்தின தும் எதிர்ப்புகளைக் கவனத்தில் கொள்ளாமல்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்கு முஸ்லீம்களை அரசியல் மயப்படுத்துவதற்காக உழைத்திருப்பார்கள். ஆனால் கிழக்கு முஸ்லீம் அரசியல்வாதிகளோ, தமது சொந்த நலன்களை உயர்த்திக் கொள்வதற்காகவே அரசியலுக்குள் நுழைந்திருந்தார்கள்.இதனால் இத்தகைய எதிர்ப்புகளை சமாளித்து அன்றைய கிழக்கு முஸ்லீம்களை அரசியல் மயப்படுத்தி, ஒன்று திரட்ட வேண்டிய கடினமான அரசியல் பணியை மேற்கொள்வது பற்றி இவர்கள்சிந்திக்கவில்லை. மாறாக சாதாரண பாராளுமன்ற அரசியல்வாதிகளாகவே இவர்கள் நடந்து கொண்டார்கள். இதன் பின்னர் தெற்கு முஸ்லீம் தலைமையைப் போன்று இந்த கிழக்கு முஸ்லீம் அரசியல்வாதிகளும், பௌத்த-சிங்கள அரசின் திட்டமிட்ட இனச் சிதைப்பு நடவடிக்கைகளினால் கிழக்கு முஸ்லீம்களுக்கு ஏற்பட்ட அனைத்துப் பாதிப்புகளையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பவர்களாக மாறினார்கள்.

இதற்கிடையே, ஆங்காங்கே சில கிழக்கு முஸ்லீம் அரசியல் வாதிகள் தமிழ் கட்சிகளின் சார்பில் தேர்தல்களில் போட்டியிட்டார்கள், அவர்களில் பெரும்பாலானோர் வெற்றி பெற்றும் இருந்தார்கள். இவ்வகையில் காலியப்பர், எம்.எம்.முஸ்தபா, எம்.சி.அஹமட், எம்.ஈ.எச். முகம்மதலி. . . . போன்றோரைக் குறிப்பிடலாம் எனினும் இந்த கிழக்கு முஸ்லீம் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் அரசியல் இயக்கத்தையும், போராட்டங் களையும் ஏற்றுக்கொண்டதன் விளைவாக தமிழ் கட்சிகளில் போட்டியிடவில்லை. மாறாக தமிழ் மக்கள் கணிசமாக வாழ்கின்ற முஸ்லீம் களுக்குரிய தேர்தல் தொகுதிகளில் தாங்கள் தமிழ் கட்சிகளின் சார்பில் போட்டியிடுவதன் மூலம், முஸ்லீம்கள் மத்தியில் தமக்கிருக்கின்ற தனிப்பட்ட செல்வாக்குடன், தமிழ் மக்களின் வாக்குகளையும் பெற்று இலகுவாக வெற்றிபெற முடியும் என்பதை இவர்கள் கண்டார்கள். இந்த ஒரே காரணத்திற்காகவே இவர்கள் தமிழ் கட்சிகளில் போட்டியிட்டார்கள்.

மறுபுறத்தில் தமிழ் தலைமையோ, செல்வாக்குமிக்க ஒரு முஸ்லீம் வேட்பாளரை, தமது கட்சியில் போட்டியிட வைப்பதன் மூலமாக தமது கட்சிக்கு ஒரு ஆசனத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதில் அக்கறை காட்டினார்களே தவிர தமது அரசியல் நிலைப் பாடுகளை, இந்த முஸ்லீம் அரசியல்வாதி எவ்வளவு தூரம் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதில் அக்கறை காட்டவில்லை. மேலும் இத்தகைய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி பிற சமூகங்களை ஒடுக்கின்ற பௌத்த-சிங்கள அரசுக்கு எதிராகப் போராடக் கூடியவகையில் முஸ்லீம்களுக்கு விழிப்புணர்வூட்ட தமிழ் தலைமை நேர்மையாக முற்படவில்லை. இவ்வகையில் தமிழ்க் கட்சிகளுக்கும், கிழக்கின் முஸ்லீம் அரசியல்வாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட இத்தகைய தேர்தல் இணைவு என்பது, முற்றிலும் பாராளுமன்ற சந்தர்ப்பவாதக் கூட்டாகவே அமைந்திருந்தது. இதனையும்விட வாய்ப்பான இன்னொரு நிலைமை தோன்றும் போது இந்த சந்தர்ப்பவாதக்கூட்டு, வேறொரு சந்தர்ப்பவாதக் கூட்டினால் பிரதியீடு செய்யப்படுகின்றது. எனவே வெற்றி பெற்ற குறுகிய காலத்திலேயே, இந்த முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாம் வெற்றி பெற்ற தமிழ்க் கட்சியிலிருந்து விலகி, பொதுவாக அப்போது ஆட்சியில் இருக்கக் கூடிய சிங்களக் கட்சியில் இணைந்து கொண்டார்கள். ( இத்தகைய சந்தர்ப்பங்களில், "முஸ்லீம்கள் தொப்பி புரட்டி கள்" என்ற கருத்தை வெளிப்படுத்தி, தமிழ் தலைமை தமது சந்தர்ப்பவாதத் தன்மைகளை மறைத்துக் கொண்டது. முஸ்லீம் அரசியல் வாதிகள் குறித்து தமிழ்தலைமை வெளிபடுத்திய இத்தகைய கருத்துக்கள், அத்தலைமையின் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருந்த முஸ்லீம் விரோத உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக அமைந்தன. தமிழ் தலைமை முஸ்லீம்களைத் தம்மில் ஒருபகுதியாக உண்மையிலேயே கருதியிருப்பார்களானால், இந்த ஒருசில முஸ்லீம் அரசியல்வாதிகளைக் காரணமாகக் காட்டி, முழு முஸ்லீம் சமூகத்தையும் இழிவாக மதிப்பிட்டிருக்க முடியாது. கட்சிமாறிய முஸ்லீம் அரசியல் வாதிகளைப் போன்ற தமிழ் அரசியல்வாதிகளில் சிலரும் கூட அவ்வப்போது கட்சி மாறியிருக்கிறார்கள் இத்தகைய சந்தர்ப்பங்களில் தமிழ்த் தலைவர்கள் அந்த அரசியல்வாதிகளை இனத் துரோகிளாக அடையாளம் காட்டினார்களே தவிர, அவர்களைக் காரணமாகாகக் கொண்டு முழுத் தமிழ் மக்களையும் இழிவுபடுத்த ஒருபோதும் முற்படவில்லை.)

இவ்விதமாக, 1960 களின் ஆரம்பத்தில், முழு கிழக்கு முஸ்லீம்களும் இரு சிங்களக் கட்சிகளின்பரம்பரை ஆதரவாளர்களாக மாற்றப்பட்டுவிட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிழக்கு முஸ்லீம்களிடையே முதலாளித்துவ உறவுகளின் உருவாக்கமும் புதிய சமூகப் பிரிவினரின் தோற்றமும்

கிழக்கு முஸ்லீம்களிடையே 1950 கள் வரையிலும், நிலவுடமை உறவுகளை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையே நிலவி வந்தது. இதனால் நாட்டின் ஏனைய பகுதிகளிலும், ஏனைய சமூகங்களிலும் ஏற்பட்டுக் கொண்டிருந்த புதிய வாழ்க்கை முறை சார்ந்த விழிப்புணர்வுகள் கிழக்கு முஸ்லீம்களிடையே சமூக அளவில் ஏற்பட முடியவில்லை. ஆயினும் 1950களின் பிற்பகுதியில், கிழக்கில் இடம்பெற்ற மூன்று முக்கிய நிகழ்வுகள் அவர்களிடையே முதலாளித்துவ வகையிலான உறவுகள் உருவாக்குவதற்கும், புதிய சமூகப்பிரிவினர் தோன்றுவதற்கும் காரணமாக அமைந்தன.

அவை:-

(1) நிலச் சீர்திருத்தம்

(ii) விவசாயத்தில் இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை,

(iii) தாய்மொழிக் கல்வியின் துரித அமுலாகம் என்பவையாகும்.

1950களில் பரவலாக இடம்பெற்ற நிலச்சீர்திருத்தமானது (குறிப்பாக நிலப்பகிர்வும் புதிய குடியேற்றங்களும்), கிழக்கு முஸ்லீம்களின் வர்க்க ஒழுங்கமைப்பில் குறிப்பிடக் கூடிய மாற்றங்களை ஏற்படுத்தின. இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக, கிழக்கு முஸ்லீம்களின் மத்தியில் சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளும், விவசாயக் கூலியாட்களும் அதிக எண்ணிக்கையில் உருவானார்கள். முன்னர் குத்தகை விவசாயிகளாகவோ அல்லது நிலவுடமையாளர்களின் கீழ் கூலியாட்களாகவோ கட்டுபட்டிருந்தவர்கள் இப்போது சொந்தமாகக் காணி பெற்ற சுயேட்சையான விவசாயிகளாகவும், சுயேட்சையான கூலியாட்களாகவும் மாறினார்கள். இதன் விளைவாக கிழக்கு முஸ்லீம்கள் மத்தியில் நிலவிய இறுகிய நிலவுடமை உறவுகளில் உடைவுகள் ஏற்பட்டு சுதந்திரமான முதலாளித்துவ உறவுகள் படிப்படியே உருவாகத் தொடங்கின.

கிட்டத்தட்ட இதே காலப்பகுதியில், கிழக்கு முஸ்லீம்களின் விவசாயத் தொழிலில் இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. உழவு இயந்திரம், நெல் அரைக்கும் இயந்திரம், தெளிகருவிகள்.... என பல்வேறு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக, கிழக்கு முஸ்லீம்களின் சமூகத்தன்மையில் மேலும் தீவிர மாற்றங்கள் இடம்பெற்றன. இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் விவசாயத்தில் மனிதவலு பயன்படுத்தப்படுவது வெகுவாக குறைந்துவிட்டது. இதனால் நிலவுடைமையாளர்களிடம் இன்னமும் கட்டுப்பட்டிருந்த ஏராளமான நபர்கள் வேலையற்றவர்களாகவும், அவசியமற்றவர்களாகவும் மாற்றப்பட்டார்கள். எனவே அவர்களை விடுவிப்பது தவிர்க்க முடியதாகியது. இவ்வாறு இயந்திரங்கள் ஏராளமானோரை விடுவித்துவிட்டன. இதுவரை காலமும் கிழக்கு முஸ்லீம்களிடையே விவசாயத்துடன் தொடர்பான கூலி, குத்தகை. . . என்பனவும், ஏனைய கொடுப்பனவுகளும் தானியங்களின் வடிவத்திலேயே வழங்கப்பட்டு வந்தன. இப்போது இயந்திரங்கள் அறிமுகப்டுத்தப்பட்ட பின்னர், கொடுப்பனவுகள் அனைத்தும் பண வடிவத்திற்கு மாற்றப்பட்டன. இதுவரை காலமும் தமது பிரதேசத்திக்குள்ளேயே எல்லைப்பட்டிருந்த பலர், இப்போது விவசாய கூலியாட்களாக, எங்கோ தொலை தூரத்தில் இருந்த, முன்பின் அறிந்திராத பிரதேசங்களை நோக்கி, பருவகால உழைப்புக்காச் செல்லத் தொடங்கினார்கள்.

இவற்றுடன் கூடவே, இந்த இயந்திரங்களின் பாவனையால் கிழக்கு முஸ்லீம்களிடையே இன்னுமொரு முக்கியமான விளைவும் ஏற்பட்டது. அதாவது முன்பு போன்று, விவசாயத் தொழில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த முழு அங்கத்தினர்களும் ஈடுபடவேண்டிய அவசியம் இப்போது இல்லை. இயந்திரங்களையும், தேவையான அளவுக்கு கூலியாட்களையும் பெறக்கூடியதாக இருந்ததால், விவசாயத் தொழிலில் சிறுவர் சிறுமியரின் உழைப்பைத் தவிர்ப்பது சாத்தியமாகியது. இதன் நேரடி விளைவாக, கிழக்கு முஸ்லீம் விவசாயிகளிடையே, குறிப்பாக, நடுத்தர விவசாயிகளிடையே கல்வி கற்கக் கூடிய சந்ததி ஒன்று உருவாகத் தொடங்கியது.

இவ்வாறு கிழக்கு முஸ்லீம்களிடையே தோன்றிய புதிய, இளஞ்சந்ததியினரின் கல்வி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆர்வத்தைத் தூண்டிய சிறப்பான காரணியாக தாய்மொழி கல்வியின் துரித அமுலாக்கம் அமைந்தது. கிழக்கில் கணிசமான எண்ணிக்கையில் தமிழ் மொழிமூலம் பாடசாலைகள் புதிதாக அமைக்கப்பட்டதாலும், முஸ்லீம்களுக்கென தனியான பாடசாலைகள் உருவாக்கப்பட்டதாலும் கிழக்கின் முஸ்லீம் இளம் சந்ததியினர் மிகுந்த ஆர்வத்துடன் கல்வி கற்க ஆரம்பித்தார்கள். குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லீம்கள் மத்தியில் கல்வி கற்கும் ஆர்வம் தீவிரமாக இருந்தது.

நவீன உலகில், கல்வி என்பது ஒருவரின் அறிவைக் குறிக்கின்ற காரணியாக மட்டும் தொழிற்படவில்லை கூடவே முக்கியமாக அவரின் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தைத் தீர்மானிக்கின்ற காரணிகளில் ஒன்றாகவும் மாற்றமடைந்திருக்கின்றது. கல்வியானது நவீன சமூகத்தில் புதிய அதிகார படிநிலை அமைப்பு உருவாவதற்கும், செல்வாக்குமிக்க நபர்கள் மற்றும் குடும்பங்கள் தோன்றுவதற்கும் காரணமாக அமைகின்றது. இந்நிலையில் பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்களாகவும் எப்படியும் தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள முயற்சிப்பவர்களாகவும் இருக்கின்ற நடுத்தர வர்க்கத்தினர் கல்வியை தமது மூலதனமாகக் கொள்கின்றனர். தமது தேவைகளை ஒறுத்துக் கொண்டு அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்பை கல்விக்காக வழங்குகின்றனர். 1970களில் இருந்து கிழக்கு முஸ்லீம்கள் மத்தியிலும் இத்தகைய போக்கு ஏற்பட்டது.

1970பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணியின் ஆட்சிகாலத்தில் வங்கிகள், கச்சேரி போன்ற நிர்வாகத் துறையிலும், ஆசிரியத் தொழிலும், போக்குவரத்து, கூட்டுறவு அமைப்புகள் போன்றவற்றிலும் தொகுதி அடிப்படையில் அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டன. இதன் விளைவாக முன் எப்பொழுதையும் விட, அதிக எண்ணிக்கையில் கிழக்கின் படித்த முஸ்லீம் இளைஞர்கள் அரசாங்க உத்தியோகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். அப்போதைய கல்வி அமைச்சரான பதியுத்தீன் மஃமூத் இஸ்லாம் பாடம் கற்பிக்கக் கூடிய மௌலவி ஆசிரிய நியமனங்களோடு, வேறு பாடங்களைக் கற்பிப்பதற்கும் ஏராளமான முஸ்லீம் ஆசிரியர்களை நியமித்ததும், இவர்களில் அதிகமானோர் கிழக்கு முஸ்லீம்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவற்றைவிட அப்போதைய அரசாங்கத்தின் பாராளுமன்ற பிரதிநிதிகளாக விருந்த கிழக்கின் மூன்று முஸ்லீம் அரசியல்வாதிகளால் (இவர்களில் இருவர் பிரதி அமைச்சர்களாக இருந்தனர்.) வழங்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான வேவைாய்ப்புகளையும் இங்கு கவனத்தில் கொள்ளலாம்.

மேலும் 1950 களின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வந்த "முஸ்லீம் பாடசாலைகள்" என்ற தனிப்பிரிவானது, ஒரு முஸ்லீம் நபர் கல்வி அமைச்சராக இருந்த காரணத்தால் கூடிய கவனத்தைப் பெற்றது. முஸ்லீம் பாடசாலைகள் தரமுயர்த்தப்படுவதும், முஸ்லீம் பெண்களுக்கு என தனியான பாடசாலைகள் உருவாக்கப்படுவதும், புதிதாக முஸ்லீம் பாடசாலைகள், முஸ்லீம்களுக்கான பயிற்ச்சி நிலையங்கள், கல்வி நிறுவனங்கள் என்பன அமைக்கப்படுவதும் பரவலாக இடம் பெற்றன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இத்தகைய நிகழ்வுகள் பரந்த அளவில் இடம்பெற்றன.

மேலும் 1970களின் நடுப்பகுதியில் மாவட்ட அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதி முறை அறிமுகப்படுத்தப்பட்டதால் கிழக்கு மாகாண முஸ்லீம் மாணவர்களும் (குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லீம் மாணவர்கள்) அதிக அளவில் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டன.

1970களில் இடம்பெற்ற மேற்கூறிய நிகழ்வுகளினால் கிழக்கு முஸ்லீம்களின் கல்வி ஆர்வம் மேலும் தீவிரமடைந்தது. பணக்கார, நடுத்தர விவசாயிகளின் பிள்ளைகள், வர்த்தகர்களின் பிள்ளைகள் என்பவர்களோடு வறிய விவசாயிகள் மற்றும் மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் கல்வி கற்பதில் ஆர்வம் காட்டினார்கள். இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக 1970களின் இறுதிப்பகுதியில், பல்வகை ஆர்வங்கள் கொண்ட, படித்த, அரசாங்க உத்தியோகங்களில் தம்மை இணைத்துக் கொண்ட, இணைத்துக் கொள்ள முயன்ற ஒரு புதிய விரிவினர் கிழக்கு முஸ்லீம்களிடையே உருவாகியிருந்தனர். இப்பிரிவினர்தான் குறுகிய காலத்திற்குள் கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் தலைமையை வென்று கொள்ளவிருப்பவர்கள் இவர்கள் தான் (வட) கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் தனித்துவத்தைக் கோரவிருப்பவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய சமூகப் பிரிவினரால் ஏற்பட்ட பாதிப்புகள்

**(1) சமூக கலாச்சார தளங்ளில் ஏற்பட்ட பாதிப்புகள் :-**

கிழக்கு முஸ்லீம்களிடையே உருவாகி வந்த படித்த பிரிவினருக்கு அங்கு ஏற்கனவே நிலவி வந்த விவசாயிக்குரிய மந்தமான வாழ்க்கைமுறை பொருத்தமானதாக அமைய வில்லை. நிலவுடமையாளர்களின் ஆதிக்கத்தின் கீழேயே இன்னமும் இருந்த சமூக, அரசியல் நிறுவனங்களில் இவர்கள் திருப்தி பெறவில்லை. எனவே இவர்கள் தமக்கென புதிய வாழ்க்கை முறைகளை உருவாக்க முயன்றார்கள். இளைஞர் சங்கங்கள், சமூக சேவை நிறுவனங்கள், கல்வி மற்றும் இலக்கிய வட்டங்கள்... என பல்வேறு புதிய சமூக, கலாச்சார நிறுவனங்களை இவர்கள் உருவாக்கினார்கள். பெரிதும் நடுத்தர வர்க் கம் என்ற எல்லைக்குள் இதுவரைக்கும் நலிவு ற்றிருந்த இப்படித்த பிரிவினர், தமக்குச்சாதக மான முறையில் சமூகத்தை ஒழுங்குபடுத்த முயன்றனர் ஏற்கனவே இருக்கின்ற சமூக நிறுவனங் களைக் கட்டுபடுத்துவதன் மூலமும் அரசியலில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலமும் இவற்றைச் சாதிக்க முடியும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். இதனால் முஸ்லீம் களின் சமூக நிறுவனங்களில் மிகவும் பலமிக்க தான பள்ளிவாசல் நிர்வாகத்திலும் தமது ஆதிக்க த்தை ஏற்படுத்த முயன்றனர்.

எனினும் இந்த படித்த பிரிவினரால்தாம் எதிர்பார்த்தபடி செயற்பட முடியவில்லை. ஒவ்வொருபிரதேசத்திலும் ஏற்கனவே சக்தி பெற்றவர்களாகவும், சமூக, அரசியல் செயற்பாடு களைக் கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும் இருந்த நிலவுடமையாளர்களின் கடுமையான எதிர்ப்பை அவர்கள் சந்திக்க வேண்டியேற்ப் பட்டது. "உயர்" பரம்பரைக்கு என உரித்தாக்கப் பட்டிருந்த பள்ளிவாசல் நிர்வாகத்திலும், அரசியல் அதிகாரத்திலும் இருந்து தமது ஆதிக்கத்தை இழப்பதற்கு இந்த நிலவுடைமையாளர்கள் தயாராக இருக்கவில்லை. வலிமைமிக்க இந்த நிலவுடைமையாளர்களை எதிர்த்து வெல்லக் கூடிய நிலையில் அன்றைய படித்த பிரிவினரின் சமூக, பொருளாதார நிலைமைகள் இருக்க வில்லை. இவர்கள் தாம் வாழ்ந்த பிரதேசங்களில் வெகுசன ரீதியான ஆதரவையும், அபிமானத் தையும் இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை. மேலும் இவர்கள் தமது உத்தியோக வாய்ப்பு களுக்கும், அவை சார்ந்த நலன்களுக்கும், நிலவு டமையாளர்களின் நேரடி வாரிசுகளாவோ அல்லது அவர்களின் செல்வாக்குக்கு உட்பட்டவர் களாகவோ இருந்த பாராளுமன்ற பிரதிநிதி களிலேயே முற்றிலும் தங்கியிருந்தார்கள். இவ்வாறான நிலையில், படித்த முஸ்லீம் பிரிவினரால் நிலவுடமையாளர்களை எதிர்த்து போராட முடியவில்லை. இவர்களின் சமூக, கலாச்சார நிறுவனங்களில் பெரும்பாலானவை விரைவிலேயே கிழக்கு முஸ்லீம் அரசியல் வாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்க வேண்டிய நிலைக்கு ஆளாகின. நிலவுடமையாளர்கள், படித்த இளைஞர்களில் கணிசமானோரை தங்களின் பெண்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். படித்த இளைஞர்கள் தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்கான வழிகள் அடைக்கப்பட்ட நிலையில், நிலவுடமைக் குடும்பங்களுடன் திருமண உறவை ஏற்படுத்து வதன் மூலம் தம்மை உயர்த்திக் கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பில் இத்தகைய திருமண உறவுகளை ஆர்வத்துடன் ஏற்றுக் கொண் டார்கள்.

நிலவுடமையாளர்களின் ஆதிக்கத்தின் காரணமாக, சமூக, அரசியல் நிறுவனங்களில் படித்த முஸ்லீம் பிரிவினர் ஆளுமையைச் செலுத்த முடியாமல் தடுக்கப்பட்ட போதிலும், அவர்களில் ஒருசாரார் இலக்கியத் துறையில் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தினார்கள். இவர்கள் தமது படைப்புகளில் நிலவுடமையாளர்களுக்கும் (அதாவது போடியார், ஹாஜியார் என்ற வடிவில்), முஸ்லீம் அரசியல்வாதிகளுக்கும் எதிரான கருத்துகளை ஆவேஷமாக வெளிப்படுத் தினார்கள். மருதுார் கொத்தன், மருதுார்க்கனி, எம் . எச். எம் அஷ்ரப், வை . அஹமட், எஸ். எல். எம். ஹெனிபா, எம்.எம்.மஃறுாப் கரீம். . . போன்றோரை இந்தவகையில் குறிப்பிடலாம். (பின்னாட்களில் இவர்களில் கணிசமானோர் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசில் இணைந்து கொண்டார்கள் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.)

**(2) அரசியல் தளத்தில் ஏற்பட்ட பாதிப்புகள்:-**

அன்றைய படித்த முஸ்லீம் பிரிவினரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் செயற்பாடுகள் மிகவும் பலவீனப்பட்டும், எல்லைப்படுத்தப்பட்டும் இருந்தன. முஸ்லீம் அரசியல்வாதிகளும், அவர்களுக்கு பக்கபலமாக விளங்கிய நிலவுடமையாளர்களும் இரு சிங்களக் கட்சிகளில் செல்வாக்குப் பெற்றவர்களாக விளங்கினார்கள். இவர்களின் செல்வாக்கை மீறி, படித்த முஸ்லீம் பிரிவினரால் சிங்கள கட்சிகள் சார்ந்த அரசியலுக்குள் ஊடுருவ முடியவில்லை. இவர்களின் அரசியல் பங்களிப்பு என்பது, ஏற்கனவே செல்வாக்குடன் இருந்த முஸ்லீம் அரசியல்வாதிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாகவே அமைந்திருந்தது.

எனினும் சிங்கள கட்சிகளில் இணைந்திருந்த முஸ்லீம் அரசியல்வாதிகளினால் தமது அரசியல் வாழ்வு கட்டுப்படுத்தபடுவதை மாற்றியமைத்து, தமது அரசியல் சுயேட்சையை நிலைநாட்ட விரும்பிய சிலர், 1970ளில் நடுப்பகுதியில் "முஸ்லீம் ஐக்கிய முன்னணி" என்ற தனியான அரசியல் அமைப்பை உருவாக்கினார்கள். எம்.எச் எம்.அஷ்ரப், ஏ.எம். சம்சுதீன், ஊதுமான் லெப்பை போன்றோர் இப்புதிய கட்சியை அமைப்பதில் முன்னணிப் பாத்திரம் வகித்தார்கள். எனினும் கிழக்கு முஸ்லீம்கள் இரு பிரதான சிங்களக் கட்சிகளின் "பரம்பரை" ஆதரவாளர்களாக விளங்கியதோடு, தமக்கென ஒரு சுயமான அரசியல் இயக்கம் தேவை என்ற உணர்வை இன்னமும் பெற்றுக் கொள்ளாதவர்களாகவும் இருந்ததால், இந்த புதிய அரசியல் கட்சியினால் அவர்கள் கவரப்படவில்லை. இந்நிலையில் பராளுமன்ற அரசியலுக்குள் காலூன்றிவிடுவதற்கு முயற்சித்த புதிய முஸ்லீம் அமைப்பின் முக்கியஸ்தர்களுடன், தேர்தல் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வந்தது. அன்றைய கட்டத்தில் தமிழ்த் தலைமை முன்மொழிந்திருந்த தமிழீழக் கோரிக்கைக்கு தமிழ் மக்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டியிருந்ததால், 1977ம் ஆண்டு பராளுமன்றத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. தமிழீழக் கோரிகைக்கு தமிழ் மக்களின் ஆதரவோடு, வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற முஸ்லீம்களின் கணிசமான ஆதரவையும் பெற்றுக் கொண்டால் அக்கோரிக்கை வலிமை பெறும்என்று தமிழ் தலமை கருதியது. கிழக்கின் மரபுவழி முஸ்லீம் அரசியல்வாதிகள், தமிழீழக் கோரிக்கையை முற்றாக எதிர்த்து நின்ற சிங்கள கட்சிகளில் இணைந்திருந்ததால், அவர்களுடன் தேர்தல் உடன்பாட்டை ஏற்படுத்துவது கூட்டணியினருக்கு சாத்தியமற்றதாக இருந்தது. இந்நிலையில், புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்ற "முஸ்லீம் ஐக்கிய முன்னணியோடு" தேர்தல் கூட்டை ஏற்படுத்துவதன் மூலமாக, ஒரளவிற்கு வட - கிழக்கு முஸ்லீம்களின் ஆதரவைப் பெறலாம் என கூட்டணியினர் எதிர்பார்த்தனர். ஆனால் இந்த எதிர்பார்ப்புகளுக்கு மாறாக 77ம் ஆண்டுத் தேர்தலில் வட - கிழக்கு முஸ்லீம்கள் புதிய முஸ்லீம் அரசியல் அமைப்பை முற்றாகவே நிராகரித்து விட்டார்கள். இந்தத் தோல்விக்குப் பின்னர். "முஸ்லீம் ஐக்கிய முன்னணியின்" முக்கியஸ் தர்கள் அதாவது எம்.எச்.எம்.அஷ்ரப், சம்சுதீன், உதுமான் லெப்பை போன்றோர் தமிழர் விடுத லைக் கூட்டணியுடனான உறவை முறித்துக் கொண்டனர். அத்துடன் அக்கட்சியும் செயலிழந்து விட்டது. இவ்வாறாக கிழக்கின் படித்த முஸ்லீம்களில் ஒரு சாரார், தனியான அரசியல் கட்சிக்கூடாக பாராளுமன்ற அரசியலில் நுழைவதற்குச் செய்த முயற்சிகளும்கூட இறுதியில் பலத்த தோல்வியிலேலே முடிந்தன.

### (3) தமிழ் முஸ்லீம் உறவில் ஏற்பட்ட பாதிப்புகள்:-

கிழக்கு முஸ்லீம்களிடையே புதிதாக உருவான படித்த பிரிவினரால் சமூக, கலாச்சார மற்றும் அரசியல் தளங்களில் ஏற்பட்ட மேற்படி பாதிப்புகளோடு, இன்னும் ஒரு முக்கியமான விளைவும் அங்கு ஏற்பட்டது. இதுவரை காலமும், கிழக்கில் தமிழ்-முஸ்லீம் மக்களிடையே நெருக்கமான உறவுகள் நிலவி வந்தன. கிழக்கில் பின்பற்றப்பட்டு வந்த விவசாய முறையானது, வடிகால் அமைப்பு, நீர்விநியோகம், உழவு, பயிர்ப் பாதுகாப்பு மற்றும் அறுவடைபோன்ற பலவிடயங்களில் விவசாயிகளிடையே பரஸ்பர ஒத்துழைப்பையும் பங்கு பற்றுதலையும் அவசியமாக்கியிருந்தன. மேலும் கிழக்கில் தமிழர்களினதும், முஸ்லீம்களினதும் விவசாய நிலங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்தும், அவர்களது குடியிருப்புகளிலிருந்து தொலைவிலும் இருக்கின்றன. இவ்வாறான புற நிலைமைகளினால், கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லீம்களிடையே காலம் காலமாக மிக நெருக்கமான உறவுகள் நிலவி வந்திருக்கின்றன. இதேபோன்று, கால்நடைப் பண்ணைகளும், மேய்ச்சல் நிலங்களும் கூட அவர்களது குடியிருப்புகளிலிருந்து மிகத் தொலைவிலேயே அமைந்திருப்பதால், கால்நடை வளர்ப்பிலும் தமிழ், முஸ்லீம்களிடையே திருமண உறவு நீங்கலாக ஏனைய பல்வேறு விடயங்களில் காலம் காலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நெருக்கமான உறவுகளே நிலவி வந்திருக்கின்றன. கிழக்கு முஸ்லீம்களிடையே படித்த பிரிவினர் உருவாகத் தொடங்கியபோது, அங்கு காணப்பட்ட இத்தகைய சுமூகமான நிலைமை குழம்பத் தொடங்கியது.

1970களில் கிழக்கு முஸ்லீம்களில் பல சமூகப் பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் கல்வி கற்கவும், அரசாங்க உத்தியோகங்களைப் பெறவும் முயற்சி செய்தார்கள். என்றாலும் இவர்களின் இத்தகைய ஆர்வத்தையும், தேவைகளையும் முழுமையாகத் திருப்தி செய்யக்கூடிய விதத்தில் அன்றைய நிலைமைகள் இருக்கவில்லை. மேலும் படித்த தமிழ், முஸ்லீம் பிரிவினருக்கிடையே கல்வியை அடிப்படையாகக் கொண்ட தேவைகளில் போட்டிகள் உருவாகத் தொடங்கின. கல்விக்கூட வசதிகள், உயர்கல்வி வாய்ப்புகள், உத்தியோகவாய்ப்புகள், நிர்வாகச் செயற்பாடுகள். . . . என படித்த பிரிவினருக்கு அவசியமான சகல கூறுகளிலும் படித்த கிழக்குமுஸ்லீம்கள், படித்த தமிழ்ப் பிரிவினருடன் போட்டியிடவேண்டியிருந்தது. இதன்காரணமாக, படித்த தமிழ்-முஸ்லீம் பிரிவினரிடையே முரண்பாடுகள் தோன்றின.இந்த முரண்பாடுகள் குறித்து ஆழமாகப் பரிசீலிப்போம்.

(1) கல்விகற்க விரும்பிய அன்றைய கிழக்கு முஸ்லீம் மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய விதத்தில், கிழக்கிலுள்ள முஸ்லீம் பாடசாலைகள் அமைந்திருக்கவில்லை. "முஸ்லீம் பாடசாலைகள்" என்ற பிரிவிற்குள் கொண்டுவரப்பட்டிருந்த இப்பாடசாலைகளை முன்னேற்றுவதில் அரசு நேர்மையான முறையில் அக்கறை செலுத்தவில்லை. தேவையான ஆசிரியர்களை நியமிப்பதிலும், கட்டிடங்கள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதிலும் முஸ்லீம் பாடசாலைகள் விடயத்தில் அரசு பாராபட்சம் காட்டியது. (பதியுத்தின் மஃமூத், கிழக்கு முஸ்லீம்களின் கல்வி வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்புகளைச் செய்திருந்த போதிலும், அவை ஆரம்ப கட்டத்திற்குரிதாகவே அமைந்திருந்தன. தொடர்ச்சியாக அதிகரித்து வந்த கிழக்கு முஸ்லீம்களின் கல்வித் தேவைகளை அவை பூர்த்தி செய்யவில்லை). U.N.P.யிலும் S.L.F.P.யிலும் இருந்த கிழக்கு முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள், இப்பாடசாலைகளின் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, அவற்றில் தமக்கு ஆதரவான அதிபர்களையும், ஆசிரியர்களையும் நியமிப்பதிலேயே அதிக ஆர்வம் காட்டினார்கள். பாராளுமன்ற அரசியலில் ஏற்படுகின்ற எந்தவொரு மாற்றமும் முதலில் பிரதிபலிக்கின்ற இடமாக, கிழக்கின் முஸ்லீம் பாடசாலைகள் இருந்தன. போதிய தகுதிகளின்றி, அரசியல்வாதிகளின் ஆதரவினால் மட்டும் அதிபர்களாக உயர்வு பெற்றவர்களே பெரும்பாலான முஸ்லீம் பாடசாலைகளை நிர்வகித்தார்கள். இவர்களுக்கு நிர்வாக அறிவோ, தமது பாடசாலைகளின் கல்வி நிலைமை மற்றும் அத்தியாவசியத் தேவைகள் குறித்த புரிதலோ போதுமான அளவில் இருக்கவில்லை. இதனால் இவர்கள் தமது பாடசாலைகளின் முன்னேற்றத்திற்காக அரச மற்றும் நிர்வாக அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள். மேலும் இவர்களால் தமக்குக் கீழே பணிபுரிகின்ற ஆசிரியர்களை ஒழுங்கமைத்து, கடமையாற்றச் செய்ய முடியவில்லை. மறுபுறத்தில் ஆசிரியர்களின் நிலைமை குழப்பமிக்கதாக இருந்தது. இவர்களில் ஒரு சாரார் ஆளும் கட்சியின் ஆதரவாளர்களாகவும், மறுசாரார் எதிர்க்கட்சி ஆதரவாளர்களாகவும் இருந்தனர். ஆளும் கட்சி ஆதரவாளர்களாக இருந்த ஆசிரியர்கள் தன்னிச்சையோடும் எவ்வித கட்டுப்பாடுகளுக்கும் உட்படாதவர்களாகவும், மேலாதிக்க உணர்வுடனும் நடந்துகொண்டார்கள். அதேவேளை எதிர்க்கட்சி ஆதரவாளர்களாக இருந்த ஆசிரியர்கள், அதிபருடனும், ஆளும் கட்சி சார்ந்த ஆசிரியர்களுடனும் முரண்பட்டவர்களாகவும், அதனால் நிர்வாகத்திற்கு கட்டுப்பட மறுப்பவர்களாகவும், இருந்தார்கள். இவற்றோடு, புதிய கிழக்கு முஸ்லீம் ஆசிரியர்களிடம், தமது கற்பித்தல் தொழில் நேர்மையான அர்ப்பணிப்பு காணப்படவில்லை. தமது சமூகத்தை கல்வியில் உயர்த்த வேண்டும் என்ற சமூக அக்கறை பொதுவாக அவர்களிடம் குறைவாகவே காணப்பட்டது. கிழக்கில் முஸ்லீம் பாடசாலைகளில் கற்பித்த தமிழ் ஆசிரியர்களுடன் ஒப்பீடும்போது, கிழக்கு முஸ்லீம் ஆசிரியர்களிடம் நிலவிய அர்ப்பணிப்பின்மையும், சமூக அக்கறையின்மையும் தெளிவாக புலப்பட்டது. இவற்றின் விளைவாக கிழக்கு முஸ்லீம் பாடசாலைகளில் நிர்வாக ஒழுங்கின்மை நிலவியது. கற்பித்தலில் பின்னடைவுகள் ஏற்பட்டன. ஆசிரிய இடமாற்றங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருந்தன. இவற்றோடு கிழக்கின் கல்வி சார்ந்த நிர்வாக உயர்மட்டங்களில் பெரும்பான்மையாக இருந்த தமிழ் அதிகாரிகளும், நிர்வாக உத்தியோகத்தர்களும் முஸ்லீம் பாடசாலைகளைத் திட்டமிட்ட ரீதியில் ஒதுக்கியும், பாரபட்சமான முறையிலும் செயற்பட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவை அனைத்தினதும் ஒட்டுமொத்த விளைவாக, முஸ்லீம் பாடசாலைகளின் நிர்வாகம் சீர்குலைந்தது. அவற்றின் கற்பித்தலின் பின்னடைவும், தேக்கமும் ஏற்பட்டன. தேவைகளும் பற்றாக்குறைகளும் தொடர்ந்தன. அதனால் முஸ்லீம் மாணவர்களிடையிலும் பெற்றோரிடையிலும் அதிருப்திகளும், எதிர்ப்புகளும் உருவாக ஆரம்பித்தன. பாடசாலைப் பகிஷ்கரிப்புகள் பரவலாக இடம்பெற்றன. இந்நிலையில் இப்பாடசாலைகளின் அதிபர்கள், தமது பலவீனங்களை மறைக்கவும், அதிருப்தியுற்றிருக்கின்ற மாணவர்கள், பெற்றோரிடையே தம்மை நியாயப்படுத்திக் கொள்வதற்காகவும் "தமிழ் அதிகாரிகள் துவேஷ உணர்வுடன் முஸ்லீம் பாடசாலைகளைப் புறக்கணிக்கின்றார்கள்" என்று காரணம் கூறினார்கள். (இந்தக் கூற்றில் உண்மையுண்டு எனினும் முஸ்லீம் பாடசாலை களில் ஏற்பட்ட சீரழிவுக்கு இதுமட்டுமே காரண மல்ல. மறுபுறத்தில் இந்த முஸ்லீம் அதிபர்கள், தமது பதவிகளைத் தக்க வைத்து கொள்வதற்காகவும், தமது பாடசாலைகளின் வருமானம் மற்றும் ஒதுக்கீடுகளில் கணிசமானவற்றை தாம் அபகரித்துக் கொள்வதற்காகவும் இதே தமிழ் அதிகாரிகளுக்குக் கையூட்டல்கள், சந்தோஷ உபசாரங்கள் என்பனவற்றை வழங்கி, நெருங்கிய உறவுகளைப் பேணி வந்தார்கள்).

(2) கிழக்கு முஸ்லீம் பாடசாலைகளில் நிலவிய இத்தகைய சீரழிவுகளின் காரணமாக, பல முஸ்லீம் மாணவர்கள், குறிப்பாக உயர் வகுப்பு மாணவர்கள், அவற்றிலிருந்து வெளியேறி கடினமான முயற்சியின் பின்னர் தமிழ்ப் பாடசாலைகளில் அனுமதி பெற்றுக் கல்வியைத் தொடர்ந்தார்கள். இவ்வாறு தமிழ்ப்பாடசாலைகளில் கல்வி கற்கச் சென்ற மாணவர்களும், பல்கலைக் கழகங்கள், பயிற்சி நிலையங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள். . . போன்றவற்றில் கல்வி கற்கச் சென்ற முஸ்லீம் மாணவர்களும், அவற்றில் கல்வி கற்ற தமிழ் மாணவர்களுடன் முரண்படக் கூடிய நிலைமைகள் ஏற்பட்டன. சைவவேளாள சித்தாந்தத்தினால் வழிகாட்டப்பட்ட தமிழ் மாணவர்களிடையே முஸ்லீம்கள் பற்றிய நிலவிய தப்பெண்ணங்களால் இந்த முஸ்லீம் மாணவர்கள் ஆத்திரம் அடைந்தார்கள். "முஸ்லீம்கள் தொப்பி புரட்டுபவர்கள்" என்று தமிழ் மாணவர்கள் இழிவாகப் பேசுவதும், அவர்கள் தமது ஆண் குறிகளை வெட்டிக் கொள்பவர்கள் ("சுன்னத்" செய்தல்) என்று கொச்சைப்படுத்துவதும் முஸ்லீம் மாணவர்களின் உணர்வுகளில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தின. மறுபுறத்தில் தமிழ் மக்களின் மத்தியில் நிலவிய சாதிப் பிரிவினைகளும், அதனால் ஏற்படுகின்ற விளைவுகளும் முஸ்லீம் மாணவர்களின் விவாதப் பொருள்களாக அமைந்தன. உயர்சாதி விரிவுரையாளர்கள் தாழ்ந்த சாதி மாணவர்களினதும், வடக்குத் தமிழ் விரிவுரையாளர்கள், கிழக்கு தமிழ் மாணவர்களினதும் முன்னேற்றத்தை விரும்புவதில்லை என்று இவர்கள் சாடினார்கள். இவ்வகையில், முஸ்லீம்களாகிய தமது முன்னேற்றத்தையும் தமிழ் விரிவுரையாளர்கள் விரும்பாதால், தமக்கு குறைந்த புள்ளிகள் இட்டு, தாம் உயர் நிலை அடையக்கூடிய வாய்ப்புகளைத் தடுப்பதாகவும் கூறினார்கள்.

(இந்த இடத்தில் சில விடயங்களைக் குறிப்பிட வேண்டியுள்ளது. பெரும்பாலான தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புகளைத் தடுத்த தரப்படுத்தல் முறை, 1970 களில் தமிழ் மக்களிடையே கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்தத் தரப்படுத்தல் முறை, பௌத்த - சிங்கள இனவாதத்தின் திட்டமிட்ட செயற்பாடாக இருந்தபோதிலும், அதை அமுல் படுத்திய அமைச்சராக முஸ்லீம் நபரான பதியுத்தீன் ம:ஃமூத் இருந்தார். தான் ஒரு தனியான சமூகத்தைச் சேர்ந்தவர் என்றவகையில் அவர் இன்னுமொரு சமூகத்தின் மீது பாரியதாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்னின்றிருக்கக்கூடாது. "அது பீலிக்ஸின் திட்டம் நான் அதற்குப் பொறுப்பல்ல" என்று கூறி பதியுதீன் ம:ஃமூத் தன்னை நியாயப்படுத்த முடியாது. பௌத்த - சிங்கள இனவாதத்தின் கருவியாக தான் செயல்படுவதை உணர்ந்து கொள்ள முடியாத அளவிற்கு அவர் ஒரு அப்பாவியும் அல்ல. இந்தவகையில், பெரும்பாலான தமிழ் மாணவர்களின் எதிர்காலம் சூனியமாக்கப்பட்டதற்கான தார்மீகப் பொறுப்பு, பதியுத்தீன் மு:ஃமூத்துக்கும் இருக்கிறது. இந்தநிலையில் தமிழ் மாணவர்கள் தம்மை விட, குறைந்த புள்ளிகளைப் பெற்று, உயர்கல்வி கற்பதற்காக வருகின்ற முஸ்லீம் மாணவர்களுடன், சினேகபூர்வமான உறவுகளைப் பேணுவது என்பது அவ்வளவு எளிதான விடயமல்ல. மேலும், இவ்வாறு உயர்கல்வி கற்க வருகின்ற தமிழ் மாணவர்களுக்கும், முஸ்லீம் மாணவர்களுக்கும் இடையே கற்றல் செயற்பாட்டில் பொதுவாக ஏற்றத் தாழ்வுகளும் காணப்பட்டன. சமூக அளவில், கல்விக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவமும், கல்வியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டுகின்ற அக்கறை ஒழுங்கு என்பவையும் தமிழ், முஸ்லீம் சமூகங்களைப் பொறுத்தவரை வேறுபட்டவையாக இருந்தன. தமிழ் சமூகம் மரபுவழியாகப் பெற்றிருக்கின்ற கல்விசார் அறநெறியின் காரணமாக தமிழ் மாணவர்கள் ஆரம்ப வகுப்பு முதலே ஒழுங்காகவும், கடுமையாக முயன்றும், விரிந்த அளவிலும் கற்க முடிகிறது. இதனால் அவர்களது அறிவும், தொடர்ந்து கற்பதில் உள்ள ஆர்வமும் பொதுவாக, முஸ்லீம் மாணவர்களைவிட உயர்வாகவே இருந்தன. பொதுவாகவே தமிழரிடையே- குறிப்பாக யாழ்பாண தமிழரிடையே காணப்பட்ட புரெட்டஸ்தாந்து அறநெறியை ஒத்த ஒருவித அறநெறியானது- உழைப்பை உயர்வாக போற்றுவது, கற்பதிலும் கற்பிப்பதிலும் காட்டும் அக்கறை, அர்ப்பணிப்பு, ஒறுத்தல் போன்றவை - முஸ்லீம் மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் காணப்படவில்லை என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும். இவ்வாறு கல்வியில் தமிழ் மாணவர்களுடன் போட்டியிட முடியாதிருந்த தமது பலவீனத்தை மறைப்பதற்காக, தமிழ் விரிவுரையாளர்கள் தம்மீது பாரபட்சம் காட்டுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை முஸ்லீம் மாணவர்கள் முன்வைத்திருக்கக் கூடிய சாத்தியம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இம்முஸ்லீம் மாணவர்களில் பெரும்பாலானோர் தமது கல்வி வளர்ச்சியின் ஏதாவது ஒரு கட்டத்தில், தமிழ் ஆசிரியர்களின் நேர்மையான பங்களிப்பைப் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். நிர்வாகச் சீர்கேடுகளினாலும், அரசில் முரண்பாடுகளினாலும், சமூக அக்கறையின்மையினாலும் முஸ்லீம் ஆசிரியர்களில் பலர் கற்பித்தலில் அக்கறை காட்டாதிருந்த நிலையில், தமிழ் ஆசிரியர்கள்தான், குறிப்பாக வடக்கைச் சேர்ந்த தமிழ் ஆசிரியர்கள் தமது கடமையை பொறுப்புடன் செய்து வந்தார்கள். இவ்வகையில் அன்றைய படித்த கிழக்கு முஸ்லீம்கள், தமக்குக் கற்பித்தலில் சிரத்தையுடனும், மிதமிஞ்சிய உழைப்புடனும் செயற்பட்ட தமிழ் ஆசிரியர்களை ஒரு போதும் மறக்க முடியாது.)

(3) படித்த கிழக்கு முஸ்லீம்களின் நலன்கள் மிகப் பெரும்பாலும் அரசாங்க உத்தியோகங்களிலேயே தங்கியிருந்தன. இந்த உத்தியோகங்களைப் பெறுவதற்காக, இவர்கள் அன்று, பாராளுமன்ற உறுப்பினர்களிலேயே முற்றிலும் தங்கியிருந்தார்கள். கிழக்கில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இருந்த போதிலும் படித்த முஸ்லீம்கள் தமது வேலைவாய்ப்புகளுக்காக முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களிலேயே தங்கியிருந்தார்கள். விதிவிலக்குகள் என்று கொள்ளக்கூடிய அளவுக்கு ஒன்றிரண்டு முஸ்லீம்களே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் மூலம் உத்தியோகங்களைப் பெற்றார்கள். இதற்கு மாறாக, கிழக்கு முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட வேலை வாய்ப்புகளில் கணிசமானவற்றை தமிழர்களுக்கு (குறிப்பாக யாழ்ப்பாண தமிழர்களுக்கு) விற்பனை செய்தார்கள். இதன் விளைவாக படித்த கிழக்கு முஸ்லீம்கள் தமக்குரிய வேலைவாய்ப்புகளில் கணிசமானவற்றை இழக்கவேண்டியேற்பட்டது. இதனால் இவர்கள், கிழக்கு முஸ்லீம் அரசியல்வாதிகள் மீது மாத்திரமன்றி, தமக்குரிய உத்தியோகங்களை விலைக்கு வாங்கிய தமிழ் பிரிவினர் மீதும் கோபமும், விரோதமும் கொண்டார்கள்.

(4) கல்வி வாழ்வில் ஆரம்பக் கட்டத்தில் இருந்த படித்த கிழக்கிற்கு முஸ்லீம்களினால், நிர்வாகத்துறையில் ஆளுமை செலுத்த முடியவில்லை. கிழக்கிற்குரிய நிர்வாகத் துறையின் ஒவ்வொரு பிரிவிலும் நீண்ட அனுபவமும், ஆதிக்கமும் பெற்றவர்களாக தமிழ் அதிகாரி களே இருந்தார்கள். தமிழ் மக்கள் பௌத்த - சிங்கள இனவாதத்திற்கு எதிராக சகல முனை களிலும் கடுமையாகப் போராடிக் கொண்டிருந்த நிலையில், சிங்கள அரசின் இனவாதப் பிடிக்குள் இருந்து வட- கிழக்கிற்குரிய ஒதுக்கீடுகள், அபிவிருத்தி முயற்சிகள், பதவியுயர்வுகள் போன்றவை குறைந்த அளிவிலும், தாமதமாகவுமே வழங்கப்பட்டன. இவ்வாறு கிடைத்தவற்றில் பெரும்பகுதியை தமது சமூகத்திற்கு கிடைக்கச் செய்வதில் தமிழ் அதிகாரிகள் முனைப்புடன் செயற்பட்டார்கள். கிழக்கு முஸ்லீம்கள் உயர்நிர்வாகமட்டங்களில் மாத்திரமின்றி, நிர்வாகத் துறையின் சகல மட்டங்களிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இருந்ததால், தமிழ் நிர்வாகப் பிரிவினர் தமது இத்தகைய முயற்சிகளை எளிதாக நிறைவேற்றினார்கள். விதிவிலக்காக, உயர்கல்வி தகைமை பெற்ற ஒன்றிரண்டு முஸ்லீம்கள், உயர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருந்தாலும் கூட அவர்கள் தமிழ் ஊழியர்களினால் நிறைந்திருந்த தமது அலுவலகங்களில் சுயமாகவும், சுதந்திரமாகவும் கடமையாற்ற முடியவில்லை. பல சந்தர்ப்பங்களில் அவர்கள் தமது பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, தமக்கு மேலும் கீழும் இருக்கின்ற தமிழ் அதிகாரிகளுக்கும் ஊழியர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்கும் கட்டுப்பட்டு, அவர்களின் பாரபட்சமான நடவடிக்கைகளை அங்கீகரிக்க வேண்டிய நிலைக்கு ஆளானார்கள். இவ்வாறு கிழக்கு முஸ்லீம்களுக்கு, உரிய விகிதாசாரத்தில் கிடைக்க வேண்டியவற்றில் கணிசமான பகுதியை, தமிழ் நிர்வாகிகள் தமிழ் சமூகத்திற்குப் பெற்றுக் கொடுத்தார்கள். உண்மையில் பௌத்த - சிங்கள அரசினால் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு என ஒதுக்கப்பட்டவை குறைவாக இருந்த போதிலும், அவ்விதம் ஒதுக்கப்பட்டவற்றில் தமக்குரிய பங்கு தமிழ் அதிகாரிகளினால் மறுக்கப்படுவதுதான், கிழக்கு முஸ்லீம்களின் படித்த பிரிவினரை உடனடியாகவும் கடுமையாகவும் பாதித்தது.

இவ்வாறு படித்த தமிழ், முஸ்லீம் பிரிவினரிடையே கல்வி, உத்தியோகம், நிர்வாகம் என பல்வேறு மட்டங்களில் ஏற்பட்ட முரண்பாடுகள் படிப்படியே, தமிழ் மக்களுடனான சமூக முரண்பாடுகளாக கிழக்கு முஸ்லீம்கள் மத்தியில் அர்த்தம் பெற வைக்கப்பட்டன. இதுவரை தமக்கிடையே இயல்பான முறையில் நல்லுறவுகளைப் பேணிவந்த கிழக்கின் தமிழ், முஸ்லீம் மக்களிடையே இதன்பின்னர் பகைமை வித்துகள் தோன்றத் தொடங்கின.

தொகுத்து கூறினால், அன்றைய படித்த கிழக்கு முஸ்லீம் பிரிவினர் சமூக, அரசியல் வாழ்க்கையின் சகல முனைகளிலும் கட்டுபடுத்தப்பட்டவர்களாகவும், பலவீனப்படுத்தப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். ஒருபுறம் அவர்கள் தமது சமூகத்தைச் சேர்ந்த நிலவுடைமையாளர்களினாலும், அவர்களின் ஆதரவு பெற்ற முஸ்லீம் அரசியல்வாதிகளினாலும் கட்டுப்படுத்தப்பட்டார்கள். மறுபுறத்தில் படித்த தமிழ்பிரிவினரின் நிர்வாக ஆதிக்கத்தினால் கட்டுபடுத்தப்பட்டார்கள். இவற்றை வென்று தமது ஆதிக்கத்தையும், ஆளுமையையும் சமூக அளவில் நிலைநாட்டுவதற்குரிய வழிகள் எதுவும் அப்போது அவர்களுக்கு இருக்கவில்லை. இந்தநிலையில் தான், படித்த கிழக்கு முஸ்லீம் பிரிவினர் தமது சமூகத்தின் அரசியல்தலைமையாக மாறுவதைச் சாத்தியமாக்கிய இரு நிகவுழ்கள் நாட்டில் இடம் பெற்றன. தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்ட வடிவத்தைப் பெற்றதும், மத்திய கிழக்குக்கான வேலை வாய்ப்புகள் உருவானதும் இவ்விரு நிகழ்வுகளாகும்

## கிழக்கு முஸ்லீம்களிடையே தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திய தாக்கங்கள்

### 1. முஸ்லீம்கள் குறித்த விடுதலை அமைப்புகளின் நிலைப்பாடுகள்:-

பௌத்த - சிங்கள அரசின், இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக நீண்டகாலமாகப் போராடி வந்த தமிழ் தேசம், 1970களில் தனது போராட்டத்தை சாத்வீக வடிவத்திலிருந்து வன்முறை வடிவத்திற்கு மாற்றியது. தமிழீழப் போராட்டத்தில் ஏற்பட்ட இத்தகைய வடிவ மாற்றத்திற்கு ஏற்ப, அப்போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொள்கின்ற பிரிவினரிலும் போராட்டத்தை வழிநடத்திச் செல்கின்ற தலைமையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இப்போது போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடுகின்ற பிரிவினராக இளைஞர்களும், மாணவர்களும் விளங்கியதோடு, போராட்டத் தலைமையும் இவர்களிலிருந்தே உருவாகியது. தமிழ் தேசத்தின் போராட்டத்தில் திருப்பு முனையாக அமைந்த இந்த நிகழ்வுடன், தமிழர் தலைமையின் ஐக்கியமும் சிதறுண்டது. நீண்டகால முயற்சியின் பின்னர் உருவாக்கப்பட்ட தமிழ் மக்களின் ஒன்றிணைந்த அரசியல் தலைமையானது, இதன் பின்னர் திடீர்திடீரெனத் தோன்றிய ஆயுதக் குழுக்களினால் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கப்பட்டது.

தமிழ்மக்களின் போராட்டத்தில், 1980களின் முற்பகுதி, கிளர்ச்சியும் கொந்தளிப்பும் மிக்க ஒரு காலப்பகுதியாக விளங்கியுது. வட - கிழக்குத் தழுவியதாக முழுத் தமிழ் மக்களும் போராட்டத்தின் பால் அக்கறையும், அனுதாபத்தையும் வெளிப்படுத்தினார்கள், போராட்டம் சார்ந்த செயற்பாடுகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டார்கள். எனினும் இவர்களை ஒன்று திரட்டி, அமைப்பாக்கி, பல்வேறுபட்ட வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கின்ற ஆற்றலைக் கொண்டதாக, எந்த ஒரு விடுதலை அமைப்பும் தன்னை வெளிப்படுத்தவில்லை. இவை தமிழீழ விடுதலையை நோக்கி உறுதியாக முன்றேுவதிலும் பார்க்க, தம்மை தமிழ் மக்களின் தலைமையாக நிலைநாட்டுவதையே பிரதான இலக்காகக் கொண்டிருந்தன. எனினும் இதைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாதிப்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. தமிழ் மக்களின் தலைமையைப் பெற்றுக் கொள்வதற்காக, முன்னைய தமிழர் விடுதலை கூட்டணி தலைமையோடு, இப்போது புதிதாக உருவாகி வந்த ஆயுதக் குழுக்களும் போட்டி யிட்டன. தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் பொதுவாக இந்த எல்லா ஆயுதக் குழுக்களையும் அனுதாபத்தோடும், பெருமை யோடும் மதித்து, அவற்றுக்கு தமது ஆதரவை வழங்கினார்கள்.

தமிழ் மக்களின் தலைமை என தம்மைக் கூறிக்கொண்ட அமைப்புகள், பௌத்த - சிங்கள அரசுக்கு எதிரான போராட்டத்தை உறுதியாக முன்னெடுப்பதன் மூலமாக தமது தலைமையை நிலைநாட்ட முயற்சிக்கவில்லை. போராட்டத்தின் நோக்கம், அதில் பங்கு கொள்கின்ற சக்திகள், தமிழ் தேசத்தில் நிலவுகின்ற சமூக பிரிவுகள், போராட்ட வழிமுறைகள், ஏனைய சமூகங் களுடனான உறவுகள், சர்வதேச சமூகங்க ளுடான உறவுகள் என ஒரு போராட்டம் எதிர்கொள்கின்ற அடிப்படை விடயங்களை உள்ளடக்கியதான ஒரு தெளிவான திட்டத்தை எந்த அமைப்பும் கொண்டிருக்கவில்லை, போராட்டத்தின் வெற்றிக்கு பல அமைப்புகளையும் உள்ளடக்கியதான பலமான ஐக்கிய முன்னணி அவசியம் என்பதை உணர்ந்து அதை நோக்கிய தாக தமது வேலை திட்டங்களை வகுக்கக் கூடிய அரசியல் முதிர்ச்சியை எந்த அமைப்பும் வெளிப் படுத்தவில்லை. இவற்றுக்கு பதிலாக ஆயுத பலத்தின் மூலம், தமிழ் மக்களைக் கட்டுபடுத்தி தமது தலைமையை ஏற்படுத்த அவை முயற்சித்தன. தமிழ் மக்களின் விமர்சனச் சுதந்திரங்களையும், தொடர்பு சாதனங்களையும், சுயமான சமூக, கலாச்சார நிறுவனங்களையும் இவை கட்டுப்படுத்தின, விரிவான ஜனநாயக சூழலை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, ஒவ்வொரு அமைப்பிலும் ஆதிக்க உணர்வுகளே வெளிப் பட்டன, இத்தகைய அராஜக அரசியல் விரை விலேயே அழித்தொழிப்பாக மாறியது. தம்முடன் முரண்பட்டு, பிரிந்து சென்ற அங்கத்தினர்கள், வேறு அமைப்புகளில் இணைவதைத் தடுப்பதற் காகவும், தம்மைப்பற்றி அவர்கள் வெளியிடக் கூடிய கருத்துக்களின் காரணமாக தாம் தமிழ் மக்களினால் நிராகரிக்கப்படலாம் என்பதாலும், அவர்களை உடனடியாக அழித்தனர். மேலும் தமக்குப் போட்டியாக இருக்கின்ற ஏனைய அமைப்புக்களை வீழ்த்துகின்ற செயற்பாடுகளில் விதி விலக்கின்றி ஒவ்வொரு அமைப்பும் ஈடுபட்டது. இவ்வாறு தமிழ் மக்களில் எந்த பிரிவினரும் தமக்கு எதிரான நிலையை எடுக்கவிடாது தடுப்பதில் ஒவ்வொரு அமைப்பும் தீவிரமாகச் செயற்பட்டது.

தமிழ் மக்கள், தம்மீது விடுதலை அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்ட அராஜக நடவடிக்கைகளை, தேசவிடுதலைப் போராட்டம் என்ற உயரிய லட்சியத்தின் பெயரால், வெகுஜன ரீதியான எதிர்ப்புகள் எதுவுமின்றி ஏற்றுக் கொள்ளும்படி செய்யப்பட்டார்கள். தேசவிடுத லைப் போராட்டத்தின் போது இத்தகைய அராஜகங்கள் குறிப்பிட்ட காலத்திற்குத் தவிர்க்க முடியாதவை என்று அமைப்புகளால் நியாயப்படுத் தப்பட்டன. இவ்வாறு தமது அராஜக நடவடிக்கைகளுக்கு, தமிழ் மக்களி டமிருந்து வெகுஜன ரீதியான எதிர்ப்புகளை முகம் கொடுக்காத விடுதலை அமைப்புகள், வட - கிழக்கு முஸ்லீம்கள் மீதும் அதேபோன்ற அராஜகங்களை படிப்படியே பிரயோகிக்கத் தொடங்கின.

"தமிழ் பேசும் மக்கள்" "இஸ்லாமியத் தமிழர்கள்", "ஈழவர்கள்" போன்ற வரையறை களுக்குள் வட - கிழக்கு முஸ்லீம்களையும் உள்ளடக்கி, அவர்களையும் தமிழீழப் போராட்ட த்தில் நேரடியாகப் பங்குபெறச் செய்ய விடுதலை அமைப்புகள் முயன்றன. இத்தகைய முயற்சியின் தீவிரம் காரணமாக, (வட) கிழக்கு முஸ்லீம் களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே காணப் படுகின்ற வேறுபாடுகளை விடுதலை இயக்கங்கள் உதாசீனப்படுத்தின, பொதுவான கூறுகளை மட்டுமே முதன்மைப்படுத்தின. பொதுமொழி, பொதுப்பிரதேசம், பொதுப் பொருளாதாரம், கலாச்சார ரீதியாக வெளிப்படுகின்ற சில ஒத்த தன்மைகள். . . . போன்றவை காரணமாக வட - கிழக்கு முஸ்லீம்கள் தமிழ் மக்களின் ஒரு பிரிவுதான் என்றும், எனவே தமிழீழப் போராட்டத்தில் கிழக்கு முஸ்லீம்கள் உணர்வு பூர்வமாக, முழுமையாகப் பங்குபற்ற வேண்டும் என்றும் விடுதலை அமைப்புகள் எதிர்பார்த்தன. இவற்றோடு, கிழக்கு முஸ்லீம்களின் பாரம்பரிய பிரதேசங்களை அரசு பறிப்பது; அவற்றில் திட்டமிட்ட ரீதியில் சிங்களக் குடியேற்றங் களை உண்டாக்குவது, இதன் மூலமாக கிழக்கு முஸ்லீம்களின் சனச்செறிவைக் குறைப்பது, கிழக்கு முஸ்லீம்களின் விவசாயத் திற்கும் மீன்பிடித் தொழிலுக்கும் சிங்கள இனவாதிகள் தடைகளை ஏற்படுத்துவது. . . . போன்றவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரணமாக, கிழக்கு முஸ்லீம்கள் தவிர்க்க முடியாமல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்று வார்கள் என்று விடுதலை அமைப்புகள் கருதின. இதன் காரணமாக, விடுதலை அமைப்புகள் வட - கிழக்கு முஸ்லீம்கள் மீது முழு அதிகாரத்துடன் நடந்து கொள்ள ஆரம்பித்தன.

மக்கள் திரள் தம்மை ஒரே தேசமாகக் கருதி, பொதுவான அரசியல் வரையறை களுக்குள் தம்மை இணைத்துக் கொள்வ தென்பது,பல்வேறு காரணிகளின் இணைவினால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு சிக்கலான நிகழ்வுப் போக்காகும். புறநிலையாக மக்களிடையே எவ்வளவுதான் ஒத்த தன்மைகள் காணப்படுகின்ற போதிலும், அகநிலையில்தமது நலன்களும், அவற்றை அடைந்து கொள்வதற்கான மார்க்கங்களும் பொதுவானது என்றும், தமது எதிர்காலம் ஒரேவிதமான அரசியல் விதிக்குட் பட்டிருக்கின்றது என்றும் உணர்ந்து கொள்ளும் போதுதான், மக்கள் தம்மை ஒரே தேச வரையறைக்குள் இனம் காணத் தொடங்கு கிறார்கள்.

**மக்கள் திரள் தம்மை ஒரே தேசமாகக் கருதி, பொதுவான அரசியல் வரையறை களுக்குள் தம்மை இணைத்துக் கொள்வதென்பது,பல்வேறு காரணிகளின் இணைவினால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு சிக்கலான நிகழ்வுப் போக்காகும். புறநிலையாக மக்களிடையே எவ்வளவுதான் ஒத்த தன்மைகள் காணப்படுகின்ற போதிலும், அகநிலையில்தமது நலன்களும், அவற்றை அடைந்து கொள்வதற்கான மார்க்கங்களும் பொதுவானது என்றும், தமது எதிர்காலம் ஒரேவிதமான அரசியல் விதிக்குட் பட்டிருக்கின்றது என்றும் உணர்ந்து கொள்ளும் போதுதான், மக்கள் தம்மை ஒரே தேச வரையறைக்குள் இனம் காணத் தொடங்குகிறார்கள்.**

ஒரேபிரதேசம், ஒரேமொழி, ஒரே வகை யான பொருளாதார அடித்தளம், மற்றும் கலாச்சார ரீதியாக வெளிப்படுகின்ற கணிசமான ஒத்ததன் மைகள் என வட- கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கும், முஸ்லீம் மக்களுக்கும் இடையே ஒத்த அம்சங்கள் காணப்பட்ட போதிலும், மேலும் அவர்களிடையே காலம் காலமாக நல்லுறவுகள் நிலவிவந்திருந்தும் கூட வட - கிழக்கு முஸ்லீம்கள் தம்மை தமிழ் தேசத்திற்குள் அடையாளம் காண ஒருபோதும் முற்படவில்லை. அவர்கள், இத்த கைய அம்சங்களில் புறநிலையாக தமிழ் மக்களுடன் ஒத்திருந்த போதிலும், அகநிலையில் தம்மை தமிழ் மக்களிடமிருந்து வேறுபட்ட சமூகமாகவே கருதி வந்திருக்கிறார்கள். இவ்வாறு தமிழ் மக்களும், (வட) கிழக்கு முஸ்லீம்களும் ஒரே தேச வரையறைக்குள் தம்மை இணைத்துக் கொள்வதற்குத் தடையாக அமைந்த காரணிகள் குறித்துப் பரிசீலிப்போம்.

## முஸ்லீம்கள் குறித்து சைவ - வேளாள சித்தாந்தம் பரப்பியுள்ள தப்பெண்ணங்கள்

ஒரு சமூகத்தினர் மத்தியில், பிறசமூகங்கள் குறித்த தப்பெண்ணங்களை ஏற்படுத்துவதில் அச்சமூகத்தின் மத்தியில் ஆதிக்கம் பெற்றுள்ள சித்தாந்தங்களுக்கு முக்கிய பாத்திரம் உண்டு. ஒரு குறிப்பிட்ட சித்தாந்தத்தால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு நபர், அதனை அடிப்படையாகக் கொண்டு பரப்பப்படும் பகுத்தறிவிற்கு ஒவ்வாத கருத்துக் களையும் கூட கேள்விக்கிடமின்றி ஏற்றுக் கொள்பவராகின்றார். தரப்பட்ட உண்மையாக அவற்றை எடுத்துக்கொள்கிறார். இப்படிப்பட்ட ஒருவர் தான் கண்டோ அறிந்தோ பழகியோ இராத பிறசமூகத்தவர்பற்றி பல்வேறு தப்பான மதிப்பீடு களையும் தம்மளவில் ஆழமாகக் கொண்டிருப் பதற்கு அவரிடமுள்ள சித்தாந்தப் பீடிப்பே காரணமாகிறது.

இப்படிப்பட்ட சித்தாந்த ஆதிக்கம் ஒவ்வொரு சமூகத்திலும், வெவ்வேறு வடிவில் காணப்படவே செய்கிறது. தமிழ் மக்கள் மத்தியில் இலங்கை முஸ்லீம்கள் குறித்து பரப்பப்பட்டுள்ள பல்வேறு தப்பெண்ணங்களுக்கு சைவ - வேளாள சித்தாந்தம் ஒரு முக்கிய காரணமாக அமைகிறது. இதுவரை காலமும் முஸ்லீம்களை பார்த்தே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராத, பழகியே இராத தமிழர்களும்கூட முஸ்லீம்கள் என்றாலே இழிவானவர்கள், சுத்தம் பேணாதவர்கள், எனவே வெறுக்கத்தக்கவர்கள் என ஆழமான நம்பிக்கை கொண்டிருப்பதற்கு எது காரணம்?

ஏற்கனவே சைவ- வேளாள சித்தாந்தம் முஸ்லீம்கள் பற்றிபல்வேறு தப்பெண்ணங்களை பலமாக பரப்பியுள்ளதால், பிற்காலங்களில் முஸ்லீம்கள் பற்றி தமிழ் அரசியல் தலைமைகள் பரப்புகின்ற கருத்துக்களும், மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் கேள்விக்கிடமின்றி ஏற்றுக்கொள்கின்ற நிலைக்கு சாதாரண தமிழ் மக்கள் ஆளாக்கப் பட்டுள்ளனர், இந்த வகையில், தமிழ் தலைமைகளும், விடுதலை அமைப்புகளும் தாம் இழைக்கின்ற அரசியல் தவறுகளையும், முஸ்லீம்விரோத நடவடிக்கைகளையும் மறைத்து நியாயப்படுத்த முஸ்லீம்களின் மீது பழி போடுகின்றனர். தமிழ் மக்களின் விடுதலைக்கு முஸ்லீம்களே தடை எனவும், அவர்கள் சிங்கள அரசுடன் இணைந்து தமிழருக்கு எதிராக செயற்படுகின்றனர் என்றும் எனவே அவர்களை தாக்குவதும், பாடம் படிப்பிப்பதும், அவர்களை வெளியேற்றுவதும் கூட நியாயமானதே என்றும் பல ஜனநாயக விரோத கருத்துக்களைக் கூட தமிழ் மக்கள் மத்தியில் இவர்களால் இலகுவில் பரப்ப முடிகிறது.

### (அ) தமிழ்த் தலைமையும் சைவ வேளாள சித்தாந்தமும்:-

இலங்கை மக்கள் மத்தியில் முதலாளித்துவ அரசியல் உறவுகள் அறிமுகப்படுத்தப்பட்ட தொடக்க காலத்திலிருந்தே, தமிழ்த் தலைமைகள் சைவ - வேளாள சித்தாந்தத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாகவே இருந்து வந்துள்ளார்கள். மக்களை ஒழுங்கமைப்பதிலும், அவர்களது மதிப்பீடுகளைத் தீர்மானிப்பதிலும் சித்தாந்தம் பிரதான பாத்திரம் வகிக்கின்றது. ஒரு சித்தாந்தத்தினால் கட்டமைக்கப்படுகின்ற நபர், அந்த சித்தாந்தத்தின் அடிப்படையிலான கருத்துக்களை எளிதாகவும் உறுதியாகவும் பின்பற்றக் கூடியவராக இருக்கிறார். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஆறுமுக நாவலரினால் சமூக அளவில் மறுநிர்மாணம் செய்யப்பட்ட இந்த சைவ- வேளாள சித்தாந்தம் பின்னர் தமிழ் அரசியல் தலைமையின் அரசியலிலும் செல்வாக்கு செலுத்தியது. இதன் பின்னர் சமூகரீதியில் மாத்திரமன்றி, அரசியலிலும் முஸ்லீம்களை அந்நியர்களாகவும், தூய்மை அற்றவர்களாகவும் அடக்கி வைக்கப்பட வேண்டியவர்களாகவும் கருதுகின்ற தப்பெண்ணங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டன. அன்றைய 19ம் நூற்றாண்டு தலைமை தொடங்கி இன்றைய ஆயுதப்போராட்ட தலைமைவரை இந்தப் போக்கு பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. இதனால் வட - கிழக்கு முஸ்லீம்களை தம்மவராக கருதுகின்ற மன உணர்வை தமிழ் மக்கள் பெறமுடியாத நிலை ஏற்பட்டு வந்திருக்கின்றது. பதிலாக, முஸ்லீம்கள் "தொப்பி புரட்டிகள்" "காட்டிக் கொடுப்பவர்கள்" என்று அவர்களை தனியான சமூக அடையாளத்துடன் கேவலப் படுத்துவதும், அவர்களுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்புவதும் தமிழ்த் தலைமைகளுக்கு எப்போதும் எளிதான காரியமாக இருந்து வந்திருக்கின்றது.

சகல அம்சங்களிலும் ஒத்த தன்மைகளைக் கொண்டிருக்கின்ற மக்கள் திரள்தான் தம்மை ஒரு தேசமாக உருவாக்கமுடியும் என்பதல்ல, பதிலாக சில அம்சங்களில் (சாதாரணமாக மதம், கலாச்சாரம். . . . போன்றவற்றில்) வேறுபட்டிருக்கின்ற பிரிவினரும்கூட, குறித்த தேசமாக தம்மையும் இனம்காண்பது சாத்தியமாகியிருக்கின்றது. இது நிகழ்வதற்குரிய ஒரு நிபந்தனையாக, எண்ணிக்கையில் அதிகமுள்ள பிரிவினர், பிற பிரிவினர்கள் மீது சமத்துவமானதும், ஜனநாயக பூர்வமானதுமான உறவுகளை ஏற்படுத்துவது அவசியமாகின்றது. இங்கு தமிழ்த் தேசத்தில் அதிக எண்ணிக்கையில் இருக்கின்ற சைவ மதப் பிரிவினர் (குறிப்பாக அவர்களது தலைமையாக தம்மை உருவாக்கியுள்ள யாழ், சைவ, வேளாள பிரிவினர்) வட-கிழக்கு முஸ்லீம்களை ஒரு சமத்துவமான பிரிவினராகக் கருதாததோடு, வட-கிழக்கில் அவர்களுக்கு என தனியான உரிமைகள் இல்லை என்றும் கூறிவந்திருக்கின்றனர். தமிழ் மக்களின் அரசியல் தொடர்பாக வெளிப்படையாகச் செயற்படுகின்ற தமிழ் அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி, தமிழ் மக்கள் தொடர்பாக எவ்வித அரசியல் செயற்பாடுகளிலும் பங்கு கொள்ளாமலும், இன்னமும் சிங்கள கொவி பிரிவினருடன் நெருக்கமான உறவுகள் கொண்டு தமக்குரிய நலன்களைப் பேணி வருகின்ற சைவ -வேளாள பிரிவினரும் கூட வட - கிழக்கு முஸ்லீம்களின் உரிமைகளுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றனர். வட- கிழக்கு முஸ்லீம்களுக்கு என தனியான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்வு யோசனைகள் குறித்து பேச்சு எழுகின்ற போதெல்லாம் அதற்கு எதிராக கருத்துக்கூறி வருகின்ற யோகேந்திரா துரைசாமி போன்றோரை இங்கு உதாரணமாகக் கூறலாம். இத்தகைய போக்குகள் தமிழ் மக்கள் மத்தியில், தனிநபர்கள் அளவில் மட்டுமன்றி, வெகுஜன அளவிலும் ஊடுருவி, வட - கிழக்கு முஸ்லீம்களை ஒரு சமத்துவமற்ற பிரிவினராகவும், தமக்கென தனியான உரிமைகள் அற்ற சமூகமாகவும் கருதும்படி செய்திருக்கின்றது.

பௌத்த - சிங்கள இனவாதத்திற்கு எதிராக தமிழ் மக்கள் நடாத்தி வந்திருக்கின்ற போராட்டங்களில் தனிநபர்கள் என்ற அளவிலாவது பல முஸ்லீம்கள் பங்கு பற்றியிருக்கிறார்கள். உதாரணமாக மசூர் மௌலானா, உதுமான் லெப்பை , போன்றவர்களைக் குறிப்பிடலாம். தமிழ்த்தலைமைகள், இத்தகைய நபர்களின் பங்களிப்புகளை தமிழ்மக்கள் மத்தியில் விளக்கி, தமிழ் மக்களின் போராட்டத்திற்கு முஸ்லீம்களிடமிருந்தும் ஆதரவுகள் கிடைத்திருக்கின்றன என்ற உண்மையைச் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். இதன் மூலமாக, வட - கிழக்கு முஸ்லீம்கள் குறித்து தமிழ் மக்களிடையே நிலவுகின்ற தப்பெண்ணங்களை அகற்ற முயற்சித்திருக்க வேண்டும். ஆனால் வட - கிழக்கு முஸ்லீம்களை சமத்துவமாகக் கருத தயாராக இல்லாத தமிழ்த் தலைமை, அவர்களின் இத்தகைய பங்களிப்பு களை மறைத்து. அவர்களில் சிலர் கட்சி மாறி யதை மட்டுமே மேடைதோறும் பிரச்சாரப்படுத்தி வந்தது.

### (ஆ) தெற்கு முஸ்லீம் தலைமைகளின் செயற்பாடுகள்:-

தெற்கு முஸ்லீம் தலைமைகள் தமிழ் மக்களின் அரசியல் தொடர்பாக மேற்கொண்டு வந்திருக்கின்ற நிலைப்பாடுகளை இரு கட்டங்களாக மதிப்பிட வேண்டும். முதலாவது கட்டமாக 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தமிழ்த் தலைமை அரசியல் அதிகாரத்தில் ஏகபோக உரிமை பெறும் நோக்கத்தில் இலங்கை முஸ்லீம்களை தமிழர்களாக வகைப்படுத்த முயன்றபோது, அதற்கு எதிராக வாதிட்டு, இலங்கை முஸ்லீம்களின் தனித்துவத்தை அரசியல் ரீதியாகவும் உறுதிப்படுத்தியதில் அன்றைய தெற்கு முஸ்லீம் தலைமை வகித்த பாத்திரம் வரலாற்று முக்கியத்துவமிக்கது. இரண்டாவது கட்டத்தில், பௌத்த - சிங்கள இனவாத சக்திகளுடன் இணைந்து இந்நாட்டிலுள்ள முஸ்லீம்களும் அடங்கலாக ஒடுக்கப்படுகின்ற சமூகங்கள் அனைத்திற்கும் எதிராக செயற்பட்டு வந்திருக்கிறார்கள் என்ற வகையில் தெற்கு முஸ்லீம் தலைமையின் அரசியல் பாத்திரம் இழிநிலைக்குரியதாக விளங்குகின்றது.

தம்மிடமிருந்து சமூக, பொருளாதார, அரசியல் அம்சங்களில் பெரிதும் வேறுபட்டிருக்கின்ற வட - கிழக்கு முஸ்லீம்களின் அரசியலில் தலையிடாமல் அவர்கள் அரசியலில் சுயமாக இயங்குவதற்கு தெற்கு முஸ்லீம் தலைமை வழிவிட்டிருக்க வேண்டும். இவ்வாறு செய்திருப்பின், பாராளுமன்ற அரசியல் அறிமுகப் படுத்தப்பட்ட குறிப்பிட்ட காலத்திற்குள் வட - கிழக்கு முஸ்லீம்கள் தமக்கான அரசியல் பாதையைத் தெரிவு செய்திருப்பார்கள். ஆனால் தெற்கு முஸ்லீம் தலைமை இதற்குமுற்றிலும் மாறாக, (வட) கிழக்கு முஸ்லீம்களின் தனித்துவத்தைச் சிதைத்து வந்திருக்கின்ற பௌத்த - சிங்கள சக்திகளுடன் அரசியற் கூட்டை ஏற்படுத்தியதோடு (வட) கிழக்கு முஸ்லீம்களை தமிழ்த் தேசத்திற்கெதிரான திசையிலும் இட்டுச் சென்றிருக்கிறது. தமிழ் தலைமைகளின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை, சமஷ்டிக் கோரிக்கை போன்றவற்றையும், தமிழ்த் தேசவிடுதலைப் போராட்டத்தையும் தெற்கு முஸ்லீம் தலைமை தீவிரமாக எதிர்த்து வந்திருக்கிறது. மேலும் மலையகத் தமிழர்களின் பிரஜாஉரிமை, வாக்குரிமை பறித்தல், தனிச்சிங்களசட்டம் போன்ற அப்பட்டமான ஒடுக்குமுறை முயற்சிகளில் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்டதன் மூலமாக, தமிழ் மக்களுக்கும், வட - கிழக்கு முஸ்லீம்களுக்கும் இடையே பகைமையுணர்வுகள் மேலும் தீவிரமடைவதற்கும் தெற்கு முஸ்லீம் தலைமை காரணமாகியிருந்தது.

### (இ)சிங்களத் தலைமையின் பாத்திரம் :-

தமிழ் மக்களையும், வட-கிழக்கு முஸ்லீம்களையும் இணையவிடாமல் தடுத்ததில் சிங்களத் தலைமை வகித்து வந்திருக்கின்ற பாத்திரம் முக்கியமானது. இந்நூற்றாண்டின் முதல் கால்பகுதிவரை சிங்கள மக்களிடையே நிலவிவந்த கண்டி, கரையோரம் என்ற வேறுபாடுகளையும், பௌத்த கிறிஸ்தவ வேறுபாடுகளையும் அகற்றி, அவர்களை ஒரே தேச வரையறைக்குள் கொண்டு வருவதில் சிங்களத் தலைமை உறுதியாகச் செயற்பட்டிருந்தது. ஆனால் தனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசு அதிகார எல்லைக்குள் வாழ்ந்து வந்திருக்கின்ற தமிழ், முஸ்லீம் மக்களிடையே அவ்வாறான ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் இந்த சிங்களத் தலைமை ஒருபோதும் அக்கறை காட்டியதில்லை. மாறாக அவர்களிடையே பிரிவினைகளையும், பகைமையையும் ஏற்படுத்துவதற்காக அது திட்டமிட்டு செயற்பட்டு வந்திருக்கிறது.

**(ஈ) ஏனைய காரணிகள்**

தமிழ் மக்களை ஒரு தேசமாக ஒன்றிணைத்ததில், மொழி, வேலைவாய்ப்பு, தரப்படுத்தல் என்பவை தொடர்பான நெருக்கடிகள் முக்கிய பாத்திரம் வகித்திருக்கின்றன. ஆனால் வட - கிழக்கு முஸ்லீம்களைப் பொறுத்தவரை அவர்கள், தமிழ்மக்கள் போன்று இவற்றினால் பாதிக்கப்படவில்லை. மொழிப் பிரச்சினை தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில், தமிழ் மொழிக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிகளினால், தமது பொருளாயத வாழ்வுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை உணரக்கூடிய பிரிவினர் வட - கிழக்கு முஸ்லீம் களிடையே பரந்த அளவில் இருக்கவில்லை. அதேவேளை (வட)கிழக்கு முஸ்லீம்களுக்கு வேலைவாய்ப்புக்கள் தனியாக வழங்கப்பட்டதாலும், தரப்படுத்தலின் காரணமாக கிழக்கு முஸ்லீம்கள் நன்மை அடைந்ததாலும் இவையும் கூட அவர்களுக்குப் பாதகமாக அமையவில்லை. எனவே இவற்றின் அடிப்படையில், தம்மைத் தமிழ்த் தேசத்திற்குள் இணைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் (வட)கிழக்கு முஸ்லீம்களுக்கு ஏற்படவில்லை.

1980 களின் முற்பகுதியில், தமிழ் மக்களின் தனியான அரசியலானது அரை நூற்றாண்டிற்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்டதாகவும் பௌத்த- சிங்கள இனவாதத்திற்கு எதிரான போராட்டத்தைக் கொண்டதாகவும் இருந்தது. இவர்களுடன் ஒப்பிடுகையில்,சிங்கள அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களாக இருந்த (வட)கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் விழிப்புணர்வு முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. தேர்தல்களின் போது தாம் சார்ந்திருந்த சிங்களக் கட்சிகளுக்கும், தமது அபிமானத்திற்குரிய அரசியல் வாதிகளுக்கும் ஆதரவளிப்பது என்ற எல்லைக்குள்ளே அவர்களின் அரசியல் செயற்பாடுகள் அமைந்திருந்தன இதனால், பௌத்த - சிங்கள அரசின் திட்டமிட்ட செயற்பாடுகளின் காரணமாக, தமது பாரம்பரிய நிலங்களுக்கும். பொருளாதாரத்திற்கும், குடிசனச் செறிவுக்கும், அரசியல் பலத்திற்கும், இவற்றின் மொத்த விளைவாக தமது எதிர்கால சமூக இருப்புக்கும் ஏற்பட்டுக் கொண்டிருந்த அபாயங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய அரசியல் விழிப்புணர்வை இன்னமும் பெற்றிராதவர்களாகவே (வட)கிழக்கு முஸ்லீம்கள் இருந்தார்கள். இதனால் பௌத்த-சிங்கள இனவாதத்தை எதிர்த்த போராட்டத்தினூடாக தம்மை ஒரு தேசமாக உருவாக்கிக் கொண்டிருந்த தமிழ் மக்களுடன் இணைந்து, அந்தத் தேசத்தின் ஒரு கூறாக தங்களை உணருகின்ற நிலையில் (வட)கிழக்கு முஸ்லீம்கள் இருக்கவில்லை.

இவ்வாறு (வட)கிழக்கு முஸ்லீம்கள் தமிழ் மக்களுடன் ஒரே தேசமாக ஒன்றிணைந்து, தமிழீழத்தின் விடுதலைக்காகப் போராடக்கூடிய நிலைமைகள் அன்று காணப்படவில்லை. இந்த உண்மையை எந்தவொரு விடுதலை அமைப்பும் புரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை. மாறாக, எவ்விதத்திலாவது (வட)கிழக்கு முஸ்லீம்களை தமிழீழப் போராட்டத்தில் நேரடியாகப் பங்குபெறச் செய்ய வேண்டும் என்பதுதான் அவற்றின் நோக்கமாக இருந்தது. எனினும் ஆங்காங்கே, போராட்டத்தில் பங்கெடுக்க முன்வந்த சல முஸ்லீம் இளைஞர்களைத் தவிர, அனைத்து முஸ்லீம்களும் அப்போராட்டத்திலிருந்து ஒதுங்கியே இருந்தார்கள்.

எவ்வாறாயினும் வட - கிழக்கு முஸ்லீம்களில் பெரும்பாலானோர் தமிழ் மக்களின் போராட்டத்தின் மீது அனுதாபம் கொண்டிருந்தார்கள். இதுவரை காலமும் தமிழ் மக்களுடன் சமூக, பொருளாதார ரீதியில் நெருக்கமான, நல்லுறவுகளை பேணிவந்திருந்த கிழக்கு முஸ்லிம் விவசாயிகளும் முற்போக்கு முஸ்லீம் பிரிவினரும், தமிழ்மக்களுடைய போராட்டத்தின் மீது உண்மையான அனுதாபம் கொண்டிருந்தார்கள். இவர்கள் பௌத்த - சிங்கள இனவாதத்தினால், தமது நிலங்களுக்கும், விவசாயத்திற்கும் ஏனைய சமூக, பொருளாதார நடவடிக்கைகளுக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பாதிப்புகளை அனுபவித்தவர்கள். இத்தகைய பாதிப்புகளை அரசியல் மயப்படுத்தி புரிந்து கொள்ளாதவர்களாக இருந்த போதிலும் கூட அவற்றின் தாக்கத்தை உணர்ந்தவர்கள். எனவே இவர்கள் அரச படையினரால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டு வேதனை அடைந்தார்கள். இவர்கள் தம்மால் முடிந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அளவு, தார்மீகரீதியான உதவிகளை தமிழ் மக்களுக்கு வழங்கி வந்தார்கள். அரச படையினரின் தாக்குதல்களுக்குள்ளாகி, வெளியேறிய தமிழ் மக்களை தமது வீடுகளில் தங்க வைத்தார்கள். இக்கட்டான, அபாயத்திற்குரிய நிலைமைகளில் கூட தமிழ் மக்களையும் அவர்களின் உடமைகளையும், போராளிகளையும் காப்பாற்றி யிருக்கிறார்கள். இவ்வாறு கிழக்கு முஸ்லீம் விவசாயிகளும், முற்போக்கு சக்திகளும் வழங்கிய ஆதரவின் பெறுமதியையும், முக்கியத்துவத்தையும் விடுதலை அமைப்புகள் உணர்ந்து கொள்ளவில்லை. வட - கிழக்கு முஸ்லீம்களை ஒரு தனியான, சமமான உரிமைகள் கொண்ட சமூகமாகக் கருதி, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அவர்கள் வழங்கிய ஆதரவை முறையாகக் கையாண்டிருந்தால், தமிழீழவிடுதலைப் போராட்டத்தின் நிலைமை இன்று வேறு விதமாக மாறியிருக்கலாம்.

## (ii) விடுதலை அமைப்புக்களின் அராஜக நடவடிக்கைகள் கிழக்கு முஸ்லீம்கள் மத்தியில் ஏற்படுத்திய உணர்வலைகள்

வட-கிழக்கு முஸ்லீம்களின் தனித்துவத்தை மறுப்பதன் மூலமாகவே, அவர்களை தமிழ்த் தேசத்திற்குள் இணைத்துவிடலாம் எனக் கருதிச் செயற்பட்ட விடுதலை அமைப்புக்களின் நடவடிக்கைகள் முற்றிலும் வேறுவிதமாக இருந்தன. பொதுவாக விடுதலை இயக்கங்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையிலான உறவுகள் அதிகார உறவாக இருந்தனவே அன்றி, தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்தி, அணி திரட்டி போராட வழிகாட்டுகின்ற தன்மையுடையதாக இருக்கவில்லை. முஸ்லீம் மக்களைப் பொறுத்த வரையிலும் கூட, விடுதலை இயக்கங்கள் இதேவிதமான அதிகார உறவுகளையே கொண்டிருந்தன. அவை வட - கிழக்கு முஸ்லீம்கள் வழங்கிய ஆதரவின் முக்கியத்துவத்தை உணராமல், அவர்கள் மீது தமது அராஜகச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தொடங்கின. முஸ்லீம் நிலவுடமையாளர்களிடமும், வர்த்தகர்களிடமும், பின்னர் முஸ்லீம் அரசாங்க உத்தியோகத்தர்களிடமும் விடுதலை அமைப்புகள் பணம் பறிக்கவும், வரி அறவிடவும் ஆரம்பித்தன: தமிழ் பகுதிகளுக்குள் வியாபாரத்திற்குச் சென்ற சிறு வியாபாரிகளும், விறகு எடுக்கச் சென்ற ஏழை உழைப்பாளிகளும், தமது வயல் நிலங்களுக்குச் சென்ற விவசாயிகளும் "உளவாளிகள்" "சமூக விரோதிகள்" என்ற முத்திரைகளின் கீழ் விடுதலை அமைப்புகளினால் கொல்லப்பட்டார்கள். இவர்கள் மீதான கொலைத் தண்டனைகள், எந்தவிதமான இராணுவக் காரணங்களுமின்றி, முஸ்லீம்கள் குறித்து வழமையாகக் கொண்டிருந்த தப்பெண்ணங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டன. கிழக்கில் முஸ்லீம்களின் வைப்புகள் செறிந்திருந்த வங்கிகளிலும் (உதாரணமாக காத்தான்குடி, கிண்ணியா), முஸ்லீம்களுக்கான கல்வி நிலையங்கள், பயிற்சி நிலையங்கள் என்பவற்றிலும் விடுதலை அமைப்புகள் அபகரிப்புகளில் ஈடுபட்டன. இத்தகைய செயற்பாடுகளை தமிழ் மக்கள் மீதும், முற்றிலும் தமிழ் மக்கள் வாழ்ந்த பிரசேசங்களிலும் விடுதலை இயக்கங்கள் மேற்கொண்ட போதிலும், தம்மை வேறொரு சமூகமாக இனம் காணும் முஸ்லீம்கள் மீது அதே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது, அவர்கள் அதை வேறுவிதமாக அர்த்தப்படுத்தினார்கள் விடுதலை அமைப்புகள் தம்மை அடிமைப்படுத்தவும், தமது பொருளாதாரம், கல்வி என்பவற்றை அழிக்கவும் முயற்சிக்கின்றன என்று கிழக்கு முஸ்லீம்கள் கருத ஆரம்பித்தார்கள். இவ்வாறாக, கிழக்கு முஸ்லீம்கள், விடுதலை அமைப்புக்களின் அடக்குமுறைகள் தம்மைச் சூழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டார்கள் இதுவரை, தாம் போராளிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் வழங்கிய உதவிகள், ஆதரவுகள், பாதுகாப்புகள் போன்ற அனைத்தும் விடுதலை அமைப்புகளினால் மறக்கப்பட்டிருந்த சூழலில், கிழக்கு முஸ்லீம்கள், தமிழ் சமூகத்தை நன்றி கெட்ட சமூகமாகத் தூற்றினார்கள்: விடுதலை அமைப்புகளுக்கு எதிரான ஆவேச உணர்வுகள் கிழக்கு முஸ்லீம்களிடையே பரவின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிழக்கில் தமிழ் – முஸ்லீம் வன்முறை மோதல்கள்

இதன் பின்னர் தம்மீது விடுதலை அமைப்புகள் மேற்கொள்கின்ற அராஜகங்களை எதிர்த்து கிழக்கு முஸ்லீம்கள் வெளிப்படையாகச் செயற்பட ஆரம்பித்தார்கள். முஸ்லீம்களிடம் பணம் பறிக்கவும், தனியார் மற்றும் அரச உயிர்கள் பலியாக்கப்பட்டன. உடமைகள் அழிக்கப்பட்டன. கிழக்கில் தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் வெளிப்படை யாகவே எதிரெதிர் முனைகளுக்கு பிரிக்கப்பட்டார்கள்.

**கிழக்கில் இடம்பெற்ற தமிழ் – முஸ்லீம் வன்முறை மோதல்களை வெறுமனே இரு சமூகங்களிடையே தன்னியல்பாக வெடித்துக் கிழம்பிய மோதல்களாகக் கருத முடியாது. இத்தகைய மோதல்களில் விடுதலை அமைப்புகள் தீவிரமாகப் பங்கு பற்றியிருந்தன என்பதையும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ்வமைப்புகள், முஸ்லீம் மக்கள் மீது திட்டமிட்ட வகையில் தாக்குதல்களை நடாத்தியிருந்தன என்பதையும் கவனத்தில் கொள்ளும் போது, இவற்றை முஸ்லீம் இனச்சுத்திகரிப்பின் (Ethnic Cleansing) ஒரு வடிவமாகக் கொள்வதே பொருத்தமாக அமையும்.**

நிறுவனங்களில் அபகரிப்பில் ஈடுபடவும் வந்த விடுதலை அமைப்புக்களின் உறுப்பினர்களை முஸ்லீம்கள் சூழ்ந்து கொண்டார்கள்: அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் அந்த உறுப்பினர் களை தடுத்தார்கள். சில இடங்களில் அவர் களைப் பிடித்து அரச படைகளிடம் ஒப்படைத் தார்கள். ஹர்த்தால், மற்றும் கடையடைப்புகள் செய்யும்படி விடுதலை அமைப்புக்கள் விடுத்த அறிவித்தல்களை உதாசீனம் செய்தார்கள்: "சமூக விரோதிகள்" என்ற பெயரிலும், வேறு காரணங்களுக்காகவும் முஸ்லீம் நபர்கள் மீது விடுதலை அமைப்புகள் வன்முறைகளைப் பிரயோ கித்தபோது அதற்கு எதிராக முஸ்லீம் இளைஞர் கள் தமிழ்ப் பொதுமக்கள் மீது வன்முறைகளைப் பிரயோகிக்க ஆரம்பித்தார்கள். விடுதலை அமைப்புக்கள் பல்வேறு காரணங்களுக்காக முஸ்லீம் நபர்களை கடத்திய போது, அதற்குப் பதிலடியாக முஸ்லீம் இளைஞர்கள் தமிழ் நபர்களைக் கடத்தினார்கள். இவற்றின் மொத்த திரட்சியாக, 1985இல் கிட்டத்தட்ட கிழக்கு எங்கும் தமிழ் - முஸ்லீம் வன்முறை மோதல்கள் வெடித்துப் பரவின. தமக்கு எதிராகச் செயற்படுகி ன்ற முஸ்லீம்களைப் பழிவாங்க வேண்டும் என்ற உணர்ச்சியுடன் இந்த விடுதலை அமைப்புகள், இத்தகைய வன்முறை மோதல்களை தமது பழிதீர்ப்புக்குரிய களங்களாகப் பாவித்தன. எல்லா விடுதலை அமைப்புகளும் முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல் களில் ஈடுபட்டன. சில இடங்களில் தனித்தனியாகவும், சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புகள் கூட்டாக இணைந்தும் முஸ்லீம் பிரதேசங்களைத் தாக்கின. இவற்றின்விளைவாக பல அப்பாவி

1985ல் ஆரம்பித்த இத்தகைய வன்முறை மோதல்கள், பின்னர் அடிக்கடி இடம்பெறத் தொடங்கின. ஒரு மோதல்கள் ஏற்படக் கூடியள வுக்கு முரண்பாடுகள் வெளிப்படாத சந்தர்ப்பங் களிலும் கூட இத்தகைய மோதல்கள் வெடித்தன. இவ்வாறான மோதல்களின் போது, முஸ்லீம்களின் வியாபாரத் தளங்கள், தொழில் நிலையங்கள், வீடுகள். . . . என்பவை பிரதான இலக்குகளாகக் கொள்ளப்பட்டன. இவற்றில் இருந்த பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையிடப்பட்ட பின்னர் அக் கட்டிடங்கள் அழிக்கப்பட்டன. இத்தகைய தாக்குதல்களின் போது ஆங்காங்கே முஸ்லீம களில் சிலர் கொல்லப்பட்டார்கள். மறுபுறத்தில் மோதல்களில் ஈடுபட்ட முஸ்லீம் பிரிவினரைப் பொறுத்தவரை அவர்களினால் தமிழ்க் கிராமங் களுக்குள் ஊடுருவி தாக்குதல்களை நடாத் துவது எளிதானதாக இருக்கவில்லை. இதனால் பெரும்பாலும் தமக்கிடையேயும், மிக அருகிலேயும் வாழ்ந்த தமிழ் மக்களின் வீடுகளையும், உடமை களையும் அழிப்பதிலும், ஆட்களைக் கொல்வ திலும் இவர்கள் தீவிரம் காட்டினார்கள்.

இத்தகைய மோதல்களில் விடுதலை அமைப்புகள் பங்கு கொண்டதற்கு, கிழக்கு முஸ்லீம்கள் கருதியது போன்று, முஸ்லீம்களின் பொருளாதாரத்தைச் சிதைக்கவேண்டும் என்றும் தமக்கு எதிரான நிலையை எடுக்கவிடாமல் அவர்களை அடக்கி வைக்க வேண்டும் என்றும் விடுதலை அமைப்புகளிடையே நிலவியிருக்கக் கூடிய மனோபாவம் குறித்து கவனம்கொள்வது அவசியம். தமிழ் மக்கள் மத்தியில் முஸ்லீம்கள் குறித்து சமூக, அரசியல் தளங்களில் ஏற்கனவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலவிய தப்பெண்ணங்களும், விடுதலை அமைப்புக்களைச் சேர்ந்த முன்னணி அங்கத்தினர்களில் பலர் ஏற்கனவே முஸ்லீம்களுடன் (குறிப்பாக கிழக்கு முஸ்லீம்களுடன்) உத்தியோக ரீதியிலும், வர்த்தக ரீதியிலும் முரண்பட்டவர்களாகவும், போட்டியை சந்தித்தவர்களாகவும் இருந்தமையும் இந்த மோதல்களில் வகித்திருக்கக் கூடிய பங்கு கவனிக்கப்பட வேண்டும் விடுதலை அமைப்புகளில் இருந்த இவ்வாறான நபர்கள் இத்தகைய மோதல்களில் உணர்வு பூர்வமாக (அல்லது உணர்வு பூர்வமற்ற நிலையில் ) பங்குபற்றியிருக்கக் கூடிய சாத்தியம் கவனிக்கப்பட வேண்டும். இவ்வகையில், கிழக்கில் இடம்பெற்ற தமிழ் - முஸ்லீம் வன்முறை மோதல்களை வெறுமனே இரு சமூகங்களிடையே தன்னியல்பாக வெடித்துக் கிழம்பிய மோதல்களாகக் கருத முடியாது. இத்தகைய மோதல்களில் விடுதலை அமைப்புகள் தீவிரமாகப் பங்குபற்றியிருந்தன என்பதையும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ்வமைப்புகள், முஸ்லீம் மக்கள் மீது திட்டமிட்ட வகையில் தாக்குதல்களை நடாத்தியிருந்தன என்பதையும் கவனத்தில் கொள்ளும் போது, இவற்றை முஸ்லீம் இனச்சுத்திகரிப்பின் (Ethnic Cleansing) ஒரு வடிவமாகக் கொள்வதே பொருத்தமாக அமையும்.

இந்த நிகழ்வுகள் அனைத்தும் ஒரு முக்கியமான உண்மையைத் தெளிவாக வெளிப்படுத்தின. அதாவது விடுதலை அமைப்புகள் வட- கிழக்கு முஸ்லீம்களை, "தமிழ் பேசும் மக்கள்" , "இஸ்லாமியத் தமிழர்கள்" அல்லது "ஈழவர்கள்" என்று வரையறுக்க முனைந்த போதிலும், அவர்களை உணர்வு பூர்வமாக தங்களில் ஒருவராகக் கருத முடியாதிருந்த அந்நிய மனோபாவத்தையும், இந்த விடுதலை அமைப்புகளில் முஸ்லீம்கள் குறித்த தப்பெண்ணங்கள் எவ்வளவு ஆழமாக ஊடுருவியிருந்தது என்பதனையும் இவை வெளிப்படுத்தின. முஸ்லீம்கள் மீதான தாக்குதல்களை நியாயப்படுத்துவதற்காக, காட்டிக் கொடுக்கின்ற நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுகின்றார்கள் என்றும், அரசாங்கப் படைகளுடன் இணைந்து அப்பாவித் தமிழ் மக்களுக்கும் தமக்கும் எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்றும் விடுதலை அமைப்புகள் கூறின. எனினும் இத்தகைய நியாயப்படுத்தல்களில் தர்க்கப் பொருத்தம் இருக்கவில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்திலிருந்தே பல தமிழர்கள் காட்டிக் கொடுக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள்; பொலிஸ் அதிகாரிகளாகவும், உளவுப்பிரிவைச் சேர்ந்தவர்களாகவும் இருந்த பல தமிழர்கள். விடுதலை அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டும் வந்திருக்கிறார்கள். போராட்டத்தின் பிற்பகுதிகளில். விடுதலை அமைப்புகளின் அராஜகங்களுக்கு எதிராக தமிழ் மக்கள் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர்; மேலும் விடுதலைப் புலிகள் ஏனைய இயக்கங்களைத் தடை செய்தபோது அவற்றில் அனேகமானவை இலங்கை மற்றும் இந்திய இராணுவத்தினருடன் இணைந்து. விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும். பல சந்தர்ப்பங்களில் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராகவும் செயற்பட்டு வந்திருக்கின்றன. அப்போது விடுதலைப்புலிகள் சிங்கள அரசுடன் இணைந்து ஏனைய அமைப்புகளை வேட்டையாடியது. எனினும் விடுதலை அமைப்புகள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்ட தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களை தாக்கி அழிக்கவில்லை. பதிலாக தமிழர்களினால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய நடவடிக்கைகளை. தனிநபர் துரோகமாகக் கருதி. சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மட்டுமே தண்டனை வழங்கின.

ஆனால் முஸ்லீம்களில் சிலர் காட்டிக் கொடுக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும். அரசாங்கப் படைகளுடன் சேர்ந்து செயற்பட்ட போதும் விடுதலை அமைப்புகளின் அராஜகங்களுக்கு எதிராக வெகுஜன எதிர்ப்புகளைக் காட்டியபோதும். விடுதலை அமைப்பினர் அவற்றை தனிநபர் துரோகமாகக் கருதாமல் அவற்றை ஒரு அந்நிய சமூகத்தின் சமூகத் துரோகமாகக் கருதி முழுச் சமூகத்தையுமே கூட்டாகத் தண்டித்தனர். அவர்கள் வாழ்ந்த பிரதேசங்களைத் தாக்கி அழித்தனர்: பள்ளிவாசல்கள், மத்ரசாக்கள் (அதாவது மதப் பாடசாலைகள்) என்பவற்றை சேதப்படுத்தினார்கள்; அக்கட்டிடங்களில் "ஓம்" "சூலம்" போன்ற இந்துமத அடையாளங்களை இட்டனர். அவற்றில் இருந்த முஸ்லீம்களின் மதநூலான குர்ஆனை கிழித்து எரித்தனர். இவை அனைத்தும் தமிழீழ விடுதலை அமைப்புகளில் முஸ்லீம் விரோத உணர்வு எவ்வளவு ஆழமாக வேருன்றியிருந்தது என்பதற்கான அடையாளங் களாக விளங்கின. (பிற்காலங்களில் அம்பாறை மாவட்டத்தில் 44 முஸ்லீம் பொலிசாரையும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காத்தான் குடியில் தொழுதுகொண்டிருந்த நூற்றுக்கணக்கான முஸ்லீம்களையும் படுகொலை செய்ததும், வடபகுதி முஸ்லீம்களை 48 மணிநேர அவகாசத்தில் அங்கிருந்து வெளியேற்றியதும், விடுதலை அமைப்புகளில் காணப்பட்ட ஆழமான முஸ்லீம் விரோத உணர்வுகளின் உச்ச வெளிப் பாடாக அமைந்திருக்கின்றன.)

### (iv) தமிழ் ~ முஸ்லீம் மோதல்களில் அரசபடைகளின் பங்கு

**1985** இலும், அதற்குப் பின்னரும் கிழக்கில் இடம்பெற்ற தமிழ்-முஸ்லீம் மோதல்களில், அரச படையினர் வகித்த பங்கு முக்கியமானது. இவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும்; இம்மோதல்களைத் தூண்டுவதிலும், இவற்றில் முஸ்லீம்களை ஈடுபடுத்துவதிலும் தீவிரமாகச் செயற்பட்டனர். சில சந்தர்ப்பங்களில் தமிழ் பகுதிகளுக்குள் சென்ற முஸ்லீம்களை அரச படையினர் கொன்றுவிட்டு, அவற்றை விடுதலை அமைப்புகளின் செயலாகக் காட்டுவதன் மூலமாக முஸ்லீம்களைத் தூண்டினார்கள். கிழக்கில் தமிழ்-முஸ்லீம் மக்களிடையே ஏற்படக்கூடிய அரசியல் ஐக்கியத்தைச் சிதைப்பதன் மூலமாக, தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் பலவீனப்படுத்து கின்ற நோக்கத்தில், அன்றைய தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியின் தலைமையில் அரசு திட்டமிட்டு செயற்பட்டு வந்தது. இதற்காக கிழக்கில் தமிழ் - முஸ்லீம் நல்லுறவைச் சீர்குலைப்பதும்,அவர்களிடையே பகைமையை ஏற்படுத்துவதும் அவசியமாக இருந்தது. இதை நிறைவேற்றுவதற்காக அரசு, முக்கியமாக தனது உளவுப் பிரிவான NIB யைப் பயன்படுத்தியது. இந்த NIB சில தனி நபர்களினூடாக முஸ்லீம்கள் சிலரைப் பயன்படுத்தி, கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவுகளைச் சீர்குலைப்பதில் தீவிரமாகச் செயற்பட்டது. இந்த NIB யின் திட்டத்துடனும், உதவியுடனும் தான் இக்கொலைப்படையினர் கிழக்கில் முக்கிய முஸ்லீம் பிரமுகர்களைக் கொலை செய்தார்கள். பின்னர் இவற்றை தமிழ் இயக்கங்களின் செயல் எனக்கூறி, தமிழ் -முஸ்லீம் மக்களிடையே மோதல்களைத் தூண்டினர். இவ்வாறு அரசாங்கமும், உளவுப் பிரிவும், ஆயுதப் படையினரும் கிழக்கில் தமிழ் -முஸ்லீம் உறவுகளைச் சீர் குலைப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளுக்குரிய சாதகமான சூழலை, கிழக்கு முஸ்லீம்கள் மீதான விடுதலை அமைப்புகளின் அராஜகச் செயற்பாடுகள் உருவாக்கிக் கொடுத்தன.


# உயிர்ப்பு

பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் வெளிவரும் உயிர்ப்புப் பிரதிகளை இனி வருங்காலங்களில் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்ள கீழ்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தமிழீழம், சிறிலங்கா, இந்தியா இலவசம்.

மற்றைய நாடுகளுக்கான
ஆண்டுச் சந்தா: £ 10.00

உயிர்ப்பில் வரும் கட்டுரைகள் மற்றும் விடயங்கள் பற்றிய குறிப்புக்களையும் விமர்சனங்களையும் அபிப்பிராயங்களையும் எழுதி கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புங்கள்.

பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளால் வரும் இப்பத்திரிகையை தங்கள் நண்பர்கட்கும் அறிமுகப்படுத்தி விவாதங்களை விரிவுபடுத்தி தங்கள் பங்களிப்புகளை வழங்குங்கள்.

உயிர்ப்பு விலாசம்:
UYIRPPU
BM BOX 4002
LONDON WC1N 3XX
UNITED KINGDOM




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மத்திய கிழக்கு வேலை வாய்ப்புகளினால்

# கிழக்கு முஸ்லீம்கள் மத்தியில் ஏற்பட்ட தாக்கங்கள்

1977இன் பின்னர், இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையின் காரணமாக இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு: குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை பெற்றுச் செல்ல ஆரம்பித் தார்கள். இந்த மத்திய கிழக்கு வேலை வாய்ப்பு, கிழக்கு முஸ்லீம்களின் சமூக பொருளாதார அமைப்பில் குறிப்பான மாற்றங்களை ஏற்படுத் தியது. மத்திய கிழக்கு வேலை வாய்ப்பு, ஆரம்பத்தில் முஸ்லீம் இளைஞர்கள் மத்தியி லேயே ஆர்வத்தை ஏற்படுத்தியது. முஸ்லீம் பெண்கள் தொழிலுக்காக வெளிநாட்டுக்கு செல்வது மதத்திற்கு முரணானது எனக்கூறி, முஸ்லீம் பெண்கள் வெளிநாடு செல்வதை மதநிறுவனங்கள் தடுக்க முயன்றன. எனினும் அதிகரித்துச் சென்ற வறுமையும், வாழ்க்கைச் செலவும், வேலைவாய்ப்பின்மையும், புதிய நுகர்வுப் பொருட்கள் கட்டுப்பாடற்ற முறையில் இறக்குமதி செய்யப்பட்டதால் உருவாக்கப்பட்ட நுகர்பண்ட வெறியும் மத நிறுவனங்கள் போட்ட இத்தகைய கட்டுப்பாடுகளை உடைத்து நொறுக்கின. முதலில் தென்னிலங்கை முஸ்லீம் பெண்கள் மத்திய கிழக்குக்குச் செல்லத் தொடங் கினார்கள்.

சமூகக் கட்டுப்பாடுகளும், இறுக்கமான உறவுகளும் நிறைந்திருந்த கிழக்கில், முஸ்லீம் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வது பரவலாக இடம்பெறவில்லை. அங் கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில முஸ்லீம் பெண்களே மத்திய கிழக்குக்குப் பயண மானார்கள். 1980களின் நடுப்பகுதிவரை இத்தகைய நிலைமையே காணப்பட்டது. ஆனால் 1985 வன்முறை நிகழ்வுகளுக்குப் பின்னர், கிழக்கின் சூழ்நிலையானது தொடர்ச்சியாகக் குழப்பத்துக்குள்ளான போது, கிழக்கு முஸ்லீம் பெண்களின் மத்திய கிழக்குப் பயணம் துரிதமாக அதிகரித்தது. பரஸ்பர ஆட்கடத்தல், தாக்கு தல்கள், கொலைகள் என கிழக்கின் சூழல் பாதுகாப்பற்றதாக மாறியதால், அங்கு விவசாய முயற்சிகள் காட்டுத்தொழில், குடிசைக் கைத் தொழில், மீன்பிடி மற்றும் கூலித்தொழில் என்பன பெரிதும் பாதிக்கப்பட்டன. இதனால் முற்றிலும் இவற்றில்தங்கியிருந்த சிறுவிவசாயிகள், கூலி யாட்கள், மற்றும் மீனவர்கள் ஆகியோர் வறுமையின் பிடிக்குள் இறுக்கப்பட்டார்கள். இதன் தவிர்க்க முடியாத (மற்றும் தடுக்க முடியாத) நிகழ்வாக, கிழக்கு முஸ்லீம் பெண்கள் அதிக எண்ணிக்கையில் மத்திய கிழக்குக்குச் செல்ல ஆரம்பித்தார்கள். முஸ்லீமாக இருந்ததாலும் ஆண்களைவிட மிகவும் குறைந்த கட்டணத்தில், அல்லது கட்டணமின்றியும் உடனடியாகச் செல்லக்கூடியதாக இருந்ததாலும், ஆயிரக் கணக்கான வறிய முஸ்லீம் பெண்கள் மத்திய கிழக்கிற்குச் செல்லத் தொடங்கினார்கள்.

இவ்வாறு அதிக எண்ணிக்கையிலும், தொடர்ச்சியாகவும் கிழக்கு முஸ்லீம் பெண்கள் மத்திய கிழக்குக்குச் செல்லத் தொடங்கியதன் விளைவாக, கிழக்கு எங்கும், உழைப்பதற்கு அவசியமில்லாத, உழைப்பதில் ஆர்வம் குறைந்த ஆண்கள் கூட்டம் ஒன்று உருவாகத் தொடங் கியது. வெளிநாடு சென்ற பெண்களின் கணவன் மார், அவர்களின் வயதுவந்த மகன்மார், அல்லது தகப்பன் மற்றும் சகோதரர்கள் போன்றோர் இதன்பின்னர் வேலை செய்ய வேண்டிய அவசியமின்றி, வீதிச் சந்திகளிலும், கடைத் தெருக்களிலும் குழுமத் தொடங்கினார்கள்.

அத்துடன், மத்திய கிழக்கு வேலை வாய்ப்பின் காரணமாக கிழக்கு முஸ்லீம்களின் பொருளாதாரத் தன்மையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. வெளிநாடு சென்ற பெண்களிடம் இருந்து ஒவ்வொரு மாதமும் ஆயிரக்கணக்கில் பணம் வரத் தொடங்கியது. இதன் காரணமாக ஒருபுறத்தில் வறிய மற்றும் கூலிவிவசாயிகளின் விவசாய முயற்சிகள் பலவீனப்பட்டன. உற்பத்தியிலும் உழைப்பிலும் ஈடுபடாமலேயே தமது பொருளாதாரத் தேவை களை நிறைவு செய்யக் கூடிய நிலை இப்போது இருந்ததால், தமது தொழிலுக்கு ஏற்பட்டிருக்கின்ற நிலை குறித்து இவர்கள் அதிகம் கவலைப்படவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல்லை. விவசாயம் செய்வதற்கு ஏற்றதாக இல்லாத போதிலும், அத்தகைய சூழலை மாற்றியமைக்க வேண்டியது அவசியம் என்ற எண்ணம் கூட ஏற்படாமல் இந்த மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு அவர்களைத் தடுத்தது. மறுபுறத்தில் மத்திய கிழக்கு வேலைவாய்ப்பானது, கிழக்கு எங்கும் வியாபாரத்தில் ஈடுபடக் கூடிய முஸ்லீம்களின் எண்ணிக்கையை வெகுவாக உயர்த்தி விட்டது. அதிகரித்த பணப்புழக்கத் தினாலும், விவசாயத்திற்கு ஏற்பட்ட மோசமான பாதிப்புகளினாலும் வியாபாரம் வளர்ந்து பெருகியது. மூலை முடுக்கு எங்கும் சிறு சிறு கடைகள் தோன்றின. அத்தியாவசியப் பொருட் களுக்குரிய கடைகள் மாத்திரமன்றி, ஆடம்பரப் பொருட்களுக்குரிய கடைகளும் உருவாகத் தொடங்கின.

மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு கிழக்கு முஸ்லீம்களின் விழுமியங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்தியது. அவர்களின் மத்தியில் நிலவிய விவசாய சமூகத்திற்குரிய இறுக்கமான ஒழுக்க நெறிகளும், கலாச்சார மதிப்பீடுகளும் இப்போது மாற்றமடையத் தொடங்கின. மத்திய கிழக்குக்குச் சென்ற ஆண்கள், பெண்கள் மத்தியில் மாத்திரமன்றி, ஊரில் உழைப்பில் ஈடுபடாமல் இருந்த அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மத்தியிலும் இத்தகைய விழுமிய மாற்றங்கள் உருவாகின. குடும்பத் தலைவனுக்கு கட்டுப்பட்டும், தங்கியும் இருக்க வேண்டிய இறுக்கமான விவசாயக் குடும்ப உறவுகள் சிதைவடைந்து, தமது சுதந்திரமான தேர்வுகளைச் சாத்தியமாக்குகின்ற தளர்ந்த உறவுகள் உருவாகின.

இவ்வாறாக கிழக்கு முஸ்லீம்களின் சமூக, பொருளாதார உறவுகளிலும் விழுமியங்களிலும் ஏற்பட்ட மாற்றங்களுடன், நிலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த உறவுகள் படிப்படியே சிதைவுறத் தொடங்கின. தமது அடிப்படைத் தேவைகள் நிறைவேறுவதற்கு, தமிழ் மக்களுடன் நெருங்கிய உறவுகளைப் பேணிவந்த முஸ்லீம் விவசாயிகளின் இடத்தில், அத்தகைய உறவுகளுக்கான தேவையைக் கொண்டிராத சிறு வர்த்தகர்களும், புதிய நலன்களும் பண்புகளும் கொண்ட உழைப்பில் ஈடுபடாதவர்களும் உருவாகிக் கொண்டிருந்தார்கள். இவர்களுடன், ஏற்கனவே தமிழ்த் தரப்பினருடன் நிர்வாக ரீதியாக முரண்பட்டுக்கொண்டிருந்த படித்த முஸ்லீம் பிரிவினர்: வீடுதலை அமைப்புகளின், வரி, கொள்ளை, தாக்குதல்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள், மற்றும் நிலவுடமையாளர்கள்: வன்முறைகளின் போதும், விடுதலை அமைப்பினரின் தாக்குதல்களினாலும் தமது உறவினர்களையும், உடமைகளையும் இழந்து குமுறிக் கொண்டிருந்தோர். . . . என தமிழ் மக்களுடன் முரண்பாட்டைக் கொண்டிருந்த முஸ்லீம் பிரிவினரின் சமூக ஆதிக்கம் மேலோங்கியது. இதன் பின்னர் கிழக்கு முஸ்லீம்களில் பெரும்பான்மையினராக இருக்கின்ற நடுத்தர விவசாயிகளின் தேவைகளும், நலன்களும் சமூக அளவில் முக்கியத்துவம் இழக்கத் தொடங்கின.

### ஊர்காவல் அமைப்பின் தோற்றம்

**1985** மோதல்களுக்குப் பின்னர், கிழக்கு முஸ்லீம்களில் ஒரு சிறு தொகையினர் தமது ஊரைப் பாதுகாக்கும் நோக்கத்தில் ஆயுதப் படையினரின் ஆதரவுடனும், ஊர்காவல் அமைப்புகளில் பங்கேற்றும் செயற்பட ஆரம்பித்தார்கள். இவர்களில் ஒரு சாரார் "உதிரிகள்" பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் நிரந்தரத் தொழில் இல்லாதவர்களாகவும், சூது, களவு, போதைப் பொருள் பாவனை என்பவற்றில் ஈடுபடுகின்றவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் விடுதலை அமைப்புகளினால் மேற்கொள்ளப்பட்ட "சமூக விரோதச் செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளினால்" பாதிக்கப்பட்டிருந்தார்கள். சிலர் விடுதலை அமைப்புக்களினால் தண்டனை வழங்கப்பட்டவர்கள். (இவர்களில் சிலர், விடுதலை அமைப்புக்களின் தீவிர ஆதரவாளர்களாகவும் தம்மைக் காட்டிக் கொண்டவர்கள்) இன்னொரு பிரிவினர், மத்திய கிழக்குக்குச் சென்ற பெண்களின் குடும்பப் உறுப்பினர்களாக இருந்தார்கள். உழைக்க வேண்டிய அவசியமில்லாமலும் குடும்ப பொறுப்புக்களைக் கைவிட்டவர்களாகவும் இருந்த இவர்களில் கணிசமானோர் ஊர்காவல் அமைப்புகளில் இணைந்து கொண்டார்கள். தமிழ் - முஸ்லீம் வன்முறை மோதல்களின் போதும், விடுதலை அமைப்புக்களின் தாக்குதல்கள் மற்றும் கடத்தல் என்பவற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஒரு பிரிவினரும் இவற்றில் சேர்ந்து கொண்டார்கள். இவர்கள் முற்றிலும் அரச படைகளில் தங்கியிருந்ததால் அப்படையினரால் நேரடியாகக் கட்டுப்படுத்தப் படுகின்றவர்களாக இருந்தார்கள். இதனால் அரசபடையினர் இவர்களில் சிலரை, தமிழ் - முஸ்லீம் உறவைச் சீர்குலைப்பதற்கான தமது முயற்சிகளுக்குப் பயன்படுத்த முடிந்தது. இவர்கள் விடுதலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்புகளுக்கு எதிராக மட்டுமன்றி அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிரான செயல்களிலும் ஈடுபட்டார்கள். "முஸ்லீம்களின் பாதுகாவலர்கள்" என்ற உரிமையுடன் ஆயுதம் ஏந்திச் செயற்படத் தொடங்கிய இவர்கள் தமிழ் - முஸ்லீம் முரண்பாடுகளை மேலும் ஆழப்படுத்த முனைந்த அரச படையினரின் திட்டமிட்ட செயற்பாடுகளுக்குப் பொருத்தமான உடந்தையாளர்களாக மாறினார்கள்.

## 'ஜிஹாத்' அமைப்புக்கள்

இதே வேளையில் படித்த மற்றும் வர்த்தகக் குடும்பங்களைச் சேர்ந்த முஸ்லீம் இளைஞர்களில் ஒரு பிரிவினர், விடுதலை அமைப்புக்களின் தாக்குதல்களிலிருந்து தமது பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காக ஆயுத அமைப்புக்களை உருவாக்க முயன்றனர். இவர்கள் ஆயுதப் படையினரால் நேரடியாகக் கட்டுப்படுத்தப்படாதவர்களாக, ஓரளவுக்குத் தமது சுயேட்சையைப் பேணிய நிலையில், ஆயுதங்களைப் பெறுவதிலும், பயிற்சியெடுப்பதிலும் ஈடுபட்டனர். கல்முனை, காத்தான்குடி போன்ற செல்வமிக்க நகர்ப் பகுதிகளில் இப்போக்கு முதலில் தொடங்கியது. "ஜிஹாத்" இயக்கம் என்ற பெயரில், (ஜிஹாத் என்ற அரபுச் சொல், இறைவனுக்காக அர்ப்பணித்தல் என்ற கருத்தைக் குறிக்கிறது. மேலும் இஸ்லாத்தையும், முஸ்லீம்களையும் பாதுகாப்பதற்காக புனிதப் போர் புரிதல் என்ற தீவிர அர்த்தத்தையும் இது பெறுகிறது) செயற்பட்ட இவர்கள், ஆரம்பத்தில் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளைச் சேர்ந்த முஸ்லீம் செல்வந்தர்களிடம் பணம் பெற்று, அதன் மூலம் ஆயுதப்படையைச் சேர்ந்த சில உயரதிகாரிகளுக்கூடாக ஆயுதங்களை வாங்கினார்கள். அத்துடன் விடுதலை அமைப்புகளில் அராஜகம் உச்ச நிலையை அடைந்து, அதன் காரணமாக போராட்டத்தில் நம்பிக்கை இழந்து பலர் தாபனங்களை விட்டு வெளியேறுகின்ற போக்கு ஆரம்பித்த போது, அவர்களிடமிருந்தும் கணிசமான ஆயுதங்களை ஜிஹாத் இயக்கத்தினர் விலைக்கு வாங்கினார்கள்.

ஜிஹாத் இயக்கம் என்பது, கிழக்கிலுள்ள முழு முஸ்லீம் பிரதேசங்களையும் உள்ளடக்கிய ஒரு பொது அமைப்பு அல்ல. மாறாக பிரதேச அளவில் தனித் தனியாக, தன்னியல்பான முறையில் அவை தோன்றின. "ஜிஹாத்" என்றால் "புனித யுத்தம்" என்று அர்த்தம் பெறுவதால், பொதுவாக உலகெங்கும் உள்ள முஸ்லீம்கள் தமது சமூகத்தைப் பாதுகாக்கின்ற நோக்கத்தில் அமைப்புக்களை உருவாக்கும் போது, அங்கு "ஜிஹாத்" என்ற பதம் பிரபல்யம்பெறும். இங்கு கிழக்கு முஸ்லீம்களிடையே பிரதேச ரீதியில் தன்னியல்பாக உருவான பல அமைப்புக்களும் தம்மைத் தனித் தனியே "ஜிஹாத்" அமைப்பு என்றே அழைத்துக் கொண்டன. இவ்வாறு வெவ்வேறு பிரதேசங்களில் உருவான ஜிஹாத் அமைப்புகளுக்கிடையே நெருங்கிய தொடர்புகள் காணப்படவில்லை. விடுதலை அமைப்புக்களின் தாக்குதல்களில் இருந்து தமது பிரதேச முஸ்லீம்களின் உயிர்களையும், உடமைகளையும் பாதுகாக்கின்ற நோக்கத்துடன் செயற்பட்ட இவர்களுக்கு, தமது பிரதேச எல்லைகளுக்கு அப்பால் தமது அமைப்பை விரிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லை. மேலும் கிழக்கிலுள்ள பெரும்பாலான முஸ்லீம் பிரதேசங்களிடையே நெருங்கிய நிலத்தொடர்ச்சி காணப்படாததாலும், விடுதலை அமைப்புகள் கிழக்கு முழுவதிலும் செயற்பட்டதாலும் ஜிஹாத் அமைப்பினரால் தமது பிரதேச எல்லைகளைக் கடந்து செயற்பட முடியவில்லை. இவற்றின் காரணமாக, ஜிஹாத் இயக்கங்களிடையே நெருக்கமான உறவுகள் தோன்றவோ, அவ்வியக்கத்தினர் ஒரே தலைமைக் கூடாக, ஒரே இலக்கு சார்ந்து செயற் படவோ முடியவில்லை. பிற்காலங்களில் இவர்களிடையே ஆயுதம் வாங்குவதற்கு உதவு தல், ஆயுதப் பயிற்சிகள்... . போன்ற சில அம்ச ங்களில் சிறியளவில் ஒத்துழைப்புக்கள் ஏற்பட்ட போதிலும், ஒரு போதும் ஒன்றுபட்ட, ஒரே அமைப்பாக இவர்களினால் இயங்க முடியவில்லை.

ஆரம்பத்தில், ஜிஹாத் அமைப்புகளில் படித்தவர்களும், ஓரளவு வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் இணைந்திருந்த போதிலும், படிப்படியே முஸ்லீம் சமூகத்தின் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் அவற்றில் இணைந்து கொண்டார்கள். குறிப்பாக மத்திய கிழக்குக்குச் சென்ற பெண்களின் குடும்ப உறுப்பினர்கள் , தமது தொழில் வாய்ப்புக்கள் பாதிக்கப்பட்டவர்கள், விடுதலை அமைப்புக்களினால் பாதிக்கப்பட்டவர்கள் போன்றோர், ஜிஹாத் இயக்கங்களில் தீவிரமாகச் செயற்பட்டனர்.

ஆரம்பத்தில் ஜிஹாத் இயக்கத்தினர், அரச படையினரின் பிடிக்குள் முற்றிலும் அகப்பட்டு விடாமல், தமது சுயேட்சையை ஓரளவிற்கேனும் பேணிக்கொள்ள விரும்பிய போதிலும், விடுதலை அமைப்புக்களின் அடக்கு முறைகளும் அவற்றின் ஆயுத பலமும் தொடர்ந்து அதிகரித்து வந்ததன் காரணமாக, படிப்படியே அரச படைகளைச் சார்ந்து செயற்பட வேண்டிய நிலைக்கு மாறினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சில இடங்களில், ஜிஹாத் அமைப்புக்கள் முற்றிலும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இயங்கின. இவை படிப்படியே தமது நோக்கத்திலிருந்து விலகி, இராணுவ உயர் அதிகாரிகளின் மறைமுகமான ஆயுத விற்பனைக்குரிய சந்தையாக மாறின.

ஜிஹாத் அமைப்பினர் தாம் வாழ்ந்த பிரதேசத்தை, தமது ஆளுகைக்குட்பட்ட, சுதந்திரமான ஆட்சிப் பிரதேசமாகக் கருதிச் செயற்பட்டார்கள். முஸ்லீம் வியாபாரிகள், நிலவுடமையாளர்கள், உத்தியோகத்தர்கள் என்பவர்களிடமும், நிவாரண உதவி பெறுகின்ற சாதாரண பொது மக்களிடமும் இவர்கள் கண்டிப்பான முறையில் வரி அறவிட்டாகள். தமது பகுதிகளில் இஸ்லாமியச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக அறிவித்தார்கள். அதாவது சூது, களவு, குடி, விபச்சாரம், திரைப்படங்கள், வீடியோ. . . . போன்றவை தடை செய்யப்பட்டு, இவற்றில் சம்பந்தப்படுபவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்பட்டன. எனினும் ஜிஹாத் அமைப்பினர் தாம் அமுல்படுத்திய இந்த சட்டங்களுக்கு ஒருபோதும் விசுவாசமாக இருக்கவில்லை. தமது சமூகத்தினரிடையே, மதத்தின் பெயரால் இவர்கள் எவற்றையெல்லாம் தடை செய்து, தண்டனைக்குரியவைகளாக ஆக்கினார்களோ அவை அனைத்தையும் அவர்களே செய்து வந்தார்கள். "சமூகத்திற்காக உயிரைத் துறக்கப் போகிறோம்" என்ற நியாயப்படுத்தலுடன், எவ்வித குற்றவுணர்வுமின்றி தடை செய்யப்பட்ட அனைத்தையும் இவர்கள் செய்து வந்தார்கள். வரி, வசூல் என்பவற்றின் மூலமாக, இவர்களிடம் லட்சக் கணக்கில் பணம் திரண்டது. இதை அனுபவிப்பதிலும், பகிர்ந்து கொள்வதிலும் போட்டியும் முரண்பாடுகளும் ஏற்பட்டன. இதனால் தலைமைப் பொறுப்புக்களிலிருந்தவர்கள் அடிக்கடி மாற்றப்பட்டு, புதியவர்கள் நியமிக்கப்பட்டார்கள். சில இடங்களில் உட்கொலைகளும் இடம் பெற்றன. இவ்வாறான செயல்களுக்கு எதிராக தமது பிரதேச முஸ்லீம்களிடமிருந்து எவ்வித உணர்வலைகளும் தோன்றிவிடாமல் தடுப்பதற்காகவே ஜிஹாத் அமைப்பினர் இஸ்லாமிய சட்டத்தை அமுல்படுத்தினார்கள். உண்மையில், இஸ்லாமிய சட்டம் என்ற பெயரில் அவ்வப் பிரதேச முஸ்லீம் கள் மீது கடுமையான அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன. இவ்வாறு விடுதலை அமைப்புக்களின் அராஜகத்தை எதிர்த்துப் போராட முன்வந்த ஜிஹாத் அமைப்பினர், விரைவிலேயே அந்த அராஜகத்தை ஒன்று விடாமல் தமது சொந்த மக்களின் மீது தாமே பிரயோகிப்பவர்களாக மாறினார்கள். இத்தகைய அராஜகத்தின் மூலம் தமது பகுதி முஸ்லீம்கள் மீது ஆதிக்கம் செலுத்தவும், வரி, வசூல் என்பவற்றைத் தடையின்றி பெறவும், தாம் விரும்பியவாறு செயற்படவும் அவர்களால் முடிந்தது.

இவ்வாறிருந்தும், ஜிஹாத் அமைப்பினர் தமது பிரதேச முஸ்லீம்களின் பலத்த ஆதரவைப் பெற்றார்கள். விடுதலை அமைப்புக்களின் அராஜகங்களினால் அச்சத்திற்கு உள்ளானவர்களாயும், ஆவேஷம் கொண்டவர்களாகவும் இருந்த கிழக்கு முஸ்லீம்கள், தம்மை ஜிஹாத் அமைப்பினர் பாதுகாப்பார்கள் என்று நம்பினார்கள். மேலும் ஜிஹாத் உறுப்பினர்கள், அந்தந்தப் பகுதி முஸ்லீம்களின் உறவினர்களாகவும், இம் முஸ்லீம்களை ஏதோ வழியில் பாதிப்புக்குள்ளாக்கிய விடுதலை அமைப்புக்களுக்கு எதிராக போராட முன் வந்தவர்களாகவும் இருந்தனர். இதனால் ஜிஹாத் அமைப்பினர் முஸ்லீம்களின் அனுதாபத்தையும், மதிப்பையும் பெற்றவர்களாகவும், இளஞ் சந்ததியினரான மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில், அபிமானத்திற்கும், வியப்புக்கும் உரிய "கதாநாயகர்களாகவும்" விளங்கினார்கள்.

கிழக்கு முஸ்லீம்களிடையே ஜிஹாத் இயக்கங்களும், ஊர்காவல் அமைப்புக்களும் உருவாகிய பின்னர், அங்கு தமிழ் - முஸ்லீம் உறவுகள் மேலும் சீர்குலைக்கப்பட்டன. தாங்கள் விடுதலை அமைப்புக்களுக்கு எதிராகச் செயற்பட தொடங்கி விட்டதால், என்றோ ஒரு நாள் அந்த அமைப்புகளினால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று இந்த முஸ்லீம் ஆயுதப் பிரிவினர் அச்சம் கொண்டிருந்தனர். எனவே தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தி கொள்வதற்கு, கிழக்கின் சூழ்நிலை குழப்பப்படுவதும்,அங்கு தமிழ் - முஸ்லீம் உறவுகள் மேலும் சீர்கெடுவதும் இவர்களுக்கு அவசியமானவையாக இருந்தன. கிழக்கில் மீண்டும் தமிழ்-முஸ்லீம் நல்லுறவு ஏற்படுமாயின், அதனால் இந்த முஸ்லீம் ஆயுதப் பிரிவினரின் உயிருக்கு ஆபத்து உண்டாகக் கூடிய சாத்தியம் இருந்தது. அதாவது இத்தகைய நல்லுறவு ஏற்படுமாயின், சாதாரண தமிழ் மக்களுடன் சேர்ந்து, விடுதலை அமைப்பினரும் முஸ்லீம் பிரதேசங்களுக்குள் நடமாடக் கூடிய வாய்ப்புகள் ஏற்படும். மேலும் இத்தகைய ஒன்றுதலின் மூலம் அமைதியான சூழ்நிலை உருவாகுமாயின், அதன் பின் ஆயுதப் படையினரின் கண்காணிப்பிலிருந்து,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அத்தகைய பிரதேசங்கள் விடுபடக் கூடிய நிலை உருவாகும். இவற்றின் விளைவாக, முஸ்லீம் ஆயுதப் பிரிவினர், விடுதலை அமைப்புக்களின் தாக்குதல்களுக்கு எளிதில் உள்ளாக நேரிடும்.

இவ்வாறான நிலைமை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, முஸ்லீம் ஆயுதப் பிரிவினர் கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவுகளைத் திட்ட மிட்டு சீர்குலைத்தார்கள். தமது பிரதேசங்களுக் குள் பொருட்களை வாங்கவோ, விற்கவோ வருகின்ற சாதாரண தமிழர்களையும், கூலி உழைப்பிற்காக வந்த தமிழர்களையும் மாத்திர மின்றி, தமது பகுதியிலுள்ள முஸ்லீம்களையும் கூட திட்டமிட்டுக் கொலை செய்ததன் மூலம் அவர்கள், இந்த உறவை சீர்குலைத்தார்கள். சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசின் ஸ்தாபகரான காத்தான் குடியைச் சேர்ந்த அஹமட் லெப்பை, மூதூரில் உதவி அரசாங்க அதிபராக இருந்த ஹபீப் முகம்மது, முன்னாள் மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல். அப்துல் மஜீது போன்ற முக்கிய நபர்களினதும், பிரபல்யம் பெறாத இன்னும் பல சாதாரண முஸ்லீம்களினதும் கொலைகளுக்கு இந்த முஸ்லீம் ஆயுதப் பிரிவினர் காரணமாக அமைந்தனர். இந்த முக்கிய நபர்களின் கொலை களில் அரச படையினரும், NIB யும் பின்னணியில் நின்று செயற்பட்டனர். ஆயுதப் படையிலும், NIB யிலும் இருந்த சில உயரதிகாரிகளுக்கு கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவு குழப்பப்படுவது பல வகைகளில் அவசியமானதாக இருந்தது. முதலா வதாக இங்கு தமிழ் - முஸ்லீம் மக்களிடையே ஏற்படக் கூடிய பகைமை, தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும். இரண்டாவ தாக இத்தகைய பகைமையின் மூலமாக இராணுவத்துடன் இணைந்து செயற்படக் கூடிய முஸ்லீம்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். மூன்றாவதாக இத்தகைய குழப்ப நிலை தொடரும் போது ஜிஹாத் அமைப்பினருக்கு தாம் ஆயுத விற்பனை செய்வதும் அதிகரிக்கும். மேலும் இத்தகைய குழப்ப நிலை காரணமாக அரசாங்கம் வழங்கக் கூடிய நிவாரணத்தில் கணிசமான வற்றை தாங்கள் அபகரித்துக் கொள்வதும் சாத்தியப்படும். எனவே இவர்கள், தமிழ் - முஸ்லீம் சமாதானத்திற்காக உழைக்கின்ற முஸ்லீம் பிரமுகர்களையும் வேறு முஸ்லீம் முக்கியஸ்தர் களையும் கொலை செய்வதில், முஸ்லீம் ஆயுதப் பிரிவினருக்கு பக்க பலமாக நின்றார்கள். திட்டங் கள் வகுத்தும், ஆயுத மற்றும் போக்குவரத்து வசதிகள் வழங்கியும் இத்தகைய கொலைகள் இடம் பெறுவதற்குக் காரணமாக அமைந்தார்கள்.

காத்தான்குடி அஹமட் லெப்பை, மூதூர் மஜீது. . . . போன்ற முற்போக்கு, ஜனநாயக சக்திகள் கொலை செய்யப்பட்டதானது, கிழக்கு முஸ்லீம்களிடையே உருவாகக் கூடிய ஜனநாயக இயக்கத்திற்கு பலத்த பின்னடைவைக் கொடுத் திருக்கிறது. உண்மையில் இவர்கள், கிழக்கு முஸ்லீம்களிடையே இருந்த முற்போக்கு, ஜனநாயகப் பிரிவினருக்கு தலைமை தாங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். இவர்கள் கிழக்கு முஸ்லீம்களின் சுயமான அரசியற் குரலாக வெளிப்பட்டார்கள். தாம் வாழ்ந்த பிரதேச முஸ்லீம்களின் மத்தியில் இவர்களின் வார்த்தை களுக்கு அதிக மதிப்பு இருந்தது. இவர்களின் மீது அந்த மக்கள் அதிக நம்பிக்கை கொண்டிருந் தார்கள். இவர்கள் பகைமையாக்கப்பட்டுக் கொண்டிருந்த தமிழ் - முஸ்லீம் உறவுகளை சீர்ப்படுத்த தீவிரமாக உழைத்தார்கள். பௌத்த - சிங்கள இனவாத ஒடுக்கு முறைகள் குறித்தும், அவற்றுக்கு எதிராகப் போராடுகின்ற தமிழ் மக்களுடன் சுமுகமான உறவுகளைப் பேணுவதன் அவசியம் குறித்தும் இவர்கள் வலியுறுத்தி வந்தார்கள். இவ்வகையில் கிழக்கில் தமிழ்- முஸ்லீம் சமூகங்களை ஒன்றிற்கு ஒன்று எதிராக நிறுத்துவதற்கு திட்டமிட்டு வந்த பௌத்த- சிங்கள இனவாதத்தின் முயற்சிகளுக்கு இவர்கள் பெரும் இடைஞ்சலாக இருந்தார்கள். எனவே இவர்கள் கொலை செய்யப்படுவது சிங்கள அர சிற்கு அவசியமாகவும் சாதகமாகவும் இருந்தது. இவர்களின் கொலைகளினால் கிழக்கின் முஸ்லீம் முற்போக்கு, ஜனநாயக இயக்கத்திற்கு ஏற்படுத் தப்பட்ட இடைவெளி இன்னமும் நிரப்பப்படாம லேயே இருக்கின்றது. இத்தகைய ஒரு ஜனநாயக இயக்கம் கருக் கொள்ளக் கூட முடியாத நிலையே இன்று வரை கிழக்கில் இருந்து வருகிறது.

கிழக்கில் தமிழ்-முஸ்லீம் உறவைச் சீர்குலைப்பது, முஸ்லீம் ஆயுதப் பிரிவினருக்கு இன்னொரு விதத்திலும் அவசியமானதாக இருந்தது. அதாவது இவ்வாறான குழப்பநிலை தொடரும் போது தான் உள்ளூரிலும், வெளியிடங் களிலும் (குறிப்பாக தெற்கு முஸ்லீம் செல்வந்தர் களிடம்) பணம் வசூலிப்பதும், வரி அறவிடுவதும் சாத்தியப்படும். மேலும் இத்தகைய குழப்ப நிலை காரணமாக அரசாங்க மற்றும் அரசு சார்பற்ற முஸ்லீம் நிறுவனங்களுக் கூடாக வழங்கப் படுகின்ற நிவாரண உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படுவதும், அவற்றில் இருந்து கணிசமான பகுதியை தாங்கள் பெற்றுக்கொள்வதும் சாத்தியப்படும். எனவே இந்த முஸ்லீம் ஆயுதப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரிவினர் பல்வேறு வழிகளிலும், தமிழ் - முஸ்லீம் உறவுகளைக் குலைப்பதில் முனைந்து செயற் பட்டனர். சில இடங்களில் இவர்கள் தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்முறைகளிலும் ஈடுபட்டார்கள்.

இவ்வாறு கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவுகள் சீர்குலைக்கப்பட்டு, முஸ்லீம் பிரதேசங் களின் சூழ்நிலை அச்சத்துக்குரியதாக மாற்றப்ப ட்டதன் காரணமாக மேலும் சில புதிய பிரிவினர்கள் பொருளாதார ரீதியில் பெரும் நன்மைகளை அடைந்தார்கள். அரசாங்கத்தினாலும், அரச சார்பற்ற முஸ்லீம் நிறுவனங்களினாலும் வழங்கப்ப ட்ட நிவாரண உதவிகளில் கணிசமான பகுதியை, முஸ்லீம் ஆயுதப் பிரிவினர், இராணுவ உயரதிகாரி கள் என்பவர்களோடு, உள்ளூர்க் கிராம சேவை யாளர்கள், நிவாரணப் பணியாளர்கள், மொத்த வியாபாரிகள் என பல பிரிவினரும் பகிர்ந்து கொண்டார்கள். கிழக்கு முஸ்லீம் பிரதேசங்களில் குழப்பமான, அச்ச மூட்டக் கூடிய சூழலைத் தொடர்ந்தும் பேணுவதன் மூலமாக, பொருளாதார ரீதியில் வசதிகளைப் பெருக்கிக் கொண்டிருந்த இத்தகைய புதிய பிரிவினர், தமிழ் - முஸ்லீம் உறவுகளை மேலும் சீர்குலைப்பதில் ஈடுபட்ட முஸ்லீம் ஆயுதப் பிரிவினருக்கு தமது ஆதரவு களை வழங்கினார்கள்.

இவ்வாறு 1985 வன்முறை மோதல் களுக்குப் பின்னர், கிழக்கு முஸ்லீம்களில் ஒரு சாரார் கடுமையான தமிழ் விரோத உணர்வுடனும், சுயநல நோக்கங்களுடனும் செயற்பட்டுக் கொண்டிருக்க, இன்னொரு பக்கத்தில், தமிழ் - முஸ்லீம் நல்லுறவுகளின் தேவையைக் கொண்டிரு ந்த முஸ்லீம் விவசாயிகளும், முஸ்லீம் முற்போக்கு ஜனநாயகப் பிரிவினரும் தமது பங்கிற்கு செயற்படவே செய்தார்கள். 85 வன்முறை மோதல்களின் பாரதூரமான விளைவுகள் இவர்களைக் கலக்கமடையச் செய்தன. தமிழ் - முஸ்லீம் உறவுகளைச் சிதைப்பதில் ஆயுதப் படையினர் கொண்டிருந்த ஆர்வம் அவர்களை அச்சத்திற் குள்ளாக்கியது. ஆயுதப்படையினர், கிழக்கு முஸ்லீம்களையும், தமிழ் மக்களையும் நிரந்தரப் பகையாளிகளாக்கத் திட்டமிடுகிறார் கள் என்பதை அவர்கள் புரிந்த கொண்டார்கள். தமிழ் மக்களுடன் ஏற்படக் கூடிய நிரந்தரப் பகைமையின் விளைவாக, தமது பொருளாதார த்திற்கும், வாழ்க்கை முறைகளுக்கும் ஏற்படக் கூடிய பாதிப்புகளை அவர்கள் தெளிவாக உணர்ந்து கொண்டார்கள். எனவே மீண்டும் இத்தகைய மோதல்கள் ஏற்படாமல் தடுக்க வேண்டியது அவசியம் என்று இவர்கள் கருதினார்கள். கிழக்கு முஸ்லீம்கள் தமக்குள் ஒன்றிணைந்து, ஒரே குரலில் தமது கருத்துக் களைத் தெரிவிக்கக் கூடிய நிலை உருவாகும் போதுதான், அவர்கள் ஆயுதப்படையினரின் பிடிக்குள் அகப்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ள முடியும் என்று முஸ்லீம் முற்போக்கு, ஜனநாயகப் பிரிவினர் முடிவு செய்தார்கள். இதன் தொடர்ச்சியாக, கிழக்கின் அனைத்து முஸ்லீம் பிரதேசங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்புக்களை உருவாக்குகின்ற முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இத்தகைய முயற்சிகளில் காத்தான்குடியைச் சேர்ந்த அஹமட் லெப்பை மிகவும் மும்மரமாக ஈடுபட்டார். இவை தொடர்பான கூட்டங்களில், தமிழ் - முஸ்லீம் ஒற்றுமையின் அவசியம்பற்றி வலியுறுத்தப்பட்ட தோடு, கிழக்கு முஸ்லீம்களின் விடயங்களில் விடுதலை அமைப்புக்களோ, ஆயுதப் படையினரோ தலையிட வேண்டாம் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் இந்த அமைப்புக்கள் தொடங்கப்பட்ட மிகக் குறுகிய காலத்திலேயே செயலிழந்து விட்டன. இவற்றின் பிரதிநிதிகள் ஒன்றுக்கொன்று முரண் பட்ட இரண்டு சிங்களக் கட்சிகளின் ஆதரவாளர் களாக இருந்ததாலும், தமது சொந்த ஊர்களில் இராணுவம் மற்றும் முஸ்லீம் ஆயுதப் பிரிவினரை முகம் கொடுக்க வேண்டியிருந்ததாலும், விடுதலை அமைப்புக்களினால் தாக்கப்படலாம் என அஞ்சியதாலும் தங்களது சொந்தப் பிரதேசங் களுக்குத் திரும்பியவுடன் இவர்கள் இந்த அமைப்புக்களில் இருந்து விலகிக் கொண்டார்கள்.

இதன் பின்பும் கூட, SLFP யைச் சேர்ந்த சில முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைப்பாளர்களும் மற்றும் சில முற்போக்கு எண்ணம் கொண்டவர்களும் தமிழ் - முஸ்லீம் ஒற்றுமையின் அவசியம் பற்றியும், இதைச் சீர்குலைப்பதில் அரச படைகள் திட்டமிட்டுச் செயற்படுகின்றன என்றும் வெளிப்படையாகவே பேசி வந்தார்கள், மேலும் இவர்கள் தமிழ் பிரமுகர்களுடன் இணைந்து, சமாதானக் குழுக்களை அமைத்து தமிழ் - முஸ்லீம் ஒற்றுமை க்காகச் செயற்பட்டார்கள். இவ்வாறு செயற்பட் டவர்களில் முக்கியமானவர்களான காத்தான்குடி அஹமட் லெப்பை, மூதூர் மஜீது....போன்றவர்கள் அரச படையினரின் உதவியுடன், முஸ்லீம் ஆயுதக் குழுக்களினால் கொலை செய்யப்பட்டார்கள். தமிழ் - முஸ்லீம் ஐக்கியத்தைப் பேண விரும்பிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சில தமிழ்ப் பிரமுகர்களும் கூட, இதே போன்று ஆயுதப் படையினராலும், விடுதலை அமைப்புக் களினாலும் கொல்லப்பட்டார்கள். இவ்வாறு தமிழ்-முஸ்லீம் ஐக்கியத்தைப் பேண விரும்பியவர்கள் கொடூரமாக அடக்கப்பட்ட பின்னர், அத்தகைய சமாதான இலக்கு நோக்கிய செயற்பாடுகள் கிழக்கில் படிப்படியே குறைந்து, இறுதியில் மறைந்து போயின.

இவ்வாறு கிழக்கு முஸ்லீம்களின் சமூக பொருளாதார தன்மைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த சூழலில், கிழக்கு முஸ்லீம் நிலவுடமையாளர்களினதும், அவர்களின் ஆதரவு பெற்ற மரபு வழி கிழக்கு முஸ்லீம் பாராளு மன்ற உறுப்பினர்களினதும் சமூக, அரசியல் ஆதிக்கம் தளர்வுறத் தொடங்கியது. முற்றாகக் குழம்பி, பாதுகாப்பற்றதாக மாறிவிட்ட கிழக்கின் சூழலில், புதிய சமூகப் பிரிவுகளும், நவீன ஆயுதங்களின் பாவனைகளும் அதிகரித்து விட்ட நிலையில், பழமையான இந்த நிலவுடமையாளர் களினால் தமது சமூக ஆதிக்கத்தை தொடர்ந் தும் பேணிக் கொள்ள முடியவில்லை. இதே நேரத்தில் கிழக்கின் முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் சங்கடமான நிலையில் இருந்தார்கள். முஸ்லீம்கள் மீது விடுதலை அமைப்புக்கள் மேற்கொண்டிருக்கின்ற அராஜக செயற்பாடுகளை இவர்களால் கண்டிக்க முடிய வில்லை. இவ்வாறு கண்டிப்பதால் அவர்களினதும், அவர்களது குடும்ப உறுப்பினர்களதும் உயிர், உடமைகளுக்கு விடுதலை அமைப்புக்களினால் பாதிப்புகள் ஏற்படலாம், மேலும் தமிழ் மக்கள் மத்தியில் அவர்கள் இனவாதிகளாகக் கருதப் படக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். தமது தேர்தல் வெற்றிகளுக்கு ஓரளவு தமிழ் வாக்கு களையும் எதிர்பார்த்திருக்கின்ற இவர்களின் வெற்றி வாய்ப்பு இதனால் பாதிக்கப்படலாம். மறுபுறத்தில், தமிழ் மக்கள் மீது கொடூரமான அடக்கு முறைகளை மேற்கொண்டிருக்கின்ற இனவாத அரசைக் கண்டிக்கவோ அல்லது கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவுகளைத் திட்ட மிட்டு சீர்குலைத்து வருகின்ற ஆயுதப்படைகள் மற்றும் முஸ்லீம் ஆயுதப் பிரிவினரின் செயற்பாடு களைக் கண்டிக்கவோ இவர்களால் முடிய வில்லை. இவ்வாறு கண்டிப்பதால் அவர்களின் உயிர் வாழ்வும், அரசியல் வாழ்வும் கடுமையாகப் பாதிக்கப்படலாம். இத்தகைய இக்கட்டான நிலையில், தமிழ் மக்களின் பிரச்சனைகள் எப்படியாவது தீர்க்கப்படுவதும், தமிழ் - முஸ்லீம் ஐக்கியம் மீண்டும் உருவாக்கப்படுவதுமே அவர்களுக்குச் சாதகமாக அமையக் கூடியவை யாக இருந்தன. எனினும் இவர்களின் எதிர்பார்ப்பு களுக்கும், விருப்பத்திற்கும் மாறாக, பிரச்ச னைகள் கடுமையாகிக் கொண்டே சென்றன. கிழக்கு முஸ்லீம்களிடையே தீவிரமடைந்து கொண்டிருந்த உணர்ச்சிக் குமுறலைக் கட்டுப் படுத்தக் கூடிய ஆற்றலை இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் இழந்து கொண்டிருந்தார்கள். அத்தோடு கிழக்கு முஸ்லீம்களிடையே சமூக ஆதிக்கத்தைப் பெற்றுக் கொண்டிருந்த புதிய பிரிவினரின் ஆவேசத்துக்குரியவர்களாகவும் இவர்கள் மாறியிருந்தார்கள். குடும்ப, சமூக உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களினால், இவர் களின் "பரம்பரை" ஆதரவாளர்களாக இருந்தவர் களின் எண்ணிக்கை நன்கு குறைந்து விட்டது. இவற்றின் மொத்த விளைவாக, முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் செயற்பாடுகள், கிழக்கில் படிப்படியே குறைந்து கொண்டு வந்தன. அவர்கள் மிகப் பெரும்பாலும் கொழும்பிலேயே தமது வாழ்க்கையை கழிப்பவர் களாக மாறினார்கள்.

இவ்வாறு, 1985ம் ஆண்டிலிருந்து கிழக்கு முஸ்லீம்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளிலும் விழுமியங்கள் தொடர்பாகவும் ஏற்பட்டுக் கொண்டிருந்த மாற்றங்களின் விளைவாக, அவர்களின் கருத்துக்களிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. தமது தனித்துவம், உரிமைகள், முன்னேற்றம் என்பவை பற்றிய சிந்தனைகள் கிழக்கு முஸ்லீம்களிடையே தோன்றின. இவற்றை அழிக்கவும், தம்மைக் கீழ்ப்படுத்தவும் முயற்சிக்கின்ற விடுதலை அமைப்புக்களிடமிருந்து தமது தனித்துவத் தையும், உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற ஆவேசக் கருத்துக்கள் எங்கும் வலுப்பெற்றன. பரம்பரையாகப் பின்பற்றப்பட்டு வந்த சிங்களக் கட்சிகள் சார்ந்த அரசியலி லிருந்து அவர்கள் விடுபடத் தொடங்கினார்கள். இப்போது தான் முதன் முதலாக, சகல கிழக்கு முஸ்லீம்களையும் உள்ளடக்கிய சுயமான அரசி யல் இயக்கத்தை முன்னெடுக்கக் கூடிய வாய்ப்பான சூழல் உருவாகியது. குடும்ப, பிரதேச, கட்சி எல்லைகளுக்கு அப்பால் கிழக்கின் சகல பகுதிகளிலுமுள்ள முஸ்லீம்களை ஒன்றிணைக் கக் கூடிய பொருத்தமான சூழல் இப்போது தான் தோன்றியது. இது நாள் வரை நிலவுடமையாளர் களினதும், அவர்களின் செல்வாக்குட்பட்ட அரசியல் வாதிகளினதும் கட்டுப்பாட்டின் கீழ், நிமிர முடியாமல் முடக்கி வைக்கப்பட்டிருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படித்த முஸ்லீம் பிரிவினர் இப்போது தான் தமது சமூகத்தின் அரசியல் தலைமையை வென்று கொள்ளக் கூடிய சாத்தியம் உருவாகியது. பொதுவாக வெவ்வேறு சமூகங்களுக்கிடையே முரண்பாடுகள் கூர்மையடைகின்ற போது, ஒடுக்கப்படுகின்ற சமூகத்தைச் சேர்ந்த படித்த, நடுத்தர, வர்க்கப் பிரிவினரே தமது சமூகத்தின் "தத்துவ ஊற்றாகவும்" அதன் அரசியல் உணர்ச்சியை ஒரு முகப்படுத்துகின்ற "வடிகாலாகவும்" அமைகின்றனர். கிழக்கு முஸ்லீம்களைப் பொறுத்தவரையிலும் கூட, இந்தப் படித்த பிரிவினர் தான் இத்தகைய வரலாற்றுப் பாத்திரத்தை வகித்தார்கள். இவ்விதமாக "ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்" ஒரு தனித்துவமான அரசியல் கட்சியாக பரிணாமம் அடைந்தது.

# கிழக்கு முஸ்லீம்களின் தேசிய எழுச்சியும் ஸ்ரீலங்கா முஸ்லீம் கொங்கிரசும்

## கிழக்கு முஸ்லீம் தேசிய எழுச்சியின் ஆரம்பம்:-

மக்கள் திரள் ஒரு தேசமாக ஒன்றிணைவது பல்வேறு சூழ்நிலைகளில் நிகழ்கிறது. இவற்றில் ஒன்றாக ஒரு சமூகம் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுவது அமைகிறது. ஒரு சமூகத்தின் மீது, பிற சமூகம் / சமூகங்களினால் திட்டமிட்ட ரீதியில், தொடர்ச்சியாக ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்படும் போது ஒடுக்கப்படும் சமூகம் அவற்றிக்கான தனது எதிர்வினைகளை படிப்படியே வெளிப்படுத்துகின்றது. இவ் ஒடுக்குமுறைகளை வெற்றி கொள்வதற்காக, அது படிப்படியே தன்னை ஒன்றிணைக்கிறது. தமக்கிடையில் நிலவும் பொது அடையாளத்தைக் கொண்டே தம் மீது ஒடுக்குமுறைகள் மேற் கொள்ளப்படுகின்றன என்பதை, ஒடுக்கப் படும் சமூகத்தினர் உணரும்போது அப்பொது அடையாளத்தின் கீழ் தம்மை ஒன்றிணைக்கின்றார்கள். மொழி, மதம், கலாச்சாரம், பொருளாதாரம், நிறம் (Race) பிரதேசம், பாரம்பரியம், இனம் (Ethnicity), பொதுவான வரலாற்று அனுபவம். . . . என பல் வேறுபட்ட காரணிகளில் ஒன்று அல்லது பல ஒரு மக்கள் திரளை ஒன்றிணைக்கின்ற அடையாளங்களாக அமைகின்றன.

> **ஒடுக்கப்படும் சமூகத்தினர் இவ்வாறு, தமக்கிடையே நிலவுகின்ற இதர வேறுபாடுகளைக் கடந்து, பொது அடையாளத்தின் கீழ் ஒன்றிணைந்து தமக்கென தனியான அரசியலை முன்னெடுக்கின்ற போது அவர்கள் ஒரு தேசமாக அமைகின்றார்கள். அவர்களது தனியான அரசியல் இயக்கமானது இங்கு தேசிய இயக்கமாக மாற்றமடைகின்றது.**

ஒடுக்கப்படும் சமூகத்தினர் இவ்வாறு, தமக்கிடையே நிலவுகின்ற இதர வேறுபாடுகளைக் கடந்து, பொது அடையாளத்தின் கீழ் ஒன்றிணைந்து தமக்கென தனியான அரசியலை முன்னெடுக்கின்ற போது அவர்கள் ஒரு தேசமாக அமைகின்றார்கள். அவர்களது தனியான அரசியல் இயக்கமானது இங்கு தேசிய இயக்கமாக மாற்றமடைகின்றது.

1985, வன்முறை மோதல்களுக்குப் பின்னர், கிழக்கு முஸ்லீம்கள் தம்மை ஒரு தனியான தேசமாக ஒன்றிணைத்து, தேசிய இயக்கத்தை முன்னெடுக்கக் கூடிய கிளர்ச்சி நிலையில் காணப்பட்டார்கள். 1985 மோதல்களுக்குப் பின்னர் தாம் முஸ்லீம்களாக இருப்பதே, தம் மீது விடுதலை அமைப்புக்கள் தாக்குதல்களை மேற்கொள்ளக் காரணம் என்று கிழக்கு முஸ்லீம்கள் உணர்கின்ற வகையில் வரிசையாக சம்பவங்கள் நிகழ்ந்தன. விறகு எடுக்க வும், தம் கால் நடை . களை கவனிக்கவும், வியாபாரதிற்காகவும், மீன்பிடிக்கவும், தமது வயல் நிலங்களுக்கும் சென்ற சாதாரண முஸ்லீம்கள் கொல்லப்பட்டதற்கும், பயணம் சென்று கொண்டிருந்த முஸ்லீம்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டதற்கும், தமது பிரதேசங்கள், வியாபாரதளங்கள், மத,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாச்சார தளங்கள் போன்றவை விடுதலை அமைப்புகளினால் தாக்கி அழிக்கப்பட்டதற்கும் வேறு காரணங்கள் எதையும் கிழக்கு முஸ்லீம் களினால் கண்டு கொள்ள முடியவில்லை. கிழக்கின் எப்பகுதியை சேர்ந்த முஸ்லீம்க ளாயினும், தாம் முஸ்லீம் என்ற ஒரே காரணத்திற் காகவே அவர் எந்நேரமும் விடுதலை அமைப்பு களின் வன்முறைக்கு உள்ளாகலாம் என்ற அச்சத்தைக் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில், கிழக்கு முஸ்லீம்கள் தமது குடும்ப,பிரதேச, வர்க்க வேறுபாடுகளைக் கடந்து, தமக்கிடையிலான கட்சி வேறுபாடுகளைக் கடந்து தாம் "முஸ்லீம்கள் " என்ற பொதுவான உணர்வைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். "முஸ்லீம்கள்" என்ற பொது அடையாளத்தின் கீழ் கிழக்கு முஸ்லீம்களை ஒரு தேசமாக ஒன்றி ணைத்து, அவர்களிடையே தேசிய இயக்கத்தை முன்னெடுக்க வாய்பான சூழ்நிலை இப்போது உருவாகியிருந்தது. கிழக்கு முஸ்லீம்களிடையே நிலவிய இத்தகைய கொந்தளிப்பு நிலைமையை "ஸ்ரீலங்கா முஸ்லீம் கொங்கிரஸ்" பற்றி பிடித்தது. முஸ்லீம்களின் தனித்துவம், சுதந்திரம், உரிமை கள், பாதுகாப்பு, மதம்.... என்பவற்றை உணர்ச்சி மிகு கோசங்களாக்கி அது கிழக்கு முஸ்லீம்களை அரசியல் ரீதியாக ஒன்றிணைத்தது.

கிழக்கு முஸ்லீம்களின் தேசிய எழுச்சி 85ல் இடம் பெற்ற தமிழ் - முஸ்லீம் வன்முறை மோதல் களுடன் தோன்றியது. இத்தேசிய எழுச்சி ஒரு படிமுறை சார்ந்த வளர்ச்சியின் விளைவாக அல்லாமல் ஒரு திடீர் எழுச்சியாக அமைந்தது. 1985க்கு முன்னர் கிழக்கு முஸ்லீம்கள் வெகுசன அளவில், தமது அரசியல் தனித்துவம் பற்றியோ, தமது உரிமைகளை உத்தரவாதம் செய்யும் தனியான அரசியல் அதிகார அலகு குறித்தோ சிந்தித்திருக்கவில்லை. தமது உரிமைகளை பெறுவதற்கான அரசியல் போராட்டங்கள் எதனையும் அவர்கள் முன்னெடுத்திருக்க வில்லை. தாம் ஒரு தனியான சமூகம்,தமக்கென மறுக்கமுடியாத உரிமைகள் இருக்கின்றன போன்ற பிரக்ஞை அவர்களிடம் நிலவியிருக்க வில்லை. இவ்வகையில்,1985 வரையில் கிழக்கு முஸ்லீம்கள் ஒரு தேசிய இயக்கம் சார்ந்த அனுபவங்கள் எதனையும் பெற்றிருக்கவில்லை.

கிழக்கு முஸ்லீம்கள் பௌத்த - சிங்கள இனவாத ஒடுக்கு முறைகளினால் கடுமையாகப் பாதிப்புற்றிருந்தார்கள் என்பது உண்மை. காணிப் பறிப்பு, விவசாயத்துறைக்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் விளைவால் ஏற்பட்ட அரசியல், பொருளாதார பாதிப்புகள் இதன் விளைவாக கிழக்கு முஸ்லீம் இளைஞர்களிடையே (குறிப்பாக அம்பாறை மாவட்ட இளைஞரிடையே) சிங்கள இனவாதத் திற்கும், அரசுக்கும் எதிரான உணர்வலைகள் என்பன கணிசமாக உருவாகியிருந்தன. ஆங் காங்கே சில முஸ்லீம் இளைஞர்கள் விடுதலை அமைப்புக்களில் இணைந்தமைக்கும், 1984 இல் கிழக்கில் (குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில்) பரவலாக இடம் பெற்ற இஸ்ரேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கும் பின்னணியாக சிங்கள இனவாதத்திற்கு எதிரான உணர்வலைகளும் காரணமாயிருந்தன. எனினும் கிழக்கு முஸ்லீம்கள் சிங்கள இனவாத ஒடுக்கு முறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்த போராட்டத்தை முன்னெடுத்திருக் கவில்லை. இதற்கு சில குறிப்பான காரணங்கள் இருந்தன.

முதலாவது. . . . கிழக்கில் பௌத்த சிங் கள இனவாதமும், இனவாத அரசும் மேற்கொண்டு வந்திருக்கின்ற ஒடுக்கு முறைகள். அங்குள்ள முஸ்லீம்களைப் பாதித்த அதே வேளையில் அங்குள்ள தமிழ் மக்களையும் பாதித்திருக் கின்றன. இதனால் இனவாத ஒடுக்கு முறைகள் "முஸ்லீம்கள்" என்ற வகையில் தம்மை இலக் காகக் கொண்டவை என அவர்களால் உணர முடியவில்லை.

இரண்டாவதாக,. . . . தெற்கு மற்றும் கிழக்கு முஸ்லீம் அரசியல்வாதிகள் சிங்கள இனவாத அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான வெகுசன நடவடிக்கைகள் எதனையும் கிழக்கு முஸ்லீம்கள் மத்தியில் முன்னெடுக்கவில்லை, ஒடுக்குமுறைகள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தவில்லை, இதனால் கிழக்கு முஸ்லீம்கள் தாம் வாழ்ந்த பிரதேச அளவில் பௌத்த - சிங்கள இனவாத ஒடுக்குமுறைகளை உணர்ந்தார்களே தவிர அவை பிரதேச எல்லைகளை கடந்து, முழு கிழக்கு முஸ்லீம்களுக்கும் பொதுவானது என்ற பிரக்ஞையை பெறவில்லை.

மூன்றாவதாக,. . . . கிழக்கு முஸ்லீம்கள் அதுவரைக்கும் சிங்கள கட்சிகளின் பரம்பரை ஆதரவாளர்களாக இருந்து வந்திருப்பதால், தம் மீதான சிங்கள இனவாத அரசின் ஒடுக்கு முறைகளை, கட்சி அரசியலுடன் இணைத்துப் புரிந்து கொள்ளமுடியாதவர்களாக இருந்தனர். இக் கட்சிகளில் போட்டியிட்டவர்கள் முஸ்லீம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களாகவும், தமது பிரதேசத்தை சேர்ந்தவராக அல்லது, தமது அபிமானத்திற்குரியவர்க ளாகவும் இருந்தமையால், சிங்கள கட்சிகளுக்கும் தம் மீதான சிங்கள அரசின் ஒடுக்கு முறை களுக்கும் இடையிலான உறவை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இவ்வாறு, கிழக்கு முஸ்லீம்கள் 1985 ம் ஆண்டு வரைக்கும் தாம் ஒரே அரசியல் விதியினால் பிணைக்கப்பட்டுள்ள ஒரு சமூகம் என்றோ தமக்கென தனியான அரசியல் இயக்கம் அவசியம் என்றோ உணராதவர்களாக இருந்துள்ளனர்.

விடுதலை அமைப்புகளினால் கிழக்கு முஸ்லீம்ளின் மீது மேற்கொள்ளப்பட்ட அராஜகம் சிங்கள இனவாத ஒடுக்குமுறைகளில் இருந்து வேறுபட்டதாக இருந்தது. இந்த அராஜகம், கிழக்கு முஸ்லீம்களின் உயிர்வாழ்வு, பொருளா தாரம், கலாச்சாரம்,மதம் என்பவற்றை நேரடி இலக்காகக் கொண்டதாயும் தொட்டுணரக்கூடிய தாகவும்அமைந்திருந்தது. இவ்வராஜகம் அவர் களது தனிமனித மற்றும் சமூக இருப்பை நேரடி யாக அச்சுறுத்துவதாகவும், அதனால் இதிலிரு ந்து விடுபட வேண்டியதன் உடனடி அவசியத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்திருந்தது. விடு தலை அமைப்புகளின் அராஜக செயற்பாடுகள் அதிகரித்துச் செல்ல, கிழக்கு முஸ்லீம்கள் மத்தியில் தம்மையும் தமது நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வும் அதிகரித்து ஆழமாகிச் சென்றது. 1985 வன்முறை மோதல்களுக்குப் பின்னர் இந்த உணர்வலைகளின் திரட்சி தேசிய எழுச்சியாக வெளிக்கிளம்பியது.

**முஸ்லீம் தேசிய எழுச்சியில் வன்முறை இயக்கம்**

கிழக்கு முஸ்லீம்களின் தேசிய எழுச்சி எடுத்த எடுப்பிலேயே வன்முறை சார்ந்த வடிவம் பெற்றது. கிழக்கு முஸ்லீம்களை பொறுத்தவரை, விடுதலை அமைப்புகளின் வன்முறையில் இருந்து தமது உயிர்,உடமைகளை பாதுகாப்பது என்பது உடனடிப் பிரச்சனையாக இருந்தமையால் அவர்கள் உடனடியாகவே ஆயுதங்களுடன் தொடர்பு கொண்டனர். இதனால் தேசிய இயக்கத்தின் தொடக்கத்திலேயே "ஜிஹாத்" குழுக்கள், ஊர்காவல் அமைப்புகள் போன்ற ஆயுதப் பிரிவுகளும், அரச படையினருடன் சேர்ந்து செயற்படுவதும் இடம்பெறத் தொடங்கின.

இவ்வாறு, கிழக்கு முஸ்லீம் தேசிய எழுச்சியின் ஆரம்பத்திலேயே தோன்றிவிட்ட வன்முறை இயக்கமானது அம் முஸ்லீம்களின் தேசிய உணர்வைத் தொடர்ந்து வளர்த் தெடுக்கவும், அவ்வுணர்வை முழுமையாகப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் தேசிய இயக் கத்தை முன்னெடுத்துச் செல்லவும் தவறிவிட்டது. இவ் வன்முறை இயக்கத்தினால் அனைத்து கிழக்கு முஸ்லீம்களையும் ஒன்றிணைக்க முடியாமல் போனதோடு தான் செயற்பட்ட பிரதேசத்திலுள்ள முஸ்லீம்களின் தேசிய உணர் வையும் கூட வளர்த்தெடுக்க முடியவில்லை. அவர்களின் பிரதேச எல்லைகளைக் கடந்த தாகவும், பொதுவான இலக்கு நோக்கியதாயும் தேசிய உணர்வை வளர்த்தெடுக்க முடிய வில்லை. இந்த இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றவர்களில் ஒரு பிரிவினரிடம் ஆழமான சமூக உணர்வுகள் காணப்பட்டன. எனினும் இவர் களுக்கு அரசியலிலும், ஆயுதப் போராட்ட முறையிலும் படிமுறை சார்ந்த வளர்ச்சி ஏற்படா மையால் தமது இயக்கத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல இவர்களால் முடிய வில்லை. இன்னொரு பிரிவினரோ, சமூக நலன் களில் எந்த அக்கறையுமே அற்ற உதிரிப்பிரி வினராக இருந்தனர். இவர்கள் தமது செயற்பாடு களுக்குரிய சமூகப் பெறுமதியைக் கூட உணர வில்லை. பெரிதும் தமது சுயநலன் கருதியே செயற்பட்ட இவர்கள், முஸ்லீம்களின் தேசிய இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக, அரச படையினரின் கைக்கூலிகளாகவே மாறினர். வன்முறை இயக்கத்தை முன்னெடுத் தவர்களின் யதார்த்த நிலமைகள் இவ்வாறு அமைந்திருப்பதால், கிழக்கு முஸ்லீம்கள் அவர்களது தேசிய இயக்கத்தில் உறுதியாக அணிதிரட்டப்படவும் அவர்களிடையே ஒரு தேசம் சார்ந்த உணர்வு தெளிவாக வளர்த்தெடுக்கப் படவும் முடியாது போயிற்று.

கிழக்கு முஸ்லீம்களிடையே குறுகிய காலத்தில் கணிசமான வளர்ச்சியைப் பெற்ற "ஜிஹாத்" அமைப்புக்களை வழிநடாத்தியவர்கள், அவற்றைக் கட்டுப்படுத்தி ஒழுங்காக முன்னெடுத் துச் செல்லக்கூடிய ஆற்றலை விரைவிலேயே இழந்து விட்டனர். இவற்றின் தலைமைப் பொறுப்புக்கள் பல்வேறு நபர்களிடையே கைமாறிய போதிலும், எவராலுமே அவற்றைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுப்படுத்தி ஒழுங்கமைக்க முடியவில்லை. ஒரு அமைப்பு தனது இலக்கு நோக்கி படிப்படியாக முன்னேறமுடியாமல் தேக்கமுறும் போது அவ் அமைப்பு சீர்குலைவிற்குள்ளாவது இயல்பு. அதன் உறுப்பினர்கள் மத்தியில் காணப்பட்ட போர்க் குணாம்சமும், சமூக நோக்கும் அகன்று சுயநலப் போக்குகள் முதன்மை பெறுகின்றன. கிழக்கு முஸ்லீம்களிடையே தோன்றிய ஜிகாத் அமைப்புக்கள் இத்தகைய தேக்க நிலையையும் சீர்குலைவையும் விரைவிலேயே சந்தித்தன. அவற்றை வழிநடாத்திச் சென்றவர்களிற்கு பொருளாதார மற்றும் அதிகார நலன்களே பிரதான இலக்காகியது. பணமோசடியும்,அதிகார துஷ்பிரயோகங்களும் தாராளமாக இடம்பெற்றன. சில இடங்களில் உட்கொலைகள் நடந்தன. முக்கிய உறுப்பினர்கள் ஏராளமான பணத்தை கையாடி தெற்கிற்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் சென்று விட்டனர். இவ்வாறாக கிழக்கு முஸ்லீம்களிடையே கிட்டத்தட்ட ஐந்து வருடகாலம் நிலவிய இந்த வன்முறை இயக்கம் ஆங்காங்கே பல வடுக்களைப் பதித்து விட்டு, இப்போது ஓய்ந்திருக்கிறது.

## (II)ஸ்ரீலங்கா முஸ்லீம் கொங்கிரஸ் (SLMC)

கிழக்கு முஸ்லீம்களிடையே வன்முறை சார்ந்த வடிவமானது முனைப்புற்ற வேளையில், அதற்கு அருகாக வன்முறை சாராத வடிவில் தேசிய இயக்கத்தை முன்னெடுக்கும் அமைப்பாக சிறிலங்கா முஸ்லீம் கொங்கிரஸ் (SLMC) வளர்ச்சியுற்றது. "ஜிஹாத்" போன்ற வன்முறை இயக்கங்களால் ஒன்றுபடுத்தப்படாதிருந்த கிழக்கு முஸ்லீம்களின் தேசிய உணர்விற்கு பொருத்தமான வடிகாலாக முஸ்லீம் கொங்கிரஸ் அமைந்தது. வன்முறை இயக்கத்தினுள் நேரடியாக இணைந்து கொள்ளத் தயங்கிய கிழக்கு முஸ்லீம்களின் பல்வேறு பிரிவினரும், தமது தேசிய உணர்வின் குவிமையமாக முஸ்லீம் கொங்கிரஸ்சை கருதினர். இதனால், 1986 நவம்பரில், முஸ்லீம் கொங்கிரஸ்சின் 6 வது வருடாந்த மாநாடு முடிவடைந்த மிக குறுகிய காலத்திலேயே, இக் கட்சி பெரும்பாலான கிழக்கு முஸ்லீம் பிரதேசங்களில் தன்னை வலுவாக ஊன்றிக் கொண்டது. குறிப்பாக தமிழ் - முஸ்லீம் மோதல்கள் கடுமையாகவும் அடிக்கடியும் இடம் பெற்ற சம்மாந்துறை, கல்முனை, காத்தான்குடி, ஏராவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி, மூதூர் போன்ற இடங்களில் முஸ்லீம் கொங்கிரஸ்சுக்கு பெரும் ஆதரவு கிடைத்தது. முஸ்லீம் கொங்கிரஸ் வன்முறைசார்ந்த முஸ்லீம் இயக்கங்களைக் கண்டிக்காமலும், அவற்றின் உறுப்பினர்களுடன் நல்லுறவையும் பேணியதால் கிழக்கு முஸ்லீம் களிடையே சக்திமிக்க ஓர் அரசியல் அமைப்பாக முஸ்லீம் காங்கிரஸ் உருவாக முடிந்தது.

இவ்வாறாக, கிழக்கு முஸ்லீம்களின் தேசிய உணர்வின் குவிமையமாக முஸ்லீம் கொங்கிரஸ் அமைந்ததன் மூலமாகவே அது வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது. முஸ்லீம்களிடையே எழுச்சி பெற்ற தேசிய உணர்வானது ஜிஹாத் முஸ்லீம் வன்முறை அமைப்புக்களினால் இணைக்கப்படாமல் இருந்த நிலையில், அத்தேசியவுணர்வை ஒருமுகப்படுத்தி அரங்கிற்கு கொண்டு வந்த வரலாற்றுப் பொறுப்பை முஸ்லீம் கொங்கிரஸ் நிறைவேற்றியிருக்கிறது.

கிழக்கு முஸ்லீம்கள் முஸ்லீம் கொங்கிரஸ்சிற்கு உறுதியான ஆதரவை வழங்கினர். மிகுந்த அர்ப்பணிப்புகளுடன் அதனை வளர்த்தெடுத்தனர். விடுதலை அமைப்புகளின் அச்சுறுத்தல்களுக்கும் சிங்கள கட்சிகளின் எம்.பி. க்களுடைய பழிவாங்கல்களுக்கும் மத்தியில், தமது நலன்கள் பலவற்றை விலையாகக் கொடுத்து கிழக்கு முஸ்லீம்கள் இதனை செய்தனர். அவர்களைப் பொறுத்தவரையில் இலங்கை முஸ்லீம்களின் வரலாற்றில் முதன் முதலாக உருவாக்கப்பட்டுள்ள முஸ்லீம்களுக்கான தனிக் கட்சியை வளர்த்துப் பலப்படுத்த வேண்டும் என்பது ஒரு கடமையாக உணரப்பட்டது.

**ஒரு அமைப்பு தனது இலக்கு நோக்கி படிப்படியாக முன்னேறமுடியாமல் தேக்கமுறும் போது அவ் அமைப்பு சீர்குலைவிற்குள்ளாவது இயல்பு. அதன் உறுப்பினர்கள் மத்தியில் காணப்பட்ட போர்க்குணாம்சமும், சமூக நோக்கும் அகன்று சுயநலப் போக்குகள் முதன்மை பெறுகின்றன.**

கிழக்கு முஸ்லீம்களிடையே நிலவிய தேசிய உணர்வு, 1987 ம்ஆண்டு முதல் கிழக்கில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடம் பெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் தெளிவாக வெளிப்பட்டது. கிழக்கு முஸ்லீம்கள் முஸ்லீம் கொங்கிரஸ்சிற்கு தொடர்ச்சியாக தமது ஆதரவை வழங்கி வந்துள்ளனர். ஓரளவு ஏற்ற இறக்கங்கள் காணப்பட்ட போதிலும் இவ் ஆதரவு பலமான தாகவே இருந்து வருகின்றது. மறுபுறம், அவர்கள் சிங்களக் கட்சிகளைச் சேர்ந்த முஸ்லீம் அரசியல் வாதிகளை நிராகரிக்கும் போக்கும் படிப்படியாக அதிகரித்து வந்திருக்கின்றது. 1977 பொதுத் தேர்தலில் யு.என் .பி சார்பில் ஐந்து முஸ்லீம் உறுப்பினர்கள் தெரிவாயினர். ஆனால் 1988 பொதுத்தேர்தலில் யு.என்.பி. சார்பில் மூன்று உறுப்பினர்களே தெரிவாயினர். (இவர்களில் இருவர் நியமன உறுப்பினர்கள்).1994 பொதுத் தேர்தலில் யு.என்.பி. இலிருந்து இரு முஸ்லீம் உறுப்பினர்கள் மட்டுமே தெரிவாகியுள்ளனர். . . . 1987 மாகாண சபைத் தேர்தலில் சிங்களக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தவிர (யு.என்.பி.) கிட்டத்தட்ட சகல முஸ்லீம் வேட்பாளர்களும் தோற்கடிக்கப்பட்டனர். அதே சமயம், SLMC சார்பில் 1988 பொதுத்தேர்தலில் இரு உறுப்பினர்களும் 1994 இல் நான்கு உறுப்பினர் களும் கிழக்கில் தெரிவு செய்யப்பட்டனர். இவற்றுடன் வடகிழக்கு மாகாணசபை தேர்தல் களிலும் உள்ளூராட்சித் தேர்தல்களிலும் SLMC மீதான ஆதரவை கிழக்கு முஸ்லீம்கள் வெளிப்படுத்தியிருந்தனர். இவற்றின் மூலம் அவர்கள் தெற்கு முஸ்லீம் தலைமையை அரசியல் ரீதியில் முற்றாக நிராகரித்து விட்டமை யையும்அத்தலைமை மீதான மாயை இப்போது தமக்கு இல்லை என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டினர்.

## முஸ்லீம் தேசியமும் பெண்களும்

வட - கிழக்கு முஸ்லீம் தேசியத்தில் முஸ்லீம் பெண்களின் பாத்திரம் காத்திரமானது. ஆரம்பத்திலிருந்தே இத்தேசிய இயக்கத்தில் முஸ்லீம் பெண்களும் ஈர்க்கப்பட்டு இத் தேசிய இயக்க வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பை ஆற்றியுள்ளனர். 1985 இற்கு முன்னர், (வட) கிழக்கு முஸ்லீம் பெண்களின் அரசியல் பங்களிப்பு என்பது, தமது குடும்ப ஆண்கள் சார்ந்துள்ள கட்சிக்கு தாமும் வாக்களிப்பது என்ற எல்லைக் குள் குறுக்கப்பட்டிருந்தது. கிழக்கு முஸ்லீம்களி டையே திருமண உறவும் கூட, பெரும்பாலும் ஒரே கட்சியைச் சார்ந்த குடும்பங்களிடையே ஏற்படுத் தப்படுவதால் ஒரு முஸ்லீம் பெண் தன் வாழ்நாள் பூராவும் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு வாக்களிக்கும் நிலையே காணப்பட்டது. ஆங்காங்கே,கணவன் வேறொரு கட்சியை சார்ந்தவராக இருந்து விட்டால் மட்டுமே ஒரு முஸ்லீம் பெண் கணவன் சார்ந்த கட்சிக்கு வாக்களிக்க முடிந்தது.

எனினும் 1980 களில் இருந்து கிழக்கு முஸ்லீம் பெண்களின் இப்போக்கில் படிப்படியே மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. 1970 களில் இருந்து, கிழக்கு முஸ்லீம் பெண்கள் மத்தியில் கல்வியின்பால் ஏற்பட்ட தீவிர ஆர்வம் அவர்களின் கருத்துக்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதுவரை காலமும் இல்லாதவாறு கிழக்கு முஸ்லீம் பெண்களிடையே பரஸ்பர தொடர்புகள் அதிகமாக ஏற்பட்டன. குறிப்பிட்ட பிரதேசத் திலுள்ள பல பகுதிகளையும் சேர்ந்த பெண்களி டையே மாத்திரமன்றி, வெவ்வேறு பிரதேச பெண்களிடையிலும் தொடர்புகள் ஏற்பட்டன. கிழக்கு எங்கும் முஸ்லீம் பெண்கள் உயர் கல்வி கற்பதும் விரிவாக இடம் பெற்றது. இவர்கள், 1980 களில் வாக்களிக்கத் தகுதியுடைய பெண்களின் எண்ணிக்கையில் கணிசமான அளவில் அமைந் தனர். இவர்களில் கணிசமானோர் மரபு வழியில் தமது வாக்குகளை அளிக்கவில்லை . இதற்கு ஒரு காரணம், இவர்கள் தமக்கு கிடைத்த கல்வியி னாலும், புதிய தொடர்புகளினாலும் கருத்து ரீதியில் குடும்பத்தாரிடமிருந்து மாறுபட்டவர்கள், இரண்டாவது , இவர்கள் அரச உத்தியோகங் களில் நாட்டம் கொண்டிருந்தனர். . அரச உத்தியோகங்கள் பெறுவது அரசியல் மாற்றங்களுடன் தொடர்புடையதால் தமக்கு சாதகமாக அமையும் கட்சிக்கு ஆதரவளிக்கும் போக்கை இவர்கள் எடுத்தனர்.

1980 களில் காணப்பட்ட, போட்டிப் பரீட்சை அடிப்படையிலான நியமன முறை கட்சி, பால்வேறு பாடுகளைத் தாண்டி பலருக்கு உத்தியோகங் களை வழங்கியது. இதனால் கிழக்கில் ஆண்களுக்குச் சமமாக முஸ்லீம் பெண்களும் அரச உத்தியோகங்கள் பெற்றனர். சுய உழைப் பும், புதிய தொடர்புகளும் காரணமாக, மரபான குடும்பம் சார்ந்த கட்சி ஆதரவு என்ற போக்கு இவர்களிடையே வலுவிழக்கத் தொடங்கியது.

கிழக்கு முஸ்லீம் பெண்களிடையே கட்சி சார்ந்த உணர்வில் பாரிய தாக்கத்தை ஏற்படுத் திய மற்றொரு காரணியாக மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு அமைந்தது. 1980 களின் நடுப்பகுதியில், கிழக்கு முஸ்லீம் பெண்கள் ஆயிரக்கணக்கில் மத்திய கிழக்கு வேலைவாய்ப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புப் பெற்றுச் சென்றதும், கிழக்கில் ஆண்களின் பாரம்பரியத் தொழில் முயற்சிகளில் (விவசாயம், மீன்பிடி, மந்தை வளர்ப்பு, காட்டுத்தொழில் கூலித் தொழில். . . . ) பாதிப்புகள் ஏற்பட்டதும். முஸ்லீம் குடும்பங்களின் பண்பில் மாற்றங்களை ஏற்படுத்தின. இது வரை காலமும் அனைத்துத் தேவைகளுக்குமே ஆண்களில் தங்கியிருந்த முஸ்லீம் பெண்கள் தற்போது ஆயிரக்கணக்கில் ஊதியம் பெறும் உழைப்பாளிகளாக மாறினர். தமது திருமணத்திற்கும், தமது குடும்பத்திற்குமான தேவைகளையும் கூட, தமது உழைப்பின் மூலம் நிறைவேற்றினர். முற்றிலும் புதிய சூழலில் , புதிய வாழ்க்கை முறைகளை சந்தித்த இவர்களின் கருத்துக்களிலும் சொந்த வாழ்க்கை முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. சுதந்திர உணர்வும் தனித்து நிற்கும் துணிவும் பெற்றனர். இக் கட்டத்தில் , கிழக்கின் நிலை மோசமடைந்து , ஆண்களின் பாரம்பரிய தொழில்கள் பாதிப்புற்றிருந்தமையால், குடும்பத் தேவைகளுக்கு உழைப்பவர்கள் (Bread Winners) எனும் நிலையில் இருந்து பல ஆண்கள் அகற்றப்பட்டு, இப்போது இவர்கள் (அதாவது மத்திய கிழக்கு சென்ற முஸ்லீம் பெண்களின் கணவன், தந்தை, சகோதரர்கள், மகன்மார். . . .) பெண்களின் உழைப்பில் தங்கியிருக்க வேண்டியவராயினர். இதன் பின்னர் ஆண்களின் ஆதிக்கத்தையும், கட்டுப்பாடுகளையும் முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் பெண்கள் இல்லை. இந்நிலை பெண்களின் அரசியல் தேர்விலும் வெளிப்பட்டது.

சம காலத்தில் கிழக்கு முஸ்லீம்கள் மீது விடுதலை அமைப்புக்களின் அராஜகம் தீவிரமடைந்ததும் முஸ்லீம் பெண்கள் மத்தியில் தேசிய உணர்வும் தோற்றம் பெற்றது. விடுதலை அமைப்புக்களின் அராஜகம் முஸ்லீம் பெண்களின் உடல், உள நிலைகளை கடுமையாக பாதித்தது. விடுதலை அமைப்புக்களின் வன்முறைகள் காரணமாக வறுமையும், அகதிவாழ்வும், பற்றாக் குறைகளும் முஸ்லீம் பெண்களின் குடும்பச் சுமைகளைக் கடுமையாக்கின. குடும்பத்திலுள்ள குழந்தைகள், வயோதிபர், நோயாளிகள் போன்றோரின் தேவைகள் உட்பட அணைத்து குடும்ப சுமையும் இவர்களை அழுத்தின . மறுபுறம் அடுத்தடுத்த வன்முறைகளில் தமது உடமைகளையும், உறவினர்களையும் இழந்தும், விடுதலை அமைப்புக்களினால் எந்நேரமும் தாக்கப்படலாம் என்ற அச்சமும் இப்பெண்களை உள ரீதியில் பாதித்தன.

இப்படிப்பட்ட சூழலில், தமது துயரங்களை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு புதிய அரசியல் இயக்கத்திற்கு ஆதரவளிக்கக் கூடியவர்களாக கிழக்கு முஸ்லீம் பெண்கள் காணப்பட்டனர். தொடக்கத்தில் கிழக்கு முஸ்லீம்களிடையே உருவான தேசிய இயக்கத்தின் வன்முறை சார்ந்த வடிவத்தில் இப் பெண்கள் நேரடியாக ஈடுபட முடியாதிருந்த போதிலும் கூட, அவர்கள் அதனை ஆதரித்தனர். தமது பிரதேசத்தையும், மக்களையும் பாதுகாப்பதற்காக தமது பிள்ளைகளும், உறவினரும் ஊர்காவல் அமைப்புக்களிலும், "ஜிஹாத்" இயக்கங்களிலும் பங்கு கொண்ட போது முஸ்லீம் பெண்கள் அதனை வரவேற்றனர்.

பின்னர், முஸ்லீம் தேசிய இயக்கத்தின் வன்முறை சாராத வடிவமாக முஸ்லீம் காங்கிரஸ் உருவான போது முஸ்லீம் பெண்கள் அதனை உணர்வு பூர்வமாக ஆதரித்தனர். படித்த நகர்ப்புற பெண்களில் இருந்து கிராமப்புற பெண்கள்வரை இவ் ஆதரவு பரந்தளவில் அமைந்தது. முஸ்லீம் காங்கிரஸ் தேர்தல்களில் வெற்றி பெறவேண்டும் என அவர்கள் நோன்பிருந்தனர், (விரதம் இருத்தல்) பிராத்தனை செய்தனர். வாக்களிப்புகளில் ஆர்வமாயும், தீவிரமாயும் பங்குபற்றினர். உண்மையில் முஸ்லீம் காங்கிரசின் ஒவ்வொரு தேர்தல் வெற்றிக்கும் பின்னே கிழக்கு முஸ்லீம் பெண்களின் ஆதரவு உறுதியான தளமாக அமைந்திருந்தது எனலாம். ஆண்களில் பலர் இன்னமும் U.N.P, S.L.F.P கட்சிகளுக்கு ஆதரவு வழங்கிய போதிலும் அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் SLMC க்குஆதரவை வழங்கினர். இவ்வாறாக முஸ்லீம் தேசிய இயக்கத்தில் முஸ்லீம் பெண்களின் பாத்திரம் மிகக் காத்திரமானதாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## SLMC தலைமை குறித்து . . .

கிழக்கு முஸ்லீம்கள் அற்ப சலுகைகளையோ, சில அபிவிருத்தித் திட்டங்களையோ எதிர்பார்த்து SLMC க்கு தமது ஆதரவை வழங்கவில்லை, சிங்கள கட்சிகளில் இருந்த முஸ்லீம் அரசியல்வாதிகளிடமிருந்து கிடைக்கக் கூடிய சில சலுகைகளையும், அபிவிருத்திகளையும் உதறிவிட்டே அவர்கள் SLMC ஐ ஆதரித்தனர் தமது பாரம்பரிய பிரதேசங்களில் கௌரவமும், உரிமைகளும் கொண்ட சுதந்திர பிரஜைகளாக பாதுகாப்புடன் வாழ விரும்புகிறார்கள் என்பதையே SLMC க்கு ஆதரவளிப்பதன் மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனினும் SLMC தனது வரலாற்றுப் பாத்திரத்தை முழுமையாக நிறைவேற்றவில்லை. கிழக்கு முஸ்லீம்களின் தேசிய உணர்வை அடித்தளமாகக் கொண்டு உறுதியான தேசிய இயக்கத்தை முன்னெடுப்பதில் இன்று வரை SLMC நேர்மையான அக்கறையுடன் செயற்படவில்லை. இவ்வாறு SLMC தனது சொந்த மக்களின் அரசியல் தேவைகளை நிறைவேற்றாமல் தவறியமைக்கு, குறிப்பாக அதன் தலைவரின் அரசியல் பண்புகளும், இலக்குகளுமே பிரதான காரணியாக அமைகிறது. இவற்றைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு SLMC தலைவரான அஷ்ரப்பின் இன்று வரையிலான அரசியல் செயற்பாடுகள் குறித்து பரிசீலிப்பது அவசியமாகிறது.

SLMC; 1980 ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. எனினும் இலங்கை முஸ்லீம்களுக்கென ஒரு தனியான அரசியல் கட்சியை உருவாக்கக் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முயற்சிகளுக்கு நடந்தது போலவே; SLMC இன் ஆரம்பமும் அமைந்திருந்தது. அதாவது SLMC இலங்கை முஸ்லீம்களை, குறிப்பாக கிழக்கு முஸ்லீம்களையும் கூட, ஒன்றிணைக்கக் கூடிய ஆற்றலை அப்போது கொண்டிருக்கவில்லை. இக் கட்சியின் ஸ்தாபகரான காத்தான்குடியை சேர்ந்த அஹமட் லெப்பை, ஒரு நேர்மையான சமூக சேவையாளராக செயற்பட்டார். காத்தான்குடி மெத்தைப் பள்ளியின் நிர்வாக சபைத் தலைவராக இருந்த இவர், மத ரீதியாக மட்டுமன்றி, காத்தான்குடியின் சமூக, கலாச்சார, அரசியல் விடயங்களிலும் காத்திரமாகச் செயலாற்றினார். இவர் தமிழ் மக்களின் போராட்டம் குறித்து அக்கறையும், ஆர்வமும் கொண்டிருந்தார். வடக்கு, கிழக்கு இணைக்கப்படவேண்டும் எனவும் அதில் முஸ்லீம்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் கருதினார். எனினும் இவர், SLFPயுடன் ஏற்கனவேதான் கொண்டிருந்த தொடர்புகளை அறுத்துக் கொள்ளாததோடு, SLMC ஐ முஸ்லீம்களின் தனிக் கட்சியாக உருவாக்குவதிலும் தீவிரமாகச் செயற்படவில்லை. 1983 இற்கு பின்னர், தமிழ் மக்களின் போராட்டத் தலைமை தமிழ் இளைஞர்களிடம் கைமாறிய போது, SLMC இன் தலைமையும் முஸ்லீம் இளைய தலைமுறையிடம் ஒப்படைக்கப்படுவது அவசியம்என கருதினார். இதனால், SLMC இன் தற்போதைய தலைவரான M.H.M. அஷ்ரப்பை 1984இல் கட்சித் தலைவராக பிரேரித்தார். இருந்தும் 1986 பிற்பகுதி வரைக்கும் இக்கட்சியினால் குறிப்பிடக்கூடிய செயற்பாடுகள் எதனையும் முன்னெடுக்க முடியவில்லை.

இக் கட்டத்தில் தான் SLMC இன் 6 வது வருடாந்த மாநாடு, 1986 நவம்பரில் மிகுந்த பரபரப்புடன் கொழும்பில் நடத்தப்பட்டது. இம் மாநாடு குறித்து, தலைவர் அஷ்ரப், கட்சியின் ஸ்தாபகருக்கோ, அதன் முக்கிய ஆரம்ப கால உறுப்பினர்கள் பலருக்கோ முறையான அறிவித்தல் எதனையும் வழங்கியிருக்கவில்லை. மாநாடு நடைபெற ஒரு வாரத்திற்கு முன்பு, பத்திரிக்கைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பர அறிவித்தல் மட்டுமே, இம் மாநாடு நடக்கவிருப்பது பற்றி கட்சியின் பல உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தியது. தான் இவ்வாறு செயற்பட வேண்டியிருந்தமைக்கு "முறையான அறிவித்தல் வழங்க கால அவகாசம் போதவில்லை" என்று அஷ்ரப் விளக்கம் அளித்தார். எனினும், முஸ்லீம்களின் அரசியல் தலைவிதியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியளவிற்கு முக்கியத்துவம் பெற்றிருந்த அம் மாநாடு ஏன் அவ்வளவு அவசரமாக கூட்டப்படவேண்டும் என்பது குறித்தோ, அஷ்ரப்பின் சொந்த மாவட்டமான அம்பாறை மாவட்டத்தில் இருந்து பெருந்தொகையானோரை இலவச போக்குவரத்து, உணவு மற்றும் இருப்பிட வசதிகளுடன் மாநாட்டில் பங்கு கொள்ளச் செய்வதற்கு மட்டும் எப்படி அவகாசம் கிடைத்தது என்பது பற்றியோ அஷ்ரப் தெளிவான விளக்கம் எதனையும் கூறவில்லை. எனவே அவர் எதிர்பார்த்தது போலவே, இந்த அவமதிப்பு காரணமாக SLMC இன் ஸ்தாபகர் உட்பட, முக்கிய ஆரம்ப கால உறுப்பினர்கள் பலர் அம் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. இதற்கு மாறாக பல பகுதிகளில் இருந்து, குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் இருந்து கலந்து கொண்ட புதியவர்களில் இருந்து மத்திய குழுவிற்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களில் அம்பாறை மாவட்டத் தவரே அதிகமாக இருந்தனர் அஷ்ரப் "தேசியத் தலைவர்" என்ற புதிய அந்தஸ்திற்கு தன்னைத் தானே உயர்த்திக் கொண்டார். கட்சியின் முக்கிய பொறுப்புகள் அஷ்ரபின் ஆலோசனைப் படி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தனர். இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் முன்னாள் கட்சித் தவிசாளர் சேகு இஸ்ஸதீன், தற்போது மூத்த துணைத் தலைவர் என அழைக்கப்படும் மருதூர்கனி போன்றோர் முக்கியமானவர்களாகும். இவ்வாறு குறுகிய நோக்குடன் திட்டமிட்டு நடத்தப்பட்ட 6வது வருடாந்த மாநாடு, இதுவரைக்கும் இலங்கை முஸ்லீம்களின் தலைமை என கூறிவந்த தெற்கு முஸ்லீம் தலைமையை மாத்திரமன்றி, செயற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திறன் குறைவான SLMC இன் ஸ்தாபகர் மற்றும் ஆரம்ப கால உறுப்பினர்களையும் நிராகரித்த போக்கினை வெளிப்படுத்தியது.

SLMC இன் பரபரப்பான 6வது மாநாடும் அதன் பின்னராக SLMC இன் வேகமான செயற்பாடுகளும் அன்றய அரசியல் அரங்கில் சில கேள்விகளை எழுப்பின. இது வரைகாலமும் ஒரு கட்சியாக அடையாளம் காணப்படாமலும், பெருமளவில் அங்கத்தவர்களைக் கொண்டிராமலும் இருந்த SLMC இவ்வளவு பிரமாண்டமாக செயற்படுவதற்குரிய பொருளாதார வசதிகளை எவ்வாறு பெற்றுக்கொண்டது? சிங்கள இனவாதத்திற்கு எதிராக செயற்பட்ட தமிழ் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் சுதந்திரமான செயற்பாடுகளை எப்போதுமே அரசு கட்டுப்படுத்தி வந்துள்ள நிலையில் பௌத்த - சிங்கள இனவாதத்தையும் எதிர்த்துப் பிரச்சாரம் செய்து வந்த SLMC இனால் மட்டும் தங்கு தடையின்றி எப்படி செயற்பட முடிந்தது?

இவ்வினாக்களுக்கான பதிலை SLMC தலைவரே கூறினார். நல்லெண்ணம் மிக்க சில முஸ்லீம் செல்வந்தர்கள் கட்சிக்குரிய முழுச் செலவையும், பொறுப்பெடுத்திருப்பதாயும், அதே சமயம் , SLMC உறுப்பினர்களுக்கு அரச படையினரால் எவ்வித பாதிப்புகளும் ஏற்படாதவாறு கவனித்துக் கொள்வதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் ( லலித் அத்துலத் முதலீ ) உறுதி அளித்திருப்பதாயும் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களிடம் அஷ்ரப் தெரிவித்தார். தேசிய இயக்க அரசியற் செயற்பாடுகளில் முதன் முதலாக பங்கு கொண்ட SLMC இன் மத்திய குழு உறுப்பினர்களுக்கும், கிழக்கு முஸ்லீம்களுக்கும் அஷ்ரபின் இக் கூற்றுகள் பிரமிப்பையும் ஊக்கத்தையும் அளித்தன. ஆனால் தனது சமூகத்தின் அரசியல் உரிமைகளுக்காக போராட முன்வந்த ஒரு கட்சி, அச்சமூகத்தின் வெகு சன பங்களிப்புகளில் பெரிதும் தங்கியிருக்காமல் யாரோ முகம் தெரியாத ஒரு சில நபர்களின் ஆதரவில் தங்கியிருப்பதும், தமது மக்களின் உரிமைகளை மறுத்து, சமூக இருப்பை சிதைத்து வருகின்ற சிங்கள அரசிடமே, தமது கட்சி உறுப்பினர்களின் பாதுகாப்பை ஒப்படைப்பதும், அக் கட்சிக்கு மாத்திரமன்றி, அந்த சமூகத்திற்கும் அரசியல் ரீதியில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியது. இதன் விளைவாக, சமூகத்தின் உரிமைகளுக்காக போராட முன்வரும் கட்சி இறுதியில் ஒரு சில நபர்களினால் கட்டுப்படுத்தப்பட்டு சீரழிவுக்குட்படுகின்ற நிலை படிப்படியே உருவாகின்றது.

கடந்த ஒன்பது வருடங்களுக்கும் மேலான SLMC இன் அனுபவங்கள் இந்த உண்மையை தெளிவு படுத்திகின்றன. ஒரு புறம், SLMC இன் ஏக போக அதிகாரம் படைத்த தலைவராக அஷ்ரப் உருவாகியிருக்கின்றார். கட்சிக்குள் விவாதங்கள் நடாத்தி கருத்துக்களை ஒன்று திரட்டி அவற்றின் அடிப்படையில் பொது முடிவுகளை எடுப்பதற்கு பதிலாக, அஷ்ரப் தம்மிஷ்டப்படி முடிவுகளை எடுத்துச் செயற்படும் நிலை உருவாகியுள்ளது. கட்சியின் ஏனைய உறுப்பினர்களும், வட கிழக்கு முஸ்லீம்களும் தமது கட்சி விடையங்கள் தொடர்பாக அறியாமையில் இருத்தப்படவும், அஷ்ரப் முன்வைக்கும் எத் தீர்மானங்களையும் அப்படியே ஏற்க வேண்டிய நிலையும் தோன்றியுள்ளது. மறுபுறம், SLMC உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடக்கத்திலிருந்தே அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், இன்று வரை SLMC யினால் அரசின் கட்டுப்பாட்டை மீறி சுயமாகச் செயற்பட முடியவில்லை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதற்கு ஆதரவாக செயற்பட வேண்டிய நிலைக்கு SLMC தள்ளப்பட்டுள்ளது. SLMC எதிர்க் கட்சிவரிசையில் இருந்த சந்தர்ப்பங்களிலும் கூட, வட - கிழக்கு முஸ்லீம்கள்மீது அரசினாலும், படைகளினாலும் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்கு முறைகளையும், வன்முறைகளையும், கண்டிக்கவோ அவற்றிற்கு எதிராக வெகு சன எதிர்ப்புகளை திரட்டி முன்செல்லவோ SLMC யினால் முடியவில்லை.

வட -கிழக்கு முஸ்லீம் தேசிய எழுச்சியின் விளைவாக புத்துயிர்ப்படைந்த SLMC, அத் தேசிய இயக்கத்தை தொடர்ந்தும் உறுதியாக முன்னெடுக்க வேண்டிய தனது வரலாற்றுப் பொறுப்பை இப்போது தவறவிட்டிருக்கிறது. பதிலாக அது ஒரு தேர்தல் கால அரசியல் கட்சியாக குறுக்கப்பட்டுள்ளது.

இந்நிலை ஏற்படுவதற்கு, SLMC தலைவர் அஷ்ரப் முக்கிய காரணமாகின்றார்.வட-கிழக்கு முஸ்லீம்கள் தமது சமூக, அரசியல் இருப்புக்களை உறுதிப்படுத்தி, சகல உரிமைகளையும் வென்று தருவதற்கான ஆணையை SLMC க்கி வழங்கியிருக்கின்றனர். இவ் வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் உள்ள அஷ்ரப், அதற்காக வெகுசன பங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தனது சமூகத்தின் உணர்வுகளை அரசியல் தளத்தில் உறுதியாக பிரதிபலிக்கக் கூடிய ஒரு தலைமையானது தேர்தல் மூலம் மக்கள் வெளிப்படுத்திய அரசியல் ஒருமைப்பாட்டை ஆதாரமாகக் கொண்டு அவர்களின் உரிமைகளை வென்றெடுக்க தேர்தலுக்கு புறம்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம். இவற்றினால் மட்டுமே இறுதியில் ஒரு சமூகம் தனது உரிமைகளை வென்று கொள்ள முடிகிறது.**

பற்றுதலுடன் கூடிய பல்வேறு அரசியல் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கடப்பாட்டை கொண்டுள்ளார். இருந்தும், அஷ்ரப் உரிமைகளைப் பெறுவதற்கான அரசியல் களமாக தேர்தல்களை மட்டுமே கருதிச் செயற்பட்டு வருகின்றார்.

பொதுவில் தேர்தல்கள், ஒரு சமூகத்தின் அரசியல் உணர்வை ஓரளவு அளவிடக் கூடிய "அரசியல் மானியாக" பயன்படுகின்றன என்பது உண்மையே. எனினும், தேர்தல் வெற்றிகளால் மட்டும் ஒரு சமூகம் தனது உரிமைகளை வென்று கொள்ள முடியாது. ஒரு சமூகம் தனது அரசியல் ஒற்றுமையையும் அபிலாசைகளையும் வெளிப்படுத்துகின்ற பிரச்சார களமாக மட்டுமே தேர்தல்களை பயன்படுத்த முடியும். இதற்கு மேல், ஒரு ஒடுக்கப்பட்ட சமூகம் தேர்தல்களின் மூலமாக மட்டும் தனது உரிமைகளை வென்று கொண்ட உதாரணம் ஒன்றைக்கூட எடுத்துக்காட்ட முடியாது. தனது சமூகத்தின் உணர்வுகளை அரசியல் தளத்தில் உறுதியாக பிரதிபலிக்கக் கூடிய ஒரு தலைமையானது தேர்தல் மூலம் மக்கள் வெளிப்படுத்திய அரசியல் ஒருமைப்பாட்டை ஆதாரமாகக் கொண்டு அவர்களின் உரிமைகளை வென்றெடுக்க தேர்தலுக்கு புறம்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம். இவற்றினால் மட்டுமே இறுதியில் ஒரு சமூகம் தனது உரிமைகளை வென்று கொள்ள முடிகிறது.

ஒடுக்கப்பட்ட சமூகத்தின் போராட்டத்தில், தேர்தல்களின் மட்டுப்படுத்தப்பட்ட பாத்திரத்தை ஓர் அரசியல் தலைமை மறந்து, தன் சமூகத்தின் அரசியல் இயக்கத்தை வெறும் தேர்தல் இயக்கமாக மட்டும் குறுக்கும் போது, குறிப்பிட்ட சமூகமானது தனது போராட்ட ஆயுதமான கட்சியின் பின்னே அணிதிரளாமல் வெறுமனே வாக்களிப்பதுடன் நின்று விடுகிறது. ஒரு சமூகத்தின் அரசியல் வெற்றிக்கு, அச் சமூகத்தின் அரசியல் இயக்கத்தின் குவிமையமாக அமைகின்ற கட்சியே பிரதான ஆயுதமாகும். ஒரு கட்சி எந்தளவிற்கு மக்களாதரவில் தங்கியிருக்கின்றதோ, எந்தளவிற்கு மக்களை அரசியில் ரீதியில் அணிதிரட்டி பல்வேறு வெகுசனப் போராட்டங்களில் ஈடுபடச் செய்கின்றதோ , அந்தளவிற்கு அச் சமூகம் அரசியல் வெற்றி பெறுவது உறுதியாகிறது. மாறாக அக் கட்சியானது வெறும் தேர்தல் கால அமைப்பாகி விடும் போது, அங்கு தனி நபர் ஆதிக்கமும், பதவி மோகமும், ஊழலும் செழித்து அக்கட்சியை சீரழித்து விடுகிறது. தேர்தல்கள் ஒரு புறம், சமூகத்தின் அரசியல் உணர்வை பிரதிபலிக்கும் அதேசமயம், மறுபுறம் தனி நபர்கள் தமது நலன்களை உயர்த்திக் கொள்வதற்கான பல்வேறு வழிகளையும் திறந்து விடுகின்றன. எனவே ஒரு கட்சி முற்றிலும் தேர்தல் அமைப்பாகி விட்டால் அது மக்களை அரசியல் விழிப்பூட்டுவதை கைவிடுகிறது, சந்தர்ப்ப வாத நிலைப்பாடுகளை மேற் கொள்கிறது. சந்தர்ப்ப வாத கூட்டுக்களை அமைக்கிறது. அங்கு தனிநபர் போட்டிகளும் கழுத்தறுப்புகளும் மேலோங்குகின்றன. இவற்றின் விளைவாக கட்சி உறுப்பினர்களிடையே சமூக உணர்வு மறைந்து சுயநலப் போக்குகள் ஊட்டம் பெறுகின்றன. கட்சியின் அதிகாரம் ஒரு சில நபர்களின் கைகளில் குவிகின்றன.

இவை அனைத்துமே SLMC இனுள் நடந்தேறியுள்ளன. கட்சியின் "தனிப் பெரும்" தலைவராக தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள அஷ்ரப் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்துள்ளார். கட்சியின் ஸ்தாபகரும், அதன் ஆரம்பகால உறுப்பினர்களும் கட்சியிலிருந்து வெளியேறும் நிலையை ஏற்படுத்தினார், கட்சி நடவடிக்கைகளில் தன் சமகால உறுப்பினர்களாக இருந்து செயற்பட்ட முக்கிய உறுப்பினர்கள் படிப்படியே கட்சியிலிருந்து வெளியேறும் அல்லது வெளியேற்றப்படும் நிலையை ஏற்படு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்தினார்; இறுதி முடிவை எடுக்கும் பூரண அதிகாரம் தலைவருக்கே என்ற சரத்தை கட்சியாப்பில் சேர்த்து, தனது முடிவையே கட்சியின் முடிந்த முடிவாக அஷ்ரப் மாற்றியிருக்கின்றார். அனுபவமிக்க உறுப்பினர்களை கட்சியிலிருந்து வெளியேற்றி அனுபவமற்ற புதியவர்களை கட்சியின் முக்கிய பொறுப்புகளுக்கு அவ்வப்போது நியமிப்பதன் மூலமாக, அவர்கள் மீது அஷ்ரப் தனது மேலாண்மையை இலகுவில் ஏற்படுத்தி வருகின்றார். தவிர, ஆட்சியிலுள்ள கட்சியின் உயர் அதிகாரத்திலுள்ளவர்களுடன் நெருங்கிய உறவைப் பேணுவதனூடாக SLMC உறுப்பினர்கள் மத்தியிலும் முஸ்லீம்கள் மத்தியிலும் சக்தி மிக்க ஒருவராக தன்னை உருவகப்படுத்துகின்றார். தன்னைப் பற்றிய ஒருவகை பயபக்தி மிகுந்த பிரமிப்பை கட்சி உறுப்பினர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளார்.

இவ்வாறு அஷ்ரப் மேலாதிக்க நிலையில் தன்னை இருத்திக்கொண்ட அதே வேளை, கட்சியும் அதன் உறுப்புகளும் அனுபவமற்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கதம்பமாக உயிர்ப்பற்ற ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது. வட - கிழக்கு முஸ்லீம்களின் தேசிய உரிமைகள் குறித்தும் அவற்றை வென்றெடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் தெளிவான பார்வை அற்றவர்களை முக்கிய உறுப்பினர்களாக கொண்டதாய் கட்சி மாற்றப்பட்டுள்ளது. இதனால் அது அரசியல் ரீதியில் தனது முதிர்ச்சியை வெளிப்படுத்த முடியாததாக உள்ளது. வெறுமனே தேர்தல் வெற்றி, பதவிமோகம் என்பவற்றை குறியாகக் கொண்ட நபர்களை உள்வாங்குகின்ற ஒரு சர்ந்தப்பவாத கட்சியாக SLMC மாற்றப்பட்டுள்ளது.

முற்றிலும் தேர்தலையே இலக்காகக் கொண்டதாக SLMC வைக்கப்பட்டுள்ளதால், அதற்கும் மக்களுக்கும் இடையிலான உறவுகளும் கூட தேர்தல் உறவாகவே குறுக்கப்பட்டுள்ளது. வட-கிழக்கு முஸ்லீம்களின் தேசிய உணர்வை ஒன்றிணைப்பது என்பது தேர்தல்களின் போது SLMC க்கு வாக்களிப்பதாகவே அர்த்தம் கொள்ளப்பட்டுள்ளது. கட்சித் தலைமைக்கு தேர்தல் வெற்றியொன்றே இறுதி இலக்கு என்பதால் மக்களின் உணர்வுகளும் கூட அந்த மட்டத்திற்குள் வைக்கப்பட்டிருப்பதையே அது விரும்புகிறது. இது இத்தலைமைக்கு அவசியமானதும் கூட. மக்களின் அரசியல் உணர்வு தேர்தல் எல்லையை தாண்டும் போது அவர்கள் அத் தலைமையைக் கேள்விக்குள்ளாக்கித் தூக்கி எறிந்து விட்டு புதிய தலைமையையும், புதிய வழிமுறைகளையும் நாடுகின்றனர். எனவே அஷ்ரப்பை பொறுத்த வரையில், கட்சியில் தனது மேலாதிக்கத்தை பேண வட - கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் உணர்வை தேர்தல் ஆதரவு என்பதுடன் மட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு மேல் கட்சியும் மக்களும் அரசியல் வளர்ச்சியை எட்டுவது அஷ்ரப்பின் இருப்பிற்கு ஆபத்தானதாகிறது. இதனைத் தவிர்க்கவே அவர் பல வகையிலும் திட்டமிட்டு செயற்படு கின்றார்.

முதலாவதாக,SLMC க்கு வாக்களிப்பதால் மட்டும் உரிமைகளைப் பெற்றுவிடலாம் என்ற கருத்தையே முஸ்லீம்கள் மத்தியில் அஷ்ரப் பரப்பியுள்ளார். ஏறக்குறைய தொண்டமானையும், மலையக மக்களையும் ஒத்த மாதிரியை முஸ்லீம்களிடையே உருவாக்க அவர் முனைகின்றார். ஆனால் ஒரு முக்கிய விடயத்தை அவர் இங்கு மறைத்து விடுகின்றார். அதாவது மலையகத் தமிழர்கள் தொண்டமானையும் CWC ஐயும் தேர்தலில் ஆதரித்ததால் மட்டுமே சில உரிமைகளை வென்றெடுக்க வில்லை என்பதையும், கூடவே வேலை நிறுத்தம், சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், பிரார்த்தனைப் போராட்டம். . . . போன்ற பல்வேறு வெகுசனப் போராட்டங்கள் மூலமாகத்தான் அவற்றை வென்றெடுத்துள்ளார்கள் என்பதையும் அஷ்ரப் மறைத்து விடுகின்றார்.

இரண்டாவதாக,. . . . முஸ்லீம்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், தமது உரிமைகளை தெளிவாகவும் பிரக்ஞை பூர்வமாக கண்டு கொள்ளச் செய்வதிலும் அஷ்ரப் காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. குறிப்பாக கட்சி உறுப்பினர்களினதும் மக்களினதும் அரசியல் உணர்வை உயர்த்தி, முனைப்புறச் செய்யும் கட்சி மாநாடு, கட்சிப் பத்திரிகை போன்ற தீர்க்கமான விடயங்களில் பயனுள்ள நடை முறைகள் எதனையும் அஷ்ரப் கொண்டிருக்கவில்லை.

கட்சி மாநாடுகளில், வட- கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் கோரிக்கைகளை திரட்டி, கறாராக வரையறுத்து திட்டவட்டமாக முன்வைத்ததில்லை. முக்கிய அரசியல் தீர்மானங்களை எடுப்பதாக மாநாடுகள் அமைவதில்லை. பதிலாக இம்மாநாடுகளை அவர் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களைப் போலவே நடாத்துகின்றார். ஆட்சி அதிகாரத்திலுள்ளவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களிடம் தனது பலத்தைக் காட்டுகின்ற, தனக்குள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துகின்ற, அவர்களை முகஸ்துதி செய்கின்ற , களமாக கட்சி மாநாட்டை மாற்றியிருக்கின்றார். பொதுவாக ஒடுக்கப்படும் ஒரு சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு கட்சி நடாத்தக் கூடிய மாநாட்டிற்கு முற்றும் முரணான வகையில் பிரமாண்டமாகவும், ஆடம்பரத்துடனும், ஒடுக்கும் சமூகத்தின் கட்சிப் பிரதிநிதிகளை அழைத்தும், மாநாடு நடத்தும் முதல் அரசியல் தலைவராக அஷ்ரப் விளங்குகிறார்.

கட்சி மாநாடுகளை இவ்வாறு திட்டமிட்டு பிரமாண்டமாக நடாத்துவதில் குறியாக இருக்கும் அஷ்ரப் கட்சிப் பத்திரிகை விடயத்தில் மௌனம் சாதிக்கிறார். முஸ்லீம்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் வெளிப்படுத்தி அவர்களின் தேசிய உணர்வை மேலும்பலப்படுத்தி முன்னெடுப்பதில் காத்திரமான பாத்திரம் ஆற்றக் கூடிய கட்சிப் பத்திரிக்கையை வெளியிடுவதில் அறவே அக்கறைப்படாதவராக இருக்கின்றார். எந்தவொரு தேசிய இயக்கத்திலும் பத்திரிகை மிகுந்த முக்கியத்துவம் உடையதாகும். தேசிய இயக்கத்தை நேர்மையுடனும், உறுதியுடனும் முன்னெடுத்துச் செல்லும் ஒரு தலைமை கட்சியின் நிலைப்பாட்டில் நின்று இத்தகைய பத்திரிகையை கட்சி மூலமோ அல்லது கட்சி சார்ந்த சிலர் மூலமோ வெளிக்கொண்டு வருவதில் தீவிர அக்கறை காட்டும். ஏனெனில் கட்சியின் கொள்கைகள் மக்களை சென்றடையும் ஒரு பிரதான மார்க்கமாக பத்திரிகை அமைகிறது. அத்தோடு மக்களது பரவலான பங்கு பற்றுதலுடன் விவாதங்களை நடாத்தும் களமாக பத்திரிகை அமைகிறது. அதன் மூலம் அவர்களின் அரசியல் தரத்தை உயர்த்தவும் அவர்களின் வளர்ச்சியை கண்டு கொள்ளவும் பத்திரிகை உதவுகிறது. தற்போது தமது சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளை விளக்க தெற்கு முஸ்லீம் தலைமையின் கருத்துகளுக்கு மறுப்புவிட SLMC இரவல்பத்திரிக்கைகளை நாடி ஓடவேண்டியுள்ளது. இவ்வாறு , தமது மக்களின் அரசியல் உணர்வை உயர்த்திப் பலப்படுத்தக் கூடிய ஒரு பத்திரிகை குறித்து அஷ்ரப் அக்கறை கொள்ளாதிருப்பது அறியாமையின் விளைவாகத் தோன்றவில்லை.

SLMC ஆனது முஸ்லீம்களது நேரடி பங்குபற்றுதலுடன் கூடிய ஒரு வெகுசனக் கட்சியாகவும் , மக்களால் கண்காணிக்கப்படவும், விமர்சிக்கப்படவும் கூடிய ஒரு ஜனநாயகக் கட்சியாகவும், அமையக் கூடிய சாத்தியத்தை அஷ்ரப் தவித்துவருகின்றார். ஒரு கட்சிக்கும் அது பிரதிநிதிதுவப் படுத்தும் சமூகத்திற்கும் இடையே நெருங்கிய உறவு நெருங்குவதில், அக்கட்சி பொதுமக்களின் பங்களிப்பில் தங்கியிருப்பது பிரதான காரணியாகிறது. மக்களின் உணர்வு மற்றும், உடல் ரீதியான பங்களிப்பு மட்டுமன்றி, முக்கியமாக பொருளாதார பங்களிப்பும் இப்பிணைப்பிற்கு அவசியம். அஷ்ரப்பைப் பொறுத்த வரையில் SLMC இன் பொருளாதாரத் தேவைகளுக்காக அவர் சொந்த மக்களில் தங்கியிராமல் SLMC அரசியலுடன் சம்பந்தமற்ற ஒரு சில தனி நபர்களிடம் செல்கின்றார். இவ்வாறு நிதிவழங்குபவர்கள் குறித்தும் பெற்ற தொகை குறித்தும் கட்சிக்குள்ளேயே தெளிவான விபரங்கள் எதனையும் தெரிவிப்பதில்லை, கட்சியின் நிதி விவகாரங்களை முற்றிலும் தன்னிடம் வைத்திருப்பதன் மூலமாக அஷ்ரப் SLMC இல் தனது ஆதிக்கத்தை மேலும் வலுவாக நிலை நாட்ட முடிகிறது. தேவைக்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப, கட்சிக்கு உதவுகின்றவர்கள் என்ற பெயரில் சில நபர்களை பிரச்சாரப்படுத்தவும், அவர்களுக்கு கட்சியிலும், பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திலும் இடமளிக்கவும் அவரால் முடிகின்றது. இதற்கு உதாரணமாக புகாரிதீன், அஸித பெரேரா , ரவூப் ஹக்கீம், போன்றவர்களைக் குறிப்பிடலாம். வட - கிழக்கு முஸ்லீம்களின் தேசிய இயக்கத்துடன் எவ்வித தொடர்பும் இல்லாத இவர்கள் தமது பொருளாதார பலத்தினால் மட்டும், முஸ்லீம்களின் அர்ப்பணிப்பின் விளைவான கட்சியினுள்ளும், அதன் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தினுள்ளும் மிக இலகுவாக இடம்பிடிக்க முடிந்தது.

இவ்வாறு தனிநபர்கள் சிலரின் நலன்களை உயர்த்தும் ஆதாரப்படையாக மாற்றப்பட்டு விட்ட கட்சியும், அதன் தலைமையும் முஸ்லீம்களின் தேசிய இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதை கைவிட்டு, பதிலாக ஒரு வீதிதிருத்தவும் அதிகார மற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் வெற்றியை முஸ்லீம்களின் அரசியல் உரிமைகளை வென்று கொள்வதற்கான வழிகளில் ஒன்றாக பிரச்சாரப் படுத்தி தமது அரசியல் வங்குரோத்தை வெளிப்படுத்துகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SLMC தலைவர் அஷ்ரப்பின் அரசியல் தகைமை இவ்வாறாக இருக்க, அவர் சகல திறமைகளும் மிக்க "அரசியல் வித்தகர்" தான் என்ற தோற்றத்தை (Image) முஸ்லீம்களிடம் ஏற்படுத்த முயற்சிக்கின்றார். தனது தனித் திறமையின் மூலமாகவே முஸ்லீம்களின் உரிமை களைப் பெற்று விடமுடியுமென்ற கருத்தை ஏற்படு த்த அவர் முனைகின்றார். இதற்காக அவ்வப் போது பரபரப்பான அறிக்கைகளை வெளியிடு வதும், சில தனிநபர்களுடன் திரை மறைவில் ஒப்ப ந்தங்களைச் செய்து கொள்வதும், இத்தகைய இரகசிய ஒப்பந்தங்கள் குறித்து ஆரவாரமாகப் பிரச்சாரப் படுத்துவதும் அஷ்ரப்பின் அரசியல் வழிமுறை களாக உள்ளன.

இவர் தன் செயல் முனைப்பற்ற தன்மையை மறைக்க வட- கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் உரிமைகளையும் வட- கிழக்கு இணைப்பு என்ற கருத்தையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்து கின்றார்.அதாவது வடக்கு, கிழக்கு மாகாணங் களை நிரந்தரமாக இணைக்கப்படும் போது மட்டுமே முஸ்லீம்களுக்கு பிரச்சனை ஏற்படும், எனவே அப்போது முஸ்லீம்களுக்கு தனியான அலகு தேவை என்றும் அவ்வாறன்றி இருமாகாண ங்களும் தனித் தனியாக பிரிக்கப் படுமாயின் முஸ்லீம்களுக்கு எந்த பிரச்சனையும் இருக்காது. எனவே தனியான அதிகார அலகு தேவையில்லை எனவும் அஷ்ரப் பேசத் தொடங்கியுள்ளார். இவ்வாறு, வட - கிழக்கு இணைப்பு - பிரிப்பு என்பதுடன் அங்குள்ள முஸ்லீம்களின் உரிமை களை தொடர்புபடுத்துவதன் மூலமாக, அந்த உரிமைகளை பெற தான் முன்னின்று போராட வேண்டிய கடமையிலிருந்தும் தப்பி யோட அஷ்ரப் முயற்சிக்கின்றார்.

உண்மையில், வடக்கு, கிழக்கு இணைப் பிற்கும் அங்குள்ள முஸ்லீம்களின் தேசிய இயக் கத்திற்கும் இடையே நேரடித் தொடர்பு எதுவும் இருந்ததில்லை. 1985இல் வட கிழக்கு முஸ்லீம்களிடையே தேசிய எழுச்சி ஏற்பட்ட போது, வடக்கு, கிழக்கு இணைப்பு குறித்த கருத்து அங்கு நிலவியிருக்கவில்லை. இதனால் வட - கிழக்கு முஸ்லீம்களின் தேசிய எழுச்சியில் இந்த இணைப்பு என்ற சிந்தனை எவ்வித பங்கும் வகித்திருக்கவில்லை. பதிலாக வட - கிழக்கில் தாம் ஒரு தனியான சமூகம் என்ற வகையில் தமது உரிமைகள் நிலை நாட்டப்பட வேண்டும்என்ற புரிதலின் அடிப்படையிலேயே அம்முஸ்லீம்கள் தமது தேசிய இயக்கத்தை முன்னெடுத்தார்கள். இவ்வுண்மையை, வடக்கும் - கிழக்கும் இணைக்கப் படும் போது மட்டுமே முஸ்லீம்களுக்கு தனியான அதிகார அலகு தேவை என்பதாகத் திரித்து விடுவதன் மூலம் இம் முஸ்லீம்கள் ஒரே அரசியல் தலைவிதியினால் பிணைக்கப் பட்டிருக்கின்ற சமூகம் என்பதையும், எனவே இவர்களுக்கென தனியான அரசியல் அதிகார அலகு வரலாற்றுத் தேவையாக முன்னிறுத்தப்பட்டுள்ளது என்பதை யும் அஷ்ரப் வேண்டுமென்றே மறைக்கின்றார்.

வடக்கும் - கிழக்கும் நிரந்தரமாக பிரிக்கப் படும்போது, அங்கு முஸ்லீம்களுக்கு என தனியான அரசியல் அதிகார அலகு தேவையில்லை என அஷ்ரப் கூறுவதன் மூலமாக உண்மையில் வட - கிழக்கு முஸ்லீம்களுக்கு அவர் அரசியல் துரோகம் இழைப்பவராகின்றார். ஏனெனில் வடக்கும் - கிழக்கும் தனித்தனியாக பிரிக்கப்படு மாயின் அவ்விரு பகுதிகளிலுமுள்ள முஸ்லீம் களின் அரசியல் பலம் கூறிடப்படவும், உரிமைகள் சிதைக்கப்படவும் வாய்ப்புள்ளது. மேலும், இது வரை வடக்கும், கிழக்கும் தனித் தனி அலகு களாக பிரிந்திருந்த நிலையில்தான் கிழக்கு முஸ்லீம்களின் பாரம்பரிய பிரதேசமும், காணி களும் சிங்கள அரசினால் பறிக்கப்படுவதும், சொந்த பிரதேசங்களிலேயே அவர்களின் செறிவு குறைக்கப்படுவதும் அவர்களின் பல்வேறு பொரு ளாதார முயற்சிகள் பாதிக்கப்படுவதும் இடம் பெற்றன. இந்த உண்மைகளை மறைப்பதன் மூலம்சொந்த மக்களுக்கு துரோகம் இழைப்ப வராக மட்டுமல்ல, சிங்கள இனவாதத்திற்கு துணைபோகின்றவராகவும் அஷ்ரப் மாறுகின்றார். முஸ்லீம்களது உரிமை தொடர்பான பிரச்ச னையை வடக்கு - கிழக்கு இணைப்பு என்பதற்கு எதிராக மட்டுமே திருப்பிவிடுவதன் மூலம் இவர் தமிழர் தாயகத்தை கூறுபோட முனையும் சிங்கள பேரினவாதத்தின் கருவியாகவே உண்மையில் செயற்படுகின்றார்.

தவிர, வடக்கு, கிழக்கு இணைப்பையும், முஸ்லீம்களுக்கென தனியான அரசியல் அதிகார அலகையும் வலிந்து இணைத்து, இதன் மூலம் முஸ்லீம்களின் உரிமைகளை முற்றிலும் தமிழ் இனவாதத்துடன் மட்டுமே தொடர்புபடுத்துப வராக அவர் மாறுகின்றார். எனவே வடக்கு, கிழக்கு முழுவதையுமே தன் ஆதிக்கத்தின் கீழ் அடக்கி வைக்க முனைகின்ற சிங்கள இனவாதம் குறித்த தெளிவான புரிதல் முஸ்லீம்களிடம் ஏற்படுவதை அவர் தடுத்துவிட முயல்கின்றார். இவ்வாறாக அவர் தனது அரசியல் கடைமை களை துறந்தோடுவதுடன், இப் பிரச்சனையை தனது அரசியல் சதுரங்க விளையாட்டுக்கு ஒரு முக்கிய காயாகவும் பயன்படுத்தி வருகின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சனத் தொகை செறிவு

**திருகோணமலை மாவட்டம்:-**

| ஆண்டு | முஸ்லீம்கள் | சிங்களவர் |
|---|---|---|
| 1921 | 37% | 4% |
| 1953 | 33% | 18% |
| 1981 | 28.9% | 34% |

**அம்பாறை மாவட்டம்:-**

| ஆண்டு | முஸ்லீம்கள் | சிங்களவர் |
|---|---|---|
| 1971 | 47% | 30% |
| 1981 | 41.53% | 37.8% |

**கிழக்கு மாகாணம்:-**

| ஆண்டு | முஸ்லீம்கள் | சிங்களவர் |
|---|---|---|
| 1921 | 40.55% | 4.69% |
| 1953 | 36.15% | 14.85% |
| 1981 | 32.2% | 25.8% |

## நில உரிமை

**அம்பாறை மாவட்டம்:**

மொத்த நிலப்பரப்பு :- 1775 ச.மை

| ஆண்டு | சிங்களவர் | முஸ்.+தமிழர் |
|---|---|---|
| 1971 | 534 ச.மை | 1241 ச.மை |
| 1976 | 880 ச.மை | 895 ச.மை |
| 1981 | 1396 ச.மை | 379 ச.மை |

**திருகோணமலை:-**

மொத்த நிலப்பரப்பு :- 1048 ச.மை

| ஆண்டு | சிங்களவர் | முஸ்.+தமிழர் |
|---|---|---|
| 1971 | 284 ச.மை | 764 ச.மை |
| 1976 | 700 ச.மை | 384 ச.மை |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு தேசிய இயக்கம் சமூகத்தின் பல பிரிவுகளையும் ஐக்கியப்படுத்தியே முன்னேறிச் செல்கின்றது. தேசிய இயக்கத்தில் பங்கு கொள்கின்ற இச் சமூகப் பிரிவுகள் தமக்கென தனித்துவமானதும், சில சமயங்களில் வேறு பட்டதுமான சில நலன்களைக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாதது. எனவே இவற்றை ஒன்றி ணைத்து, பொதுவான தேசிய நலன்களை வெளிப்படுத்தும் வகையில் கோரிக்கைகளை வகுக்க வேண்டிய பொறுப்பு அத்தேசிய இயக்கத் தின் தலைமைக்கு உரியதாகும். தனது சமூகத் தின் மத்தியில் இத்தகைய ஐக்கியத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு தலைமையானது பல் வேறு சமூகப் பிரிவினரையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் அமைந்த ஒரு கூட்டுத் தலைமையாக இருப்பது அவசியமாகும்.

வட - கிழக்கு முஸ்லீம்களைப் பொறுத்த வரையில், அவர்கள் இதுவரை காலமும் பிரதேச தொடர்ச்சியின்மையும், முரண்பாடுகள், பிரதேச வாதங்கள் என்பவற்றையும் கொண்டிருப்பதோடு, பிரதேசமட்டங்களின் அடிப்படையில் வேறுபடு கின்ற குறிப்பான தேவைகளையும் கொண்டு ள்ளனர். மேலும் அவர்கள் மத்தியில் கடந்த காலங்களில் நிலவிய மரபான கட்சி அரசியல் காரணமாக அவர்களிடையே U.N.P., SLFP என்ற பிளவுகளும், பகைமைகளும், பழிவாங்கல்களும் நிலவி வந்துள்ளன. எனவே இப்படிப்பட்ட பிளவுகளையும், முரண்பாடுகளையும் கடந்து, வட -கிழக்கு முஸ்லீம்களை ஒரே தேசிய இயக்கத்தின் கீழ் அணிதிரட்டுவதற்கு கூட்டுத் தலைமையும், பொதுக் கோரிக்கைகளும் மிகவும் அவசியமா கின்றன. எனினும் SLMC இல் இத்தகைய நிலைமை இன்று வரை ஏற்படவேயில்லை. அஷ்ரப்பின் தனி ஆதிக்கம் SLMC இல் நிலவுவது ஒரு புறம் இருக்க, கட்சியின் முக்கிய பொறுப்புகளுக்கு அவரின் சொந்த மாவட்டமான அம்பாறையை சேர்ந்தவர்களே பெரிதும் நியமிக்கப்பட்டு வந்துள்ளனர். (அப்படி ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு சிலர் இருப்பின் அவர்கள் வெறுமனே தலையாட்டுபவர்களாக, அந்தந்த பிரதேசங்களின் மக்கள் ஆதரவை பெறாதவர்களாகவே இருப்பர்.) இதனால், முழு வட - கிழக்கு முஸ்லீம்களின் தேசிய கட்சியாக உருப்பெற்ற SLMC, இன்று பண்பு ரீதியில், அம்பாறை மாவட்டத்தை முதன்மைப்படுத்து கின்ற ஒரு பிரதேசக் கட்சியாக குறுக்கப்பட் டிருக்கிறது. முழு வட-கிழக்கு முஸ்லீம்களின் நலன்களையும் பிரதிபலிக்கின்ற பொதுவான அரசியல் கோரிக்கைகளை திட்ட வட்டமாக வரையறுத்து முன்வைப்பதற்கு பதிலாக, அம்பாறை மாவட்டத்தை மையப்படுத்திய கோரிக்கைகளே முதன்மையாக்கப் பட்டு வந்திருக்கின்றது. இதன் ஒரு வடிவமாகவே "தென்கிழக்கு மாகாணம்" என்ற கோரிக்கையும் வெளிப்பட்டிருக்கின்றது. ("தென்கிழக்கு மாகா ணம்" என்ற பெயரிடலே , கிழக்கு மாகாணத்தின் மத்திய, வடக்கு பிரதேசங்களான காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி,தோப்பூர், மூதூர்,கிண்ணியா, போன்ற முஸ்லீம் பிரதேசங்கள் கூட கைவிடப் பட்டதாக அமைந்துள்ளமை இங்கு கவனிக்கத் தக்கது.) இதன் காரணமாக வடகிழக்கின் ஏனைய பிரதேச முஸ்லீம்கள் SLMC இல் நம்பிக்கை இழக்கின்ற நிலை தோன்றி வருகின்றது.

வட - கிழக்கு முஸ்லீம்களின் நலன் களையும், உரிமைகளையும் முதன்மைப்படுத்திச் செயற்படுவதற்குப் பதிலாக, அஷ்ரப் முழு நாட்டினதும், அனைத்து சமூகங்களினதும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கும் ஒருவராக அடிக்கடி தன்னை வெளிப்படுத்தி வந்துள்ளார். இதில் அவரது அரசியல் சாணக் கியத்திற்கு பதிலாக அரசியல் முதிர்ச்சியின் மையே வெளிப்படுகின்றது. அரசு, புலிகள் என்ற இரண்டு இனவாதப் பிரிவுகளிடையே சிக்கிக் கொண்டுள்ள தனது சமூகத்தின் உரிமைகளை மீட்டெடுப்பது குறித்து தீவிர அக்கறையையும் அரசியல் முதிர்ச்சியையும் வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பில் SLMC யும் அதன் தலைவரும் உள்ளனர். இப் பொறுப்பைக் கைவிட்டு முழு நாட்டுப் பிரச்சனைக்குமான தீர்வு குறித்து அஷ்ரப் பேசுவதில் அர்த்தம் இல்லை. ஒரு சமூகம் தன் சொந்த உரிமைகளை வென்று தருவதற்காகவே SLMC இற்கு ஆணையை வழங்கியுள்ளது என்ற உண்மையை அவர் தட்டிக் கழித்து விடப் பார்க்கின்றார். சிங்கள அரசும் தமிழ் போராட்ட அமைப்புகளும் நவீன ஆயுதங்களை ஏந்திய படி வட - கிழக்கு முஸ்லீம்களுக்கு விரோத மான முறையில் செயற்படுகின்றன என்ற உண் மையை அஷ்ரப்பும் SLMC இன் ஏனைய உறுப்பினர்களும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சமூகம் தனது அரசியல் உரிமை களை கண்ணாமூச்சி விளையாடி வென்றுகொள்ள முடியாது. சிங்கள, தமிழ் சமூகங்களின் முன்பாக சந்தர்ப்பத்திற்கு ஏற்பகோரிக்கைகளையும் அறிக்கைகளையும் மாற்றி மாற்றி வெளியிட்டு வருவதால் தமது மக்களின் உரிமைகளை வென்று விடலாம் என அஷ்ரப் கருதினால் அது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவரது அறியாமையின் விளைவாகும். முஸ்லீம்கள் சமகாலத்தில் இரு பக்க ஒடுக்கு முறைகளால் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். தமிழ் தேசத்தின் மீதான சிங்கள அரசின் ஒடுக்கு முறையும் அதற்கு எதிரான போராட்டமும் தொடர்ந்து உக்கிர மடைந்து கொண்டே செல்லும் என்பதை அஷ்ரப்பும் SLMC தலைமையும் புரிந்து கொள்வார்களாயின், இம் மோதல்களின் விளைவாக, வட - கிழக்கில் எஞ்சியிருக்கின்ற முஸ்லீம்களின் சமூக இருப்பும் கூட அச்சுறுத் தலுக்குள்ளாகும் என்பதை தெளிவாக காண்பார்கள். இந்த நிலை ஏற்படுவதை முடிந்தவரை தவிர்க்க வேண்டுமாயின், அரசியல் தூரதிருஷ்டியும் வெகு சனங்களை அணிதிரட்டும் போராட்ட வடிவங்களும், இம் முஸ்லீம்களின் பிரச்சனைகளை சர்வதேச மயப்படுத்துவதும் அவசியமாகும். இதுபோன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தால் சிங்கள அரசும், சிங்கள மக்களும், தமிழ்தரப்புகளும் முஸ்லீம்கள் குறித்து ஆத்திரமடைவர் எனவும் இதனால் முஸ்லீம்கள் மீதான இன ஒடுக்குமுறை அதிகரிக்கலாமெனவும் ஒரு பயப் பீதியை அஷ்ரப்பும் SLMC தலைமையும் பரப்பி வருகின்றனர். இது முற்றிலும் தவறானதாகும். இப்படியான நடவடிக்கைகளை முற்கூட்டியே எடுக்காமல் விடப்படும் போதுதான் முஸ்லீம் சமூகத்தின் இருப்பு இருந்த இடம் தெரியாமல் சிதறடிக்கப் படும் வாய்ப்பு ஏற்படும். அதன் பிறகு விழிபிதுங்கிப் பயனில்லை. முதலாவதாக, வட - கிழக்கு முஸ்லீம்கள் ஏற்கனவே சிங்கள, தமிழ் இனவாதங்களின் ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள். இரண்டாவதாக, இத்தகைய ஒடுக்கு முறைகளை மறைப்பதால் அல்ல, பகிரங்கத்துக்கு கொண்டுவந்து, தேவையான முன்னெடுப்புகளை மேற்கொள்வதால் மட்டுமே ஒரு சமூகம் தன்னை ஒடுக்குதல்களில் இருந்து விடுவித்துக் கொள்ள முடியும். உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட சமூகங்களின் தேசிய இயக்கங்களின் அனுபவங்கள் வெளிப்படுத்துகின்ற ஒரே உண்மை இதுதான்.

**இனவாதத்தால் இறுகிப் போயிருக்கும் சிங்கள அரசின் ஓர் அங்கமான அரசாங்கத்தில் ஒடுக்கப் படும் சமூகங்களின் பிரதிநிதிகள் அமைச்சர் பதவிகளை வகிப்பதன் மூலமாக அச் சமூகங்களின் உரிமைகளை பெற்றுவிட முடியாது. மாறாக, தனது சமூகத்தின் உரிமைகளை தாரைவார்த்து விட்டே இவர்கள் அமைச்சர்களாக நீடிப்பது சாத்தியப்படும்**

இன்று தலைவிரித்தாடும் கொடூர இன ஒடுக்கு முறைகளுக்கும், யுத்தப் பேரழிவுகளுக்கும் சிங்கள இனவாதமும், சிங்கள அரசுமே முதற் காரணம். எனவே இந்த அவலங்களை முடிவுக்கு கொண்டு வர வேண்டிய பொறுப்பும் தொடக்கி வைத்தவர்களுக்கே உரியதாகும். ஆனால் இந்தப் பொறுப்பை தாம் நிறைவேற்றுவதற்குப் பதிலாக, சிங்கள அரசும், தலைமைகளும் மற்றைய சமூகங்கள் மீதான ஒடுக்கு முறைகளை மேலும் தீவிரப்படுத்தி வருவதோடு, ஒடுக்கப்படும் தமிழ், முஸ்லீம் சமூகங்களை தமக்கிடையில் மோத விடுகின்ற நிலையை தொடர்ந்தும் ஏற்படுத்தி வருகின்றன. ஒரு புறம் தமிழ், முஸ்லீம்களிடையே வன்முறைகளைத் தூண்டி விடுவதோடு, மறுபுறம் தேசியப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வைக் காண்கின்ற பொறுப்பை தமிழ், முஸ்லீம் அரசியல் வாதிகளிடம் தள்ளி விட்டு, இவ்விரு சமூகங்களிடையிலும் முரண்பாட்டை மேலும் ஆழப்படுத்தி விடுகின்றன.

இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாகவும், வடக்கு-கிழக்கு இணைப்பு மற்றும் முஸ்லீம்களின் உரிமைகள் தொடர்பாகவும் SLMC இத் தமிழ் அமைப்புகளுடன் பல் வேறு பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளது. இவ்வாறாக தமிழ் தரப்புகளுடன் இணக்கம் காண மேற்கொள்ளப்பட்ட இம் முயற்சிகளில் ஏற்படும் தோல்வியின் மூலம், வட-கிழக்கு முஸ்லீம்களின் உரிமைகள் சிங்கள இன வாதிகளினால் உதாசீனப் படுத்தப்பட்டு கேலிக்குள்ளாக்கப்பட்டன என்ற உண்மையை அஷ்ரப் புரிந்து கொள்ள வேண்டும். இங்கு தமிழ் - முஸ்லீம் இணக்கமின்மையை காட்டி சிங்கள அரசும், இனவாதிகளும் தப்பிக்க முயல்வதையும் அஷ்ரப் உணர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறாக சிங்கள அரசின் "சதிப் பொறியில்" சிக்கி, முஸ்லீம்களின் அரசியல் உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படுவதற்கு அஷ்ரப் துணை போவது ஒரு வகை சமூக துரோகமே.

சிங்கள அரசினதும், பௌத்த-சிங்கள இனவாதத்தினதும் சதிகள் குறித்து ஒடுக்கப்படும் சமூகம் என்ற வகையில் வட - கிழக்கு முஸ்லீம்கள் தெளிவான புரிதலைப் பெறவேண்டும். அரை நூற்றாண்டு காலமாக போராடி வருகின்ற தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> **வட - கிழக்கு முஸ்லீம்கள் ஒரு தனியான தேசமாக உருவாகி விட்டார்கள் என்பதும் அவர்களின் தேசிய இயக்கத்தில்தான் அவர் தனது அரசியலை நடாத்திக் கொண்டிருக்கிறார் என்பதும் அஷ்ரப்பிற்கே தெரியவில்லை.**

மக்களுக்கு மிகச் சாதாரண உரிமைகளைக் கூட வழங்கத்தயாராக இல்லாத இந்த சிங்கள இனவாதமும் அரசும், தம்மால் ஒடுக்கப்படுகின்ற இன்னொரு சமூகமான வட - கிழக்கு முஸ்லீம்களின் உரிமைகள் விடயத்தில் தாராளமாக நடந்து கொள்ளும் என முஸ்லீம்கள் தப்புக் கணக்கு போட்டால், அது தமது சமூகத் தற்கொலைக்கு இட்டுச் செல்வதாகவே அமையும். இருந்தும், இன்று வரையிலான தனது அரசியல் முன்னெடுப்புக்கள் முலம் அஷ்ரப், சாராம்சத்தில் சிங்கள அரசிற்கும், சிங்கள இனவாதத்திற்கும் அடிபணிந்து விட்டவராகவே தன்னை வெளிப்படுத்தி வருகின்றார். அதிகாரத்திலுள்ள சிங்களத் தலைவர்களை முகஸ்துதி செய்வதும், இலங்கை சிங்கள பௌத்த நாடு என ஏற்றுக்கொள்வதும், சிங்கள சமூகத்தின் தயவில் வட - கிழக்கு முஸ்லீம்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கூறுவதும். . . . இதனை நிருபிப்பதாக அமைகிறது.

தமது தேர்தல் வெற்றியைக் கொண்டு, அரசாங்கத்துடன் பேரம் பேசி வட - கிழக்கு முஸ்லீம்களின் உரிமைகளை பெற்றுவிட முடியும் என்ற அஷ்ரப்பின் பிரச்சாரங்கள் தவறானவை என்பது, இன்றைய அரசாங்கத்தின் "பங்காளிகளாக" அவரும் SLMC உறுப்பினர்களும் ஆன பின்னர் தெளிவாக நிருபிக்கப்பட்டு வருகின்றது. PA அரசாங்கத்தின் இருப்பை தீர்மானிக்கும் "சக்தி" பெற்றவராயும், புனர்வாழ்வு அமைச்சராயும் அஷ்ரப் இருக்கின்ற போதிலும், வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கும் முஸ்லீம்களின் புனர்வாழ்வு விடயத்தில் காத்திரமாக எதுவும் செய்ய முடியவில்லை. அகதிகள் என்ற பெயரே இல்லாத வகையில் அவர்களுக்கு அடிப்படை தேவைகள் அனைத்தையும் வழுங்கி மறுவாழ்வு அளிப்பேன் என்ற வார்த்தைகள் இன்று மறந்து விட்ட ஒன்றாகி விட்டது. மூதூரின் மையப் பகுதியில் சிங்களவர்களுக்கு காணி வழங்கி குடியேற்றப்பட்டதையும், ஏறாவூர், புல்மோட்டை போன்ற பகுதிகளில் முஸ்லீம்கள் அரச படைகளால் தாக்கப்பட்டதையும், கொல்லப்பட்டதையும் அஷ்ரப்பினாலும் அவரது பாராளுமன்ற சகாக்களினாலும் தடுக்க முடியவில்லை. இவை அனைத்தும் வெளிப்படுத்தும் உண்மை இது தான். இனவாதத்தால் இறுகிப் போயிருக்கும் சிங்கள அரசின் ஓர் அங்கமான அரசாங்கத்தில் ஒடுக்கப்படும் சமூகங்களின் பிரதிநிதிகள் அமைச்சர் பதவிகளை வகிப்பதன் மூலமாக அச்சமூகங்கள் உரிமைகளை பெற்றுவிட முடியாது. மாறாக, தனது சமூகத்தின் உரிமைகளை தாரை வார்த்துவிட்டே இவர்கள் அமைச்சர்களாக நீடிப்பது சாத்தியப்படும். ஒடுக்கப்படும் சமூகங்கள் மற்றொரு உண்மையையும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, சிங்கள இனவாத அரசில் அங்கம் வகிக்கின்ற தமது அமைச்சர்களை விட, அந்த அரசு நிறுவனங்களில் பணிபுரிகின்ற ஒரு சிங்கள எழுதுவினைஞர் (Clerk) கூடிய அதிகாரமுடையவனாக இருக்கின்றான் என்பதே அந்த உண்மையாகும்.

ஒரு புறம் சிங்கள இனவாதமும் மறுபுறம் தமிழ் இனவாதமும் வட - கிழக்கு முஸ்லீம்களின் சமூக இருப்பை வேரறுத்துக் கொண்டிருக்கும் நிலையில், அவர் கள் தமது தேசிய இயக்கத்தை வலிமையுடன் முன்னெடுத்தாக வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட தேசிய இயக்கத்திற்கு தலைமை தாங்கக் கூடிய, ஒரு தேசிய தலைவராக அஷ்ரப் இருக்கின்றாரா? தமது உரிமைகளை வென்று தரக் கூடிய ஒரு அரசியல் போராட்ட தலைவராக அவர் தன்னை வெளிப்படுத்தியிருக்கின்றாரா? என்பதை தீர்மானிக்க வேண்டிய நிலையில் வட - கிழக்கு முஸ்லீம்கள் உள்ளனர். தனது ஒன்பது வருடகால SLMC சார்ந்த அரசியல் வாழ்வின் மூலமாக, அஷ்ரப் தன்னை ஒரு அற்ப பாராளுமன்ற பிழைப்புவாத அரசியல் வாதியாகவே வெளிப்படுத்தி வந்துள்ளார். தனது அதிகாரத்தையும், நலன்களையும், செல்வாக்கையும் பாதுகாப்பதில் குறியாக இருக்கும் ஒரு சந்தர்ப்பவாத அரசியல் தலைவராகவே தன்னை அடையாளம் காட்டியுள்ளார். அரசியல் பண்பில் அவர் தெற்கு முஸ்லீம் தலைமையிலிருந்து அதிகம் வேறுபட வில்லை. இனவாதத்துடன் பணிந்து போகின்றார், அதனுடன் சமரசம் செய்கின்றார். அவரும் அவரின் சகாக்களும் தமது வாழிடங்களையும், பொருளாதார முயற்சிகளையும் கொழும்பை மையப்படுத்தியதாக மாற்றியிருக்கின்றனர். இதனால் இவற்றை பாதுகாக்க சிங்கள அரசின் தயவை நாடவேண்டியுள்ளனர். இறுதியாக SLMC தலைவர் அஷ்ரப் பற்றி ஒன்றை தெளிவாக குறிப்பிட முடியும். வட -கிழக்கு முஸ்லீம்கள் ஒரு தனியான தேசமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாகி விட்டார்கள் என்ப தும் அவர்களின் தேசிய இயக்கத்தில் தான் அவர் தனது அரசியலை நடாத்திக் கொண்டி ருக்கிறார் என்பதும் அஷ்ரப்பிற்கே தெரியவில்லை. முஸ்லீம் தேசத்தின் அரசியல் கோரிக்கைகள் என்ன? என்பதைக் கூட இதுவரை SLMC திட்ட வட்டமாக வெளிப்படுத்தவில்லை. தனியான மாகாணசபை நிபந்தனையுடன் கூடிய வடக்கு - கிழக்கு இணைப்பு தனியான இரானுவம். . . . என பலப்பல கோரிக்கைகளை அவ்வப்போது அஸ்ரப் முன் வைத்துள்ளார். இப்போது வடக்கு - கிழக்கு பிரிப்புதான் முஸ்லீம்களின் கோரிக்கை என்பது போல பேச முற்படுகின்றார். மறுபுறம், தென் கிழக்கு மாகாண சபை எனவும் இரகசியமாக ஆலோசனை நடத்துகின்றார். இப்படியாக அடிக்கடி சந்தர்ப்பத்திற்கு ஏற்ப கோரிக்கைகளை முன்வைப்பதும் பின்பு கைவிடுவதுமாக, செயற்பட்டு வந்துள்ளார். உண்மையில், மக்களுடைய பங்குபற்றுதலுடன் கூடிய விரிவான விவாதத்தை நடாத்தி முஸ்லீம் மக்களது அரசியல் கோரிக்கைகள் இவைதான் என்பதை தெளிவாக முன்வைக்கமுடியாத ஒரு அமைப்பாகவே SLMC இதுவரை இருந்து வருகின்றது.

இதன் காரணமாக, SLMC உம், வட-கிழக்கு முஸ்லீம்களின் தேசிய இயக்கமும் தேக்கத்திற்கும், ஓரளவு பின்னடைவிற்கும் உட்பட்டுள்ளது. இருந்த போதிலும், இம் முஸ்லீம்களின் தேசிய உணர்வு இன்னமும் உள்ளார்ந்து உயிர் துடிப்பு மிக்கதாகவே உள்ளது. வட - கிழக்கில் தமக்கென தனியான அரசியல் அதிகார அலகு உருவாக்கப்படுவதன் மூலமாக மட்டுமே, தமது சமூக இருப்பும், உரிமைகளும் பாதுகாப்பும், உறுதிப்படுத்தப்படும் என்பதில் அவர்கள் இன்னமும் திடமாகவே உள்ளனர். இவற்றை அடைவதற்கு தமக்கென தனியான அரசியல் கட்சி அவசியமே என்பதில் அவர்கள் உறுதியாகவே இருக்கின்றனர். அஷ்ரப்பின் அதிகாரத்துவ போக்குகளும், சந்தர்ப்பவாத அரசியலும் தமது உரிமைகளை பெற்றுத்தராது என்பதை வட-கிழக்கு முஸ்லீம்கள் படிப்படியே உணர்ந்து வருகின்றார்கள். எனினும் ஒரு பொருத்தமான தேசிய தலைமை தம்மிடையே இன்னமும் உருவாகாததால், அஷ்ரப்பின் தலைமையை தொடர்ந்தும் ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் வட - கிழக்கு முஸ்லீம்கள் இருக்கின்றனர்.

வடக்கு முஸ்லீம்களும், கிழக்கின் சில பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லீம்களும் SLMC இல் இருந்து கணிசமாக விலகி நிற்பதற்கான காரணம், அவர்களின் தேசிய உணர்வு மழுங்கி விட்டது என்பதால் அல்ல. மாறாக அஷ்ரப்பின் மீதான அவநம்பிக்கை காரணமாகவே அவர்கள் SLMC இலிருந்து விலகி நிற்கின்றார்கள். இவ்வாறு விலகி நிற்பவர்களிடம் மீண்டும் சிங்கள கட்சிகளுக்கு ஆதரவளிக்கும் போக்கு மேலோங்கியிருக்கவில்லை. தமக்கேயுரிய அரசியல் குறித்தும், தமது அரசியல் உரிமைகள் பாதுகாக்கப் படுவது குறித்துமே இன்னமும் சிந்திக்கின்றனர். இவ்வாறு இவர்கள் SLMC இலிருந்து விலகி நிற்பது, வட-கிழக்கு முஸ்லீம்களின் தேசிய இயக்கம் பலவீனப்பட்டு விட்டது என்பதையோ, மறைந்து கொண்டிருக்கிறது என்பதையோ குறிக்காது. மாறாக பிற்போக்கு சந்தர்ப்பவாத தலைமையிடமிருந்து விடுபடும் போக்கு ஆரம்பித்து விட்டது என்பதையும் ஒரு தனியான தேசம் என்ற வகையில், அவர்களிடையே உறுதியான ஐக்கியம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதையுமே காட்டுகிறது.

முஸ்லீம் தேசிய இயக்கம் இன்று ஒரு மாற்றுத் தலைமையை வேண்டி நிற்கிறது. வட- கிழக்கு முஸ்லீம் தேசத்தை மேலும் பலப்படுத்தி, தமது அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற சுய நிர்ணய உரிமை தமக்கு இருக்கிறது என்ற தெளிவுடன், அவ் உரிமையை நிலை நாட்டுவதற்கான அரசியல் நடவடிக்கைகளில் அவர் களை பங்கு கொள்ளச் செய்கின்ற ஒரு புதிய தலைமை அவசியமாகின்றது. தம்மை இருபுறமாகவும் ஒடுக்குகின்ற சிங்கள இனவாதத்தையும், தமிழ் இனவாதத்தையும் எதிர் கொண்டு அவ் ஒடுக்கு முறைகளில் இருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளை இனங்கண்டு, முஸ்லீம்களை அரசியல் போராட்ட நடவடிக்கைகளில் பங்கு கொள்ளச் செய்கின்ற ஒரு போராட்டத்தலைமை அவசியமாகின்றது. முஸ்லீம் தேசத்துள் அடங்குகின்ற சகல பிரிவினரின் நலன்களையும், அபிலாசைகளையும் நிறைவு செய்யக் கூடிய வகையில் கோரிக்கைகளை தெளிவாக வரையறுத்து முன் வைக்கக்கூடிய ஒரு கூட்டுத் தலைமை அவசியமாகின்றது. வட - கிழக்கு முஸ்லீம்களில் தங்கியிருப்பதாயும் அவர்களின் பிரச்சனைகளையும் போராட்டத்தின் நியாயத் தன்மையையும் சர்வதேச மயப்படுத்துபவர்களாயும் அமைகின்ற ஒரு தீர்க்கமான தலைமை அவசியமாகின்றது.

SLMC இலிருந்து வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்டவர்களில் சிலர் மாற்றுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமையாக அமைவதற்கும், புதிய கட்சியை அமைக்கவும் அவ்வப்போது முயன்று வந்துள்ளனர். ஆனால் இவர்கள் முஸ்லீம்களின் தேசிய இயக்கத்தை தலைமை தாங்கி உறுதியாக முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, எப்படியும் அஷ்ரப்பை வீழ்த்த வேண்டும் என்பதே இலக்காக இருந்தது. இவர்கள், அஷ்ரப் தவற விட்ட அரசியற் பாத்திரத்தை நிரப்பி, பண்பில் அஷ்ரப் பிலிருந்து வேறுபட்ட ஒரு தலைமையாகத் தம்மை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, நபர் என்ற அளவில் மட்டும் அஷ்ரப்பிற்கு மாற்றாகத் தாம் வர விரும்பினர். இதனால் இவர்களின் முயற்சிகள் தோல்வியடைந்ததோடு, இறுதியில் இவர்களின் சுயநலத் தோற்றங்களும் அம்பலமாயின. இவ்வகையில் SLMC இன் முன்னால் தவிசாளர் சேகு இஸ்ஸதீன் இதற்கு உதாரணமாகின்றார். முன்பு கட்சியின் தீர்மானம் எதுவும் இன்றி, ஜனாதிபதி தேர்தலில் பிரேமதாஸவை ஆதரிப்பது என்று தன்னிச்சையாக அஷ்ரப் கருத்து வெளியிட்டதை காரணம் காட்டி SLMC இலிருந்து வெளியேறி, "முஸ்லீம் கட்சி" என்ற தனிக் கட்சியும் ஆரம்பித்த சேகுஇஸ்ஸதீன் பின்னர், UNPஇல் இணைந்து கொண்டதன் மூலம் தனது உண்மைத் தோற்றத்தை அப்பட்டமாக்கிக் கொண்டார். உண்மையில், வட - கிழக்கு முஸ்லீம்களின் தேசிய அரசியலில் ஊன்றி நின்று அதனை தெளிவாகவும், உறுதியாகவும் முன்னெடுப்பதால் மட்டுமே முஸ்லீம்களின் பலமான ஆதரவை ஒரு மாற்றுத் தலைமை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை முஸ்லீம்கள் மத்தியிலுள்ள முற்போக்கு, ஜனநாயக சக்திகள் புரிந்து கொள்ள வேண்டும்.

கிழக்கு எங்கும் அரச படைகளும், விடுதலைப் புலிகளும் ஆதிக்கம் செலுத்துகின்ற நிலையில், முஸ்லீம் மத்தியில் உருவாகக் கூடிய முற்போக்கு, ஜனநாயக சக்திகளை அழித்தொழித்த அரச படைகள் தீவிரமாக இருக்கின்ற நிலையில், வடக்கிலிருந்து முற்றாகவே முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டுள்ள சூழலில், இன்றைய SLMC தலைமைச் சக்தி மிக்கவர்களாக மாறியிருக்கின்ற நிலையில், வட - கிழக்கு முஸ்லீம்கள் மத்தியிலிருந்து ஒரு புதிய போராட்டத் தலைமை உருவாவது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. எனினும் இத் தேவை நிறைவேற்றப்பட்டாக வேண்டும். இது இன்றைய வரலாற்றுத் தேவையாகும். வட - கிழக்கு முஸ்லீம்களிடையே ஒரு புதிய மாற்றுத் தலைமை உருவாகும் போதுதான் அவர்களின் தேசிய இயக்கம் மீண்டும் முன்நோக்கிப் பாய்ந்து சரியான திசைவழி செல்வதும் சாத்தியமாகும்.

ஒரு உண்மையான மக்கள் இயக்கம் தனது இலக்கை அடைவதில் என்றுமே தோல்வி கண்டதில்லை. இத்தகைய இயக்கம் தனது வளர்ச்சிப் போக்கில், ஒவ்வொரு கட்டத்திற்கும் பொருத்தமான புதிய, ஆற்றல் மிக்க போராட்ட தலைமைகளை தன்னிலிருந்து உருவாக்கியே தீரும். இந்த உண்மை வட-கிழக்கு முஸ்லீம்களின் தேசிய இயக்கத்திற்கும் முற்றிலும் பொருந்தும். எனவே ஒடுக்கப்பட்ட முஸ்லீம் மக்களின் இந்த தேசிய இயக்கம் தன்னுடைய இன்றைய கட்ட வரலாற்றுத் தேவையை உணர்ந்து பொருத்தமான ஒரு தலைமையை நிச்சயம் படைத்தளிக்கும்!

## முடிவுரை

இலங்கை முஸ்லீம்கள் தெற்கு, வட - கிழக்கு என வேறுபட்ட அரசியல் தலைவிதிகளைக் கொண்ட இரு பிரிவுகளாக வாழ்கிறார்கள் என்பதையும், வட - கிழக்கு முஸ்லீம்கள் ஒரு சுயமான அரசியல் இயக்கத்தை முன்னெடுத்திருப்பதோடு, தமக்கென தனியான அரசியல் அதிகார அலகை கோருகின்ற ஒரு தனித் தேசமாக உருவாகியிருக்கிறார்கள் என்பதையும் இதுவரை வெளிப்படுத்தினோம். வட - கிழக்கு முஸ்லீம்கள் ஒரு தனியான தேசம் என்ற முடிவு தமிழ் தேசத்தின் பல் வேறு தரப்புகளிடையே வேறுபட்ட கேள்விகளையும், சர்ச்சைகளையும் உருவாக்கக் கூடும். ஏற்கனவே தனிப்பட்ட விவாதங்களிலும், சஞ்சிகைகளினூடாகவும் வட - கிழக்கு முஸ்லீம்கள் குறித்த மதிப்பீடுகளும் கேள்விகளும் எழுப்பப்பட்டிருக்கின்றன. இவற்றை உள்ளடக்கும் வகையில் விரிவாக விவாதிப்பதன் மூலமாக வட-கிழக்கு முஸ்லீம்களின் தேச இருப்பை புரிந்து கொள்ள முயல்வோம்.

முதலில், வட - கிழக்கு முஸ்லீம்களை, தமிழ் தேசத்திற்குள் அடையாளப்படுத்துகின்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**வரையறைகள் என்பவை, சமூக இயக்கங்களில் இருந்து பெறப்படுகின்ற தர்க்க ரீதியான முடிவுகளே தவிர, சமூக இயக்கங்களை கட்டுப்படுத்துகின்ற, அவற்றை நிராகரிக்கின்ற தடைகள் அல்ல. எந்த சமூகமும் வரையறைகளை சரி பார்த்தபடி இயங்குவதில்லை.**

முயற்சிகளைத் தமிழ் தலைமைகள் இப்போது முற்றாகக் கைவிட்டுள்ளன. என்ற உண்மையை மனதில் கொள்வோம். வடக்கிலிருந்து முஸ்லீம் களை வெளியேற்றிய விடுதலைப் புலிகளும் கூட வட - கிழக்கு முஸ்லீம்களின் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பது முரண்நகையான உண்மை. தமிழ் தேசத்தின் சிந்தனைப் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றம் தான் இவ்வாறான நிகழ்விற்கு காரணமென்பதை விட, வட - கிழக்கு முஸ்லீம்கள் தமது தனித்துவம் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த உணர்வ லைகளைத் தொடர்ச்சியாகவும் உறுதி யாகவும் வெளிப்படுத்தி வந்திருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும். இன்னும் தெளிவாகக் கூறினால், வட - கிழக்கு முஸ்லீம்கள் தமது தனித்துவத் தையும் உரிமைகளையும் திட்டவட்டமாக வெளிப்படுத்திய பின்னர்தான் அவற்றை ஏற்றுக் கொள்ளும் படி தமிழ் தலைமைகள் நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கின்றன. எனவே தமிழ் தலைமைகளும், தமிழ் தேசமும் ஏற்றுக் கொண்டாலும், இல்லா விட்டாலும், வட - கிழக்கு முஸ்லீம்கள் தம்மை அரசியல் ரீதியில் தனியான சமூகமாக உருவாகிவிட்டனர் என்பதே உண்மை. இந்த உண்மையை தமிழ் முற்போக்கு, ஜனநாயகப் பிரிவினர் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஒரு சமூகத்தின் அரசியல் தனித்துவம் என்பது முற்றிலும் அச்சமூகத்தின் சொந்த விருப்பினா லேயே தீர்மானிக்கப்படுகிறது என்ற உண்மை இங்கும் நிருபிக்கப்பட்டிருக்கின்றது.

இனி, தமிழ் தேசத்தின் அனைத்துப் பிரிவினரும் வட-கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் தனித்துவத்தை ஓரே அர்த்தத்தில் புரிந்து கொள்ளவில்லை என்ற உண்மையை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. தமிழ் பிரிவினர், வட - கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் தனித்துவத்தை முக்கியமாக மூன்று வகையில் அர்த்தப்படுத்து கின்றனர் எனக்கொள்ளலாம்.

1) வட - கிழக்கு முஸ்லீம்கள் தமிழ் ஈழத் தில் அடங்குகின்ற ஒரு தேசிய சிறுபான்மையினர்.

2) வட - கிழக்கு முஸ்லீம்கள் வளர்ந்து வருகின்ற ஒரு தேசம்.

3) வட - கிழக்கு முஸ்லீம்கள் ஒரு தனியான தேசம்.

இவற்றில் முதல் இரண்டு அர்த்தப்படுத் தல்களும் பெரிதும் தேசம் குறித்த ஸ்டாலினின் வரையறைகளை அளவுகோலாகக் கொள்வதன் வெளிப்பாடுகளாகும். குறிப்பாக வட - கிழக்கு முஸ்லீம்களிடையே நிலத் தொடர்சியின்மையும், பலவீனமான பொருளாதாரக் கட்டமைப்புகளும் காணப்படுகின்றன எனக்கொண்டு இத்தகைய முடிவுகள் பெறப்படுகின்றன. இவ்வாறு அர்த்தப் படுத்துவதிலுள்ள தவறுகளை சுட்டிக்காட்டு வதற்குப் பதிலாக, "வட - கிழக்கு முஸ்லீம்கள் தனியான தேசம்" என்று இக்கட்டுரை முன்வைத் திருக்கின்ற முடிவு குறித்து விவாதிப்பதன் ஊடாக பொதுவான புரிதலை எட்டுவது பொருத்தமாக அமையும்.

முதலில், சமூக நிகழ்வுகள் தொடர்பான வரையறைகள் குறித்து சில விளக்கங்களை முன்வைக்க வேண்டியுள்ளது. வரையறைகள் என்பவை, சமூக இயக்கங்களில் இருந்து பெறப்படுகின்ற தர்க்க ரீதியான முடிவுகளே தவிர, சமூக இயக்கங்களைக் கட்டுப்படுத்துகின்ற, அவற்றை நிராகரிக்கின்ற தடைகள் அல்ல. எந்த சமூகமும் வரையறைகளைச் சரி பார்த்தபடி இயங்குவதில்லை. பல பரிமாணங்களைக் கொண்டதாகவும், சிக்கலானதாகவும், மாறும் புறநிலை எதார்த்தங்களை எதிர் கொண்டு, அங்குள்ள தடைகளின் பிடியிலிருந்து, தம்மை விடுவித்து முன்னேறுவதற்கான அக வலிமையை வேண்டி நிற்கின்ற ஒரு சமூகத்தின் இயக்கத்தை, முற்றிலும் வேறான சமூக இயக்கத்தில் இருந்து பெறப்பட்ட வரையறைகளுடன் பொருத்தி மதிப்பிடுவது இயங்கியல் முறைமையாகாது. இது வரையறைகளை அளவுகோலாக்கிக், குறித்த சமூகத்தின் உள்ளார்ந்த இயக்கத்தை மறுப்பதா கவே அமையும். வரையறைகளின் பற்றாக்குறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களையும், அவை மீறப்படுவதையும் அவற்றுடன் புதிய கூறுகள் இணைக்கப்படுவதையும் வெளிப் படுத்துவதாகவே இன்று வரையிலான வரலாற்று அனுபவங்கள் அமைந்திருக்கின்றன.

தேசம் குறித்து ஸ்டாலின் முன் மொழிந்த வரையறைகள் நவீன சமூகங்களின் வரலாற்றில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தியிருக் கின்றன. பல சமூகங்களின் தேசிய உரிமைகள் பறிக்கப்படவும், தேச இருப்புகள் சிதைக்கப் படவும், தமது வாழிடங்களில் இருந்து வெளியே ற்றப்படவும் ஸ்டாலினின் வரையறைகள் காரணமா யின. மக்களின் உணர்வுகளை, வரையறைகள் மிதித்து அடக்கிய சோக வரலாற்று நிகழ்வுகளை நவீன உலகம் அனுபவித்தது. எனினும், ஸ்டாலி னின் வரையறைகளிலிருந்து விடுபட்டு, அவற் றையும் மீறிப் பல சமூகங்கள் தம்மை தேசங்களாக அடையாளப்படுத்தியிருக்கின்றன. ஒரு தேசத்திற் கென ஸ்டாலின் வரையறுத்த பிரதேசம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பவற்றைப் பூரணத் துவப்படுத்தாத சமூகங்கள் மட்டுமன்றி, மதம், நிறம், பூர்வீகம், இனம் (Race) பொதுவான வரலா ற்று அனுபவம். . . . போன்ற புதிய கூறுகளின் அடிப்படையில் தம்மை ஒன்றிணைத்த சமூகங் களும் தேசங்களாக உருவாகியுள்ளன. இவற்றிற்கு மாறாக, ஸ்டாலினின் வரையறைக ளைப் பூர்த்தி செய்த மக்கள் கூட்டம் வெவ்வேறு பட்ட தேசங்களாக பிரிந்திருப்பதையும் நவீன வரலாறு கொண்டிருக்கிறது.

இத்தகைய புறநிலை யதார்த்தங்களின் அடிப்படையில் தான் தேசம் குறித்த பிரச்ச னையை நாம் அணுக வேண்டும். மக்கள் தேசமாக உருவாவதில் வேறுபட்ட காரணிகள் தொழிற்படு வதால், தேச உருவாக்கத்தை குறிப்பிட்ட சில புறக்காரணிகளின் அடிப்படையில் பொதுவான வரையறைக்குட்படுத்துவது முடியாது. ஒவ்வொரு தேசிய இயக்கமும் தனித் தனியாக மதிப்பிடப்பட வேண்டும் என்பதோடு, மக்களிடையே நிலவும் பொதுவான புறநிலைக் காரணிகளில் அதிக கவனம் செலுத்து வதற்குப் பதிலாக, அக நிலையில் அவர்கள் தமக்கிடையில் காண்கின்ற அரசியல் ஒருமையும், அதன் அடிப்படையில் அமையும் பொதுவான உணர்வும், முதன்மைப் படுத்தப்பட வேண்டும்.

மக்கள் திரளொன்று தமக்கிடையே நிலவு கின்ற ஏதேனும் பொது அடையாளத்தின் கீழ் அரசியல் ரீதியாக ஒன்றிணைந்து தமக்கெனத் தனியான அரசியல் அதிகார அலகைக் கோரும் போது அவர்கள் தேசமாக அமைகின்றார்கள் என்பதே நவீன புரிதலாகும். இங்கு மக்கள் தமக்கிடையிலான பொது அடையாளத்தை தேர்வு செய்வது கூட அவர்களின் வெறும் சுய விருப்பின் பேரிலல்ல, மாறாக தமக்கிடையே நிலவும் எந்த பொது அடையாளம் அல்லது அடையாளங்களைக் கொண்டு தாம் பிற சமூகங்களால் ஒடுக்கு முறைக்குள்ளாக்கப் படுகின்றார்களோ, அதனை அல்லது அவற்றை ஆதாரமாகக் கொண்டு தான் அவர்கள் தேசமாக ஒன்றிணைகின்றார்கள். இந்த வகையில் தேசிய எழுச்சி என்பது வரையறைகளை அனுசரித்துச் செல்லும் ஒரு முறைப்படியான நிகழ்வு என்பதை விட, ஒரு வரலாற்றுத் தற்செயல் நிகழ்வாகவே இருக்கின்றது.

இந்த பின்னணியில், வட - கிழக்கு முஸ்லீம் களின் தேசிய எழுச்சியையும் அவர்கள் ஒரு தேச மாக உருவாகியுள்ளதையும் புரிந்து கொள்ள முடியும். ஸ்டாலின் ஒரு தேசத்திற்கென வரைய றுத்த மொழி, வாழிடம், பொருளாதாரம், ஓரளவு கலாச்சாரத்திலும் தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் ஒத்திருந்தும் கூட தமிழ் தேசத்துடன் தம்மை இணைத்துக் கொள்ள வட - கிழக்கு முஸ்லீம்கள் ஒரு போதும் முற்படவில்லை. இவ் வாறு நிகழ்ந்தமைக்கு வட - கிழக்கு முஸ்லீம்க ளின் தனித்துவமான சமூக இயக்கமும், மதரீதியில் அவர்கள் தம்மை தனியாக அடையாளப் படுத்தியதும் பிரதான காரணிகளாக அமைகின் றன. இந்நிலையில், வட - கிழக்கு முஸ்லீம்கள் தமிழ் தேசத்துடன் தாம் கொண்டிருந்த அத்தனை ஒற்றுமைக் கூறுகளையும் கடந்து, நிலத் தொடர்ச்சியின்மை என்பதையும் தாண்டி மத அடையாளத்தின் கீழ் 1980 நடுப் பகுதியில் தம்மை

**மக்கள் திரளொன்று தமக்கிடையே நிலவுகின்ற ஏதேனும் பொது அடையாளத்தின் கீழ் அரசியல் ரீதியாக ஒன்றிணைந்து தமக்கென தனியான அரசியல் அதிகார அலகை கோரும் போது அவர்கள் தேசமாக அமைகின்றார்கள் என்பதே நவீன புரிதலாகும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் ரீதியில் ஐக்கியப் படுத்திக் கொண்டமைக்கு, விடுதலை அமைப் புக்கள் முஸ்லீம்களை மத ரீதியில் வேறுபடுத்தி அவர்கள் மீது மேற்கொண்ட வன்முறை அராஜ கங்கள் பிரதான காரணியாகத் தொழிற்பட்டிருக் கின்றது. இதன் பின்னர், வட - கிழக்கு முஸ்லீம்கள் படிப் படியே, தமக்கென தனியான அரசியல் அபிலாசை களுடன் ஒரு தேசமாக உருவாகினர். வரலாற்றுத் தற்செயல் நிகழ்வாயமைந்த வட - கிழக்கு முஸ்லீம் தேச உருவாக்கத்தில் அவர்கள் தமிழ் தேசத்திலிருந்து தம்மை வேறுபடுத்தியதும், அரசியல் ரீதியில் தமக்குள் ஒன்றுபட்டதும் பிரதானமாக அமைகின்றது.

இந்த வகையில் வட - கிழக்கை தமது தாயகமாகக் கொண்ட, தமிழ், முஸ்லீம் என்ற இரண்டு தேசங்கள் இங்கு நிலவுகின்றன என்பதே இன்றைய யதார்த்தமாகும். இதற்கு மேல் வட -கிழக்கில் தமிழ், முஸ்லீம் மக்களிடையே ஏற்படுகின்ற உறவுகள், தனித்தனியானதும், சமத்துவமானதுமான இரு தேசங்களுக்கிடை யிலான உறவுகளாகவே இருக்க முடியும். இந்த உண்மையை இதுவரைக்கும் தமிழ் மக்கள் தெளிவாக புரிந்து கொள்ளாததால், வட - கிழக்கு முஸ்லீம்களுடனான உறவுகள் குறித்து தமிழ் மக்களிடையே இன்னமும் தவறானதும், ஆதிக்கதன்மை கொண்டதுமான கருத்துகளே நிலவுகின்றன. தமிழ் முற்போக்கு, ஜனநாயக பிரிவினரும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. எனவே வட-கிழக்கு முஸ்லீம்களின் தேசிய அரசியல் குறித்து தமிழ் முற்போக்கு, ஜனநாயகப் பிரிவினர் மத்தியில் நிலவுகின்ற சில கருத்தக்களைப் பரிசீலிப்பது இங்கு அவசியமாகும்.

வட - கிழக்கு முஸ்லீம்களும் அவர்களின் அரசியல் தலைமையும் மதத்தை உயர்த்திப் பிடிப்பதனால் பிற்போக்கானவர்கள். இந் நிலையில் அவர்களின் தனித்துவத்தையும், அரசியல் இயக்கத்தையும் ஏற்றுக்கொள்வதால், பிற்போ க்கை அங்கீகரிப்பதாயும், ஆதரிப்பதாயும் ஆகிவிடும் என்ற ஆட்சேபங்கள் எழுப்பப்படு கின்றன. அதே சமயம் வேறொரு பிரிவினர் இத்தகைய பிற்போக்கிலிருந்து வட - கிழக்கு முஸ்லீம்களை மீட்டெடுத்து சரியான திசையில் வழிகாட்டுவதற்கு தமிழ் முற்போக்கு, ஜனநாயக சக்திகள் முன் வர வேண்டும் என அழைப்பு விடுகின்றனர். சிலர் இத்தகைய முயற்சிகளில் ஏற்கனவே இறங்கியுள்ளனர். இவ்விரு கண்ணோ ட்டங்களும் வெளித்தோற்றத்தில் வேறுபட்டவை போல் தெரிகின்ற போதிலும், சாராம்சத்தில் தமிழ் முற்போக்கு, ஜனநாயக பிரிவினரிடம் காணப் படுகின்ற ஒருவகை மேலாதிக்க உணர்வின் வெளிப்பாடாக அமைகின்றன. முதற் பிரிவினரின் ஆட்சேபணைகள் குறித்து முதலில் பரிசீலிப்போம்.

மதத்தை உயர்த்திப் பிடிப்போர் பிற் போக்காளர் என்ற கருத்து நடைமுறையில் இப்போது தவறென நிருபிக்கப்பட்டிருக்கின்றது. பல்வேறு தேசிய இயக்கங்களில் மதமும், மதத்தை உயர்த்திப் பிடிப்பவர்களும் வகிக்கின்ற பாத்திரம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. நூற்றாண்டுகளாக நீடித்து வருகின்ற அயர்லாந்து தேசிய விடுதலைப் போராட்டத் திலும், வியட்நாம், நிக்கரகுவா, ஈரான் போன்ற நாடுகளின் புரட்சி களிலும், அரபு நாடுகளின் தேசியவிடுதலைப் போராட்டங்களிலும், பாலஸ்தீனம், காஷ்மீர், காலிஸ்தான், தீபெத், பொஸ்னியா போன்ற தேசிய விடுதலைப் போராட்டங்களிலும் மதங்களினதும், மத நம்பிக்கையாளர்களினதும் பாத்திரம் முக்கிய மானது. பல இடங்களில் ஏகாதிபத்தியத்தினதும், உள்ளூர் ஒடுக்கு முறையாளர்களினதும் பிடியி லிருந்தும் தமது மக்களை விடுவிப்பதில் இந்த மத நம்பிக்கையாளர்களே தீவிர பங்கு வகித்திருக் கின்றார்கள். எனவே மதம் மற்றும் மத நம்பிக் கையாளர்களின் பாத்திரத்தை புற நிலையாகவும், சார்பு ரீதியாகவுமே மதிப்பிட வேண்டும்.

இங்கு வட - கிழக்கு முஸ்லீம்களைப் பொறுத்த வரையில், அவர்கள் தம்மை ஒரு தேசமாக அடையாளப்படுத்தவே மதத்தை முதன்மைப் படுத்தியிருக்கிறார்கள். அவர்களின் கோரிக்கைகள் மதத்துடன் தொடர்புபடவில்லை. அவை "மறுஉலகில்" எவ்வாறு மீட்சி பெறுவது என்பது தொடர்பான கோரிக்கைகள் அல்ல. மாறாக, நடப்பு சமூக முரண்பாடுகளில் அந்தச் சமூகம் தன்னை வழிநடாத்திச் செல்வதற்கான அரசியல் வழி முறைகளாகும். அவை அரசியல் ரீதியானவையும், வட-கிழக்கு முஸ்லீம்களின் பொருளாயத இருப்புடன் பிணைந்தவையுமாகும்.

இங்கு இன்னொரு விடயம் சுட்டிக் காட்டப்பட வேண்டும். வட - கிழக்கு முஸ்லீம்கள் மதத்தை முதன்மைப்படுத்துவதை பிற்போக்கு என அடையாளப்படுத்தும் தமிழ் முற்போக்கு, ஜனநாயக பிரிவினர் தமிழ் தேசிய இயக்கத்தின் இன்று வரையிலான எதார்த்த நிலைமைகள் குறித்து புரிதலைப் பெற வேண்டும். சைவ - வேளாள சித்தாந்த ஆதிக்கத்திற்குட்பட்டதாயும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஒரு தேசத்தின் அரசியல் முன்னெடுப்பை, சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்கு, ஆதரிப்பதற்கு நிபந்தனை போடும் உரிமை இன்னோர் தேசத்திற்கு கிடையாது.**

கொடுமையான சாதிய வேறுபாடுகளைக் கொண்டதாயும் இருக்கின்ற தமிழ் தேசத்தையும், அதன் தேசிய இயக்கத்தையும் நாம் எவ்வாறு மதிப்பிட போகின்றோம்? தனது சொந்த தேசத்தின் மீதும், வட - கிழக்கு முஸ்லீம் தேசத்தின் மீதும், அராஜகத்தையும் வன்முறைகளையும் மேற் கொண்டு வந்திருக்கின்ற விடுதலை அமைப்புக் களைக் காரணமாகக்காட்டி, தமிழ் தேசிய இயக்கம் பிற்போக்கானது என மதிப்பிடப் போகின் றோமா? தமிழ் தேசம் சிறிலங்கா அரசின் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக போராடுகின்றது என்ற, ஒரு தேசத்தின் போராட்டத்தை அதன் குறிப்பிட்ட கட்டத்திலான தலைமையைக் கொண்டு மதிப்பி டக் கூடாது என்ற இந்த அடிப்படையில் தானே நாம் தமிழ் தேசிய இயக்கம் குறித்து மதிப்பிடு கிறோம். மாறாக அது தனக்குள் கொண்டிருக் கின்ற சில பிற்போக்கு அம்சங்களை அளவு கோலாகக் கொண்டல்லவே! இந்த உண்மை வட-கிழக்கு முஸ்லீம்களின் தேசிய இயக்கம் குறித்தும் பொருந்தக் கூடியதே.

முஸ்லீம் கொங்கிரஸின் ஊசலாட்டங்கள், மற்றும் ஜிஹாத், ஊர்காவற் படைகள், மத அடிப்படையிலான இனங்காணல் போன்ற அம்சங்கள் அனைத்தையும் சேர்த்துப்பார்த்து முஸ்லீம் தேசிய இயக்கமே அடிப்படையில் பிற்போக்கானது என்பதே இவர்களின் வாதம். இதனால் அதனை அங்கீகரிக்கக் கூடாது என வலியுறுத்துகின்றனர். ஒரு தேசத்தின் அரசியல் முன்னெடுப்பை, சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்கு, ஆதரிப்பதற்கு நிபந்தனை போடும் உரிமை இன்னோர் தேசத்திற்கு கிடையாது. எல்லா தேசங்களையும் போலவே முஸ்லீம் தேசமும் தனக்குள், பிற்போக்கு சக்திகளுடன் கூடவே முற்போக்கு, ஜனநாயக கூறுகளையும் கொண்டுள்ளது. ஆனால் இன்றுள்ள குறிப்பான சூழலில் பிற்போக்கு சக்திகள் தலைமையில் இருந்தாலும், மாறிவிட்ட சூழ் நிலைமையில் முற்போக்கு, ஜனநாயக சக்திகள் பலம் பெறும் வாய்ப்பும் உள்ளது. தமிழ் இனவாதம் முஸ்லீம்களை அழித்தொழிக்கும் அபாயம் தொடர்ந்து நீடிக்கும் வரையில் முஸ்லீம் மக்கள் மத்தியிலுள்ள பிற்போக்கு சக்திகளே ஊட்டம் பெற்று விளங்கும். முஸ்லீம் தேசம் தனது பாதுகாப்பிற்கு சிங்கள படையை நம்பியிருக்கும் வரையில் இந்த பிற்போக்காளர்களே முஸ்லீம்களின் அரசியலை தீர்மானிப்பவர்களாக உள்ளனர். தமிழ் இனவாதம் இவ்வாறு கோர வடிவத்தை எடுப்பதானது முஸ்லீம் மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு, ஜனநாயக சக்தி களுக்கு பலத்த தார்மீக, அரசியல் நெருக்கடி களை உருவாக்குகின்றன.

முஸ்லீம் தேசம் தனது சுயமான அரசி யலை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். தமிழ் தேசத்துடன் சுமூகமான உறவுகளைப் பேண வேண்டியது அவசியமாகும். சிங்கள பேரினவாத த்தின் உண்மையான சொரூபத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்பன போன்ற எந்தக் கருத்துகளுமே, புலிகளால் முஸ்லீம்கள் எந்நேரமும் படுகொலை செய்யப்படலாம், ஊர்களை விட்டுத் துரத்தப்படலாம் என்ற புறநிலை யதார்த்தத்தின் முன்பு எடுபட மாட்டாது. மேலும் முஸ்லீம்கள் தமது பாதுகாப்பிற்காக சிங்கள படைகளை நம்பியிருக்க வேண்டிய நிலையில், இங்குள்ள கைக்கூலிகள் முஸ்லீம்கள் மத்தியிலுள்ள முற்போக்கு, ஜனநாயக சக்திகளை வேட்டையாடியும் வருகின்றனர். எனவே முஸ்லீம்கள் மத்தியிலுள்ள முற்போக்கு, ஜனநாயக சக்திகள் பலம் பெறுவது என்பது முஸ்லீம் தேசம் இன்றைய நெருக்குதலில் இருந்து விடுபடுவதில் பெரிதும் தங்கியுள்ளது. இதனை நோக்கி தமிழ் முற்போக்கு, ஜனநாயக சக்திகள்....

1) வட - கிழக்கு முஸ்லீம்கள் தனியான தேசமாக உருப்பெற்று விட்ட யதார்த்தத்தினை ஏற்றுக்கொண்டு அவர்களது சுயநிர்ணய உரிமைக்காக விரிவான பிரச்சாரத்தை தமிழ் தேசத்தினுள் மேற்கொள்ள வேண்டும்.

2) தமிழ் தேசத்தினுள் மேலாண்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செலுத்தும் சைவ-வேளாள சித்தாந்தத்தையும் அதன் நேரடி விளைவான முஸ்லீம்கள் பற்றிய தப்பெண்ணங்களையும் முறியடிக்க வேண்டும்.

3) இவற்றினூடாக தமிழ் தேசத்தின் தலைமையை முற்போக்கு, ஜனநாயக சக்திகள் கையேற்க வேண்டும்.

இதுவே முஸ்லீம் தேசத்திலுள்ள முற்போக்கு, ஜனநாயக சக்திகள் பலம் பெற்று தலைமை சக்தியாக திகழவும், நீண்டகால நோக்கில் தமிழ் முஸ்லீம் உறவின் ஆரோக்கியமான முன்னெடுப்புகளுக்கும் வழிவகுக்கும்.

அவ்வாறில்லாமல், முஸ்லீம்களைத் தொடர்ந்தும் சமத்துவமாக நடாத்தத் தயங்குவது, அவர்களது தேசிய இயக்கத்தை அங்கீகரிக்க நிபந்தனை போடுவது போன்ற செயற்பாடுகள் ஒட்டு மொத்தத்தில் முஸ்லீம் பிற்போக்கு சக்திகளைப் பலப்படுத்தவும், தமிழ் - முஸ்லீம் உறவுகளை மேலும் சிதைக்கவுமே வழிவகுக்கும். இது இறுதியில் தமிழ் "பாசிச" சக்திகளை பலப்படுத்துவதிலேயே போய் முடியும். . . . உண்மையில், தமிழ் தேசிய இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்தும் சைவ - வேளாள சித்தாந்தத்திற்கும், அராஜகத்திற்கும் எதிராக போராட முடியாதவர்கள் முஸ்லீம் தேசிய இயக்கத்தில் குறைகாணமுற்படுவதன் மூலம் தம்மிடமுள்ள சைவ-வேளாள சித்தாந்தப் பீடிப்பையும் ஆதிக்க மனோ பாவத்தையுமே வெளிப்படுத்துவதாகவே கொள்ள வேண்டும். மிதிப்பது என்றே அர்த்தப்படும். இதற்கு மாறாக, ஒரு சமூகத்தின் விழுமியங்களை இன்னொரு சமூகம் தனது சொந்த விழுமியங்களின் அடிப்படையில் மதிப்பிடுவதும், முற்போக்கு, பிற்போக்கு, என அவற்றை வகைப்படுத்தி குறை காண முற்படுவதும் சாராம்சத்தில் குறிப்பிட்ட சமூகத்தின் தனித்துவத்தை மறுப்பதாகவே ஆகின்றது. ஒவ்வொரு சமூகமும் வரலாற்று ரீதியாக தனக்குரிய சொந்த வழியில் தன்னை உருவாக்கி வந்திருக்கிறது. எனவே ஒரு சமூகத் தின் வாழ்க்கை முறைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள், கலாச்சாரம், மதிப்பீடுகள், செயற்பாடுகள், உணவு முறைகள். . . . என வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் அச் சமூகத்தின் சொந்த முத்திரையும், பிற சமூகங்களில் இருந்து வேறுபட்ட தன்மைகளும் காணப்படுவது இயல்பானது. நிலமை இவ்வாறு இருக்க, எந்த சமூகத்தின் விழுமியங்களை மாதிரியாகக் கொண்டு இன்னொன்றின் விழுமியங்களை தரப்படுத்தல் செய்யப் போகின்றோம்? ஒருவர் இவ்வாறு தரப்படுத்த முற்படுவதன் மூலம் அவரது ஆற்றலும் மேன்நிலையும் வெளிப்படுவதில்லை. மாறாக அவரிடமுள்ள ஆதிக்க மனோபாவமே இங்கு வெளிப்படுகிறது எனலாம்.

"இன்னொரு தேசத்தை ஒடுக்கும் தேசமானது தனது அடிமைத் தளையை தானே போட்டுக் கொள்கிறது"என்ற மார்க்சின் புகழ் பெற்ற வாசகமானது சிங்கள தேசத்திற்கு மாத்திரமன்றி தமிழ் தேசத்திற்கும் பொருந்தி வரக் கூடியதே!

இனி, வட - கிழக்கு முஸ்லீம்களைப் பிற்போக்கின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கு தமிழ் முற்போக்கு, ஜனநாயகப் பிரிவினர் வழிகாட்ட வேண்டும் எனக் கூறப்படுவதை எடுத்துக் கொள்வோம். ஒரு சமூகத்தைத் தனித்துவமானதாக கருதுவது என்பது அதன் இருப்பை அப்படியே ஏற்றுக்கொள்வது என்றே பொருள்படும். அச்சமூகம் கொண்டிருக்கின்ற பல்வேறு விழுமியங்களையும். . . . ஒருவர், தன்னிலிருந்து வேறுபட்ட விழுமியங்கள் கொண்ட இன்னொரு நபர் / சமூகத்தை தாழ்வாக மதிப்பிடும் போது, கூடவே அவ்வாறு தாழ்வாக மதிப்பிட்ட நபர் / சமூகத்தின் மீதுதான் அதிகாரம் செலுத்தக் கூடிய மனோபாவத்தையும் பெற்று விடுகின்றார். இதன் பின்னர், தாழ்வாக கருதப்பட்ட நபர் / சமூகத்தின் மீது தானோ, தனது சமூகமோ மேற்கொள்கின்ற பாகுபாடுகளையும் ஒடுக்குமுறைகளையும் இயல்பானதாகவும் ஒரு வகையில் அவசியமானதாகவும் கூட அவர் ஏற்றுக் கொள்கின்றார். இதன் மூலமாக இறுதியில் சமூக ஒழுங்குகளின் முழுக் கட்டமைப்பிலும் ஏற்றத் தாழ்வு மிக்க, அதிகாரத்தன்மை கொண்ட, ஒடுக்குமுறை சார்ந்த படிநிலை அமைப்புகள் ஏற்படவும், அவை

**இன்னொரு தேசத்தை ஒடுக்கும் தேசமானது தனது அடிமைத் தளையை தானே போட்டுக் கொள்கிறது"என்ற மார்க்சின் புகழ் பெற்ற வாசகமானது சிங்கள தேசத்திற்கு மாத்திரமன்றி தமிழ் தேசத்திற்கும் பொருந்தி வரக் கூடியதே!**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**முஸ்லீம் தேசம் தனது தலைவிதியை சொந்தக் கரங்களில் எடுத்துக் கொண்டு, தன்னிடமுள்ள பிற்போக்கு கூறுகள் என தான் கருதுபவற்றை களைந்து கொள்ளும் என்பதையும், இதற்கான தகுதி ஒவ்வொரு தேசத்திற்கும் உண்டு எனவும், ஏற்றுக்கொள்ளும் போதுதான் சமத்துவம் என்பதே அர்த்தமுள்ளதாகின்றது.**

இயல்பானவை என ஏற்றுக் கொள்ளப்படவும் கூடிய நிலை அவருக்குள் உருவாகின்றது.

இந்த வகையில், சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகள் பொருளாதார, ஆன்மீக நலன்களின் அடிப்படையில் மட்டும் உருவாவதில்லை என்பதையும் பிறிதொரு சமூகத்தைச் சமத்துவமாக மதிக்கத் தவறுவதும் கூட, சமூக முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும் தமிழ் முற்போக்கு ஜனநாயகப் பிரிவினர் தமது நல்லெண்ணத்தின் விளைவாகவே வட-கிழக்கு முஸ்லீம்களுக்கு "வழிகாட்ட" விரும்பினாலும் கூட, உண்மையில் அது அவர்களிடம் உள்ளார்ந்து கிடக்கும் மேலாதிக்க உணர்வின் வெளிப்பாடாகவே அமைகின்றது. இப்போக்கு இறுதியில் தமிழ் தேசத்திற்கும் முஸ்லீம் தேசத்திற்கும் இடையே அதிகாரப்படி நிலை சார்ந்த உறவுகள் தோன்றுவதற்கு இட்டுச் செல்லக் கூடியது. தமிழ் முற்போக்கு, ஜனநாயக பிரிவினர் முஸ்லீம் தேசத்திற்கு உண்மையிலேயே நன்மை செய்ய விரும்புவார்களாயின் அவர்கள் முதலில், தமிழ் தேசத்தில் ஆழ வேரூன்றியுள்ள சைவ-வேளாள சித்தாந்தத்தையும், ஜனநாயக விரோதக் கூறுகளையும் களைவதற்கு நேர்மையாக முயற்சிக்க வேண்டும். அத்துடன் முஸ்லீம் தேசத்தின் தனித்துவத்தை மதித்து அதனுடன் சமத்துவமான உறவுகளைப் பேணும் வகையில் தமிழ் தேசத்தை மாற்றியமைக்க வேண்டும். அப்போது, முஸ்லீம் தேசம் தனது தலைவிதியை சொந்தக் கரங்களில் எடுத்துக் கொண்டு, தன்னிடமுள்ள பிற்போக்கு கூறுகள் என தான் கருதுபவற்றை களைந்து கொள்ளும் என்பதையும், இதற்கான தகுதி ஒவ்வொரு தேசத்திற்கும் உண்டு எனவும், ஏற்றுக்கொள்ளும் போதுதான் சமத்துவம் என்பதே அர்த்த முள்ளதாகின்றது.

வட - கிழக்கு முஸ்லீம்கள் உரிமைகள் கோருவது தொடர்பாக தமிழ் தரப்பிலிருந்து இவ்வாறு குற்றச்சாட்டு எழுப்பப்படுகின்றது. அதாவது வட - கிழக்கு முஸ்லீம்கள் தமது உரிமைகளைப் பெற போராடாமல் இருக்கின்றார்கள் எனவும், தமிழ் மக்கள் நீண்ட காலம் போராடிக் கடுமையான இழப்புக்களின் பின் பெற விளையும் உரிமைகளை, முஸ்லீம்கள் மிக இலகுவான முறையில் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கின்றார்கள் என்றும் குற்றஞ் சாட்டப் படுகிறது. இக் குற்றச்சாட்டு போராட்டம் தொடர்பான புரிதலில் எம்மிடமுள்ள பற்றாக்குறையின் வெளிப்பாடாகும்.

போராடுவது என்று நாம் எதனைக் கருதுகின்றோம்? இன்றைய நிலையில் எமது போராட்டம் என்பதை ஒடுக்கு முறை அரசுக்கும் அதன் படைகளுக்கும் எதிரான யுத்தம் என்றே நாம் கருதுகின்றோம். தமிழ் தேசத்தைப் பொறுத்த வரையில் இது முற்றிலும் சரியானதே. சிங்கள அரசின் ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபட்டு தனக்கென சொந்த அரசை உருவாக்குவதிலேயே தனது இருப்பை உத்தரவாதப்படுத்த வேண்டியுள்ள தமிழ் தேசம் தனது எதிரிக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடாத்துவது ஒன்றே சரியான வழியாக இருக்கின்றது. ஆனால் இதே போராட்ட வடிவம் வட - கிழக்கு முஸ்லீம் தேசத்திற்கும் உடனடியாக அவசியப்படுகின்றதா என்பதை தமிழ் தேசத்தின் போராட்ட விதியை அப்படியே அளவு கோலாகக் கொண்டு மதிப்பிட முடியாது. வட - கிழக்கு முஸ்லீம்கள் தமக்குரிய போராட்ட வடிவத்தை தாமே தேர்ந்து கொள்வார்கள். இத்தகைய தேர்வு வேறு எவரினதும் விருப்பு, வெறுப்பின் பாற்பட்டதாக இல்லாமல், தாம் எதிர் கொள்கின்ற அக, புற நிலைமைகள் வெளிப் படுத்துகின்ற அவசியத்தின் விளைவாகவே இருக்கும்.

ஒரு தேசம் தனது உரிமைகளைப் பெற முன்னெடுக்கும் போராட்டங்கள் பல பரிமாணங்கள் கொண்டவை. தேர்தலில் வாக்களிப்பதிலிருந்து, போர்க்களத்தில் உயிர்களை இழப்பது வரை பல்வேறு வடிவங்களை ஒரு தேசியப் போராட்டம் கொண்டிருக்கும். இங்கு ஒவ்வொரு போராட்ட வடிவத்தையும் அதற்கேயுரிய முக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்துவத்துடன் மதிப்பிட வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு போராட்ட வடிவமும் குறித்த கட்டத்தின் வெளிப்பாடாக இருப்பதனால், அது அக்கட்டத்திற்குரிய அவசியமானதும் பொருத்த மானதுமான வடிவமாக இருக்கும். ஒருவர் தனது அக விருப்பின் பேரில் ஒரு குறிப்பிட்ட போராட்ட வடிவத்தை மாற்றவோ, மற்றொரு வடிவத்தை பிரதியீடு செய்யவோ முடியாது. அதே போன்று குறித்த கட்டத்திற்குப் பொருத்தமில்லாத போராட்ட வடிவத்தை வைத்துக் கொண்டு, எந்தவொரு தலைமையும் தேசிய இயக்கத்தில் நீண்ட காலத்திற்குத் தனது அரசியலை கொண்டு நடாத்த முடியாது.

வட - கிழக்கு முஸ்லீம்களின் தேசிய இயக்கம் முதலில் தன் மீதான விடுதலை அமைப்புக்களின் வன்முறை அராஜகத்திற்கு எதிராக கிளர்ந்ததால், தொடக்கத்திலேயே அது வன்முறை போராட்ட வடிவத்தை எடுத்தது. எனினும், அப் போராட்ட வடிவத்தால் வட - கிழக்கு முஸ்லீம்களின் தேசிய உணர்வை முழுமையாக வெளிப்படுத்த முடியவில்லை. எனவே அதன் இடத்தை வன்முறை சாராத போராட்ட வடிவம் எடுத்துக் கொண்டது. வெகு சன அரசியலை முன்னெடுத்த SLMC நிரப்பியது. தமது தேசிய உணர்வை பிரதிபலித்த SLMC ஐ சூழ்ந்து வட-கிழக்கு முஸ்லீம்கள் ஒன்றிணைந்தார்கள். அதனூடாக தமது தேசிய அபிலாஷைகளை வெளிப்படுத்தினார்கள். தமக்கென தனியான அரசியல் அதிகார அலகு வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார்கள். இம் முஸ்லீம்கள் தமது போராட்டப் பாதையில் பல நூறு உயிர்களை இழந்துள்ளனர். கோடிக் கணக்கில் மதிப்புள்ள தமது உடமைகளை இழந்துள்ளனர். வடக்கிலிருந்து முற்றாகவே வெளியேற்றப்பட்டுள்ளனர்.

எனினும், வட-கிழக்கு முஸ்லீம் தேசத்தின் வெகு சனப்போராட்ட வடிவம், சந்தர்ப்பவாத, சுயநல தலைமையின் தவறான வழிகாட்டலின் காரணமாக தேர்தல் கால இயக்கமாக மட்டும் தேக்கமடையச் செய்யப்பட்டுள்ளது. தமது தேசிய இயக்கம் தேக்கமடையச் செய்யபட்டுள் ளது என்பதையும், இதே வடிவில் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதையும் அவர்கள் உணர ஆரம்பித்துள்ளனர். எனவே தமக்குப் பொருத்தமான அடுத்தபோராட்ட வடிவத்தை அவர்களே தேர்ந்து கொள்வார்கள். எனவே, முஸ்லீம்கள் போராடாமல் உரிமை பெற முயல்கின்றார்கள் என்று குற்றம் சாட்டுவதில் அறியாமை மட்டுமல்ல, முஸ்லீம்களின் போராட்டத்தை நிபந்தனைக்குட்படுத்தி அவர் களின் உரிமைகளைமறுக்கின்ற ஆதிக்க மனோபாவமும் இங்கு வெளிப்படுகின்றது என்பதை நாம் அடையாளம் காண வேண்டும்.

வட-கிழக்கு முஸ்லீம்கள் மீது, தமிழ்த் தலைமைகள், குறிப்பாக விடுதலை அமைப்புக் களின் தலைமைகள், கொண்டுள்ள மேலாதி க்கஉணர்வானது, முஸ்லீம் ஊர்காவல் அமைப்பு க்கள் சம்பந்தமாகவும்,முஸ்லீம்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் இவ்வமைப்புகள் வெளிப்படுத்துகி ன்ற கருத்துக்களின் மூலமாக துல்லியமாக வெளிப்படுகிறது.

முஸ்லீம் ஊர்காவற் படையினர் அப்பாவித் தமிழர் மீது வன்முறைகளை மேற்கொள்வதால் முஸ்லீம் ஊர்காவல் அமைப்புக்களைக் கலைக்கும்படி தமிழ் தலைமைகள் இனவாத அரசிற்கு வேண்டுகோள் விடுக்கின்றனர். சில தமிழ் அமைப்புகள் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் இருந்து முஸ்லீம்களை பாதுகாக்கப் போவதாகவும் மிகவும் "கரிசனையு டன்" கூறுகின்றனர். இங்கு இரண்டு விடயங்க ளைக் கவனிக்க வேண்டும். ஒன்று. . . . (வட) கிழக்கு முஸ்லீம்கள் தம்மைதாமே பாதுகாப்ப தற்கு கொண்டிருக்கின்ற உரிமை. இரண்டாவது . . . முஸ்லீம் ஊர்காவல்படைகளின் வன்முறைகளில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பது.

ஒரு தேசம் தன்னைப் பாதுகாத்துக்

**ஒருவர் தனது அக விருப்பின் பேரில் ஒரு குறிப்பிட்ட போராட்ட வடிவத்தை மாற்றவோ, மற்றொரு வடிவத்தை பிரதியீடு செய்யவோ முடியாது. அதே போன்று குறித்த கட்டத்திற்கு பொருத்தமில்லாத போராட்ட வடிவத்தை வைத்துக் கொண்டு, எந்தவொரு தலைமையும் தேசிய இயக்கத்தில் நீண்ட காலத்திற்கு தனது அரசியலை கொண்டு நடாத்த முடியாது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்வதற்கான முழு உரிமையும் கொண்டிருக்கின்றது. வட - கிழக்கு முஸ்லீம்களைப் பொறுத்தவரை, அவர்கள் விடுதலை அமைப்புக்களின் வன்முறைத் தாக்குதல்களை இன்று வரை எதிர் கொண்டு வருகின்றனர். வடக்கிலிருந்து முற்றாக வெளியேற்றப்பட்டுள்ளதோடு, கிழக்கிலிருந்து வெளியேற்றப்படக் கூடிய ஆபத்தையும் எதிர் கொண்டுள்ளனர். இந் நிலையில் அவர்கள் தமது உயிர்களோடு தமது சமூக இருப்பையும் பாதுகாக்க வேண்டிய அவசியத்தில் இருக்கின்றார்கள். இந்த வகையில் அவர்களுக்கு முன்னே இன்றுள்ள ஒரே ஒரு தெரிவு ஊர் காவல் அமைப்புகள் தான். இவ்வமைப்புகள் அரச படைகளின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதோடு, மிக நவீனமானவை அல்லாத சாதாரண ஆயுதங்களே இவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும் கூட, இவற்றில் சேர வேண்டிய நிர்ப்பந்தத்தில் முஸ்லீம்கள் இருக்கின்றார்கள். நவீன ஆயுதம் தரித்த விடுதலைப் புலிகளுக்கு எதிரே தாம் ஈடு கொடுப்பது அசாத்தியம் என்பது தெரிந்தும் கூட, மாற்று வழியற்றவர்களாக முஸ்லீம்கள் ஊர்காவல் படைகளில் இணைந்துள்ளனர். இந் நிலையில், தமிழ் தலைமைகள் இவ் அமைப்புக்களை கலைக்கும் படியும், நிராயுதபாணியாக்கும்படி கோருவதும் உண்மையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு முஸ்லீம்களைத் திறந்து விடும்படி கோருவதாகவே அர்த்தம் பெறுகின்றது.

மறுபுறம், முஸ்லீம் ஊர்காவற் படையினர் தமிழ் மக்கள் மீது மேற்கொள்கின்ற வன்முறைகளுக்கு எதிராக செயற்படுவதற்குத் தமிழ் தேசத்திற்கு பூரண உரிமை உண்டு. இது விடயத்தில் தமிழ் தலைமைகள் பொருத்தமான மாற்று வழிகளைக் காண வேண்டும். முஸ்லீம் ஊர்காவல் படையினர் தமது சமூகத்தை பாதுகாப்பதை தடுக்க முடியாது. அதே சமயம், அவர்களின் தாக்குதல்களில் இருந்து தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இது சிக்கலான விடயமாக இருந்த போதிலும் தனித்தனியான இரு தேசங்களின் பாதுகாப்பும் உரிமைகளும் பேணப்பட வேண்டும் என்ற வகையில், இத்தகைய மாற்று வழியைக் காண்பது அவசியமாகிறது.

இங்கு இன்னுமொரு விடயமும் சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது. முஸ்லீம் ஊர்காவற் படையினரும், முஸ்லீம் சமூகமும் ஆயுதமயமாக்கப்படுவதாக கண்டனம் தெரிவிக்கின்ற இந்த "முன்னாள்" விடுதலை அமைப்புக்கள் தாம் இப்போதும் ஆயுதபாணிகளாக இருப்பதை எவ்வாறு நியாயப்படுத்த போகின்றனர்? ஆயுதம் ஏந்துவதை தாம் மட்டுமே குத்தகையாக எடுத்துக் கொண்டுள்ளார்களா? தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை துறந்தோடி அரச படைகளுடன் இணைந்து செயற்படுவதோடு அப்பாவி தமிழ் மக்கள் மீது வன்முறைகளை மேற்கொண்டும், வரி, வசூல், போன்றவற்றை அறவிட்டும் வருகின்ற இவர்களுக்குச், சொந்த சமூகத்தை பாதுகாப்பதற்கு ஊர்காவற் படைகளில் செயற்படும் முஸ்லீம்களை கண்டிப்பதற்கு எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது. இந்த சாதாரண உண்மையை கூட புரிந்து கொள்ளாத இவர்கள், புலிகளின் தாக்குதல்களில் இருந்து (வட, ) கிழக்கு முஸ்லீம்களை தாம் பாதுகாப்பதாகக் கூறுவது வேடிக்கையானதே. இவ்வாறு கூறுவதில் நல்லெண்ணம் ஏதும் தொனிக்கவில்லை. மாறாக முஸ்லீம்கள் மீது தமக்குள்ள மேலாதிக்க உணர்வையே இவர்கள் மீண்டும் வெளிப்படுத்துகின்றனர்.

இவற்றுடன், முஸ்லீம் தேசத்தின் சுய நிர்ணய உரிமை தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகள் குறித்தும் பரிசீலிப்போம். தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் ஒரே தாயகத்தில் ஒன்று கலந்து வாழ்கின்ற நிலையில் முஸ்லீம் மக்களைத் தனித் தேசமாக கருதும் போது, அவர்கள் தனியே பிரிந்து செல்வார்களாயின் அது தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு குந்தகமாகாதா? அல்லது பிரிந்து செல்கின்ற முஸ்லீம் தேசம், சிங்கள அரசுடன் இணைந்து தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட்டால் அப்போது விடுதலைப் போராட்டம் நெருக்கடிக்குள்ளாகாதா?

முதலில் ஒரு தேசத்திற்குள்ள உரிமைகளைப் புரிந்து கொள்வோம். தேசம் என்பது ஒர் அரசியல் வகையினம். அது பிரிந்து செல்லும் உரிமை உட்பட, தனது அரசியல் வாழ்வை தானே தீர்மானிப்பதற்கான சுயநிர்ணய உரிமையைத் தனது பிறப்புரிமையாகக் கொண்டுள்ளது. இந்த வகையில் ஒரு தேசம் பிற தேசங்களுடன் தான் எத்தகைய உறவைப் பேண விரும்புகின்றது என்பதைத் தீர்மானிக்கும் பூரண உரிமையைக் கொண்டிருக்கின்றது. இவ்வுரிமையை எத்தகைய காரணங்களைக் காட்டியும் பிற தேசங்கள் மறுக்க முடியாது. ஒரு தேசம் தனது உரிமைகளை அனுபவிப்பதை புற நிலைமைகள் எதுவுமே தடுக்க முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வகையில் முஸ்லீம் தேசமானது பிரிந்து செல்வதற்கும், தனக்கெனச் சொந்த அரசை அமைப்பதற்கும் அது பூரண உரிமையைக் கொண்டுள்ளது. தமிழ் தேசத்திடம் இருந்து பிரிந்து சென்று தனியாகத் தனது அரசியல் இருப்பை பேணுவது என முஸ்லீம் தேசம் முடிவு செய்தால், அம் முடிவை ஏற்றுக் கொள்வதும், ஜனநாயக வழியில் அத்தகைய பிரிவினையை சாத்தியமாக்குவதற்குமான சூழ் நிலையை உருவாக்குவதுமே தமிழ் தேசத்தின் கடமை. இதற்கு மாறாக, தாம் முஸ்லீம் தேசத்துடன் பிரதேச ரீதியில் கலந்து வாழ்வதையோ, அல்லது அவர்களின் பிரிவினை மூலம் தமது விடுதலைப் போராட்டத்திற்குப் பாதிப்பு ஏற்படலாம் என்பதையோ காரணமாகக் காட்டி முஸ்லீம் தேசம் பிரிந்து செல்வதை மறுப்பதற்கு தமிழ் தேசத்திற்கு உரிமை இல்லை. தமிழ் தேசத்தைப் பொறுத்த வரை அதன் தேசிய உரிமைகள் அதற்கு முக்கியத்துவமுடையவை தான், ஆயினும் தனது உரிமைகளை பேணுவதற்கு மற்றெரு தேசத்தின் உரிமைகளை மறுக்க முடியாது. முஸ்லீம் தேசம் பிரிந்து செல்வதையே தனது தேர்வாக முன் வைக்குமாயின், அந்நிலையில் தமிழ் தேசம் தனது தேச இருப்பும், உரிமைகளும் பாதிக்கப்படா வண்ணம் பரஸ்பர பரிமாற்றங்களுக் கூடாக இப்பிரிவினையை எவ்வாறு நடைமுறைப் படுத்துலாம் என்பது குறித்துச் சிந்திக்க வேண்டுமே தவிர, பிரிவினையை மறுப்பதற்கான காரணங்களைத் தேடக் கூடாது.

முஸ்லீம் தேசம் சிலவேளை சிங்கள அரசின் கீழ், சிங்கள தேசத்துடன் வாழ முடிவு செய்யுமாயின் அந்நிலையிலும் கூட, இதே அடிப்படையிலேயே தமிழ் தேசம் நடந்து கொள்ள வேண்டும். இங்கும் இரண்டு தனித்தனி தேசங்களிற்கு இடையிலான சமத்துவ உறவு என்பதே அடிநாதமாக இருக்க வேண்டும். தனது எண்ணிக்கை பெரும்பான்மை, கூடியளவு வாழிடப் பரப்பு, நீண்ட வரலாறு. . . . போன்ற எந்தக் காரணத்தைக் கொண்டும் வட - கிழக்கு பிரதேசத்தை ஏக போக உரிமை கொண்டாடுவதற்கும், அங்குள்ள முஸ் லீம் தேசத்தின் உரிமைகளை மறுப்பதற்கும் த்மிழ் தேசம் முனையக் கூடாது. ஏனெனில் இவை எல்லாவற்றிக்கும் அப்பால் இந்த இரு தேசங்களும் அரசியல் மொழியில் முற்றிலும் சமத்துவமானவை. எனவே எந்த நிலையிலாவது முஸ்லீம் தேசம் பிரிந்து செல்லும் முடிவை மேற்கொண்டால் அதனை முற்று முழுதாக நடைமுறைப்படுத்துவது தான் தமிழ் தேசத்திற்குள்ள ஜனநாயகப் பொறுப்பாகும். முஸ்லீம் தேசம் பிரிந்து செல்வதற்கும் தனியான அரசை அமைக்கவும் கொண்டுள்ள உரிமையையும், அது பிரிந்து சென்று சிங்களத் தேசத்துடன் இணைந்து தமிழ் தேசத்தின் உரிமைகளுக்கு எதிராக நிற்பதையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பக் கூடாது. முன்னைய சந்தர்ப்பத்தில் தமிழ் தேசம் முஸ்லீம் தேசத்தின் உரிமையை மதிக்க வேண்டும். பின்னைய சந்தர்ப்பத்தில் தமிழ் தேசம் தனது சொந்த தேசிய உரிமையைப் பாதுகாக்க வேண்டும்.

தொகுத்துக் கூறினால், வட-கிழக்கில் தமிழ், முஸ்லீம் என இரண்டு தேசங்கள் நிலவுகின்றன என்பதையும், அவையிரண்டும் அரசியல் ரீதியில் சமத்துவமானவை என்பதையும், ஒரு தேசத்தின் உரிமைகளில்த் தலையிடுவதற்கு இன்னொரு தேசத்திற்கு எதுவித உரிமையும் கிடையாது என்பதையும் தமிழ் முற்போக்கு ஜனநாயகப் பிரிவினர் உணர்ந்து கொள்ள வேண்டும். இங்கு ஒரே தாயகத்தினுள் வாழ்கின்ற வெவ் வேறு தேசங்களுக்கிடையே ஏற்படக் கூடிய உறவுகள் குறித்து சில விடயங்களைப் பரிசீலிப்பது அவசியமாகும். ஒவ்வொரு தேசமும் இன்னொன்றிற்கு சமத்துவமானதாகவும், பிரிந்து செல்வதுடன் கூடிய அனைத்து உரிமைகளை கொண்டதாகவும் இருந்த போதிலும், அது எல்லா சர்ந்தப்பத்திலும் பிரிந்து செல்ல விரும்புவதில்லை. உண்மையில், பிரிவினைக்கான எண்ணப் போக்கு பெரிதும் அக விருப்பமாக இல்லாமல் புற நிலை சார்ந்த அவசியமாகவே இருக்கின்றது. பொதுவாக, ஒரு ஜனநாயகச் சூழலில் அதிகாரங்கள் சமத்துவமாகப் பகிரப்படுகின்ற நிலைமையில், தொடர்ச்சியான பெரிய பிரதேசம் என்பது விரிந்த சந்தை வாய்பைக் கொடுப்பதாலும், வளங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக்களை அளிப்பதாலும், கலாச்சார பரிமாற்றத்திற்கும், கலாச்சார வளர்ச்சிக்கும் வாய்ப்பாக அமைவதாலும் ஒன்றாக வாழ்வது சாதகமானது என்பதை ஒவ்வொரு தேசமும் தனது சொந்த அனுபவத்தின் மூலம் புரிந்து கொள்கிறது. இவ்வகையில், ஒரு ஜனநாயக சூழலில் பிரிந்து போவது பற்றி ஒரு தேசம் மிக அரிதாகவே சிந்திக்கிறது. சேர்ந்து வாழ்வது என்பது எப்போது இனிமேலும் சகிக்க முடியாது என்ற அளவிற்கு ஒரு தேசத்தின் மீது ஒடுக்கு முறைகள் தீவிரப்படுகின்றதோ அப்போது தான் அது பிரிந்து செல்வது பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கின்றது.

இந்த வகையில், வட - கிழக்கு முஸ்லீம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஒரு பொதுவான தாயகத்தில், தன்னுடன் வாழ்கின்ற இன்னொரு தேசத்துடன் சமத்துவமான உறவுகளைப் பேண முடியாத ஒரு தேசம் அந்த பொதுத் தாயகத்தை தொடர்ந்தும் முழுமையாக பேணக் கூடிய தகுதியை இழந்து விடுகின்றது. அத் தாயகத்தை கூறு போடுகின்ற வேலையை அத் தேசம் தானே தொடக்கி வைக்கின்றது என்ற உண்மையை தமிழ் முற்போக்கு, ஜனநாயக பிரிவினர் மனதில் கொள்ள வேண்டும்.**

களைத் தனியான தேசமாகத் தமிழ்த் தேசம் மதிக்குமானால் வடகிழக்கு பிரதேசம் கூறுண்டு போகக் கூடிய நிலைமை தோன்றிவிடாது, மாறாக அங்குள்ள முஸ்லீம்களின் தேசிய உரிமைகளை மறுப்பதன் காரணமாகவே இத்தகைய பிரிவினை தோன்றும். ஒரு பொதுவான தாயகத்தில், தன்னுடன் வாழ்கின்ற இன்னொரு தேசத்துடன் சமத்துவமான உறவுகளை பேண முடியாத ஒரு தேசம் அந்த பொதுத் தாயகத்தை தொடர்ந்தும் முழுமையாக பேணக் கூடிய தகுதியை இழந்து விடுகின்றது. அத் தாயகத்தைக் கூறு போடுகின்ற வேலையை அத்தேசம் தானே தொடக்கி வைக்கின்றது என்ற உண்மையைத் தமிழ் முற்போக்கு, ஜனநாயக பிரிவினர் மனதில் கொள்ள வேண்டும்.

ஒரே தாயகத்தினுள் வாழ்கின்ற தமிழ், முஸ்லீம் தேசங்கள் இணைந்து வாழ வேண்டும் என தமிழ் தேசம் விரும்பினால், (இங்கு தமிழ் தேசம் குறித்தே நாம் பேசுகின்றோம்) அவ்வாறு வாழ்வது தனது நலன்களுக்கும் உகந்தது என கருதினால், அதற்காகத் தமிழ் தேசம் தன்னுடைய ஜனநாயக தன்மையையும், முஸ்லீம் தேசத்தை தான் சமத்துவமாக கருதுவதையும் அரசியல் ரீதியில் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். முஸ்லீம் தேசம் வடகிழக்கில் தனக்குரிய அரசியல் வாழ்வைத் தீர்மானிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக கடுமையாக பகையுற்றிருக்கும் தமிழ் -முஸ்லீம் உறவில் நம்பிக்கை பிணைப்பு ஏற்படுத்து வதற்கு தமிழ் தேசம் தனது பங்கை நேர்மையாக ஆற்ற வேண்டும். விடுதலை அமைப்புக்களினால் முஸ்லீம் தேசத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற சேதத்திற்கும், வடக்கிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டமைக்கும் பகிரங்க மன்னிப்பு கோருவதும், உரிய நஷ்ட ஈடுகளை வழங்கி அவர்கள் மீளக் குடியேறுவதற்கான நிலமைகளைத் தோற்றுவிப்பதும் தமிழ் தேசம் வெளிப் படுத்தக் கூடிய ஆரம்ப நல்லெண்ண சமிக்ஞை களாக இருக்க முடியும்.

இவ்வுண்மைகள் அனைத்தும் தமிழ் தேசத்தின் முன்பாக ஓர் அவசரப் பிரச்சனையை முன் வைக்கின்றன. தன்னுடன் ஓரே தாயகத்தில் வாழ்கின்ற முஸ்லீம் தேசத்துடன் சமத்துவமான, ஜனநாயக பூர்வமான உறவுகளை ஏற்படுத்த வேண்டுமாயின், முதலில் தமிழ் தேசம் தன்னுள் மேலாண்மை செலுத்தும் சைவ-வேளாள சித்தாந்தத்தை எதிர்த்து முறியடிப்பதும், ஜனநாயக பூர்வமான, சமத்துவமான உறவுகளைத் தமக்குள் தோற்றுவிப்பதும் அவசிய நிபந்தனையாகின்றன. இன்றுவரை தமிழ் தேசமானது தனது சமூக அக உறவுகளில் குறிப்பிடக்கூடிய தகர்வுகள் எதனையும் ஏற்படுத்தவில்லை என்பதையும், தொடர்ச்சியாக நிலவி வருகின்ற அதிகார படிநிலை வகைப்பட்ட சமூக உறவுகள், தனது விடுதலைப் போராட்டத்தில் பாசிச சக்திகள் தலைமையை கையகப்படுத்தும் நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றன என்பதையும், தமிழ் தேசமும் அதன் முற்போக்கு ஜனநாயகப் பிரிவினரும் புரிந்து கொள்ள வேண்டும். இந்நிலையில் நிலவுகின்ற சமூக உறவுகளை விமர்சனத்திற்குட்படுத்துவதும், மாற்றியமைப்பதும், அதனூடாக முஸ்லீம் தேசத்துடன் சமத்துவமான உறவை ஏற்படுத்து வதை நோக்கி முன்னேறிச் செல்வதும் தமிழ் தேசத்தின் அவசரக் கடமையாகின்றது. இவ்வாறு உள்ளும் புறமும் ஏற்படக் கூடிய உறவு மாற்றங்கள், தமிழ் தேசத்தின் விடுதலையை சரியான இலக்கிலும், விரைவிலும் சாத்தியமாக்குகின்ற ஊக்கிகளாக தொழிற்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறுதியாக, ஒரே தாயகத்தில் இரு தேசங்களாக நிலவுகின்ற தமிழ், முஸ்லீம் மக்களின் தேசிய இயக்கங்கள் தனித்தனியாக மட்டுமல்லாமல், துரதிஸ்டவசமாக, முரண்பட்டு நிற்பவையாகவும், பகைமை நிறைந்தவையாயும் அமைந்திருக்கின்றன. எனினும் இவ்விரு தேசங்களும் பொதுத் தாயகம், பொது மொழி, நெருக்கமான பொருளாதார பிணைப்புகள். . . . . போன்ற பல பொதுவான அம்சங்களோடு, பௌத்த -சிங்கள இனவாதத்தினால் தொடர்ச்சியாக ஒடுக்கப்பட்டு வருபவையாகவும் இருக்கின்றன. இந்த வகையில் இவ்விரு தேசங்களின் அரசியல் இயக்கங்களும் பல சந்திப்புப் புள்ளிகளைத் தம்மி டையே கொண்டுள்ளன. இவை வருங்காலத்தில் எவ்வாறு ஒன்றையொன்று பலப்படுத்தும் அல்லது பலவீனப்படுத்தும் என்பது தமிழத் தேசத்திலுள்ள முற்போக்கு பிரிவினர் தமது வரலாற்றுப் பாத்திரத்தை எவ்வாறு ஆற்றுகின்றார்கள் என்பதிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

## உங்களிடமிருந்து எங்களுக்கு

*. . . . உயிர்ப்பு 5 இல் வெளிவந்த தன்னியல்பு வாதம் கட்டுரை மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. கடந்த காலங்களில் மட்டுமல்ல இன்னும் இந்தப் போக்கு பல குழுக்களிடம் மேலோங்கியுள்ளது. இக்கட்டுரை தொடர்பாக நாம் நீண்ட கூட்டு விவாதங்களில் ஈடுபடும் அளவிற்கு இக் கட்டுரை பல்வேறு அனுபங்களின் தொகுப்பாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.பல்வேறு படிப்பினைகளை இது வழங்குகிறது.*

*கல்வி வட்டம்-தமிழகம்*

*பல்வேறு நல்ல அம்சங்களைத் தன்னியல்பு வாதக் கட்டுரை கொண்டிருந்த போதிலும் இதில் கோட்பாட்டு இறுக்கம் ஒரு சீராக இல்லை. பல இடங்களில் மிகவும் இழுபட்டு செல்கிறது. அரசியல் ரீதியிலான தன்னியல்பு வாதத்தை விளக்கும் இது போன்ற கட்டுரைகளில் பெண்கள் ஆய்வு வட்டம் தொடர்பான உதாரணங்கள் தேவையற்றது எனக் கருதுகிறேன். அதோடு கட்டுரை பற்றிப்பிடிக்க வேண்டிய அம்சங்கள் நழுவிப் போய்விட இடமுண்டு. கவனத்தில் கொள்ளவும்.*

*சியாமளா, திருமலை.*

*அரசியலும் அழகியலும் தொடர்பான கட்டுரை... புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள அனுபவங்களைக் குறிப்பாகப் பிரதிபலிக்கிறது. ஆயினும் சர்ச்சைக்குரிய பேசு பொருளை உள்ளடக்கிய இக்கட்டுரையில் சொல்ல வந்ததை சரியாக சொல்லாதது போல் தோன்றுகிறது. ஒருவகைப் போதாமை நிலவுகிறது.*

*கூ.கூ.. நிஸார்.*

*உயிர்ப்பு – 5 முன்னைய இதழ்களிலிருந்து ஓர் வளர்ச்சிப் படியாகவே கருத முடிகிறது. ஒவ்வொரு கட்டுரைகளும் ஓர் தீவிர வாசிப்புக்கு உள்ளாகக் கூடியது.*

*குறிப்பாக தன்னியல்பு வாதம் குறித்த கட்டுரையில் தன்னியல்பு போக்கு கோட்பாட்டு அரசியல், சமூக கட்டுமாணங்கள் என்ற தலைப்புகளில் வரும் ஆய்வுரைகள் அல்லது விளக்கங்கள் தெளிவாகவும் தேவையானதாகவும் இருந்தது. இவை தான் நடைமுறை யதார்த்த நிலையில் ஏற்பட்ட ஆய்வுபோல் தெரிகிறது. இதற்கு "உயிர்ப்பு " ஓர் சாட்சி போல் தெரிகிறது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழ் தேச இருப்பை நீக்கம் செய்யும்

# சந்திரிகாவின் தீர்வுத்திட்டம்

**நந்தனார்**

நீண்ட இழுத்தடிப்புகளுக்கும் தயக்கங்களுக்கும் பின்னர் தற்போது சந்திரிகா அரசினால் அரசியல் தீர்வு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்யோசனைகள் குறித்து பல்வேறு பிரதிபலிப்புக்கள் வெளிப்பட்டுள்ளன. சர்வதேச அரங்கிலிருந்து அடுத்தடுத்து பாராட்டுக் குவியல்கள் வந்தடைந்துள்ளன. உள்நாட்டில் சிங்கள தரப்பிலிருந்து மரபுசார் இடதுசாரிக் கட்சி களைச் சேர்ந்தவர்களும், ஜனநாயக வழிக்கு வந்த தமிழ் குழுக்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் தீர்வு யோசனைகளை வரவேற்றுப் பாராட்டியிருந்தன.

தீர்வு யோசனைகளைப் பாராட்டி வரவேற்பவர்கள் இவ்யோசனை ஒரு துணிச்சலான முயற்சியென்றும், இவை இதுவரை எந்த அரசாங்கமும் முன்வைக்காத, தமிழர்களின் அபிலாசைகளை நிறைவுசெய்யக் கூடிய தீர்வுத் திட்டமாக உள்ளது என்றும், இந்திய அரசியல் யாப்பில் உள்ளதைவிட அதிக அதிகாரம் கொண்டதாக விளங்குகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளனர். தமிழ் மக்கள் இந்த வாய்ப்பைத் தவறவிட்டு விடக் கூடாது என்றும், இதனை அமுல் நடத்துவதற்குப் புலிகள் தடையாக இருப்பார்களா யின் அவர்களை முறியடிக்க அரசுடன் இணைந்து போரிட ஏனைய தமிழ் அமைப்புக்கள் தயாராக இருக்கவேண்டும் என்று மேலும் குறிப்பிட்டுள்ளனர் .

சிங்களத் தரப்பில் J.V.P.யும், M.E.P.யும் தீவிர இனவாதக் குழுக்களும் மகாநாயக்கர்களும் சிங்கள ஆங்கில பத்திரிகைகளும் ஒட்டுமொத்தமாக இந்த யோசனைகளை நிராகரித்துள்ளன. இவ்விடயத்தில் J.V.P எதிர்ப்புக் கோசங்களுடன் வீதியில் இறங்கத் தொடங்கி விட்டது. மகாநாயக்கர்கள் தமது எதிர்ப்புக்களைக் கூட்டாக வெளியிட்டதுமல்லாது, எதிர்ப்பு நடவடிக்கைகளை U.N.P. தீவிரமாக மேற் கொள்ளாது மெத்தனமாக நடந்துகொள்வதன் மூலம் சிங்கள தேசத்திற்கு ஓர் இக்கட்டான நிலையில் துரோகம் இழைப்பதாகவும் கடுமை யாக சாடியுள்ளனர். ஒற்றையாட்சி முறையைக் காட்கும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. புலிகளை ஒழிப்போம், தேசத்தைக் காப்போம் என்ற சுவரொட்டிகளும் எங்கும் காணப்படுகின்றன.

இவர்களின் பொதுவான கருத்து முதலில் யுத்தத்தில் வெல்ல வேண்டும் அதன் பின்னரே தீர்வு யோசனை பற்றி யோசிக்கலாம் என்பதாக உள்ளது. பிரதான எதிர்கட்சியான U.N.P. எதிர்ப்பதும், நழுவுவதும் என்ற போக்கைக் கடைப்பிடிக்கின்றது. மகாநாயக்கர்களையும், சிங்கள இனவாதிக்ளையும் திருப்திப் படுத்துவதற்காக, அவர்கள் எதிர்க்கின்ற விடையங்களைத் தாமும் எதிர்ப்பதாக U.N.P. யைச் சேர்ந்தவர்கள் கூறிக்கொள்கின்றனர். அதேவேளை தமிழ் முஸ்லீம் சமூகங்களினதும் சர்வதேச சமூகத்தினதும் எதிர்ப்பினை சம்பாதிக்கக் கூடாது என்பதற்காக நழுவுகின்ற போக்கையும் கடைப்பிடிக்கின்றனர். தங்களுடைய முழுமையான கருத்துக்களையும் யோசனைகளையும் தெரிவுக்குழுவின் முன்வரும் போது குறிப்படுவதாகவும் கூறித் தப்பிக் கொள்கின்றனர்.

புலிகள் இவ்யோசனைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தாததோடு தங்களை அந்நியப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுவரப்பட்டது. என்றும் கூறி நிராகரித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள இடதுசாரிப் புத்திஜீவிகளில் ஒரு சிலர் புலிகளுடன் தீர்வு யோசனைகளை முன்வைத்துப் பேசவேண்டும் என்றும், இன்னோர் பகுதியினர் புலிகளுடன் போரை நடாத்தி புலிகளைத் தனிமைப்படுத்திக் கொண்டு தீர்வு யோசனைகளை அமுலாக்க முயற்சிக்க வேண்டுமென்றும் குறிப்பிடுகின்றனர்.

தீர்வு யோசனை குறித்து பல தரப்பினரும் இவ்வாறான பிரதிபலிப்புக்களைக் காட்டிய போதிலும், தமிழ் மக்களைப் பொறுத்தவரை இவ்யோசனை பெரிதளவிலான உசுப்பல்கள் எதையும் ஏற்படுத்தவில்லை. போரினதும் பொருளாதாரத் தடையினதும் கொடுமைகளினால் தீர்வு யோசனைகள் குறித்து எண்ணிப் பார்க்கக் கூடிய நிலையில் அவர்கள் இல்லாத போதும், தீர்வு யோசனைகளில் உள்ள வெளிப்படுத்த வேண்டியது அவர்களின் வரலாற்றுக் கடமையாகின்றது. இந்த வகையில் தீர்வு யோசனையின் நோக்கம், அதன் பின்னணி, தமிழ்த்தேச இருப்பில் அதன் தாக்கம், வரலாற்று அனுபவம், அரசின் அரசியல் நேர்மை என்பவற்றின் அடிப்படையிலேயே தீர்வு யோசனையைப் பரீசிலிக்க வேண்டியது அவசியமாகின்றது.

மேற்கூறப்பட்டவற்றின் அடிப்படையில் யோசனைகளைப் பரிசீலனை செய்யும் போது தீர்வு யோசனைகளுக்கு பின்னால் உள்ள அரசியல், இராணுவ சதிமுயற்சிகளை அடையாளம் காணலாம். தமிழ்த்தேச இருப்பை நீக்கம் செய்யும் வகையிலும் தமிழ் மக்களின் இதுவரை கால போராட்டத்தை நசுக்கும் வகையில் யோசனைகள் அமைந்து இருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

**"இத்தீர்வுத் திட்டமானது தமிழ் மக்கள் தனியான தேசம் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. தீர்வுத்திட்டம் தமிழ் மக்களை அரசியல் ரீதியில் சமத்துவமாக அணுகவில்லை என்பதற்கான ஆரம்பவிலகல் இவ்விடத்தில் தொடங்கிவிடுகிறது. இரண்டாவதாக, இத்திட்டம் தமிழர் தாயகத்தை, 8 பிராந்திய அலகுகளில் ஒன்றாக வகுத்து அதற்கு சிங்கள தேசத்தின் 7 பிராந்திய அலகுகளுக்கு அளிக்கப்படும் நிர்வாக அதிகாரங்கள் போன்ற ஒன்றை தமிழ் தேசத்திற்கு அளிக்கிறது. இதன் மூலம் தமிழ் தேசிய பிரச்சனையில் பொதிந்துள்ள தனித்துவமான அரசியல் அம்சம் நிராகரிக்கப்பட்டு இது நிர்வாக பிரச்சனையாக குறுக்கப்பட்டுள்ளது. இங்கும் தமிழ் மக்களின் தனியானபிரச்சனை என்பது ஏனையவற்றுடன் பொதுமைப்படுத்தப்படுகின்றது."**

அம்சங்களைப் பரிசீலிப்பதை விட அதன் நடைமுறைச் சாத்தியம் பற்றியே அவர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். தீர்வு யோசனையை அமுலாக்குவதற்கு அது தொடர்பான தடைகளைத் தாண்டி சிங்கள அரசு அதனைக் கொண்டு செல்லாது என்பது பொதுவாக அவர்களின் கருத்தாக உள்ளது. இதைவிட புலிகளின் ஒத்துழைப்பின்றி நடை பெறும் எந்த முயற்சிகளும் வெற்றியை ஈட்டித்தரும் என்பதிலும் அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை.

இவ்வாறான நிலையில் தமிழ்தேசத்தின் முன்னேறிய பிரிவினரைப் பொறுத்தவரையில் இதுகுறித்து ஆழ்ந்த அக்கறை அவர்கள் செலுத்த வேண்டியது அவசியமாகும். இத்தீர்வு யோசனையைத் தமிழ் மக்கள் தனியான ஒரு தேசம் என்ற நிலையிலிருந்து நெருங்கிப் பரிசீலித்து அதன் உண்மையான நிலையை

சந்திரிகா அரசு தற்போது முன் வைத்துள்ள தீர்வுத்திட்டத்தை எந்த அடிப்படையில் அணுகப்போகிறோம் என்பதே இங்குள்ள முதற் பிரச்சனையாகும்.

தமிழ் மக்கள் தனியான தேசமாக உருப்பெற்றுள்ளார்கள். அவர்கள் தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமக்கென ஒரு தனியான அரசை அமைக்கப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இப்படி தனியரசுக்காக போராடுகின்ற தமிழ் தேசத்தை நோக்கி சிங்கள தேசத்தின் சார்பில் சிங்கள அரசானது தம்மோடு சேர்ந்து வாழும்படி கோரி அந்த நோக்கில் தனியான அரசுக்கு மாற்றான சில முன்மொழிவுகளை வைத்துள்ளது. தமிழ் தேசத்தின் முன்னேறிய பிரிவினர் தமிழ் தேசத்தின் சார்பில் இந்த தீர்வு யோசனைகளை அணுக முனைவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தீர்வு யோசனைகளுக்கு முன்னோடியாக சந்திரிகா தெரிவிக்கும் ஒரு கருத்து கவனத்துக்குரியதாகும். "தமிழ் மக்களுக்கென தனியான சில பிரச்சனைகள் உள்ளன." என்பதே அக்கருத்தாகும். இந்த அம்சம் பலராலும் பெரிதும் போற்றப்படுகின்றது. சிங்கள தரப்பில் முதன் முதலாக சந்திரிகா தான் தமிழ் மக்களுக்கு சில தனியான பிரச்சனைகள் இருப்பதை ஏற்றுக் கொண்டுள்ளார். இவரது துணிச்சலும் புரிதலும் பாராட்டுக்குரியது.... இப்படியாகத் தொடர்கிறது பலரதுவாதம்.

உண்மைதான். சந்திரிகாவிற்கு முன் பதவியில் இருந்த டிங்கிரி பண்டார விஜேதுங்கா, "தமிழ் மக்களுக்கென்று எந்த பிரச்சனைகளும் கிடையாது, இருப்பதெல்லாம் பயங்கரவாதப் பிரச்சனையே" என்று சாதித்து வந்தார். இப்போதும் கூட தீவிர சிங்கள இனவாத சக்திகள் இதனையே திரும்பத் திரும்ப கூறிவருகின்றனர். இதனோடு ஒப்பிடும்போது சந்திரிகாவின் கூற்று வேறுபட்டு நிற்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அவ்வாறாயின் சந்திரிகாவின் இந்த மாபெரும் ஒப்புதலானது அவரது தீர்வுத் திட்டத்திலும் அரசியல் ரீதியிலும் வெளிப்பட வேண்டுமல்லவா ? முதலாவதாக, இத்தீர்வுத் திட்டமானது தமிழ் மக்கள் தனியான தேசம் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. தீர்வுத் திட்டம் தமிழ் மக்களை அரசியல் ரீதியில் சமத்துவமாக அணுகவில்லை என்பதற்கான ஆரம்பவிலகல் இவ்விடத்தில் தொடங்கி விடுகிறது. இரண்டாவதாக, இத்திட்டம் தமிழர் தாயகத்தை, 8 பிராந்திய அலகுகளில் ஒன்றாக வகுத்து அதற்கு சிங்கள தேசத்தின் 7 பிராந்திய அலகுகளுக்கு அளிக்கப்படும் நிர்வாக அதிகாரங்கள் போன்ற ஒன்றைத் தமிழ் தேசத்திற்கு அளிக்கிறது. இதன் மூலம் தமிழ் தேசிய பிரச்சனையில் பொதிந்துள்ள தனித்துவமான அரசியல் அம்சம் நிராகரிக்கப்பட்டு இது நிர்வாகப் பிரச்சனையாகக் குறுக்கப்பட்டுள்ளது. இங்கும் தமிழ் மக்களின் தனியான பிரச்சனை என்பது ஏனைய வற்றுடன் பொதுமைப்படுத்தப்படுகின்றது. உவமையாகக் கூறுவதாயின் சந்திரிக்கா முதலமைச்சராக இருந்தபோது மேல்மாகாண சபைக்கு போதிய அதிகாரம் இல்லை என வாதிட்டபோது கொண்டிருந்த ஒரு புரிதலுக்கு அப்பால் தமிழ் தேசிய பிரச்சனையை அவர் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை எனலாம். மூன்றாவதாக, சிங்கள பௌத்த நாடு, சிங்கத் தேசியக் கொடி, தேசிய கீதம், சிங்கள அரசபடைகள் போன்ற எவற்றிலும் தீர்வுத்திட்டம் மாற்றங்களை கொண்டுவரவில்லை.

**தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமை முற்றிலும் நிராகரிக்கப்படுகிறது. அடிப் படையில் தமிழ் தேசத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் அதிகாரம் சிங்கள தேசத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.**

இந்த வகையில் தமிழ் மக்களின் தேசிய பிரச்சனைகள் என்பது திட்டவட்டமாக மறுத்துரைக்கப் படுகின்றது. தமிழ் தேசிய பிரச்சனையின் ஊற்று மூலமே இவற்றில்த்தான் மையங் கொள்கிறது. எண்ணிக்கை பெரும்பான்மை கொண்ட ஒரே காரணத்தால் அரசதிகாரங் களைத் தனது கரங்களில் எடுத்துக் கொண்ட சிங்கள தேசம் ஏனைய சமூகங்களை ஒடுக்கவும் இதன் மூலம் தன்னைத் தனிச்சலுகை பெற்ற சமூகமாக வைத்திருக்க முனைந்ததுமே இலங்கையில் தேசியப் பிரச்சனைக்கு காரணமாகியது. அரசியல்யாப்பில் இலங்கை பௌத்த சிங்கள நாடு எனக் குறிப்பிடுவதும் தேசியகொடி, தேசியகீதம் போன்றவையும் அரசு சிங்கள மயப்பட்டுள்ளதன் குறியீடுகளாகும். எனவே தேசியப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முயலும் எந்தவொரு எத்தனிப்பும் இங்கு நான்கு தேசங்கள் இருக்கும் யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு இத்தேசங்களிடையே முழுமையான சமத்துவம் நிகழ்வதன் அடிப்படையில் அரசியல் அதிகாரத்தை எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்பதில் தனது முதன்மையான அக்கறையை வெளிப்படுத்தவேண்டும். ஆனால் அரசு சிங்கள மயப்பட்டதன் குறியீடாக விளங்கும் அம்சங்களிலேயே எந்த விதமாற்றத்தையும் ஏற்படுத்த இவர்கள் தயாராக இல்லையெனில், ஒரு நீதியான கௌரவமான சமாதானத்தைக் காண்பதற்கு இவர்கள் இன்னும் வெகுதூரம் பயணம் செல்லவேண்டியிருக்கும்.

அடுத்த பிரதான விடயம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியதாகும். தீர்வுத்திட்டம் நடைமுறையாகும் அணுகுமுறையில் தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமை முற்றிலும் நிராகரிக்கப்படுகிறது. அடிப்படையில் தமிழ் தேசத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் அதிகாரம் சிங்கள தேசத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள இடதுசாரிப் புத்திஜீவிகளில் ஒரு சிலர் புலிகளுடன் தீர்வு யோசனைகளை முன்வைத்துப் பேசவேண்டும் என்றும், இன்னோர் பகுதியினர் புலிகளுடன் போரை நடாத்தி புலிகளைத் தனிமைப்படுத்திக் கொண்டு தீர்வு யோசனைகளை அமுலாக்க முயற்சிக்க வேண்டு மென்றும் குறிப்பிடுகின்றனர்.

தீர்வு யோசனை குறித்து பல தரப்பினரும் இவ்வாறான பிரதிபலிப்புக்களைக் காட்டிய போதிலும், தமிழ் மக்களைப் பொறுத்தவரை இவ்யோசனை பெரிதளவிலான உசுப்பல்கள் எதையும் ஏற்படுத்தவில்லை. போரினதும் பொருளாதாரத் தடையினதும் கொடுமை களினால் தீர்வு யோசனைகள் குறித்து எண்ணிப் பார்க்கக் கூடிய நிலையில் அவர்கள் இல்லாத போதும், தீர்வு யோசனைகளில் உள்ள வெளிப்படுத்த வேண்டியது அவர்களின் வரலாற்றுக் கடமையாகின்றது. இந்த வகையில் தீர்வு யோசனையின் நோக்கம், அதன் பின்னணி, தமிழ்த்தேச இருப்பில் அதன் தாக்கம், வரலாற்று அனுபவம், அரசின் அரசியல் நேர்மை என்பவற் றின் அடிப்படையிலேயே தீர்வு யோசனையைப் பரீசிலிக்க வேண்டியது அவசியமாகின்றது.

மேற்கூறப்பட்டவற்றின் அடிப்படையில் யோசனைகளைப் பரிசீலனை செய்யும் போது தீர்வு யோசனைகளுக்கு பின்னால் உள்ள அரசி யல், இராணுவ சதிமுயற்சிகளை அடையாளம் காணலாம். தமிழ்த்தேச இருப்பை நீக்கம் செய்யும் வகையிலும் தமிழ் மக்களின் இதுவரை கால போராட்டத்தை நசுக்கும் வகையில் யோச னைகள் அமைந்து இருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

**"இத்தீர்வுத் திட்டமானது தமிழ் மக்கள் தனியான தேசம் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. தீர்வுத்திட்டம் தமிழ் மக்களை அரசியல் ரீதியில் சமத்துவமாக அணுகவில்லை என்பதற்கான ஆரம்பவிலகல் இவ்விடத்தில் தொடங்கிவிடுகிறது. இரண்டாவதாக, இத்திட்டம் தமிழர் தாயகத்தை, 8 பிராந்திய அலகுகளில் ஒன்றாக வகுத்து அதற்கு சிங்கள தேசத்தின் 7 பிராந்திய அலகுகளுக்கு அளிக்கப்படும் நிர்வாக அதிகாரங்கள் போன்ற ஒன்றை தமிழ் தேசத்திற்கு அளிக்கிறது. இதன் மூலம் தமிழ் தேசிய பிரச்சனையில் பொதிந்துள்ள தனித்துவமான அரசியல் அம்சம் நிராகரிக்கப்பட்டு இது நிர்வாக பிரச்சனையாக குறுக்கப்பட்டுள்ளது. இங்கும் தமிழ் மக்களின் தனியானபிரச்சனை என்பது ஏனையவற்றுடன் பொதுமைப்படுத்தப்படுகின்றது."**

அம்சங்களைப் பரிசீலிப்பதை விட அதன் நடைமுறைச் சாத்தியம் பற்றியே அவர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். தீர்வு யோசனையை அமுலாக்குவதற்கு அது தொடர்பான தடைக ளைத் தாண்டி சிங்கள அரசு அதனைக் கொண்டு செல்லாது என்பது பொதுவாக அவர்களின் கருத்தாக உள்ளது. இதைவிட புலிகளின் ஒத்துழைப்பின்றி நடை பெறும் எந்த முயற்சிகளும் வெற்றியை ஈட்டித்தரும் என்பதிலும் அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை.

இவ்வாறான நிலையில் தமிழ்தேசத்தின் முன்னேறிய பிரிவினரைப் பொறுத்தவரையில் இதுகுறித்து ஆழ்ந்த அக்கறை அவர்கள் செலுத்த வேண்டியது அவசியமாகும். இத்தீர்வு யோசனையைத் தமிழ் மக்கள் தனியான ஒரு தேசம் என்ற நிலையிலிருந்து நெருங்கிப் பரிசீலித்து அதன் உண்மையான நிலையை

சந்திரிகா அரசு தற்போது முன் வைத்துள்ள தீர்வுத்திட்டத்தை எந்த அடிப்படை யில் அணுகப்போகிறோம் என்பதே இங்குள்ள முதற் பிரச்சனையாகும்.

தமிழ் மக்கள் தனியான தேசமாக உருப்பெற்றுள்ளார்கள். அவர்கள் தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமக் கென ஒரு தனியான அரசை அமைக்கப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இப்படி தனியரசுக்காக போராடுகின்ற தமிழ் தேசத்தை நோக்கி சிங்கள தேசத்தின் சார்பில் சிங்கள அரசானது தம்மோடு சேர்ந்து வாழும்படி கோரி அந்த நோக்கில் தனியான அரசுக்கு மாற்றான சில முன்மொழிவுகளை வைத்துள்ளது. தமிழ் தேசத்தின் முன்னேறிய பிரிவினர் தமிழ் தேசத்தின் சார்பில் இந்த தீர்வு யோசனைகளை அணுக முனைவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தீர்வு யோசனைகளுக்கு முன்னோடியாக சந்திரிகா தெரிவிக்கும் ஒரு கருத்து கவனத்துக்குரியதாகும். "தமிழ் மக்களுக்கென தனியான சில பிரச்சனைகள் உள்ளன." என்பதே அக்கருத்தாகும். இந்த அம்சம் பலராலும் பெரிதும் போற்றப்படுகின்றது. சிங்கள தரப்பில் முதன் முதலாக சந்திரிகா தான் தமிழ் மக்களுக்கு சில தனியான பிரச்சனைகள் இருப்பதை ஏற்றுக் கொண்டுள்ளார். இவரது துணிச்சலும் புரிதலும் பாராட்டுக்குரியது.... இப்படியாகத் தொடர்கிறது பலரதுவாதம்.

உண்மைதான். சந்திரிகாவிற்கு முன் பதவியில் இருந்த டிங்கிரி பண்டார விஜேதுங்கா, "தமிழ் மக்களுக்கென்று எந்த பிரச்சனைகளும் கிடையாது, இருப்பதெல்லாம் பயங்கரவாதப் பிரச்சனையே" என்று சாதித்து வந்தார். இப்போதும் கூட தீவிர சிங்கள இனவாத சக்திகள் இதனையே திரும்பத் திரும்ப கூறிவருகின்றனர். இதனோடு ஒப்பிடும்போது சந்திரிகாவின் கூற்று வேறுபட்டு நிற்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அவ்வாறாயின் சந்திரிகாவின் இந்த மாபெரும் ஒப்புதலானது அவரது தீர்வுத் திட்டத்திலும் அரசியல் ரீதியிலும் வெளிப்பட வேண்டுமல்லவா ? முதலாவதாக, இத்தீர்வுத் திட்டமானது தமிழ் மக்கள் தனியான தேசம் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. தீர்வுத் திட்டம் தமிழ் மக்களை அரசியல் ரீதியில் சமத்துவமாக அணுகவில்லை என்பதற்கான ஆரம்பவிலகல் இவ்விடத்தில் தொடங்கி விடுகிறது. இரண்டாவதாக, இத்திட்டம் தமிழர் தாயகத்தை, 8 பிராந்திய அலகுகளில் ஒன்றாக வகுத்து அதற்கு சிங்கள தேசத்தின் 7 பிராந்திய அலகுகளுக்கு அளிக்கப்படும் நிர்வாக அதிகாரங்கள் போன்ற ஒன்றைத் தமிழ் தேசத்திற்கு அளிக்கிறது. இதன் மூலம் தமிழ் தேசிய பிரச்சனையில் பொதிந்துள்ள தனித்துவமான அரசியல் அம்சம் நிராகரிக்கப்பட்டு இது நிர்வாகப் பிரச்சனையாகக் குறுக்கப்பட்டுள்ளது. இங்கும் தமிழ் மக்களின் தனியான பிரச்சனை என்பது ஏனைய வற்றுடன் பொதுமைப்படுத்தப்படுகின்றது. உவமையாகக் கூறுவதாயின் சந்திரிக்கா முதலமைச்சராக இருந்தபோது மேல்மாகாண சபைக்கு போதிய அதிகாரம் இல்லை என வாதிட்டபோது கொண்டிருந்த ஒரு புரிதலுக்கு அப்பால் தமிழ் தேசிய பிரச்சனையை அவர் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை எனலாம். மூன்றாவதாக, சிங்கள பௌத்த நாடு, சிங்கத் தேசியக் கொடி, தேசிய கீதம், சிங்கள அரசபடைகள் போன்ற எவற்றிலும் தீர்வுத்திட்டம் மாற்றங்களை கொண்டுவரவில்லை.

**தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமை முற்றிலும் நிராகரிக்கப்படுகிறது. அடிப் படையில் தமிழ் தேசத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் அதிகாரம் சிங்கள தேசத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.**

இந்த வகையில் தமிழ் மக்களின் தேசிய பிரச்சனைகள் என்பது திட்டவட்டமாக மறுத்துரைக்கப் படுகின்றது. தமிழ் தேசிய பிரச்சனையின் ஊற்று மூலமே இவற்றில்த்தான் மையங் கொள்கிறது. எண்ணிக்கை பெரும்பான்மை கொண்ட ஒரே காரணத்தால் அரசதிகாரங்களைத் தனது கரங்களில் எடுத்துக் கொண்ட சிங்கள தேசம் ஏனைய சமூகங்களை ஒடுக்கவும் இதன் மூலம் தன்னைத் தனிச்சலுகை பெற்ற சமூகமாக வைத்திருக்க முனைந்ததுமே இலங்கையில் தேசியப் பிரச்சனைக்கு காரணமாகியது. அரசியல்யாப்பில் இலங்கை பௌத்த சிங்கள நாடு எனக் குறிப்பிடுவதும் தேசியகொடி, தேசியகீதம் போன்றவையும் அரசு சிங்கள மயப்பட்டுள்ளதன் குறியீடுகளாகும். எனவே தேசியப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முயலும் எந்தவொரு எத்தனிப்பும் இங்கு நான்கு தேசங்கள் இருக்கும் யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு இத்தேசங்களிடையே முழுமையான சமத்துவம் நிகழ்வதன் அடிப்படையில் அரசியல் அதிகாரத்தை எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்பதில் தனது முதன்மையான அக்கறையை வெளிப்படுத்தவேண்டும். ஆனால் அரசு சிங்கள மயப்பட்டதன் குறியீடாக விளங்கும் அம்சங்களிலேயே எந்த விதமாற்றத்தையும் ஏற்படுத்த இவர்கள் தயாராக இல்லையெனில், ஒரு நீதியான கௌரவமான சமாதானத்தைக் காண்பதற்கு இவர்கள் இன்னும் வெகுதூரம் பயணம் செல்லவேண்டியிருக்கும்.

அடுத்த பிரதான விடயம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியதாகும். தீர்வுத்திட்டம் நடைமுறையாகும் அணுகுமுறையில் தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமை முற்றிலும் நிராகரிக்கப்படுகிறது. அடிப்படையில் தமிழ் தேசத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் அதிகாரம் சிங்கள தேசத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு இத்தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. சிங்களவர்களைக் பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றம், மூன்றில் இரண்டு பெரும்பான்மையினரால் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. 72 வீதம் சிங்கள சனத்தொகை கொண்ட முழு நாட்டிலும் சர்வசன வாக்கெடுப்பு நடாத்தி அங்கீகாரம் பெறப்படவேண்டும்.

இதுவரை காலமும் சிங்கள தேசம் தனது எண்ணிக்கைப் பெரும்பான்மை என்ற தகுதியை மட்டும் கொண்டு, அரசு அதிகாரத்தை தம்வசப்படுத்தி அதனைச் சிங்கள மயப்படுத்தி பாராளுமன்ற, படையணிகள் மற்றும் அனைத்து நிறுவனங்கள் மூலம் தமிழ் மக்கள் மீது ஒடுக்கு முறைகளைத் திணித்து வந்துள்ளது. தமிழ்த் தேச இருப்பைச் சிதைக்க முயற்சிக்கப்பட்டுள்ளது.

இப்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தை ஏற்பதா? இல்லையா? என்ற விடயத்தை தமிழ் தேசமே தீர்மானிக்க வேண்டும். மாறாக தமிழ் தேசத்தின் அரசியல் தலைவிதிகளை நிர்ணயிக்கும் அதிகாரம் மீண்டும் சிங்களதேசத்திடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

சுருங்கக் கூறினால் சந்திரிகாவின் அரசியல் தீர்வுத்திட்டமானது தமிழ் தேசத்தின் இரண்டு அடிப்படையான அரசியல் அபிலாசைகளை புறந்தள்ளுகின்றதாக அமைந்துள்ளது.

*(i) தமிழ் மக்கள் தனியான தேசம், தமிழ் மக்களுக்கு தனியான பிரச்சனைகள் உள்ளன. எனவே அவற்றிற்கென தனியான தீர்வு வேண்டும்.*

*(ii) தமிழ் தேசத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் பூரண உரிமை தமிழ் தேசத்திடம் இருக்க வேண்டும்.*

தமிழ் மக்களின் தேசிய இருப்பையும் சுயநிர்ணய உரிமையையும் முற்றாக நீக்கம் செய்யும் இப்படிப்பட்ட ஒரு உதவாக்கரைத் தீர்வுக்காகத் தமிழ் மக்கள் இதுவரையில் போராடவும் இல்லை, இப்படிப்பட்ட ஒன்றை எதிர்பார்த்து அவர்கள் சந்திரிகாவிற்கு ஒரு வாய்ப்பினை அளிக்கவுமில்லை. இந்த எளிய உண்மையானது சந்திரிகா தரப்பினருக்கு புரியாமல் போனதையிட்டு நாம் ஆச்சரியப் படவில்லை. ஏனெனில் அவர்களின் சிங்கள மனங்கள் கட்டமைக்கப்பட்ட விதத்திலும், அவை மேலாதிக்கம், அதிகாரவெறி என்பவற்றால் இறுகிக் கிடக்கும் விதத்திலும் இந்த உண்மையை புரிந்துகொள்ள முடிவது கடினமே. ஆனால் தமிழ்த் தரப்பின் பல்வேறு "அரசியல் தலைவர்களுக்கும்" சந்திரிகாவின் தமிழ் அபிமானிகளுக்கும் இந்த எளிய உண்மை புரியாமல் இருப்பது தான் புரியாத புதிராகும்.

தேசிய ஒடுக்குமுறையின் அடிப்படையான ஒரு சில விடையங்களில் மாற்றங்களைக் கொண்டு வரவே, இவ்வளவு பிடிவாதமாக இருப்பவர்களது தீர்வு யோசனைகள் இதற்கு மேல் பரிசீலிக்கப்படுவதற்குக் கூட தகுதியற்றதாகும். இருப்பினும் சிங்கள இனவாதச் சித்தாந்தத்தைத் தமிழ் தேசத்தினுள் காவித்திரியும் சிலர் இத்தீர்வுத் திட்டம் தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்களை மறுத்துரைக்கும் விதத்திலேயே மேற்கொண்ட இன்னும் சில விடயங்களை பேச வேண்டியுள்ளது.

இத்திட்டத்தில் "சமஷ்டி" என்பது பெயரிட்டு குறிப்பிடப்படவில்லையே ஒழிய, மற்றும்படி சமஷ்டியின் அத்தனை அம்சங்களும் இருப்பதாக இந்த தீர்வுத்திட்ட அபிமானிகள் புகழுகிறார்கள். அத்தோடு இந்தியாவில் சமஷ்டி முறையில் மாநிலங்களுக்கு வழுங்ககட்ட அதிகாரங்களை விடமிகவும் கூடுதலான அதிகாரங்கள் இத்தீர்வுத்திட்டத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு வழங்கப்படுவதாகவும் கூறுகிறார்கள். எனவே "சமஷ்டி" என்றால் என்ன? இந்தியாவில் எந்தளவிற்கு அது நடைமுறையில் உள்ளது போன்ற விடயங்களைப் பரிசீலிப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமஷ்டிஆட்சி அல்லது கூட்டாட்சி என்பதன் உண்மையான அர்த்தம்

சமஷ்டி ஆட்சி அல்லது கூட்டாட்சி என்பதைக் குறிக்கும் Federalism என்ற ஆங்கிலப் பதமானது லத்தீன் சொல்லான Foedus என்பதிலிருந்து பிறந்ததாகும். Foedus என்பது நட்புத் தேசங்களுக்கிடையிலான ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை என்பதைக் குறிக்கின்றது.

இந்த சமஷ்டி ஆட்சி முறையானது கிரேக்க நகர அரசுகளிலிருந்து அடையாளம் காணப்பட்டாலும் 1787 ல் அமெரிக்க அரசியலமைப்பின் அறிமுகத்துடனேயே பிரபல்யம் பெறத் தொடங்கியது. ஒரு பூரண சமஷ்டி முறையின் ஆரம்பமாகவும் இதுவே கருதப்படுகின்றது. அமெரிக்க சுதந்திரப் போரைத் தொடர்ந்து 13 தேசங்கள் சமத்துவத்தின் அடிப்படையில் இணைக்கப்பட்டு உருவாக்கப்பட்டதே அமெரிக்க கூட்டாட்சியாகும். இங்கு தேசங்களின் தனித்துவமும் சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆரம் பத்தில் 13 அரசுகளுடன் விளங்கிய கூட்டாட்சி இன்று 52 அரசுகளுடன் விளங்குகின்றது.

சமஷ்டி ஆட்சிமுறையைப் பொறுத்தவரை அதற்கு 3 பண்புகள் இருத்தல் வேண்டும், என பிரதானமாக கருதப்படுகின்றது.

தேசங்களின் தனித்துவமும் சுயநிர்ணய உரிமையும் பேணக்கூடிய வகையிலேயே சமத்துவமாக அவை இணைக்கப்படல் வேண்டும்.

2) தேசங்களுக்கிடையில் பொதுவாக இருக்கும் விடயங்களே மத்திய அரசின் அதிகாரங்களாக இருத்தல் வேண்டும். இவை தேசங்களின் பொதுவிருப்பாக இருக்கும்.

3) மத்திய அரசு என்பது தேசங்களின் கூட்டாக இருத்தல் வேண்டும். இங்கு தேசங்களின் பொது விருப்பமே மத்திய அரசாக உள்ளது.

இப்பண்புகளின் அடிப்படையில் தீர்வு யோசனைகளைப் பரிசீலிப்போம்.

சமஷ்டி ஆட்சியில் முதலாவது பண்பு இரண்டு விடையங்களை உள்ளடக்கியது. ஒன்று தேசங்களின் தனித்துவம். இரண்டாவது தேசங்களின் சுயநிர்ணய உரிமை. தேசங்களின் தனித்துவம் என்ற வகையில் அதன் பிரச்சனைகள் தனியாகப் பார்க்கப்பட வேண்டும். அதன் தனித்துவமான அடையாளங்கள் சிதையாமல் இருப்பதற்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட வேண்டும். சுயநிர்ணய உரிமை என்ற வகையில் அத்தேசம் தன் அரசியல் தலைவிதியை தானே நிர்ணயிக்கக்கூடிய உரிமை வழங்கப்பட வேண்டும். தன் தேசம் சார்ந்த விடையங்களில் பூரண அதிகாரம் உள்ளதாகவும், தன் தேசத்துக்கான அரசியலமைப்பை உருவாக்குவதற்கான உரிமையைக் கொண்டதாகவும், வெளித் தலையீடுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான உத்தரவாதங்களைக் கொண்டதாகவும் அது அமைந்திருத்தல் வேண்டும். தேசங்களை இணைத்து கூட்டாட்சி ஒன்றை உருவாக்கும்போது இவ்விடயங்களில் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதைப் பார்த்துக் கொள்வதும் அவசியமானதாகும்.

ஆனால்த் தீர்வுயோசனைகளில் இவை உள்ளடக்கப்படவில்லை. அதில் தமிழ் தேசம் ஒரு தேசமாகவே கருதப்படவில்லை. அதன் தனித்துவமும் பேணப்படவில்லை. மாறாக சிங்கள அரசினது ஒரு நிர்வாக அலகாகவே கருதப்படுகிறது. தமிழ்த் தேசம் தனது தன்னடையாளங்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளும் யோசனையில் கிடையாது. மறுபக்கத்தில் சிங்களப் பிரதேசத்தை இணைத்தல் என்ற வகையில் தமிழ் தாயகத்தை தோண்டி எடுக்கும் முயற்சியே நடைபெறுகின்றது. இதனு டாக சிங்கள அரசு ஆக்கிரமித்துள்ள தமிழ் தாயகத்தை தொடர்ந்தும் தன்னுடன் வைத்திருக் கவே முயற்சிக்கின்றது. தமிழ் தேசத்தின் செழிப்பான விளைபூமிகள், நீர்ப்பாசன குளங்கள் என்பன பறித்தெடுக்கப்பட இருக்கின்றன. அல்லைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குளம், கந்தளாய்குளம், பதவியாகுளம், சேனநாயக்க சமுத்திரம் என்பன பறித்தெடுக்கப் படவுள்ள பிரதான நீர்ப்பாசன வளங்களாகும். இதைவிட தமிழ்த் தேசத்தின் கேந்தர முக்கியத்துவம் வாய்ந்த மணலாற்றுப் பிரதேசம் முழுமையாக பறித்தெடுக்கப்படவுள்ளது.

சுயநிர்ணய உரிமை என்ற வகையில் தமிழ் தேசத்திற்கு சுயநிர்ணய உரிமையுடைய அதிகாரங்களும் வழங்கப்படவில்லை. தனியான அரசியலமைப்பு உரிமை வழங்கப்படவில்லை. பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள், முதலாம்தரப் பாடசாலைகள் சம்பந்தமான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. பாரிய கைத்தொழில்களை உருவாக்கும் அதிகாரம், உள்ளூர் விமான நிலையம், துறைமுகங்கள், புகையிரத போக்குவரத்து, நீதி தொடர்பான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. வரிவிதிப்பு, வெளிநாட்டுக்கடன்பெறல் என்ப வற்றில் போதிய உத்தரவாதம் கொடுக் கப்படவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக கொடுக்கப்பட்ட அதிகாரங்களுக்குபோதிய பாதுகாப்பு உத்தரவாதங்கள் இல்லை. ஒரு கையால் கொடுத்ததை மறுகையால் பறிக்கும் ஒரு நீண்ட வரலாறு சிங்கள அரசுக்கு உண்டு என்பதை இது விடையத்தில் தமிழ் மக்கள் இலகுவில் மறக்கமாட்டார்கள்.

சமஷ்டி ஆட்சிமுறையின் இரண்டாவது பிரதானபண்பு யோசனையில் கவனத்தில் எடுக்கப்படவில்லை. தேசங்களுக்கிடையில் இருக்கும் பொதுவான விடையங்கள் மத்திய அரசிடமும் ஏனைய அதிகாரங்கள் தேச அரசுகளிடமும் இருக்க வேண்டும் என்பதே இதன் சாராம்சம். தீர்வு யோசனைகள் தேசங்களுக் கிடையே அதிகாரங்களைக் பங்கிடாத அதேவேளை மத்திய அரசிடம் அதிகாரம் குவிந்திருப்பதிலேயே அதிக கவனம் செலுத்தியுள்ளது. தேசஅரசிடம் இருக்க வேண்டிய பல அதிகாரங்கள் இங்கு மத்திய அரசின் மீது பொறுப்பாக்கப்பட்டுள்ளது. தீர்வு யோசனையின் மையம், பிரதான அழுத்தி மத்திய அரசிடம் இருக்கவேண்டும். என்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உண்மையில் தேசங்களுக்கிடையில் பொதுவான பிரச்சனைகளாக உள்ள முழுநாட்டின் பாதுகாப்பு, தேசங்களுக்கிடையிலான போக்குவரத்து, நாணயம் வெளியிடல் என்கின்ற பொதுவான விடையங்களைத் தவிர ஏனையவை யாவும் தேச அரசுகளிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்பட வில்லை இதைவிட மத்திய அரசின் அதிகாரங் கள் என்பது தேசங்களின் பொதுவிருப்பாக இருத்தல் வேண்டும் என்பது இங்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. உண்மையில் தீர்வு யோசனையில் மத்திய அரசு என்பது சிங்கள பேரினவாத அரசே! மத்திய அரசின் அதிகாரங்கள் என்பது சிங்கள பேரினவாத அரசின் அதிகாரங்களே!

**சமஷ்டி ஆட்சியில் முதலாவது பண்பு இரண்டு விடையங்களை உள்ளடக்கியது. ஒன்று தேசங்களின் தனித்துவம். இரண்டாவது தேசங்களின் சுயநிர்ணய உரிமை. தேசங்களின் தனித்துவம் என்ற வகையில் அதன் பிரச்சனைகள் தனியாகப் பார்க்கப்பட வேண்டும். அதன் தனித்துவமான அடையாளங்கள் சிதையாமல் இருப்பதற்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட வேண்டும். சுயநிர்ணய உரிமை என்ற வகையில் அத்தேசம் தன் அரசியல் தலைவிதியை தானே நிர்ணயிக்கக்கூடிய உரிமை வழங்கப்பட வேண்டும்.**

சமஷ்டி ஆட்சிமுறையின் மூன்றாவது பிரதான பண்பான மத்திய அரசு என்பது தேசங்களின் கூட்டு என்பதும் இங்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை .மேலே கூறியது போல, "சிங்கள அரசே மத்திய அரசு" என்பது தான் இங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை இன்று சமூகமளவில் நான்கு தேசங்களாக உள்ளது. சிங்கள தேசம், தமிழ்தேசம், முஸ்லீம் தேசம், மலையக தேசம் என்பனவே இந்நான்கு தேசங்களாகும். இத்தேசங்கள் நான்கையும் இறைமையுள்ள தேசங்களாகக் கருதி அவற்றின் தனித்துவத்தையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்து அத்தேசங்களை சமத்துவமாக இணைத்து ஒரு மத்திய அரசை உருவாக்கு வதாக யோசனைகள் அமைந்திருப்பின் அது ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமஷ்டி ஆட்சிப் பண்பைக் கொண்ட தீர்வாக அமைந்திருக்கும். மத்திய அரசும் தேசங்களின் கூட்டமைப்பாக விளங்கியிருக்கும். இதனை நோக்கிய ஆரம்ப அடிகள் கூட இந்த அரசின் யோசனையில் எடுத்துரைக்கப் படவில்லை.

இங்கு தேசங்களின் கூட்டு என்பது உருவாகும் போது மக்கள் தொகை, நிலப்பரப்பு என்பதை வைத்துக்கொண்டு தேசங்களுக்கு சிறப்பிடம், தனிச்சலுகைகள் வழங்கப்படுவதில்லை. மாறாக அவை எவ் அளவுகளைக் கொண்டபோதும் ஒவ்வொன்றும் ஒரு தேசமாகவே கருதப்படுகின்றது. அவை சமத்துவமாகவே இணைக்கப்படுகின்றது. மத்திய அரசானது தேசங்களின் கூட்டிலும் அவை சமத்துவமானவையாகவே கருதப்பட வேண்டும். தேசங்களின் பொதுவிருப்பே மத்திய அரசின் அதிகாரங்களாகவும் இருத்தல் வேண்டும்.

**இந்தியா என்பது தேசங்களின் சிறைக் கூடம். அந்த வகையில் உலகில் இன்று மீதமாக இருக்கும் தகர்ந்து செல்லப்போகும் ஒரே ஒரு பேரரசும் இந்தியாவே ஆகும்.**

ஆனால் பௌத்த சிங்கள அரசு என்பதிலும் தேசியக்கொடி, தேசிய கீதம் என்பதிலும் மாற்றமில்லை என்பது மட்டுமல்லாது இன மேலாதிக்கக் குறியீடுகள் மேலும் அழுத்தம் பெறும் வகையில் நடைமுறைகள் அமைவதை - யாழ் நகர் கைப்பெற்றுதலின் பின் நடை பெற்ற கொண்டாட்டங்களும் கொடிநாட்டல்களும் நிரூபிக்கின்றன. இவையாவும் மைய அரசு தொடர்ந்தும் சிங்கள- பௌத்த அரசா இருக்குமென்பதையே காட்டுகின்றது.

இங்கு ஒரு சாரார் இத்தீர்வு யோசனைகள் இந்திய அரசியல் அமைப்பில் உள்ளதை விட உயர்வாக உள்ளது என கருத்துத் தெரிவித்துள்ளனர். இதனால் இந்தியா பற்றியும் பரிசீலிப்பது அவசியமாக உள்ளது

இந்தியா என்பது தேசங்களின் சிறைக் கூடம். அந்த வகையில் உலகில் இன்று மீதமாக இருக்கும்; தகர்ந்து செல்லப்போகும் ஒரே ஒரு பேரரசும் இந்தியாவே ஆகும். வரலாற்றில் ஏனைய பேரரசுகளுக்கு நடந்து முடிந்தது போலவே இந்திய போரரசும் பல்வேறு தேச அரசுகளாக சிதறுவதற்கே வரலாற்றில் விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள மாநில அரசுகளை மைய அரசுநடத்தும் விதமும் இந்தித் திணிப்பு உட்பட பலவித தேசிய ஒடுக்குமுறைகளை மைய அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளமையும், இந்த ஒடுக்குமுறைகளை எதிர்த்து பல தேசங்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காக போராடிக் கொண்டிருப்பதும் இன்றைய சமகால நிகழ்வுகளாக உள்ளன. இந்த வகையில் இந்தியாவில் நடைமுறையில் இருப்பது சமஷ்டியே அல்ல. மாறாக இத்தீர்வுத் திட்டத்தை ஏதாவது ஒன்றுடன் ஒப்பிட முடியுமாயின் பின்வருமாறு குறிப்பிடலாம். விரிவான முதலாளித்துவ ஜனநாயகம் நிலவும் ஒரு ஐரோப்பிய நாடொன்றில் உள்ள மாநகர சபைக்குக் கூட இத் தீர்வுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளவற்றை விட கூடிய அதிகாரம் உண்டு.

## உதவாக்கரை தீர்வுதிட்டமும் சிங்கள தேசத்தின் பிரதிபலிப்புகளும்

சந்திரிகாவின் இப்படிப்பட்ட அரசியல் தீர்வு முன்மொழிவின் மீதான சிங்கள தேசத்தின் எதிர்விளைவுகளையும் ஓரளவு பரிசீலித்து செல்வது பொருத்த முடையதாகும். இதில் தமிழ் தேசியப் பிரச்சனை என்ற அம்சம் முற்றாகக் கைவிடப்பட்டிருந்தாலும் சிங்கள தேசமானது தன்னளவில் மாகாணமட்டத்தில் ஒரு வகைநிர்வாக பரவலாக்கத்தை அனுபவிக்க வகை செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் தமக்கு சாதகமான ஒரு உண்மையைக் கூட கண்டு கொள்ள முடியாதபடி இனவாதம் சூடேறிக் கிடப்பதையே அவர்களின் வெளிப்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இத்தீர்வு யோசனை தமிழருக்கு சமஷ்டியை வழங்குவதாயும் இது நாட்டைத் துண்டாடுவதற்கான முதல் அடியாகும் எனவும் இனவாதிகள் வாதிட்டுள்ளனர். இப்படிப்பட்ட வெறும் நிர்வாக பரவலாக்கலுக்குக் கூட இடமளிக்கத் தயாராக இல்லாதது தமிழர் மீதான ஒடுக்குமுறை அப்படியே தொடரப்பட வேண்டும் என இவர்கள் கூறுவதையே வெளிப்படுத்துகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

P.A கூட்டிலுள்ள பெரும்பாலான கட்சிகளும், எதிர்க்கட்சிகளும், மகாநாயக்கர்களும், சிங்கள, ஆங்கில தொடர்பு சாதனங்களும் மற்றும் உதிரியான பல அமைப்புகளும் தீர்வு யோசனையை ஒட்டி பின்வரும் அம்சங்களை ஒட்டு மொத்தமாக எதிர்க்கின்றன.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் எல்லை மீள் வரைவு மூலம் இணைக்கப்படக்கூடாது. . . . நிலத்தின் மீதான மைய அரசின் ஆதிக்கம் மாற்றப்படக் கூடாது. . . . பிராந்திய அலகிற்கு பொலீஸ்படை அதிகாரம் வழங்கப்படக் கூடாது. . . . வெளிநாட்டுக் கடன்கள் நிதி உதவிகளை நேரடியாக பெறும் உரிமை வழங்கப்படக் கூடாது. . . . பிராந்திய சபைகளைக் கலைக்கும் அதிகாரம் பாரளுமன்றத்திடமே இருக்க வேண்டும்.

இவற்றின் மூலம் இவர்கள் வெளிப் படுத்துவது, தமிழர் தாயகத்தின் மீதான மேலாதிக்கம் தொடர்ந்தும் சிங்கள மைய அரசிடமே இருக்கவேண்டும், இந்த ஆக்கிரமிப்பின் கீழ் தொடர்ந்தும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் நடைபெறவேண்டும், தமிழர் மீதான அடக்கு முறை மற்றும் வன்முறை ஏகபோகம் சிங்கள அரசு படைகளின் கரங்களில் தொடர்ந்தும் தக்க வைக்கப்பட வேண்டும், பொருளாதார வளப்பகிர்வு, உள்ளகக்கட்டுமானங்கள் மற்றும் அபிவிருத்திகள் அனைத்திலும் தொடர்ந்தும் பாரபட்சம் இழைக்கப்பட வேண்டும், இறுதியாக சிங்கள எண்ணிக்கை பெரும்பான்மை கொண்ட பாராளுமன்றிடமே தமிழரின் தலைவிதி உட்பட அனைத்து அதிகாரங்களும் குவிக்கப்பட வேண்டும். . . . என்பதைத்தான் இந்த வகையில் ஒற்றையாட்சி முறை என்பதன் மூலம் சாராம்சத்தில் அவர்கள் கருதுவதெல்லாம் "சிங்கள மேலாதிக்க ஆட்சியைத் தான்".

தீர்வுயோசனை முன்வைக்கப்பட்ட காலகட்டத்தில் P.A அணியிலுள்ள MP க்கள் பலர் - அமைச்சர்கள் சிலர் - அடங்கலாக - தமக்கும் தீர்வுயோசனைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை வெளிப்படையாகவே காட்டிக் கொண்டனர். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் போது ஐ. தே. க. MP க்களுக்கு ஏற்பட்டதைப் போல இவர்களும் தமது சொந்த தேர்தல் மாவட்டங்களுக்குள் காலடி எடுத்து வைக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. வேறு சில MPக்கள் தீர்வுயோசனைக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்வதாகக் கூறிக்கொண்டு தீர்வு யோசனை வைக்கப்பட்டதன் நோக்கம், புலிகளை தனிமைப்படுத்தி முற்றாக ஒழித்துக்கட்டுவதற்கும் வடக்குக் கிழக்கை மீண்டும் அரசின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்கும் மட்டுமே என்பதாகவே பிரச்சாரம் செய்தனர். இதன் மூலம் புலிகள் முறியடிக்கப்பட்டதன் பின்பு தீர்வு யோசனை இதே வடிவில் நடைமுறைப்படுத்தப் படாது என்பதையே தமது மக்களுக்கு மறைமுகமாக தெரிவித்தனர். இவர்களின் இப்படிப்பட்ட பிரச்சாரங்களுக்கு அடிப்படையில் வழிகோலியது, புலிகளைத் தனிமைப்படுத்தி ஒழித்துக்கட்டுவதாக கூறிய சந்திரிகாவின் உத்திதான் என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

யுத்தத்தில் முழுவெற்றி அடையப் பெறும்வரையிலும் எந்த ஒரு தீர்வுயோசனையும் நடைமுறையாவதற்கு அங்கீகாரம் அளிக்கப்படலாகாது என்பது அஸ்கீரிய பீடங்களின் கட்டளையாகும். இதற்கு உடன்பட்ட சந்திரிகா இதே மாநாயக்கர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்ததும் இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

இந்த நெருக்கடியான கட்டத்தில் மாகாசங்கத்தாரை தீர்வு முன்மொழிவை எதிர்த்துப் பகிரங்க அறிக்கை எதுவும் விடவேண்டாம் எனவும் அது அரசின் யுத்தமுயற்சிகளைப் பெரிதும் பாதிக்கும் எனவும் சந்திரிகா கேட்டுக் கொண்டுள்ளார். இங்கு சமாதான முயற்சிகள் பாதிக்கப்படும் என்பதை விட யுத்தமுயற்சிகளைப் பாதிக்கும் என்பதில் தான் சந்திரிகாவின் அக்கறை முனைப்பாக இருந்தமை அவரது உண்மையான நோக்கத்தை எடுத்துக் காட்டுகிறது. தமிழ் தேசிய பிரச்சனையை அரசியல் வழிமுறையால் தீர்ப்பது அல்ல, மாறாக இராணுவ வழிமுறையில் அடக்கியே தீர்வது என்பது தான் அவரது இரகசியத் திட்டமாகவும் இருந்துள்ளது.

மேலும் பொதுசன முன்னணியும் ஐ. தே. க. வும் மற்றும் சிங்கள கட்சிகளும் மகாவம்ச ஐதீகங்களின் காவலர்களான மகாநாயக்கர் களைத் தேடி ஒடுவதானது பிக்குமார் வசம் உள்ள அதிகாரங்களின் ஒரு குறியீடாகவே அமைகிறது. மகாவம்சம், துட்டகமுனு வரலாற்றை உணர்ச்சி ததும்ப போதித்துக் கொண்டும் தமிழ் மக்களின் இரத்தத்தில் தோய்ந்து வரும் முப்படைகளை ஆசீர்வதித்து போதிபூஜைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்தி யுத்த வெறியை மேலும் மேலும் கிளறி விடுகின்ற மகாசங்கத்தாரின் ஆதரவைக் கோரி மண்டியிட்டுத் தான் இந்த அரசியல் தலைவர்கள் தமிழ் தேசிய பிரச்சனையை அணுகப் போகின்றார்கள் என்றால் இதற்கு மேல் தேசங்களுக்கிடையில் சமத்துவம் என்ற அடிப்படையில் அரசியல் தீர்வுகளை இத்தலைவர்கள் முன்மொழிவார்கள் என இது வரை எவரும் எதிர்பார்த்தது தான் மிகப்பெரும் தவறாகும். அவ்வாறு இப்போதும் கூட எதிர்பார்ப்பது கடந்த காலத் தமிழ் தலைமை பின்பற்றி வந்த சரணடைவு அரசியலின் தொடர்ச்சியாகவே அமையும்.

பலவகையிலும் வெடித்தெழுந்த இப்படிப்பட்ட எதிர்ப்புகளையும் அழுத்தங் களையும் எதிர்கொள்ள முடியாது சந்திரிகாவும் பீரிஸ்சும் தமது ஆரம்ப முன்மொழிவுகளில் இருந்து பின்வாங்கத் தொடங்கிவிட்டனர். பிராந்திய சபைகளைக் கலைக்கும் அதிகாரம், நிலத்தின் மீதான மையஅரசின் அதிகாரம், வெளிநாட்டு உதவிகள் கடன்களை பிராந்திய சபைகள் பெறும் உரிமை போன்றவற்றை மைய அரசுவிட்டுக்கொடுக்காது என பேசத்தொடங்கி யுள்ளனர். யாழ் நகரை சிங்களப் படைகள் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து இவ்வழுத்தம் மேலும் அதிகரித்துள்ளது. சிங்கள வீரப் புதல்வர்களின் இரத்தம் சிந்தி கைப்பற்றிய வடக்கை அரசியல் தீர்வு என்ற பெயரில் மீண்டும் பிரிவினைவாத சக்திகளிடம் ஒப்படைக்க அனுமதியோம் என்ற குரல்கள் கேட்கத் தொடங்கியுள்ளனர்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சமாதான முயற்சிகளின் போதும், சிங்கள தலைவர்களின் "துணிச்சல்" பற்றியும், "நேர்மை" குறித்தும் தமிழ் தலைமையினால் பெரிதும் சிலாகிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தங்கள் அதே துணிச்சல் மிக்க சிங்களத் தலைவர்களால் கிழித்தெறியப்பட்டு அல்லது கிடப்பில் போடப் பட்டு, புதிய வடிவிலான, மேலும் தீவிர ஒடுக்கு முறைகள் மேற்கொள்ளப்பட்ட போது, சிங்கள தலைவர்கள் நம்பிக்கைத் துரோகம் இழைத்து விட்டதாக ஒப்பாரி வைக்கப்பட்டது. சந்திரிகா மீதான நம்பிக்கையும் இதே வரலாற்று விதியின் பாற்பட்டதே என்பதும், இவ்வளவு விரைவில் அவரது சமாதான முகத்திரை விழுந்துவிட்டதும் இவர்களுக்கு அதிர்ச்சி தான். எனினும் சிங்கள தலைவர்கள் இழைத்த துரோகம் பற்றிய ஒப்பாரிகளை ஒரு பக்கம் வைத்து விட்டு, எந்த அரசியலின் அடிப்படையில் குறிப்பிட்ட சிங்களத் தலைமையை நம்பினார்கள் என்பதை தமிழ்த் தலைமைகள் ஒரு போதுமே தமிழ் மக்களுக்கு விளக்கியது கிடையாது. இப்போதும் கூட சந்திரிகாவை எந்த அரசியலின் அடிப்படையில் நம்பிக் கொண்டிருந்தார்கள் என்பதும் அவர்களுக்கு தெரியாது.

## தீர்வுத்திட்டம் தொடர்பான அரசின் நேர்மைத்தன்மை

நாட்டின் மிகக் கூர்மையடைந்துள்ள ஒரு பிரச்சனை தொடர்பாக தீர்வு யோசனைகளை முன்வைக்கும்போது அது தொடர்பாக அரசு நேர்மையாகச் செயற்பட வேண்டியது அவசியமா னதாகும். குறிப்பாக தமிழ் தேசத்தின் நம்பிக் கையைப் பெறுவதற்கான முயற்சிகளில் இறங்கி அதன் ஒரு தொடர் நடவடிக்கையாகவே அரசியல் தீர்வு யோசனையை முன்வைத்திருத்தல் வேண்டும்.

நடைமுறை உண்மையின்படி தமிழ்தேசம் சிங்கள தேசத்திலோ அன்றி சிங்கள அரசியல் தலைவர்களிலோ முற்றாக நம்பிக்கையை இழக்குமளவிற்கு முரண்பாடு உக்கிரமடைந் துள்ளது. தமிழ் தேசம் தொடர்பாக வரையப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பன கிழித்தெறியப்பட்டமையும் இலங்கை - இந்திய ஒப்பந்தப்படி வரையப்பட்ட 13 வது திருத்தச் சட்டத்தை நடைமுறையில் முழுமையாக அமுல்படுத்த தடையாக இருந்த மையும் சிங்கள தேசம் தொடர்பாக தமிழ்த் தேசம் சந்தித்துக் கொண்ட வரலாற்றுப் படிப்பினைகள் ஆகும்.

இவ்வரலாற்றுப் படிப்பினைகள் தமிழ்த் தேசமக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றி யுள்ளது. இந்நிலையில் அவர்களின் நம்பிக் கையைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியிலேயே முதலில் அரசு இறங்கியிருத்தல் வேண்டும்.

சர்வதேச ரீதியாக இவ்வாறான பிரச்சனை ளைத் தீர்ப்பதற்கு கையாளும் வழிவகைகளை அரசு நேர்மையோடு சமாதான முயற்சியில் ஈடுபட்டிருந்தால் பின்பற்றியிருக்கலாம். அங்கு முரண்பாடுகள் உக்கிரமடைந்தால் இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரப்பினரும் நம்பிக்கை வைக்கக் கூடிய 3 வது தரப்பினரின் மூலமே பிரச்சனைகள் தீர்ப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது. முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு முதற் கட்டமாக இரு பகுதியினரிடையேயும் யுத்த நிறுத்தம் மேற் கொள்ளப்பட்டு அமைதி வலயங்கள் கட்டி எழுப்பப் படுகின்றன இதனூடாக சகிப்புத் தன்மையை பேணு வதற்கு முயற்சிக்கப்படுகின்றது. தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்படுவதோடு பாதிக்கப்பட்ட தரப்பின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளும் வகையில் மோதலின் போது இழந்துவிட்ட அவர்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்ப்பற்கு முயற்சி செய்யப்படுகின்றன. தொடர்ச்சியான இச் செயற்பாடுகளினுடாக நம்பிக்கையை கட்டி எழுப்பிய பின்னரே தீர்வு யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் அரசின் செயற்பாடுகளில் இப் படிமுறை முயற்சிகள் எவையும் காணப்பட வில்லை. பரஸ்பரம் இரு தரப்புக்கும் நம்பிக்கை யற்ற நிலையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போது இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய 3வது நபரினுடாக பேச்சுவார்த்தையை ஆரம் பிக்காமல் தாமே நேரடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்திருந்தது. பேச்சுவார்த்தையின் ஆரம் பத்திலேயே புலிகள் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை முன்வைத்திருந்தனர். பகைமை நிறுத்தத்தை யுத்த நிறுத்தமாக மாற்றுதல், பொருளாதாரத் தடைகளை முழுமையாக நீக்குதல், மீன்பிடித்தடையை நீக்குதல் குடாநாட்டுக்கான போக்குவரத்துக்காக பூநகரி இராணுவ முகாமை அகற்றுதல், அகதிகளை மீளக்குடியேற்றுதல் என்பனவே அவர்களது ஆரம்பக் கோரிக்கைகளாக இருந்தன. இக்கோரிக்கைகள் தமிழ்த் தேசமக்களின் அன்றாடப் பிரச்சனைகள் சம்பந்தப்பட்டவை யாகும். 3வது தரப்பின் மேற்பார்வையின் உதவியுடனும் அமைதிவலையங்களை உரு வாக்குவதனூடாகவும் இக்கோரிக்கைகளை அரசு நிறைவேற்றியிருக்கலாம்.

ஆனால் அரசிடம் பேச்சுவார்த்தை தொடர்பாக நேர்மைத்தன்மை எதுவும் இருக்காததினால் புலிகள் காலக்கெடு விதித்த போதும் அதனை அசட்டை செய்தது. தற்போது புலிகளை புறக்கணித்த நிலையிலும், தமிழ் தேசம் கொண்டிருந்த ஒரு சொற்ப நம்பிக்கையும் இழந்துவிட்ட நிலையிலும், அடித்து துன்புறுத்தி கூட்டாகத் தண்டித்து அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்ட நிலையிலும் தான் தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ளது. புலிகளுடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகளினூடாக தீர்வு யோசனைகளை முன் வைத்திருப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் தனது நேர் மைத் தன்மையை காட்டவேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டிருக்கும். இன்று அந்நிலையை அரசு வேண்டுமென்றே தவிர்த்துள்ளது.

**'தற்போது புலிகளை புறக்கணித்த நிலையிலும், தமிழ் தேசம் கொண்டிருந்த ஒரு சொற்ப நம்பிக்கையும் இழந்து விட்ட நிலையிலும், அடித்து துன்புறுத்தி கூட்டாக தண்டித்து அரச பயங்கர வாதத்தை கட்டவிழ்த்து விட்ட நிலையிலும் தான் தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ளது.'**

மறுபக்கத்தில் தீர்வுயோசனைகளுக்கு பின்னால் ஒரு இரகசிய நிகழ்ச்சி நிரலே (Hidden Agenda) செயற்பட்டுள்ளது. தமிழ்த் தேசத்தின் தன்னடையாளங்களைச் சிதைத்தல், தமிழ்த் தேசத்தின் போராட்டத்தைச் சிதைத்தல், தமிழ்த் தேசபிரச்சனையை பூசிமெழுகும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பனவே அந்நிகழ்ச்சி நிரலிலுள்ள அம்சங்களாகும்.

சிங்கள அரசு ஒரு போதுமே தமிழ் மக்கள் தனியான ஒரு தேசம் என்பதையோ, வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் தாயகம் என்பதையோ ஏற்றுக்கொண்டதில்லை. ஆனால் மறுபக்கத்தில் வடக்கில் பெரும்பகுதியும் கிழக்கில் குறிப்பிட்ட பகுதிகளும் விடுதலை யடைந்த பிரதேசங்களாக மாற்றப்பட்டிருந்தன. அங்கு புலிகளினால் அரசு கட்டமைப்புக்களும் சுய நிர்வாகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசும் தமிழ் மக்களைப் பழிவாங்கும் நோக்குடன் இப்பிரதேசங்களில் பொருளாதாரத் தடை களையும் விதித்துள்ளது. வடக்கில் இது பிரகடனப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தடை யாகவும், கிழக்கில் பிரகடனப்படுத்தப்படாத பொருளாதாரத் தடையாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் விரிவடைந்து கிழக்கு முழுவதும் புலிகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதிக்கத்துக்குட்பட்டு விட்டால் இதற்கு மேல் நடைபெறும் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில் வடக்குக் கிழக்கு இணைப்பு என்ற சர்ச்சைக்குரிய அம்சம் தானாகவே காலாவதியாகிவிடும். வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பது ஸ்தூலமாகி விடும். இதன் பின்னர் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசம் என்பதை அடிப்படை அம்சமாக ஏற்றுக்கொண்டே பேச்சுவார்த்தையில் இறங்க நேரிடும். இந்நிலை ஏற்படுவதற்கு முன்னரே இனப்பிரச்சனையை ஒரு நிர்வாகப் பிரச்சனையாக மாற்றும்வகையிலும் தனது மேலாதிக்கத்தை மீள நிலை நிறுத்தி தமிழ்தேச அடையாளங்களைச் சிதைக்கும் வகையிலுமே தீர்வுயோசனைகளை முன்வைத் துள்ளது.

இரகசிய நிகழ்ச்சி நிரலின் இரண்டாவது அம்சம் தமிழர் போராட்டத்தை சிதைத்து தமிழ் தேசத்தை யுத்தத்தால் பணியச் செய்வதாகும். இது விடயத்தில் புலிகளைத் தனிமைப் படுத்துதல் என்ற பெயரில் தமிழ்தேசத்தைக் கூட்டாகத் தண்டிக்கும் முயற்சிகளை அரசு முடுக்கிவிட்டுள்ளது. தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு வாவிகளில் மிதக்கவிடப்பட்டனர். யுத்த முன்னெடுப்பின் போது தமிழ் மக்களை கவசமாக பயன்படுத்தும் வகையில் அவர்கள் பலவந்தமாக முன்னே செல்லவிடப்படுகின்றனர். நிலக்கண்ணி வெடிகளை கையாலேயே அகற்றும் படி அல்லது அதன் மீது நடந்து செல்லும்படி மக்கள் நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். பொருளாதாரத்தடை விரிவாக்கப்பட்டுள்ளது. கோவில்களில் தஞ்சமடைந்த அகதிகள் மீதும், பாடசாலைகளில் தங்கியிருந்த மாணவர்கள் மீதும் குண்டு வீசிக் கொலைகள் நடக்கின்றன. கொடூரமான ஷெல் தாக்குதல்களினால் குடாநாட்டு மக்கள் பலரைக் கொலை செய்ததோடு வலிகாமம் பகுதிமக்கள் அனைவரையும் அகதிகளாக்கியுள்ளது. அவர்களது வீடுகள் புல்டோசர்கள் கொண்டு இடிக் கப்பட்டதோடு பயிர்செய் நிலங்களும் அழிக்கப் பட்டுள்ளன. மீன்பிடித் தொழில் முற்றாகவே தடைசெய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தும் அப்பட்டமான இனப்படுகொலை (Genocide) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தையே எடுத்துக்காட்டுகின்றன.

இதனுடாக தமிழ்த் தேசத்தை நிர்மூலம் செய்தே அரசு புலிகளை அழிக்க முயற்சிக்கின்றது. புலிகளின் சமூக அடித்தளத்தை இல்லாமல் செய்ய முயற்சிக்கின்றது. அரசின் அகராதியின் படி புலிகளை அழித்தல் என்பது தமிழ்த்தேசத்தை அழித்தல் என்பதே.

மறுபக்கத்தில் அரசு சிங்கள மக்கள் அனைவரையும் போருக்குத் தயார்படுத்தும் வகையில் "வெண்தாமரை" இயக்கத்தை உருவாக்கி பிரச்சாரம் செய்து வருகின்றது. இவ்வெண்தாமரை இயக்கக் கிளைகள், சிங்களக் கிராமங்கள் - நகரங்கள் தோறும் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் யுத்தம் தொடர்பாக அரசு எதிர்நோக்கி வந்த ஆளனிப்பற்றாக்குறை, உணர்வுடன் போரிடல், நிதிப்பற்றாக்குறை என்பவற்றைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. போர் சிங்கள தேசத்தின் மீது திணிக்கப்பட்டள்ளது. எந்த வகையிலும் இதனை வெல்லவேண்டியது சிங்கள தேசத்தின் வரலாற்றுக் கடமை என்ற வகையிலும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. போரில் மரணமடைந்த இராணுவவீரர்கள் சிங்கள தேசத்தைக் காக்க வந்த தேசிய வீரர்கள் என்ற வகையில் கௌரவிக்கப்படுகின்றனர்: பௌத்த மதகுருமார்கள் இவ் இயக்கத்தின் முன்னணி செயல்வீரர்களாக செயற்படுகின்றனர்.

கடந்த காலத்தில் ஒவ்வொரு அரசும் தமிழ்த் தேசத்தின் மீதான யுத்தத்திற்கு ஆதரவாக சிங்கள தேசம் முழுவதையும் அணிதிரட்ட முனைந்து வந்தாலும் கூட அது முழுஅளவில் வெற்றியளிக்கவில்லை. ஆனால் சந்திரிகா அரசோ ஒரு புதிய அரசாங்கமாக இருப்பதாலும், யுத்தத்தை முடிவுக்கு கொண்டு

**ஏதேனும் ஒரு அரசியல் தீர்வை அது எவ்வளவு தான் குறைபாடுடையதாக இருப்பினும் கூட அதனை முன்வைத்து விட்டு போர் நடவடிக்கைகளை முன்னெடுக்கையில் தீர்விலுள்ள குறைபாடுகளைப் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாமல் யுத்த முன்னெடுப்பை சர்வதேச சமூகம் ஆதரிக்கும். அரசு இதனை புரிந்துகொண்டே தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ளது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருவது என்ற வாக்குறுதியுடன் பதவிக்கு வந்ததாலும் புலிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை முயற்சிகள் தற்போதய தீர்வுத்திட்டம், வெண்தாமரை இயக்கம் என்பவற்றின் மூலமாக அரசின் யுத்த முயற்சிகளின் பின்னே சிங்கள தேசம் முழுவதையும் அணிதிரட்டுவதில் வெற்றி பெற்றுள்ளது. அந்த வகையில் தமிழ்த் தேசத்தைப் பொறுத்தவரையில் முன்னைய சிங்களத் தலைவர்கள் எவரையும் விட சந்திரிகா மிக மோசமான பாத்திரத்தையே வகிக்கின்றார்.

இதை விட இந்தத் தீர்வுத்திட்டத்தை வெளியிட்ட காலகட்டமும் முக்கியமானது. தமிழ்த் தேசத்தின் மீது ஒரு முழுமையான யுத்தத்தை கட்டவிழ்த்து விடுவதற்கு எல்லாவிதமான ஆயத்தங்களையும் செய்து முடித்த பின்பு இப்படிப்பட்ட ஒரு தாக்குதலை சர்வதேச அளவில் நியாயப்படுத்துவதற்கான தார்மீக பலத்தை பெறுவதற்காக மட்டுமே இத்தீர்வுத்திட்டம் அரசுக்குப் பயன்பட்டுள்ளது. தமிழ்த் தேசியப் பிரச்சனை சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறைந்த பட்ச அரசியல் தீர்வு எதனையும் முன்வைக்காமல் யுத்தத்தை முன்னெடுப்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக ஏதேனும் ஒரு அரசியல் தீர்வை அது எவ்வளவு தான் குறைபாடுடையதாக இருப்பினும் கூட அதனை முன்வைத்து விட்டுப் போர் நடவடிக்கைகளை முன்னெடுக்கையில் தீர்வி லுள்ள குறைபாடுகளைப் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாமல் யுத்த முன்னெடுப்பை சர்வதேச சமூகம் ஆதரிக்கும். அரசு இதனைப் புரிந்துகொண்டே தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ளது.

தேசியப்பிரச்சனைக்கு உண்மையிலேயே தீர்வு காணும் நோக்கம் அரசுக்கு இருந்தால் ஒரு தீர்வுத் திட்டத்தைப் புலிகளுடன் பேசும் போதே முன்வைத்திருக்கலாம். அவ்வாறு எந்த முயற்சியும் எடுக்காமல் தீர்வு யோசனைகள் தொடர்பாக சிங்கள இனவாதிகளினது எதிர்ப்புகள் தீவிரமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் முழு அளவிலான யுத்தத்தை தமிழ்த் தேசத்தின் மீது அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதன் மூலம் சிங்கள இனவாத சக்திகளுக்கு நல்ல வடிகாலாக இந்த யுத்தம் அமைந்துள்ளது. அவர்கள் ஏகோபித்த முறையில் அரசைப் பலப்படுத்த முனைந்துள்ளார்கள். குடாநாட்டு யுத்த வெற்றிகளால் இனவெறி மேலும் தலைக்கேறிய நிலையில் யுத்தமே ஒரே தீர்வு என்ற குரல் பரவலாக சிங்கள தேசத்தில் வலுக்கத் தொடங்கியுள்ளது. சர்வதேச அளவிலும் அரசானது தான் ஒரு அரசியல் தீர்வைக் காண முனைந்ததாகவும் இம் முயற்ச்சிக்கிணங்க மறுத்தவர்களுக்கு எதிராகவே யுத்தம் புரிவதாகவும் தனது தேசியப் படுகொலைகளை நியாயப்படுத்த முனைந்துள்ளது. பாலஸ்தீன, பொஸ்னிய விவகாரங்களில் மிகவும் மேம்போக்கான பார்வையை கொண்டுள்ள சர்வதேச சமூகம் என உரிமைபாராட்டும் சில ஏகாதிபத்திய நாடுகளை அரசின் வாதங்கள் அமைதிப்படுத்தலாம். ஆனால் தமிழ்த் தேசத்திற்கோ இந்த தீர்வுத்திட்டத்தின் மூலமாகவோ சர்வதேச அபிப்பிராயங்கள் மூலமோ எந்தவொரு நீதியும் கிடைக்கப் போவதில்லை.

இறுதியாக, தேசியப் பிரச்சனை என்பது அடிப்படையில் அரசியல் அதிகாரம் பற்றிய பிரச்சனையாகும். இப்படியான ஒரு பிரச்சனைக்கு நிர்வாக மாற்றங்களை முன்மொழிவது தேசிய பிரச்சனையில் அரசியலை வேண்டுமென்றே தட்டிக் கழிப்பதாகும். தனக்கென தனியான ஒரு தேச அரசை வேண்டி அதற்கெனப் பல தியாகங்களுக்கு மத்தியில் போராடிக் கொண்டிருக்கும் ஒரு தேசத்தின் முன் இப்படிப்பட்ட அற்ப துணுக்குகளை வீசி எறிவது உண்மையிலேயே அந்த தேசத்தை அவமதிப்பதற்கு சமமானது.

எதிரியிடம் இருந்து தீவிரமான ஒடுக்குமுறைகளைத் தவிர வேறெதையும் கண்டிராத மக்கள் எதிரியில் ஏற்படும் சிறிய மாற்றங்களைக் கூட பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடும். இது குறித்து மக்களை எச்சரிக்க வேண்டியது முன்னேறிய பிரிவினர்களின் கடமையாகும். அது மட்டுமல்ல இவ்வாறு எதிரியினால் அளிக்கப்படும் ஒவ்வொரு சிறு சலுகையும் அவனால் அடுத்து கட்டவிழ்த்து விடப்படவிருக்கும் அதீத ஒடுக்குமுறைக்கான ஒரு பீடிகையே என்பதை ஒரு வரலாற்று விதியாகவும் புரிந்துகொள்ள வேண்டும்.

தேசிய ஒடுக்கு முறை என்ற அரசியலின் தொடர்ச்சியே இன்றைய யுத்தமாகும். இந்த யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் ஒரு தீர்வினைக் காண உண்மையிலேயே விரும்பும் எவரும் முதலில், சிங்கள தேசம் தனது எண்ணிக்கை பெரும்பான்மை என்பதை அடிப்ப டையாகக் கொண்டு அரசதிகாரத்தில் ஏகபோகம் வகிப்பதும் இதன் மூலம் ஏனைய தேசங்களை ஒடுக்கித் தான் தனிச்சலுகை பெறும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலையும் நீடிக்கும் வரை இந்தத் தேசிய ஒடுக்குமுறை அரசியலானது ஒரு யுத்தத்தின் மூலமே தீர்வு காணப்பட முடியும். இதில் எந்தவிதமான மயக்கத்திற்கும் இடமிருக் முடியாது.

தமிழத் தரப்பு மிதவாதிகளும் விடுதலைப் போராட்டத்தைத் துறந்தோடியவர்களும் தமிழ் தேசத்தின் மீது கருணைகொண்டவர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் மனிதவுரிமை யாளர்களும் நீடித்த யுத்தம் காரணமாக விளையக்கூடிய பாதிப்புக்களைக் காட்டி தமிழ்மக்களை அச்சுறுத்தி இந்த உதவாக்கரைத் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்துகின்றார்கள்.

இதுவும் ஒரு வகை அரசியல் சரணாகதியே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த இனவொழிப்பு யுத்தம் தமிழ் மக்கள் மீது சிங்கள அரசினால் திணிக்கப்பட்ட தொன்றாகும். தமிழ்தேச இருப்பை பல்வேறு வழிகளிலும் அழித்தொழிக்க முயன்று முடியாமல் போனதன் ஒரு விரிவாக்கமே இந்த யுத்தமாகும்.

இன்று இரண்டு முனைகளில் தமிழ் தேசத்தின் மீது போர்தொடுக்கப்பட்டுள்ளது. அரசு அனைத்து வளங்களையும் இராணுவத் தளபாடங்களையும் குவித்து இராணுவ முனையில் என்றுமில்லாதவாறு ஒரு ஆக்கிரப்பு யுத்திகளை வடக்கு கிழக்கில் கட்டவிழ்த்து விட்டுள்ளது. மறுபுறம் அரசியல் முனையில் இத்தீர்வுத் திட்டம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுகிறது. இந்த வகையில் இதுவோர் தீர்க்கமான காலகட்டமே. தமிழ் தேசம் இராணுவக் கொடுங்கோண்மை காரணமாக சொல்லொணா கடினங்களை எதிர் நோக்கலாம். சொந்த மண்ணில் சிங்கள கொடிகள் ஏற்றப்பட்டு அவமானப்படுத்தப்படலாம். ஆனாலும் தமிழ்தேசம் அரசியல் ரீதியில் பலவீனப்பட்டு விடக்கூடாது. முன்னெப்போதையும் விட தன்னைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ் தேசிய அபிலாசைகளை நிறைவு செய்யாத சந்திரிகா தீர்வுத் திட்டத்தை ஒட்டுமொத்தமாக நிராகரிக்க வேண்டும். திம்பு மாநாட்டில் முன்வைத்த பிராதான அம்சங்களான தமிழ்தேசம், தாயகம் சுயநிர்ணய உரிமை என்பவற்றிலும் குறைந்த அடிப்படையில் அமையும் எந்தவிதமான தீர்வுகளையும் ஏற்றுக்கொள்ளலாகாது.

இந்த மூன்று அம்சங்களிலும் குறைந்த எந்த ஒரு தீர்வையும் தமிழ்த் தரப்பில் அக்கறை கொண்டோர் எவராயினும் ஏற்றுக்கொள்வது, தமிழ்த் தேசத்திற்கு அவர்கள் செய்யும் துரோகமாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

* * * * * * * * * *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உங்களுடன் நாம் . . . (இருந்து சில பகுதிகள்)

"நடந்து முடிந்தவை குறித்து சிங்கள தேசம் பெருமித உணர்வுடன் காணப்படுகின்றது. தமது ஒடுக்குமுறையிலிருந்து விடுவித்துக் கொள்ள முனைந்த தமிழ்த் தேசத்தை மீண்டும் ஒரு முறை அடிமைப்படுத்தி விட்டதாக பேரினவாத சக்திகள் இதனை சித்தரிக்க முயலுகின்றனர். புலிகளை ஒடுக்கியாயிற்றே, இதற்குப் பின் என்ன தீர்வுத் திட்டம் என இவர்கள் வாதிக்க முனைகின்றனர். யுத்தமே முடிந்துவிட்டது போல இவர்கள் கொடுக்க முனையும் படத்தை அவசர அவசரமாக அரசே மறுக்க வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது. தமிழ்த் தேசமோ இதற்கு நேர் எதிரான உணர்வலைகளை கொண்டிருந்தது . . . "

"கடந்த காலத்தில் தமிழர் விடுதலை அமைப்புக்கள் முஸ்லீம் மக்களை ஒரு தனித்துவமான சமூகமாக ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளன. இன்று வரை பல அமைப்புக்கள் தீவிர முஸ்லீம் விரோத அமைப்புகளாகவே செயற்பட்டு வருகின்றன. இவற்றுள் விதிவிலக்காக செயற்படுவதாக கருதப்படும் சிலர் கூட முஸ்லீம் மக்களை 'வளர்ந்து வரும் தேசமாக' வரையறுக்க முனைவதைக் காணலாம். இந்த 'வளர்ந்து வரும் தேசம்' என்ற கருத்தாக்கமானது வினோதமானதாகும். எந்த அளவு கோல்களை இவர்கள் கையாண்டு இந்த வளர்ச்சியை அளக்கின்றார்கள். எந்த நிபந்தனைகளை முஸ்லீம் மக்கள் நிறைவு செய்தால் வளர்ந்து விட்ட தேசமாவார்கள் என்பதை இவர்கள் கூறுவதில்லை. உண்மையில் இந்தக் கருத்தாக்கமானது, இவர்கள் தமது பழைய சிந்தனை முறைகளில் இருந்து இன்னமும் முறித்துக் கொள்ளாமல் இருப்பதைத்தான் காட்டுகிறது. இப்படிப்பட்ட நிலைப்பாடுகள், இவர்கள் முஸ்லீம் மக்களை தனித்துவமான ஒரு சமூகமாக அங்கீகரிக்க மறுத்த கடந்த கால நிலைப்பாடுகளின் ஒரு தொடர்ச்சியாகவே கருதப்பட வேண்டும். அத்துடன் ஒரு தேசத்தை புறநிலை அம்சங்களால் கறாராக வரையறுத்துவிட முனையும் மரபார்ந்த குறைபாடும் இங்கு வெளிப்படுவதைக் காண முடிகிறது . . . "

"இப்போது சந்திரிகாவை சூழ்ந்து இலங்கையிலும், சர்வதேச அளவிலும் சிங்கள, தமிழ் உதிரிப் 'புத்திஜீவிகள்' ஒரு பலமான சக்தியாக உருவெடுத்துள்ளனர். தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டமானது தற்காலிகமாக முகங் கொடுக்கும் நெருக்கடிகளைப் பயன்படுத்தி, தமிழ் மக்களது தேசிய அபிலாஷைகளுக்கு துரோகம் இழைத்துக் கொண்டு சிங்கள பேரினவாத சக்திகளை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களது துரோக முயற்சிகள் ஓரளவு தாக்கமுள்ளவையாக அமைவது கவனத்தில் கொள்ளத்தக்கது. 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்ற வகையில் இவர்கள் சந்திரிகாவின் 'சமையலறை அமைச்சரவையில்' (Kitchen Cabinet) அங்கம் வகித்துக் கொண்டு உப்புச்சப்பில்லாத தீர்வு யோசனைகளை அரசுக்கு வழங்கிக் கொண்டே , பகிரங்கமாக மனிதவுரிமையாளர்களாகவும், சமாதானப் பிரியர்களாகவும், ஏன் தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதிகளாகவும் வேடம் போடுவது தான் வேடிக்கையானது. இவர்களது துரோக அரசியல் நீண்ட காலம் நீடிக்கப் போவதில்லை. இப்படிப்பட்ட சக்திகளை தமிழ் முன்னேறிய பிரிவினர் கவனமாக குறித்துக் கொண்டு முறியடிக்க வேண்டியது இன்றைய அவசரத் தேவையாகும் . . . "

**தொடர்புகட்கு: UYIRPPU. BM BOX 4002. LONDON. WC1N 3XX. U.K.**